# 13

# இஸ்லாமிய நாகரிகம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)



சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை

Web| www.nie.lk Email| info@nie.lk

# இஸ்லாமிய நாகரிகம்

## க.பொ.த உயர் தரம்

## தரம் - 13

## ஆசிரியர் வழிகாட்டி

**(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

**Islam Civilization - Teachers' Guide - Grade 13**

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

இஸ்லாமிய நாகரிகம்

தரம் 13
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு 2018

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

**ஸ்ரீலங்கா**

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு :
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலைக் கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள்,

புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சங்கைக்குரிய கலாநிதி மாபுல்கொட சுமனரத்ன தேரர்

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**வளப்பங்களிப்பு / கலைத்திட்டக் குழு**

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர், நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முகம்மத்**
பிரதிப் பணிப்பாளர், நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**அஷ்ஷெய்க் எம்.எஸ்.ஏ.பாரி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் துறை
கலைப் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

**அஷ்ஷெய்க் எம்.எஸ்.ஏ.ஹனீபா**
துறைத் தலைவர்,
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் துறை
கலைப் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

**அஷ்ஷெய்க் எம்.எம்.மஸாஹிர்**
சிரேஷ்ட விரிவுரையாளர், பீடாதிபதி
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடம்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்

**அஷ்ஷெய்க் எம்.ரி.ரிஸ்வி**
துறைத் தலைவர்,
இஸ்லாமிய நாகரிக கற்கைகள் துறை
இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்

**மௌலவி எம்.ரி. இக்பால்**
ஆசிரிய ஆலோசகர் - இஸ்லாம்
கொழும்பு கல்வி வலயம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்,** — தேசிய கல்வி நிறுவகம்

**வெளியக**

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.புஹாரி** — ஆசிரிய ஆலோசகர்,மினுவங்கொடை கல்வி வலயம்

**எம்.எச்.எம். நாளிர்** — ஓய்வுபெற்ற ஆசிரியர்.

**எம்.எஸ்.எம். அனஸ்** — ஓய்வு பெற்ற ஆசிரியர்

**அஷ்ஷெய்க் எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்** — ஆசிரியர், பாபுஸ்ஸலாம் மு. வி, நாம்புளுவ.

**எம்.எஸ். பூஸரி** — ஆசிரியர், அல்பத்ரிய்யா மு.ம.வி, கஹடோவிட

**எம்.எச்.எம். பர்ஹான்** — ஆசிரியர், அலுத்கம்வீதிய மு.ம.வி, தர்கா நகர்.

**அஷ்ஷெய்க் எம்.எஸ். நவாஸ் ஸனூர்தீன்** — ஆசிரியர், அல் மனார் தேசிய பாடசாலை,

தட்டச்சு

**எம்.எப்.எம்.பாஹிம்**

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்குப் பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டைத் திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே, குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றது.

கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்குத் தேவையான காலப்பகுதியைச் சுயாதீனமாக தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தைத் திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின்போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காகக் குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. குறிப்பாக உயர் தர வகுப்புக்களுக்கு குழுச் செயற்பாடுகள் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன. குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாகத் திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இக்குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மேலதிக தேடலினூடாக விடயங்கள் முன்வைக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்களுக்கு சுயமான தேடலுக்கு வழிகாட்டுவது ஆசிரியரின் பொறுப்பாகும்.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்ததொரு எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

செயற்றிட்டத் தலைவர்

# உள்ளடக்கம்

பக்கம்


- பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iii
- பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி v
- கலைத்திட்டக் குழு vi
- ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் vii
- கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் 1

# கற்றல் கற்பித்தல் தொடர்பான வழிகாட்டல்

**தேர்ச்சி 6.0 : இஸ்லாத்துக்கு முற்பட்ட காலம் முதல் அப்பாஸியர்களின் வீழ்ச்சி வரையிலான கால கட்டங்களில் அரசியல், சமூக, நாகரிக வளர்ச்சி பற்றி விளக்கிக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1: இஸ்லாத்துக்கு முற்பட்ட கால மக்களின் சமய, சமூக, மொழிசார் நடவடிக்கைகளை விளங்கி எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளைகள் : 16**

**கற்றல் பேறுகள்:**

- ஜாஹிலிய்யா என்ற பதத்தை விளக்கிக் கூறுவார்.
- ஜாஹிலிய்யாக் காலத்தில் நிலவிய சமய, சமூக, நிர்வாக ஒழுங்கு முறைகள் பற்றி விளக்குவார்.
- ஜாஹிலிய்யாக் காலத்தின் மொழி மரபு இலக்கியம் பற்றி எடுத்துக் கூறுவார்.
- ஜாஹிலிய்யத்திற்கும் இஸ்லாத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைப் பிரித்தறிந்து இஸ்லாத்தின் சிறப்பை நயந்து கூறுவார்.
- ஜாஹிலிய்யாப் பண்புகளில் இருந்து தவிர்ந்து நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- இஸ்லாத்துக்கு முற்பட்ட காலம் என்பது, நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் தூதை அறிமுகப்படுத்துவதற்கு முன்புள்ள காலப் பகுதியாகும். இதனைச் சுமார் ஒன்று அல்லது ஒன்றரை நூற்றாண்டுகள் என வரையறுப்பர். இக்காலப்பகுதி இஸ்லாமிய வரலாற்றில் ஜாஹிலிய்யாக் காலம் என வழங்கப்படுகின்றது.

- ஜாஹிலிய்யா என்ற சொல்லுக்கு அறியாமை எனப்பொருள் கூறுவர். ‘இல்ம்’ என்ற அறபுப் பதத்தின் எதிர்ப்பதமான ஜஹ்ல் என்ற சொல்லிலிருந்தே ஜாஹில் (அறிவில்லாதவன்) ஜாஹிலிய்யா (அறியாமை) என்ற சொற்கள் பிறந்துள்ளன. இது மட்டுமன்றி சமய, சமூக, ஒழுக்கத்துறைகளில் அக்காலத்தில் காணப்பட்ட ஒழுங்கீனங்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது. மற்றொரு வகையில், ஜாஹிலிய்யா என்ற சொல் இஸ்லாத்துக்கு எதிரானது என்ற கருத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

- அறபு இலக்கியத்தில் மிலேச்சத்தனத்தைக் குறிக்க இச்சொல் கையாளப்பட்டதாக கோல்ட்ஸீஹர் என்ற கீழைத் தேய ஆய்வாளர் குறிப்பிடுகிறார். வலிமை, உணர்ச்சி வசப்படாமை, நல்ல பழக்க வழக்கங்களைக் குறிக்கும் ‘ஹில்ம்’ என்ற சொல்லின் எதிர்க்கருத்தாகவே ஜஹ்ல் என்ற சொல் பொருள் தருகிறது. (இது ஏற்கத்தக்க கருத்தல்ல)

- அல் குர்ஆனில் ஜஹ்ல் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்த பல சொற்கள் காணப்படுகின்றன. (உ-ம் : 3:154, 5:50, 33:33, 48:26) அபூ தர்தா (ரழி) அவர்கள், பிலால் (ரழி) அவர்களைப் பார்த்து கறுப்பியின் மகனே என்று சொன்ன போது, ‘உம்மிடம் ஜாஹிலிய்யத் உணர்வு இன்னும் நீங்கவில்லை என நபி (ஸல்) அவர்கள் கடிந்து கொண்டார்கள். ஜஃபர் (ரழி) அவர்கள் நஜ்ஜாஷி மன்னனிடம் உரையாற்றிய போது ‘நாங்கள் ஜாஹிலிய்யத்தில் இருந்தோம்’ என்று கூறிய

விளக்கமும், இஸ்லாத்துக்கு எதிரான பண்பு ஜாஹிலிய்யத் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

- இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அறபிகளின் சமய நம்பிக்கைகளும், வழிபாட்டு முறைகளும், சமூக நடைமுறைகளும் அவர்கள், ஜாஹிலிய்யத்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக அமைகின்றன.

- பொதுவாக எல்லாச் சமயங்களிலும் இறைவன் பற்றிய கோட்பாடு முதலிடத்தை வகிக்கின்றது. அதேபோல ஜாஹிலிய்யாக் கால மக்கள் அல்லாஹ்வை அரைகுறையாக நம்பினார்கள். ‘*(நபியே) அவர்களைப் படைத்தவன் யார் என்று நீர் அவர்களிடம் கேட்டால் அல்லாஹ்தான் என்று அவர்கள் நிச்சயமாக பதில் சொல்வார்கள். (43:87)* என்று அல்லாஹ்வே குறிப்பிடுகின்றான். ஆனால், அவர்கள் முஸ்லிம்கள் நம்புவது போல் அல்லாஹ்வை நம்பவில்லை.

- அவர்களுக்கு மத்தியில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை இருந்து வந்தது என்பதற்குப் பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன. ஜாஹிலிய்யாக் காலக் கவிதைகளும் அதனை நிரூபிக்கின்றன. கவிஞர் ஸுஹைரின் ஒரு கவிதையில் ‘உங்கள் உள்ளத்திலுள்ள இரகசியங்களை அல்லாஹ்வுக்கு மறைக்க வேண்டாம். நீங்கள் மறைக்க விரும்பும் அவற்றை அல்லாஹ் ஏற்கனவே அறிந்துள்ளான்’ எனக் குறிப்பிடப்படுகின்றது.

- மக்கள் சிலைவணக்கத்தில் ஈடுபடுவதை இஸ்லாம் கண்டித்த போது, மக்கா காபிர்கள் முன்வைத்த பதில்களில் கூட ‘*அல்லாஹ் அல்லாதவர்களை(த் தங்களுக்கு) பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டிருப்பவர்கள். அத்தெய்வங்கள் எங்களை அல்லஹ்வுக்கு மிக்க சமீபமாக்கி வைக்கும் என்பதற்காகவன்றி, நாம் அவைகளை வணங்கவில்லை (39:03)* என்று அல்லாஹ்வை சிலைகளுடன் இணைத்துக் கூறியுள்ளதை அவதானிக்கலாம். அவர்களிடம் காணப்பட்ட ‘பிஸ்மிகல்லாஹும்ம’ என்ற சொற் பிரயோகமும் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை அவர்களிடம் இருந்ததைக் காண்பிக்கின்றது.

- அவர்கள் அல்லாஹ்வை அறிந்திருந்தாலும் அவனைப் பற்றி உரியவாறு நம்பவில்லை என்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன. இதற்கு, அவர்கள் முன்னைய வேதங்களிலிருந்து திரிபுபட்ட கருத்துக்களையே தெரிந்திருந்தார்கள். அல்லது நீண்ட காலமாக அவர்களுக்கு ரிஸாலத் கிடைக்காமை காரணமாக இருக்கலாம். எனவேதான், சிலை வணக்கத்துடன் தொடர்புறுத்தி அல்லாஹ்வை நம்பியுள்ளதைக் காண்கிறோம்.

- தவ்ஹீதின் மையமாக அமைந்த க.்.பதுல்லாஹ் மக்கா நகரில் இருந்த போதும் அங்குள்ள மக்கள் சிலை வணக்கத்தையே அனுட்டித்து வந்தனர். ஷாமுக்கு வியாபாரத்துக்குச் சென்ற அம்ர் இப்னு லுஹை என்பவர் அங்கிருந்த சிலை வணக்கத்தை மக்காவில் அறிமுகப்படுத்தினார். அவர் கொண்டு வந்த சிலை (ஹுபல்) க.்.பாவுக்கு அருகாமையில் நிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து வேறுபலரும் அங்கு சிலைகளைக் கொண்டு வந்து நிறுத்தினர். இதனால் முன்னூற்றுக்கு மேற்பட்ட சிலைகள் தோன்றின. பின்னர் தினமும் ஒவ்வொரு சிலையை வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. ஒவ்வொரு கோத்திரமும் தமக்கென தனியான

சிலைகளை குலதெய்வங்களாக வைத்திருந்தனர். வணக்க வழிபாடுகளுக்கு பூசாரிகளாக காஹின் எனப்பட்டோர் பணியாற்றினர்.

- அம்பெய்து குறிபார்ப்பதன் மூலம் சிலைகளிடம் அனுமதி கோரினர். மணமுடிக்க, பயணம் செய்ய, போராடவென எல்லா விவகாரங்களுக்கும் சிலைகளிடம் அனுமதி கோரும் வழக்கமிருந்தது. தமது விருப்பத்துக்கு மாறாக தீர்வு அமைந்தால் சிலைகளைத் தூஷிக்கும் வழக்கமும் இருந்தது. ஒவ்வொரு சிலைக்கும் தனித்தனி கோயில்களையும் அமைந்திருந்தனர். *லாத்தை*, ஸகீப்கள் பூசித்தனர். தாயிபில் அதற்கான கோயில் இருந்தது. *உஸ்ஸாவை* குறைஷியரும் வேறு பலரும் பூசித்தனர். அதற்கான கோயில் நக்லாவில் இருந்தது. *மனாத்தை* குழாஆக்கள் பூசித்தனர். அதற்கான கோயில் *குதைத்* எனுமிடத்திலிருந்தது. இவை தவிர, *வத், ஸுவா, யகூஸ், யஊக், நஸ்ர், ஆஸாப், நாஇலா* எனும் சிலைகளும் பூசிக்கப்பட்டன. அவை இறைவனிடம் பரிந்து பேசுவதாக நம்பி வந்தனர். மனித உருவில் வடிக்கப்பட்ட சிலைகளை *அஸ்னாம்* என்றும் ஏனையவற்றை *அவ்தான்* என்றும் வழங்கினர்.
- சிலைகளுக்குப் பலியிடும் வழக்கமும் இருந்தது. பலியிடப்பட்ட பிராணிகளின் இரத்தத்தைத் தோய்த்து வந்தனர். தவிர, சூரியன், வியாழன், புதன், சனி போன்ற கிரகங்களையும் நட்சத்திரங்களையும் வணங்கினர். சிலைகளதும், கிரகங்களதும் பெயர்களை தமது பிள்ளைகளுக்குச் சூடினர். (உ-ம் : அப்துல் உஸ்ஸா, அப்துஷ் ஷம்ஸ்) மரங்களும் பூசிக்கப்பட்டன. அதே நேரத்தில் அல்லாஹ்வையும் நம்பினர். எனவே, அவர்கள் ஷிர்க்கில் ஆழ்ந்திருந்தனர் எனலாம். எனினும், ஆண்டு தோறும் மக்காவுக்கான யாத்திரை இடம்பெற்று வந்தது.
- அதேவேளை, ஜாஹிலிய்யத்திலிருந்து விடுபட்ட ஒரு பகுதியாரும் வாழ்ந்தனர். அவர்கள் இப்றாஹிம் (அலை) அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றுவதாக கூறிக் கொண்டனர். ஹுனபா என அழைக்கப்பட்டனர். சிலை வணக்கத்தில் ஈடுபடல், பலியிடப்பட்ட பிராணிகளின் மாமிசத்தை உண்ணல், பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தல் போன்றவற்றிலிருந்து அவர்கள் விலகியிருந்தனர். அவற்றுக்கெதிராக குரல் ஏழுப்பினர். *குஸ் பின் ஸாஇதா, உபைதுல்லா பின் ஜஹ்ஷ், ஸைத் இப்னு அம்ர், உஸ்மான் பின் அபூகுவைரித்* முதலானோர் அவர்களில் குறிப்பிடத்தக்கோராவார். தாங்கள் எந்த மார்க்கத்திலுமில்லை எனக் கூறி உண்மையான மார்க்கத்தைத் தேடிக் கொண்டிருந்தனர்.
- பலஸ்தீனிலிருந்த யஹுதிய ஆட்சியை உரோமப் பேரரசு வெற்றி கொண்டபோது அங்கு வாழ்ந்த யூதர்கள், அறபு நாட்டில் கைபர், பிதக், யஸ்ரிப் முதலிய பிரதேசங்களில் குடியேறினர். அவர்களுள் *கைனுகா, நுழைர், குறைழா* எனும் கோத்திரங்கள் குறிப்பிடத்தக்கோர் ஆவர். இதன் மூலம் அறபு நாட்டில் யூத மதம் அறிமுகமாகியது,
- வட ஆபிரிக்காவைக் கைப்பற்றிய உரோமப் பேரரசு அபீசீனியாவுக்கூடாக தென்னரேபியாவுக்குள் நுழைந்ததால் அங்கு கிறிஸ்தவம் வேரூன்றியது. ஷாம் தேசத்தை அண்டிய அறபுப் பிரதேசம் பைசாந்தியரின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் அங்கும் கிறிஸ்தவ சமயம் காணப்பட்டது.
- அறபு நாட்டின் எல்லைப் பகுதியில் பாரசீகத்தில் நிலவிய மஜூஸியமும், தென்னறேபியாவில் ஸாபியூன்களும் காணப்பட்டனர். இவர்கள் பற்றி அல்குர்ஆன்

(22:17) குறிப்பிடுகின்றது. நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களிலும் யூத, கிறிஸ்தவ, மஜூஸிய சமயங்கள் பற்றிக் கூறப்படுகின்றன.

**சமூகக் கட்டமைப்பும் அதன் ஒழுங்குகளும்**

- இஸ்லாத்துக்கு முற்பட்ட அறபு நாட்டில், பெரும்பாலும் கோத்திரங்களை மையப்படுத்தியே சமூகக் கட்டமைப்பு அமைந்திருந்தது. இதற்கு அறபு நாட்டின் புவியியல் நிலை காரணமாக இருந்திருக்கலாம். அங்கிருந்த அரிதான வளங்களைப் போட்டிபோட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. போட்டியில் வெற்றி பெறுவதற்கும் எதிரிகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் அவர்களுக்கு ஆள்பலம் தேவைப்பட்டது. அப்பலத்தை ஈட்டிக் கொள்வதற்காகக் கோத்திர அமைப்பிலான ஒரு சமூகக் கட்டமைப்பை அவர்கள் உருவாக்கியிருந்தனர்.

- தனிநபர் இணைந்து குடும்பமாகவும், குடும்பங்கள் இணைந்து ஷுஊப்களாகவும், ஷுஊப் (கிளை)கள் இணைந்து கபாஇல் (கோத்திரம்)களாகவும் விரிவுபடுத்தித் தம்மைப் பலப்படுத்திக் கொண்டனர். உதாரணமாக குறைஷ் என்ற கபீலா, ஹாஷிம், உமையா, ஸுஹ்ரா, அஸத், அதீ, தைம் முதலான ஷுஊப்களைக் கொண்டிருந்தது. இந்த அமைப்பு, காலப் போக்கில் அஸபிய்யா என்ற கோத்திர உணர்வாகவும், வெறியாகவும் வளர்ந்து வந்தது. இதனைத் தவிர்ப்பதற்காக, ‘‘*மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன். (49:13)* என்று அல்குர்ஆன் அறிவுறுத்தியது.

- அஸபிய்யா என்பது எல்லா நிலையிலும் நிபந்தனையின்றி, கோத்திரத்துக்கு விசுவாசமாக இருந்ததைக் குறிக்கின்றது. இது, இரத்த உறவை நேரடியாகப் பாதுகாத்தல், அல்லது தனிமனிதன் கோத்திரத்தையும், கோத்திரம் தனி மனிதனையும் பாதுகாத்தல் என்ற நோக்கில் தோன்றியது எனலாம். உனது கோத்திரத்துக்கு விசுவாசமாக இரு, அதன் உறுப்பினர் மீது அதற்குள்ள உரிமை, கணவனொருவன் அவனது மனைவியை கைவிட்டு விடுமளவு பலமானதாக அமைந்திருந்தது.

- ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ஒரு தலைவர் இருப்பார். அவர் செய்கு அல்லது செய்யித் எனப்பட்டார். அவர் அறிவும் அனுபவமும், வல்லமையும் வீரமும், நன்னடத்தையும் செல்வாக்கும் உடையவரிலிருந்து தெரிவு செய்யப்படுவார். அவர் ‘மலஉ’ என்ற மன்றத்தில் கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்வார். கோத்திரத்தின் செல்வங்கள், மேய்ச்சல்தரை போன்றவற்றைப் பாதுகாத்தல், முகாம்களை அமைத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல், இழப்பீடுகளைப் பெறுதல் போன்ற பணிகளை மேற்கொண்டார்.

- சுய பாதுகாப்புக்காக உருவான கோத்திர அமைப்பு அவர்களிடம் அஸபிய்யா என்ற உணர்வை ஏற்படுத்தி, போரூக்கத்தை வளர்த்தது. இதனால், ஜாஹிலிய்யா சமூகத்தில் போர் முக்கிய இடத்தைப் பெற்றது. 50 ஆண்டுகள் 132 போர்கள் இடம் பெற்றதாகக் கிடைக்கும் தகவல், அவர்கள் அற்ப விடயங்களுக்காகவும் போரிட்டார்கள்

என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஒட்டகமொன்று காயப்பட்டதற்காக *பக்ர்- தக்லப்* கோத்திரங்கள் பஸூஸ் யுத்தத்தை நடத்தினர். இது 40 ஆண்டுகாலம் நீடித்தது. *அபஸ் - துப்யான்* கோத்திரங்களுக்கிடையிலும், *கினானா -கைஸ்* கோத்திரங்களுக்கிடையிலும் இவ்வாறான யுத்தங்கள் தொடர்ந்து நடந்திருக்கின்றன.

- போரிடுவதற்கென்றே ஆண்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். கட்டாய இராணுவ சேவை அமுலில் இருந்தது. போராட்டங்களுக்கு செய்கு அல்லது அவரால் அமர்த்தப்பட்டவர் தலைமை தாங்குவார். போரின் போது மூக்கின் வழியாகவன்றி, போர்க் காயத்தின் வழியாக உயிர் வெளியேறுவதாக நம்பினர். எங்களில் எந்தத் தலைவரும் மூக்கினால் மரணிப்பதில்லை. பழிவாங்கப்படாத நிலையில் கொலை செய்யப்படுவதுமில்லை என்று அவர்களின் கவிதையடி ஒன்று இதனை சுட்டிக்காட்டுகின்றது. பழிக்குப்பழி வாங்குவதே அவர்களின் தீர்வாக அமைந்தது.
- *படைகள், வலவணி (அல்மைமனா) இடவணி (அல்மைஸரா) முன்னணி (அல் முகத்திமா) பின்னணி (அஸ்ஸாகர்) நடுவணி (கல்ப்)* என ஐந்து அணிகளைக் கொண்டிருந்தன. களத்தில் கவிஞர்கள் தமது கோத்திரங்களைப் புகழ்ந்தும் (மத்ஹ்) எதிர்க் கோத்திரத்தை இகழ்ந்தும் (ஹிஜா) பாடி உற்சாகப்படுத்துவர். பெண்கள், ஒப்பாரி வைப்பர். உணவு, நீர், மருத்துவ வசதிகள் செய்தும் உதவுவர். சடலங்களைச் சிதைத்தல், மரங்களை வெட்டுதல், கட்டடங்களை இடித்தல் போன்ற அநியாயங்களும் இடம்பெற்றன.

  புனித மாதங்களாகக் கணிக்கப்பட்ட நான்கு மாதங்களில் போராடுவதை அவர்கள் தவிர்த்துக் கொண்டனர். அப்போது பகைமை மறந்து உறவு கொள்வர். *உக்காள், துல்மஜாஸ், மஜன்னா* முதலிய இடங்களில் ஒன்று கூடுவர். அங்கு, *சந்தை கூடுவதோடு, இசை, நடனம், வாட்போர், கவியரங்கு, உரையரங்கு* போன்றனவும் களியாட்டங்களும் நிகழ்ந்தன.

- பொதுவாக, மது அருந்துதல், களவெடுத்தல், கொள்ளையிடுதல், சூதாடல், விபசாரம் செய்தல், வட்டி வாங்குதல் போன்றன குற்றங்களாகக் கருதப்படாமல் இயல்பாகவே இடம் பெற்று வந்தன. அதே நேரத்தில் எளிமை, வாக்குமீறாமை, விருந்தோம்பல், சுதந்திர வேட்கை, வீரம் போன்ற நற்பண்புகளும் காணப்பட்டன.

- குடும்ப அமைப்பைப் பொறுத்தவரை, ஒழுங்கான திருமணமுறை ஒன்று காணப்படவில்லை. பல்வேறு மணமுறைகள் காணப்பட்டன. மேன்மக்கள் பின்பற்றிய ஒப்பந்தமுறையிலான திருமணம் (நிகாஹ் அஸ் ஸாலிஹ்) தவிர்ந்த, ஏனைய அனைத்தும் ஜாஹிலிய்ய தன்மையுடன் காணப்பட்டன. நல்ல சந்ததியைப் பெறுவதற்காகவும், ஆண்பிள்ளைகளைப் பெறுவதற்காகவும் தமது மனைவியரைப் பிற ஆண்களிடம் அனுப்புதல், ஒரு பெண் பல ஆண்களுடன் தொடர்பு கொள்ளல், தனது விருப்புக் கேற்ப தந்தையைப் பிரகடனப்படுத்தல், பிள்ளையின் சாயலுக்குரியவரை தந்தையாக பிரகடனப்படுத்தல், மூத்த சகோதரனின் மனைவியை இளைய சகோதரர்களும் அனுபவித்தல், மனைவிமாரை மாற்றி அனுபவித்தல் தந்தையர் தமது பெண்பிள்ளைகளை மாற்றிக் கொண்டு மணம்புரிதல், கோத்திர ஆணின் அழைப்பைப் புறக்கணிக்க முடியாமல் தொடர்பு கொள்ளல், தந்தையின் மறுதாரத்தை தந்தைக்குப் பின் மகன் மணமுடித்தல் போன்ற அவருக்கத்தக்க மணமுறைகள் காணப்பட்டன.

- ஆண்கள், உயர்வாகக் கணிக்கப்பட்டனர். ஆண் குழந்தை பிறந்தால் மகிழ்ந்து விழா எடுப்பர். பெண் குழந்தை பிறந்தால் உயிருடன் புதைக்கும் வழக்கமும் சில கோத்திரங்களில் காணப்பட்டது. எதிர்க் கோத்திரத்தாரின் தொல்லையிலிருந்து பாதுகாத்தல். போரில் அடிமைகளாக மாறுவதைத் தவிர்த்தல், வறுமை போன்றன இதற்குக் காரணமாக அமைந்தன என்பர். எனினும் வேறு சில கோத்திரங்களில் பெண்களைக் கௌரவமாக நடத்தும் பண்பும் காணப்பட்டது. மலக்குகள் அல்லாஹ்வின் பெண்மக்கள் என்ற அவர்களின் ஊகமும் சிலைகளை பெண்களின் வடிவில் அமைத்தலும் பெண்கள் மதிக்கப்பட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.
- நகர்ப்புற அறபிகளுக்கும், நாட்டுப்புற அறபிகளுக்குமிடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. நாட்டுப்புற அறபிகள் நாடோடிகளாக வாழ்ந்தனர். அவர்கள் ‘*பதவீ*கள் எனப்பட்டனர். கூடாரங்களில் வாழ்ந்தனர். மந்தை மேய்த்தும், வேட்டையாடியும், கரவான்களைக் கொள்ளையடித்தும் வாழ்ந்தனர். அங்கு அடிமைச் சமூகமொன்றும் வாழ்ந்தது. போர்களில் கைதிகளாகப் பிடிபட்டோர் அடிமைகளாகக் கணிக்கப்படுவர். பணங்கொடுத்து அடிமைகளை வாங்கும் வழக்கமும் இருந்தது. அடிமைகளின் தொகையைப் பொறுத்து எசமானர்கள் மதிக்கப்படுவர். அடிமைகள் தொழில் செய்து ஊதியத்தை எசமானர்களுக்குக் கொடுப்பர். பெரும்பாலும் உரிமை இழந்த நிலையிலேயே அடிமைகள் வாழ்ந்தனர்.

**நிருவாக ஒழுங்குகள்**

- அறபுநாடு பாலைவனமாக இருந்தமையால் அங்கு நிரந்தர ஆட்சியோ நிருவாக ஒழுங்குகளோ காணப்படவில்லை. பொரும்பாலானோர் தமது அன்றாட வாழ்வுக்காக மந்தை மேய்த்தும் வேட்டையாடியும் வாழ்ந்தமையால் அவர்கள் ஓரிடத்தில் நிரந்தரமாகக் குடியிருக்கவில்லை. தமது மந்தைகளையும் கூடாரங்களையும், பிள்ளைகளையும் சுமந்து கொண்டு நாடோடிகளாகத் திரிந்தனர்.
- இப்றாஹீம் (அலை), அவர் மனைவி ஹாஜர், மகன் இஸ்மாயில் ஆகியோரைக் குடியிருந்தமையாலும், ஸம்ஸம் நீரூற்று அமையப் பெற்றதாலும், க.்.பதுல்லா நிர்மாணிக்கப்பட்டதாலும் மக்கா ஒரு வணிக மையமாகவும், யாத்திரைத் தலமாகவும் உயர்வடைந்தது. இதனால் அங்கு மக்கள் நிரந்தரமாகக் குடியிருந்தனர். இவ்வாறு குடியிருந்து க.்.பாவைப் பரிபாலித்தமையால் ஏனையோரால் மதிக்கப்பட்டனர். அவர்களும் யாத்திரிகர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்து, தமது கௌரவத்தை நிரந்தரமாக்கிக் கொண்டனர். அவர்களுக்கு அறபுநாட்டில் ஏனைய பகுதிகளிலும் மதிப்பும் மரியாதையும் இருந்தன.
- இடைக்காலத்தில் மக்காவில் செல்வாக்குப் பெற்றிருந்த *குழாஆ* கோத்திர செய்கு, ஹுலைல் என்பவரின் மகளை குறைஷியரான குஸை இப்னு கிலாப் மணமுடித்ததால் ஹுலைலின் மரணத்துக்குப் பின்னர், குஸை தனது அறிவு, செல்வம், செல்வாக்கு, மக்களாதரவு என்பவற்றின் மூலம் க.்.பாவின் பரிபாலகராக உயர்வடைந்தார்.
- இவர் பதவியேற்றதும் சிதறி வாழ்ந்த குறைஷியரை க.்.பாவுக்கு அருகாமையில் குடியிருக்க வீடுகளை அமைத்துக் கொடுத்தார். தாமும் அங்கு குடியிருந்ததோடு தனது நிருவாகப் பணிகளை நிறைவேற்றுவதற்காக *தாருந் நத்வா* என்ற சபையை

நிறுவினார். முக்கிய விடயகள் யாவும் அதில் கலந்தாலோசிக்கப்பட்டன. யாத்திரீகர்களின் வசதிக்காக ரிபாதா (உணவு வழங்கல்) ஸிகாயா (நீர் வழங்கல்) ஹிஜாபா (க.்.பாவை பரிபாலித்தல்) லிவா (போருக்குத் தலைமை தாங்குதல்) நத்வா (கலந்தாலோசித்தல்) என்ற அதிகாரங்களை கோத்திரத் தலைவர்களிடையே வகுத்துக் கொடுத்தார்.

- குஸை மரணமடைய புதல்வன் அப்துத்தார் பதவியேற்றார். எனினும் அவருக்குப் பின்னர் அவர்களின் புதல்வர்களிடையே பதவிப் போட்டி ஏற்பட்டது. அப்துத் தாரின் பேரர்களான *ஹாஷிம், அப்துஷ்ஷம்ஸ், அப்துல் முத்தலிப், நவ்பல்* ஆகியோர் க.். பாவின் பொறுப்பை ஏற்க விரும்பிய போது பிளவு தோன்ற ஆரம்பித்தது. ஒரு பகுதியார் *ஹில்புல் முதய்யிபீன்* என்றும் மறு பகுதியார் *ஹில்புல் அஹ்லாப்* என்றும் பிரிந்தனர். பின்னர் சமரசம் செய்யப்பட்டு, பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அப்துத்தாரின் வழித்தோன்றல்களுக்கு ஹிஜாபா, லிவா, நத்வா பொறுப்புக்கள் வழங்கப்பட்டன.
- மக்களை நிருவகிப்பதற்காக *மலஉ* என்ற மேல்சபை இருந்தது. இதில் கோத்திர தலைவர்களும், பிரதானிகளும் உறுப்புரிமை பெற்றனர். இவர்கள் செல்வம், அறிவு, இராச தந்திரம், தன்மானம் உடையவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். எனினும் இச்சபைக்கு அதிகாரங்கள் இருக்கவில்லை. ஏகோபித்த முடிவுகள் செயற்படுத்தப்பட்டன. உதாரணமாக, யாத்திரீகர்களுக்கான தற்காலிக மலசலகூடமமைத்தல், அடிமைகள் குடிநீர் சுமந்து வருதல், கோத்திரங்கள் தாம் வாழும் நகர்ப்பகுதிகளில் குப்பைத் தொட்டிகளை வைத்திருத்தல் மலையுச்சியில் நெருப்பு மூட்டி இரவில் பயணிகளுக்கு வழிகாட்டல் போன்றன இடம்பெற்றன.

**மொழியும் இலக்கியமும்**

- சமூகத்தின் தொடர்பாடலுக்கு மொழியும், இலக்கியமும் ஊடகமாகப் பயன்படுகின்றன. ஜாஹிலிய்யா சமூகத்தில் ஆண்குழந்தை பிறந்தாலும், கவிஞர்கள் தோன்றினாலும் விழா எடுத்துப் பாராட்டினர். இதனால் அங்கு இலக்கியம் வளர்வதற்குச் சாதகமான சூழ்நிலைகள் காணப்பட்டன.

- அறபுச் சமூக அமைப்பில் கவிஞன் முக்கிய பாத்திரத்தை வகித்தான். அவனுக்குச் சமூகத்தில் உயர் அந்தஸ்து வழங்கப்பட்டது. தெய்வீக ஆவி அவனில் குடியிருப்பதாக நம்பினர். அந்த வரண்ட சமூக சூழலில் அழகுணர்வையும், இன்பத்தையும் ஊட்டக்கூடியவைகளாகக் கவிஞர்களின் வாயுதிர் கவிதைகளே அமைந்தன.
- இதனால் கவிஞர்கள் தோன்றுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தனர். யாத்திரைக் காலத்தில் யாத்திரீகர்களைக் கவர்வதற்காக உக்காள், துல்மஜாஸ் போன்ற சந்தைகள் ஏற்படுத்தப்பட்டன. அங்கு கவிதைப் போட்டிகளும் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெறும் கவிதைகள் தங்க எழுத்தில் பதிக்கப்பட்டு க.்.பாவில் தொங்கவிடப்பட்டு கௌரவிக்கப்பட்டன. இதனால், இக்கவிதைகள் *முஅல்லகாத், முதஹ்ஹபாத்* எனப் பாராட்டப்பட்டன. பிற்காலத்தில் *ஹம்மாத் அல் ராவியா (கி.பி. 772) என்பவர் ஸப்உல் முஅல்லகாத்* எனும் பெயரில் அவற்றைத் தொகுத்தளித்தார்.
- கிந்தா கோத்திரத்தின் *இம்ரஉல்கைஸ், பக்ர் கோத்திரத்தின் தரபா, தக்லிப்*

கோத்திரத்தின் *அமர் இப்னு குல்ஸூம், அபஸ் கோத்திரத்தின் அந்தரா, முஜன்னா கோத்திரத்தின் ஸுஹைர், ஜ.்.பர் கோத்திரத்தின் லபீத், அஜித் கோத்திரத்தின் ஸன்பரா ஆகிய எழுவரும் முஅல்லகாத் பாடிய கவிஞர்களாவர்.*

- குறைஷியருக்கு கவிதையால் பதிலடி கொடுங்கள். ஏனெனில் அது அவர்களுக்கு ஈட்டியைவிட கூர்மையானது (முஸ்லிம்) என்ற நபி (ஸல்) அவர்களின் ஹதீஸும், கவிதைகள் அறபுமக்களின் பதிவேடுகள் என்ற உமர் (ரழி) அவர்களின் கூற்றும் அன்று கவிதை பெற்ற செல்வாக்கை எடுத்துக் காட்டுகின்றன. ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரழி) போன்ற கவிஞர்களை நபி (ஸல்) அவர்கள் ஊக்குவித்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

- அறபு இலக்கியத்தில் செய்யுள் இலக்கியம் எப்போது ஆரம்பித்தது என திட்டமாகக் கூற முடியவில்லை. ஆனால் ஜாஹிலிய்யாக் காலத்தில் அது வளர்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டது. ஆரம்பத்தில் தனிக்கவிதைகள் தோன்றி அப்துல் முத்தலிபின் காலத்தில் கஸீதாக்கள் தோன்றுமளவு வளர்ச்சியடைந்ததாகக் குறிப்பிடுவர்.

- கவிதைகள் முற்றுப் பெற்றவை, முற்றுப் பெறாதவை என இரு வகையாகக் காணப்பட்டன. அவை மனனமிடுவதற்கு இலகுவாக, ஓசை நயத்தையும், குறைவான அடிகளையும் கொண்டிருந்தன. ஒவ்வோர் அடியும் மூன்று, நான்கு சொற்களை உள்ளடக்கியிருந்தன. இவை ஸஜஉ எனப்பட்டன. ஸஜஉவின் திருந்திய வடிவம் ரஜ்ஸ் எனப்பட்டது. பிற்காலத்தில் தொகுக்கப்பட்ட முஅல்லகாத், முபழ்ழலிய்யாத், ஹமாஷா எனப்பட்டவை இவ்வாறான கவிவடிவங்களையே கொண்டிருந்தன. கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முஹல்ஹில் என்பவரே ரஜ்ஸ் இனக் கவிதைகளை அறிமுகப்படுத்தியவராக கொள்ளப்படுகிறார்.
- ஜாஹிலிய்யாக் காலத்தில் கவிதை இலக்கியம் (நழ்ம்) வளர்ந்தது போல உரைநடை இலக்கியம் (நஸ்ர்) வளர்ச்சியுறவில்லை. அம்மக்கள் எழுத வாசிக்கத் தெரியாதிருந்தமை இதற்குக் காரணமாக இருக்கலாம். அன்று, எழுத்து வழக்கும், எழுத்துச் சாதனங்களும் மிக அரிதாகவே காணப்பட்டன. மனனமிடும் ஆற்றல் இருந்தமையால் செய்யுள் இலக்கியம் பாதுகாக்கப்பட்டது. அன்று எதுகை, மோனை அமைந்த வசன நடை காணப்பட்டது. வசன நடையில் பழமொழிகளும் கலந்திருந்தன. பிற்காலத்தில் முபழ்ழல் பின் ஸலாமா என்பவர் மஜ்மஉல் அம்ஸால் எனும் பெயரில் பழமொழித் தொகுப்பு ஒன்றை வெளியிட்டார். அத்தோடு பொன்மொழிகளும் வழங்கப்பட்டன. *குஸ் இப்னு ஸாஇதா. அக்ஸம் பின் ஸைத்* முதலிய சிறந்த பேச்சாளர்களும் இருந்தனர். இவர்களது குத்பாக்கள் பிரசித்தமானவை. இத்தகைய ஜாஹிலிய்யா சமூகத்தை இஸ்லாத்தின் தூது மாற்றியமைத்தது

**தேர்ச்சி 6.0 : இஸ்லாத்துக்கு முற்பட்ட காலம் முதல் அப்பாஸியர்களின் வீழ்ச்சி வரையிலான கால கட்டங்களில் அரசியல், சமூக, நாகரிக வளர்ச்சி பற்றி விளக்கிக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2: நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட சமய, சமூக, அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளை விரிவாக எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளைகள் : 16**

**கற்றல் பேறுகள்:**

- நுபுவ்வத்துக்கு முன்னர் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட சமூக நடவடிக்கைகள் பற்றி விபரித்துக் கூறுவார்.
- நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்துக்குப் பின்னர் மக்காவில் மேற்கொண்ட சமய, சமூக நடவடிக்கைகள் பற்றி விளக்கிக் கூறுவார்.
- நபி (ஸல்) அவர்கள் கால ஹிஜ்ரத் நிகழ்வுகள் அவற்றின் முக்கித்துவம் பற்றி விபரித்துக் கூறுவார்.
- மதீனாவில் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட சமய, சமூக, அரசியல் நடவடிக்கைகள் பற்றி விபரித்துக் கூறுவார்.
- நபி (ஸல்) அவர்கள் மக்காவிலும் மதீனாவிலும் மேற்கொண்ட சமய, சமூக நடவடிக்கைகளின் விளைவுகளை மதிப்பிட்டுக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், அறபு நாட்டில் மக்கா நகரில் பிரபலமான குறைஷிக் குலத்தில், பனூ ஹாஷிம் கோத்திரத்தில் அப்துல்லா என்பவருக்கு மகனாகப் பிறந்தார். அவர் பிறந்த ஆண்டு யானை ஆண்டு (கி.பி.570/71) எனப்படுகின்றது. அவர் பிறக்கும் போதே தந்தையை இழந்திருந்தார். ஆறு வயதில் தாயையும் இழந்தார். அன்றைய மரபின்படி ஸ.்துக்கிளையைச் சேர்ந்த ஹலீமா அம்மையாரிடம் சில ஆண்டுகள் பாலருந்தினார். இதனால் கிராமிய சூழலில் வாழ்ந்து பழகினார். அங்கு வாழும் காலத்தில் அவரது உள்ளம் மலக்குகளால் தூய்மைப்படுத்தப்பட்டது.

- அவர்கள் சிறுவயது முதல் நல்லொழுக்கத்துடனும், பண்பாட்டுடனும் நடந்து கொண்டதால் *அல் அமீன்*, *அஸ்ஸாதிக்* என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டார்கள். குறைஷிகளின் தலைவரான பாட்டன் அப்துல் முத்தலிபுடன் நெருங்கி வாழ்ந்தார். இதனால் இளமையிலேயே சமூகாபிமானமும், தலைமைத்துவப் பண்புகளும் அவரிடம் வளர்ச்சியடைந்தன.

- இளம் பருவத்தில் குறைஷிகள் பங்கு கொண்ட யுத்தமொன்றில் கலந்து கொண்டார். புனித மாதத்தில், புனித பிரதேசத்தில் அவ்யுத்தம் இடம்பெற்றதால் *ஹர்புல் புஜ்ஜார்* (பாவிகளின் யுத்தம்) என்ற பெயரைப் பெற்றது. அதில் எதிரிகள் எய்யும் அம்புகளை பொறுக்கி எடுக்கும் பணி அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இப்போரில் கலந்து கொண்டதால் அவருக்குப் போரனுபவம் கிடைத்தது.

- இடைக்காலத்தில் *ஹில்புல் புழூல்* என்ற சமூக ஒப்பந்தமொன்றில் கலந்து கொண்டார். ஆஸ் இப்னு வாகிஇ என்பாரிடம் வணிகப் பொருட்களைப் பொற்ற ஜுவைத்

கோத்திரத்தார் பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றிய போது நேசக் கோத்திரத்தாரிடம் முறையிட்டார்கள். அவர்களும் கைவிடவே அபூகுபைஸ் மலையிலேறி கவிதை மூலம் தனது நிர்க்கதி நிலையை வெளிப்படுத்தினார். இதைச் செவியுற்ற குறைஷியர், அப்துல்லா இப்னு ஜுத்ஆன் என்ற பெரியாரின் வீட்டில் கூடி அநீதி இழைக்கப்பட்டவருக்கு நீதி வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்தார்கள். மக்காவுக்குள்ளோ வெளியிலோ மக்காவாசிகளோ வெளியாரோ அநியாயத்துக்குள்ளாக்கப்படக் கூடாது என்பதே அத்தீர்மானமாகும். இதில் நபி (ஸல்) அவர்கள், பெரிய தந்தை சுபைர் இப்னு அப்துல் முத்தலிபுடன் கலந்து கொண்டார்கள். இதன் மூலம் சமாதான முயற்சிக்கான ஒரு முன்னனுபவமும் நபி (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது.

- சிறுவயதிலேயே ஸஃதுக் கிளையில் ஆடு மேய்த்துப் பழகிய நபி (ஸல்) அவர்கள், பின்னர் மக்காவிலும் ஆடு மேய்த்தார்கள். அபூதாலிபுடன் வியாபாரத்துக்காக ஷாம் சென்றார்கள். ஸாயிப் மக்ஸூமி என்பாருடன் சேர்ந்தும் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். அவ்வேளையில் தான், அவர்களது வியாபார நேர்மை பகிரங்கமானது. தந்தையையும் கணவனையும் இழந்த கதீஜா (ரழி) அவர்கள் நேர்மையான வியாபார முகவர் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் நேர்மை பற்றித் தெரியவந்ததும், அவர்களை அழைத்து, தமது பண்டங்களை மைஸரா என்ற பணியாளருடன் சேர்த்து ஷாமுக்கு அனுப்பி வைத்தார். பயணத்தில் நபி (ஸல்) அவர்களின் நேர்மைக் குணங்களை அவதானித்த மைஸரா, அவற்றை எசமானி கதீஜா (ரழி) அவர்களிடம் முன்வைத்தார். இதைக் கேட்டறிந்த கதீஜா(ரழி) அவர்கள் மணமுடிக்க விரும்பி தூதனுப்பினார். இரு குடும்பங்களதும் ஆசிர்வாதத்துடன் திருமணம் நிறைவேறியது.
- இது நிகழ்ந்து பத்தாண்டுகளில், மக்காவிலேற்பட்ட பெரு வெள்ளம் கஃபாவைப் புனரமைப்பதற்கான தேவையை ஏற்படுத்தியது. ஹலாலான வழியில் திரட்டப்பட்ட பொருள் மூலம் அதனைக் கட்ட வேண்டுமென குறைஷியர் தீர்மானித்தனர். அதன் ஒவ்வொரு பகுதியையும் கட்டி முடிப்பதற்கு வெவ்வேறு கோத்திரங்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர். கட்டி முடிக்கப்பட்ட பின்னர், *ஹஜ்ருல் அஸ்வதை* யார் பதிப்பது என்பதில் கருத்து வேறுபாடு தோன்றியது. ஒவ்வொருவரும் உரிமை கோரி மோதிக் கொண்டனர். ஐந்து நாட்களாக நீடித்த சர்ச்சையின் பின்னர், *அபூ உமையா மக்ஸூமி* அவர்களின் கருத்துப்படி, அடுத்த நாள் காலையில் யார் பள்ளிவாசலுக்குள் முதலில் நுழைகிறாரோ அவரின் ஆலோசனையைக் கேட்பதென முடிவெடுக்கப்பட்டது.
- எதிர்பாராத வகையில், நபி (ஸல்) அவர்களே முதலில் நுழைந்தார்கள். அவர் நடுவராகச் செயற்படுவதை அங்கீகரித்த தலைவர்கள், தீர்வை எதிர்பார்த்தார்கள். தாம் போர்த்தியிருந்த மேலாடையை விரித்து, அதில் ஹஜ்ருல் அஸ்வதை வைத்து கோத்திரத்தலைவர்கள் எல்லோரும் அதனைச் சுமந்து செல்ல, நபி (ஸல்) அவர்கள் உரிய இடத்தில் அதனைப் பதித்தார்கள். இந்நிகழ்வு நடக்கவிருந்த ஒரு போரைத் தவிர்த்தது. சிறந்த நடுவர் ஒருவரையும் அந்தச் சமூகம் தெரிந்து கொண்டது.

**சமயம்**

- இந்தப் பின்னணியில் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்படவிருந்த காலமும் நெருங்கியது. இப்றாஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை) ஆகியோர் அல்லாஹ்வின் தூதை எத்திவைத்து சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள்

கடந்திருந்தன. நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் *''எங்கள் இறைவனே! அவர்களிடையே உன்னுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களைத் தூய்மைப்படுத்தக் கூடிய ஒரு தூதரை அவர்களிலிருந்தே எழுந்திடச் செய்வாயாக - நிச்சயமாக நீயே வல்லமை மிக்கோனாகவும், பெரும் ஞானமுடையோனாகவும் இருக்கின்றாய்.'' (2: 129)* என்ற பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும் கால கட்டமாகவும் அது இருந்தது.

- முன்னர் அருளப்பட்ட வேதக்கருத்துக்கள் திரிக்கப்பட்டு சில சடங்குகளோடு மாத்திரம் சுருங்கியிருந்தன. அவை அருளப்பட்ட மொழிகளும் வழக்கொழிந்திருந்தன. அறபு நாட்டின் வடக்கிலும் தெற்கிலுமிருந்த பிரதேசங்களுக்கு வணிகத்துக்காகச் சென்றோர் அப்பிரதேசங்களில் காணப்பட்ட திரிபுற்ற யூத, கிறிஸ்தவ அனுட்டானங்களையும் மரபு ரீதியான சடங்குகளையும் கண்டு வந்தனர். வரவிருக்கும் நபி பற்றிய முன்னறிவிப்புக்களையும் தெரிந்து வந்தனர். *ஹுபல்* என்ற சிலை கஃ பாவுக்கருகாமையில் நிறுத்தப்பட்டதும் சிலை வணக்கம் அறிமுகப்படுத்தப்பட்டதும் வேறுபல சடங்குகள் இடம்பெற்றதும் இவ்வகையினவே. ஒரு கோத்திரத்தை மறு கோத்திரம் பின்தொடர மறுத்துப் போட்டியுணர்வை ஏற்படுத்திய நிலையில் தனித்தனி சிலைகளும் சடங்குகளும் ஏற்பட்டிருந்தன. போலிக் குருமார் (காஹின்) மக்களை ஏய்த்து தமது வயிறை வளர்த்துக் கொண்டிருந்தனர். எழுத்தறிவற்ற அந்த மக்களிடம் வேதக் கருத்துகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் காணப்படாமையால் உண்மையான சமயத்தை இனம் காணவும் முடியாதிருந்தனர்.முன்னைய வேதங்களைப் படித்தறிந்த ஒரு சிலர் இருந்தாலும் கூட, அவர்களை வழிகாட்டியாக ஏற்கும் மனோநிலையில் சமூகம் இருக்கவில்லை. அந்த நிலையில்தான் *வரகா பின் நவ்பல்* போன்றோரும், ஹுனபாக்களும் காணப்பட்டனர்.

- இவை மட்டுமன்றி முன்னர் அருளப்பட்ட வேதங்கள் குறிப்பிட்ட இனத்துக்கு அல்லது பிரதேசத்துக்குரிய வேதங்களாக இருந்தமையால் அவை ஏனைய பிரதேசங்களுக்கோ, மொழியினருக்கோ பொருத்தமாக இருக்கவில்லை. காடுகளாலும், ஆறுகளாலும், பாலை வனங்களாலும் துண்டிக்கப்பட்ட பிரதேசங்களாக இருந்தமையால் குறுகிய வட்டத்திலான தூது வழங்கப்பட்டு வந்தது. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் அரசுகளின் தோற்றத்தாலும் வணிக விருத்தியாலும் தேசங்களுக்கிடையிலான தொடர்புகள் வளர ஆரம்பித்தன. எனவே, சர்வதேச தூதுக்கான காலகட்டமாகவும் அது காணப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் மனித சமுதாயம் முழுவதற்குமான தூதராகவும், அல்குர்ஆன் மனித சமுதாயம் முழுவதற்குமான வேதநூலாகவும் எடுத்துக்காட்டப்பட்டன.

- ஒரு நபி தோன்றுவதற்கு, முன்னைய நபிமார்களின் போதனை அழிந்து போதல், முன்னைய நபிமார்களின் போதனை பூரணமடையாதிருத்தல், முன்னைய நபிமார்களின் போதனைகள் குறிப்பிட்ட சமுதாயத்துக்கு மட்டும் உரியதாக இருத்தல் என்ற மூன்று நிலைகளில் ஒன்று காணப்பட வேண்டும். நபி (ஸல்) அவர்கள் பிறந்த காலகட்டத்தில் இந்த மூன்று நிலைகளுமே காணப்பட்டன. இதனை அல்குர்ஆன், பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறது.

  *''நமக்கு முன் இரு கூட்டத்தினர் மீது மட்டுமே வேதம் இறக்கப்பட்டது - ஆகவே நாங்கள் அதனைப் படிக்கவும் கேட்கவும் முடியாமல் பராமுகமாகி விட்டோம்*

*என்று நீங்கள் கூறாதிருக்கவும் அல்லது மெய்யாகவே எங்கள் மீது ஒரு வேதம் அருளப்பட்டிருந்தால், நிச்சயமாக நாங்கள் அவர்களைவிட மிக்க நேர்மையாக நடந்திருப்போம் என்று நீங்கள் கூறாதிருக்கும் பொருட்டும் (இவ்வேதத்தை அருளினோம்) ஆகவே உங்களுடைய இறைவனிடமிருந்தும் மிகத்தெளிவான வேதமும், நேர்வழியும், அருளும் வந்துவிட்டது - எவனொருவன் அல்லாஹ்வின் வசனங்களைப் புறக்கணித்து, அவற்றைவிட்டு விலகிவிடுகின்றானோ அவனைவிட அதிக அநியாயக்காரன் யார்? நம்முடைய வசனங்களை விட்டுவிலகிக் கொள்கிறவர்களுக்கு, அவர்கள் விலகிக் கொண்ட காரணத்தால் கொடிய வேதனையைக் கூலியாகக் கொடுப்போம். (6:156-157)*

இதே கருத்தை வேறு வசனங்களும் சுட்டிக்காட்டுகின்றன.

- *(நபியே!) நீர் கூறுவீராக ''மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன். வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியது, அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறுயாருமில்லை - அவனே உயிர்ப்பிக்கின்றான். அவனே மரணிக்கச் செய்கின்றான் - ஆகவே, அல்லாஹ்வின் மீதும், எழுதப்படிக்கத்தெரியாத நபியாகிய அவன் தூதரின் மீதும் ஈமான் கொள்ளுங்கள், அவரும் அல்லாஹ்வின் மீதும் அவன் வசனங்களின் மீதும் ஈமான் கொள்கிறார் - அவரையே பின்பற்றுங்கள் நீங்கள் நேர்வழி பெறுவீர்கள்."(7:158)*

  நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: *எனக்கு முன்னர் தோன்றிய நபிமார்கள் குறிப்பிட்ட சமுதாயத்துக்கு மட்டுமே அனுப்பப்பட்டார்கள். ஆனால், நான் உலக மக்கள் அனைவருக்கும் ரஸூலாக அனுப்பப்பட்டுள்ளேன். (முஸ்லிம்)*

- வஹீ அருளப்பட்ட ஆரம்ப கட்டத்தில், நபி (ஸல்) அவர்கள் மக்காவில் தவ்ஹீத், ரிஸாலத், மஆத் என்ற இஸ்லாத்தின் அடிப்படை போதனைகளைப் பற்றியே விளக்கமளித்தார்கள். நற்குணங்களையும், பண்பாடுகளையும் வளர்த்துவிட்டார்கள். பொறுமை, சகிப்புத்தன்மை, சகோதரத்துவம் போன்ற பண்புகளுக்கூடாக எதிர்ப்புக்களைக் கட்டுப்படுத்த முயன்றார்கள். நபி (ஸல்) அவர்களின் 13 வருட கால மக்கா வாழ்க்கைப் பகுதியில், மூன்றாண்டுகள் இரகசிய பிரசாரத்தில் ஈடுபட்டார்கள். உறவினர்கள், நண்பர்கள், நல்லுள்ளம் கொண்டவர்கள் அவர்களை ஏற்றுக் கொண்டார்கள். தாருல் அர்கம் எனும் அர்கம் (ரழி) அவர்களின் வீட்டில் அவர்களுக்கான அறிவும், பயிற்சியும் வழங்கப்பட்டன. அடுத்த பத்து ஆண்டுகளும் பகிரங்கப் பிரசாரத்தில் ஈடுபட்டார்கள். அப்போதுதான் வசை மொழிகளும் உடற் காயங்களுக்கும் உட்பட்டார்கள். எனினும் அவர் தமது பிரசாரத்தைக் கைவிடவில்லை. குறைஷிகளின் எதிர் நடவடிக்கைகளைப் பொருட்படுத்தவில்லை. சலித்துவிடவுமில்லை. இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதால் இன்னலுற்ற முஸ்லிம்கள் சிலரை ஹபஷாவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

- ஹபஷாவுக்குச் சென்ற குழுவுக்குத் தலைமை தாங்கிய ஜ∴பர் இப்னு அபூதாலிப் (ரழி) அவர்கள், நஜ்ஜாஷி மன்னனிடம், ''மன்னனே, நாங்கள் ஜாஹிலிய்யத்தில் சிக்கியிருந்தோம். விக்கிரகங்களை வணங்கிவந்தோம். இறந்த பிராணிகளின் மாமிசத்தைக்கூட உண்டு வந்தோம். எல்லா வகையான இழி செயல்களையும் செய்து கொண்டிருந்தோம். எங்களுடைய உறவினர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை

மீறிக் கொண்டிருந்தோம். அண்டை வீட்டாரைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தோம். எங்களிடையேயுள்ள வல்லவர்கள், எளியவர்களை அடக்கியாண்டு வந்தார்கள்.

இறுதியாக, எங்களை நல்வழிப்படுத்த அல்லாஹ் ஒரு தூதரை அனுப்பினான். அவருடைய ஒழுக்கம், நேர்மை, உண்மை, இறைபக்தி ஆகியவற்றை நாங்கள் எல்லோரும் நன்கறிந்திருந்தோம். அவர் ஒரே இறைவனை வணங்குமாறு எங்களுக்குப் போதித்தார்கள். கற்களையும், விக்கிரகங்களையும் வணங்க வேண்டாமென்று கூறினார்கள். உண்மையே பேசுமாறும், பொறுப்புக்களை நிறைவேற்றுமாறும் உறவுகளை மதித்து நடக்குமாறும், அண்டை வீட்டாருக்கு நன்மை செய்யுமாறும் எங்களைத் தூண்டினார்கள். அநியாயங்கள் செய்வதையும், இரத்தம் சிந்துவதையும் தவிர்க்குமாறு உபதேசித்தார். பொய் சொல்லுதல், அநாதைகளின் உடமைகளை அபகரித்தல் பெண்களின் கற்பு பற்றி பொய்க் குற்றச் சாட்டுகளை முன்வைத்தல் போன்ற கேவலமான செயல்கள் எல்லாவற்றையும் அவர் தடை செய்தார். ஆதலால், அவர் மீது விசுவாசம் கொண்டோம். அவரைப் பின்பற்றினோம். அவரின் போதனைப்படி செயலாற்றினோம்.

- இவை நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட சமய சமூக சீர்திருத்தங்களை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

  வணங்கத்தக்கவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சொல்லுங்கள். வெற்றியடைவீர்கள் என்று மக்களுக்கு உபதேசித்தார்கள். அல்லாஹ்வின் படைப்புகளுக்கு வணக்கம் செலுத்துவதை விடுத்து அல்லாஹ்வை மாத்திரம் வணங்குமாறு மக்களுக்கு அழைப்புவிடுத்தார்கள். அல்லாஹ் அல்லாதவற்றிடம் உதவி தேடுவதை விடுத்து அல்லாஹ்விடம் மட்டுமே உதவி தேடுமாறு வேண்டிக் கொண்டார். தமது தொழுகையில், ஸூறதுல் பாத்திஹாவை ஓதி *உன்னையே வணங்குகின்றோம், உன்னிடமே உதவி தேடுகிறோம்* என தினமும் பதினேழு தடவையாவது உறுதியளிப்பதற்கு வழிகாட்டினார்கள்.

- கல்லுக்கும் மண்ணுக்கும் அடிமைப்பட்டிருந்த மக்களே, தம்மையும் ஏனைய படைப்புகளையும் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வின் அடிமையாக வாழ்வதற்கு அழைப்பு விடுத்தார். எனவேதான், பிற்காலத்தில், பாரசீக தளபதி ருஸ்தும் உங்களது வருகையின் நோக்கம் என்ன என்று முஸ்லிம் தூதுக்குழுவிடம் விசாரித்த போது, ‘மனிதன் மனிதனுக்கு வழிபடும் வாழ்விலிருந்து அல்லாஹ் ஒருவனை மாத்திரம் வணங்கி வழிபடவும், உலக நெருக்கடியிலிருந்து அவர்களை விடுவித்து மறுமைச் சுபீட்சத்தின் பால் இட்டுச் செல்லவும் மதங்களின் அநியாயங்களிலிருந்து எமது மக்களை விடுவித்து இஸ்லாமிய நீதியின் பக்கம் வழிப்படுத்தவும் அல்லாஹ் எங்களை இங்கு அனுப்பினான் என்று *ருபை இப்னு ஆமிர் (ரழி)* அவர்கள் குறிப்பிட்டார்கள். மனோ இச்சைக்கு வழிபட்டு வாழ்ந்த மக்களை அல்லாஹ்வின் விருப்பத்துக்கு உட்பட்டு வாழும் மக்களாக மாற்றியமைத்தார்கள். அல்லாஹ் மீதான அச்சத்தை உள்ளங்களில் பதியவைத்தார்கள். எதையும் அல்லாஹ்வுக்காகவே செய்வது, அல்லாஹ்வுக்காவே செய்யாமல் விடுவது என்ற நிலைப்பாட்டில் வாழ பயிற்றுவித்தார்கள்.

சத்தியத்தைப் போதித்த தமக்கும் அதனை பெற்றுக் கொண்ட முஸ்லிம்களுக்கும் குறைஷியர் காட்டிய எதிர்ப்பும், எதிர்வினைகளும் நபி (ஸல்) அவர்களைப் பெரிதும் வாட்டின. ஏற்கனவே முஸ்லிம்களை ஹபஷாவுக்கு அனுப்பி வைத்தாலும் அது முழுமையான பாதுகாப்பாக அமையவில்லை. எனவே, *ஸைத் இப்னு ஹாரிதா (ரழி)* உடன் தாயிபுக்குச் சென்று அங்கு இஸ்லாத்தைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள். அதுவரை, சாதாரண பொது மக்களை அணுகி, இஸ்லாத்தை முன்வைத்த நபி (ஸல்) அவர்கள், தாயிபின் பிரதான கோத்திரங்கள் மூன்றின் ஷெய்குமார்களை அணுகி பிரசாரத்தை மேற்கொண்டார்கள். எனினும் அது தோல்வியில் முடிவுற்றது. மக்காவுக்கு மீண்ட நபி (ஸல்) அவர்கள், யாத்திரைக் காலத்தில் யஸ்ரிபிலிருந்து வந்த யாத்திரீகர்களை சந்திக்க முயற்சித்தார்கள். மூன்று கட்டங்களில் இரண்டாண்டுகள் இடம்பெற்ற சந்திப்பு நபி (ஸல்) அவர்களையும், முஸ்லிம்களையும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. அவர்களுடன் செய்துகொண்ட பைஅதுல் அகபா என்ற உறுதிமொழி, இஸ்லாமிய பிரசாரத்துக்கான ஒரு புதிய களத்தை ஏற்படுத்திக்கொடுத்தது.

- யஸ்ரிபுக்கு ஹிஜ்ரத் சென்ற நபி (ஸல்) அவர்கள், அங்கு முதன் முதலாக மஸ்ஜித் ஒன்றை நிர்மாணித்தார்கள். *மஸ்ஜிதுந்நபவி* எனப்பட்ட அது இஸ்லாத்தின் போதனா பீடமாகவும், பயிற்சிக்கூடமாகவும் அமைந்தது. ஜமாஅத் தொழுகை மூலம் மஸ்ஜிதோடு சமூகத்தைப் பிணைத்து அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தினார்கள். இ∴திகாப், த∴லீம் போன்ற இபாதத்துகளுக்கூடாகவும், குத்பாக்கள் மூலமாகவும் அறிவூட்டினார்கள். ஸுப்பாக்களில் கருத்துப்பரிமாறி அறிவைப் பெருக்கிக் கொள்ள வழிகாட்டினார்கள். *அஹ்லுஸ்ஸுப்பா* எனப்பட்ட தோழர்கள் மஸ்ஜிதில் தங்கி நின்று தாமும் கற்றுக் கொண்டதோடு மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்தார்கள். இறங்கிக் கொண்டிருக்கும் அல்குர்ஆன் வசனங்களை உடனுக்குடன் மனனமிட்டுக் கொண்டார்கள். இயலுமானவர்கள் எழுதிக் கொண்டார்கள். எழுதுவதற்கென்றே நியமிக்கப்பட்டிருந்த குத்தாபுல் வஹி எனப்பட்டோர்களும் அங்குதான் இருந்தார்கள். நபி (ஸல்) அவர்களிடமிருந்து வெளியாகும் ஹதீஸ்களையும் மனனமிட்டுக் கொண்டார்கள். முடியுமானவர்கள் எழுதிக் கொண்டார்கள். தமக்கு மத்தியில் கலந்துரையாடி சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டார்கள். நபி (ஸல்) அவர்களிடம் கேட்டு விளக்கம் பெற்றுக் கொண்டார்கள். ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டார்கள். தினமும் கலந்து கொள்ள முடியாதவர்கள் வேறுவகையான ஒழுங்குகளைச் செய்து கொண்டார்கள். உதாரணமாக மஸ்ஜிதிலிருந்து மூன்று மைல் தொலைவிலிருந்த உமர் (ரழி) அவர்களும் அவரது அன்ஸார் தோழரும் மாறிமாறி வந்து கற்றுக் கொண்டதோடு தமக்குள் அவற்றைப் பரிமாறிக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- படிப்படியாக வஹி இறங்கிக் கொண்டிருந்தது. முதலில் தொழுகையும் ஹி. 2 இல் ஸகாத், நோன்பு ஆகிய கடமைகளும் ஹி 9 இல் ஹஜ்ஜும் விதியாக்கப்பட்டன. மக்களின் கேள்விகளுக்குப் பதிலாகவும், பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அல்குர்ஆனும் ஸுன்னாவும் வழிகாட்டல்களை வழங்கிக் கொண்டிருந்தன. அல்குர்ஆன் கொள்கைகளை வழங்க, நபி (ஸல்) அவர்கள் நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஊறிப்போன ஜாஹிலிய்யாப்

பழக்கங்களைப் படிப்படியாகக் களைந்தெறிந்தார்கள். எனவே, ஹஜ்ஜதுல் விதாவில் *“இன்றைய தினம் நாம் உங்களுடைய மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து என்னுடைய அருளையும் உங்கள் மீது பூரணமாக்கி வைத்துவிட்டோம். உங்களுடைய இந்த இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றியும் திருப்தியடைந்தோம் (5:3)”* என்று இஸ்லாம் பூரணப்படுத்தப்பட்டுவிட்ட விடயத்தை அவல்குருஆன் சுட்டிக்காட்டுகிறது. அத்தினத்தில் 124000 முஸ்லிம்கள் திரண்டிருந்தனர்.

**சமூகம்**

- நபி (ஸல்) அவர்களின் சமூக சீர்திருத்தப்பணிகள் மதீனா வாழ்க்கைப் பகுதியிலேயே இடம் பெற ஆரம்பித்தன. மக்கா வாழ்க்கைப் பகுதியில் அதிகமான எதிர்ப்புகள் காணப்பட்டதால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்களில் கொள்கை ரீதியான மாற்றங்களையும், பண்பாட்டு ரீதியான மாற்றங்களையுமே செய்ய முடிந்தது. அதாவது தனிநபர்களைச் சிறந்த மனிதர்களாகவும் முஸ்லிமாகவும் வாழ வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
- இக் கால கட்டத்தில் ஷிர்க்குக்குப் பதிலாக தவ்ஹீதை முன்வைப்பதில் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். இதனால் தான் முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது தெய்வங்களைப் புறக்கணிக்கிறார் என்றும் தமது குடும்பங்களையும் கோத்திரங்களையும் பிரிக்கிறார் என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இஸ்லாத்தை ஏற்ற மக்கள், தமது குடும்பங்களோடு சேர்ந்து வாழ்ந்தார்கள். ஆனால் அவர்களின் வணக்க வழிபாடுகளைப் புறம் ஒதுக்கினார்கள். நபி (ஸல்) அவர்கள் பயிற்சி கொடுத்த தாருல் அர்கமில் கலந்து இஸ்லாத்தைக் கற்றுக் கொண்டார்கள். அதனடிப்படையில் செயல்பட்டு வந்தார்கள். குடும்பத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செல்வாக்குமிக்கவர்களின் அனுசரணையில் வாழ்ந்தார்கள்.

- இந்த ஒதுங்கிய வாழ்வுமுறையிலிருந்து சுதந்திரமாக வாழ்வதற்கான இடம் தேடியே முஸ்லிம்கள் சிலரை அபிசீனியாவுக்கு அனுப்பிவைத்தார்கள். அது இரண்டு கட்டங்களில் இடம்பெற்றாலும் நஜ்ஜாஷி மன்னனின் பாதுகாப்புக் கிடைத்தாலும் குறைஷிகளின் வேண்டாத தலையீடுகள் இடம்பெற்றே வந்தன.
- நபி (ஸல்) அவர்கள் தாயிபுக்குச் சென்று களம் தேடியும் அது சாத்தியமாகவில்லை. எனவே, மக்காவுக்கு யாத்திரை வந்த யஸ்ரிப் வாசிகளுடன் இரகசியத் தொடர்பு கொண்டு, ஈராண்டு கால முயற்சியின் பின் யஸ்ரிபுக்கு ஹிஜ்ரத் செல்லும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார்கள். இதனால் தான், ஒரு சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தோடு நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்றார்கள் என்ற கருத்தை வரலாற்றாசிரியர்கள் முன்வைக்கிறார்கள். இஸ்லாமிய அரசின் கண்காணிப்பின் கீழ் அமையக்கூடிய சிறப்பு வாய்ந்த உன்னதமான இஸ்லாமிய சமூகமொன்றை உருவாக்குவதற்காகவே நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள் என்ற கருத்தை கலாநிதி யூசுப் அல் கர்ழாவி குறிப்பிடுகிறார்.
- அகபா உறுதி மொழியின் வாசகங்கள், நபி (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதற்கு யஸ்ரிபு வாசிகளால் அளிக்கப்பட்ட உறுதிமொழியாகவும், ஒன்றுபட்ட சமூகமாக வாழ்வதற்கான உறுதியாகவும் அமைந்தன. முஹாஜிரீன்களை யஸ்ரிபுக்கு

அனுப்பிவைத்த நபி (ஸல்) அவர்கள், எல்லாம் வல்ல அல்லாஹ் உங்களுக்கு சகோதர்களைத் தந்துள்ளான். நிலத்தையும் தந்துள்ளான், அதில் நீங்கள் அமைதியாக வாழலாம் எனக் கூறினார்கள்.

- இதனை அல்குர்ஆன், *'நீங்கள் பூமியில் (மக்காவில்) சிறு தொகையினராகவும், பலவீனர்களாகவும் இருந்த நிலையில், உங்களை (எந்த நேரத்திலும்) மனிதர்கள் இறைஞ்சிக் கொண்டு சென்று விடுவார்கள் என்று நீங்கள் பயப்பட்டுக் கொண்டிருந்த போது அவன் உங்களுக்கு (மதீனாவில்) புகலிடம் அளித்துத் தன் உதவியைக் கொண்டு உங்களைப் பலப்படுத்தினான் - இன்னும் பரிசுத்தமான ஆகாரங்களையும் அவன் உங்களுக்கு அளித்தான். இவற்றை நினைவு கூர்ந்து (அவனுக்கு) நீங்கள் நன்றி செலுத்துவீர்காளாக!'(8:26)* என்று வேறு வார்த்தைகளில் எடுத்துக் காட்டுகின்றது. ஹிஜ்ரத் நிகழ்ந்த பின், எடுக்கப்பட்ட குடிசன கணக்கெடுப்பில் 1500 பேராக இருந்த முஸ்லிம்கள் எட்டு ஆண்டுகளில் 18,000 பேராக பெருகி ஒரு சமுதாயமாக உயர்ந்தனர். அவர்களில் அறபிகள் மட்டுமன்றி, பாரசீகர், ஷாமியர், எகிப்தியர், ஹபஷியர், உரோமர் எனப் பலரும் இருந்தனர். அச்சமுதாயத்தை சிறந்தச் சமுதாயம் (3:110) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

- நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை அறிமுகப்படுத்திய காலத்தில் மக்கா வாசிகளிடம் எளிமை, வீரம், வாக்கு மீறாமை, விருந்தோம்பல், போன்ற நல்ல குணங்களும் மது வருந்துதல், விபசாரம், பழிக்குப்பழி வாங்குதல், கொள்ளையிடுதல், வட்டி, அற்ப விடயங்களுக்காகப் போராடுதல் போன்ற கூடாத செயல்களும் காணப்பட்டன. அவர்களிடம் காணப்பட்ட நல்ல குணங்களை நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்துக்குச் சாதகமாக பயன்படுத்தினார்கள். அவர்களின் எளிமையான வாழ்வு இஸ்லாத்துக்காகத் தம்மை அர்ப்பணிப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது. அவர்களின் வீரம் எதிரிகளைப் பயமுறுத்தியது. வாக்கு மீறாத பண்பு மதம் மாறாமல் பாதுகாத்தது. விருந்தோம்பும் பண்பு புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை அனுசரிக்க வழிகோலியது. போரூக்கம் சத்தியத்துக்காகப் போராடும் பண்பை வளர்த்தது.

- அவர்களிடம் காணப்பட்ட மோசமான நடத்தைகள் படிப்படியாக உதிர்ந்து போகுமளவு இஸ்லாத்தின் போதனைகளின் படிமுறைகளும், வழிமுறைகளும் காண்பிக்கப்பட்டன. ஆரம்ப கட்டத்தில் வழங்கப்பட்ட அடிப்படைப் போதனைகள் மக்களின் உள்ளங்களைப் பண்படுத்தின. பண்பட்ட உள்ளங்கள் தவறுகளிலிருந்து விலகிக் கொண்டன. நபி (ஸல்) அவர்கள் யஸ்ரிபில் பிரவேசிக்க முன்பே முதலாவது அகபா உறுதி மொழியில், அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைக்க மாட்டோம், திருடமாட்டோம், விபசாரம் செய்யமாட்டோம், பிள்ளைகளைக் கொலை செய்யமாட்டோம், அவதூறு சொல்லமாட்டோம், நபி (ஸல்) அவர்களுக்கு மாறு செய்யமாட்டோம் என்று உறுதியளித்தார்கள். இதனை அல்குர்ஆன் (6:12) சுட்டிக்காட்டுகிறது. எனவே, தவறு நிகழாத சூழலை - ஒரு சுற்றாடலை நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் எதிர்பார்த்தார்கள் என்பதை உணர்கிறோம்.

- இவ்வாறான சூழலிலும் தவறு செய்தவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு, சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. களவெடுத்தமை நிரூபிக்கப்பட்டால் கை துண்டிக்கப்படல், மது அருந்தியமை நிரூபிக்கப்பட்டால் கசையடித்தண்டனை, விபசாரம் செய்தமை

நிரூபிக்கப்பட்டால் மண முடிக்காதவருக்கு கசையடியும் மண முடித்தவருக்குக் கொலையும், அவதூறு சொன்னவனுக்குக் கசையடியும் கொலைக்குப் பழிவாங்கலும் எனத் தண்டனை முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவற்றை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் வேண்டும் என்பதால் அரசாங்கமொன்று அமைக்கப்பட்டது. சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்தாமல் குற்றம் செய்தவர்கள் தாமாகவே முன்வந்து அதற்குரிய தண்டனைகளைப் பெற்றுக் கொள்ளும் ஒரு சிறந்த சமுதாயமாக அது இருந்தது.

- ஹிஜ்ரத்தின் பின்னர், நபி (ஸல்) அவர்கள் முஹாஜிரீன்களுக்கும், அன்ஸாரீன்களுக்குமிடையில் புதுமையானதொரு சகோதரத்துவ அமைப்பை உருவாக்கினார்கள். அனைத்தையும் விட்டு வந்த முஹாஜிரீன்களுக்கு ஒவ்வோர் அன்ஸாரியை சகோதரர்களாக நியமித்தார்கள். அபூபக்ர் (ரழி) அவர்கள் காரிஜா இப்னு ஸைத் (ரழி) அவர்களுடனும் உஸ்மான் (ரழி) அவர்கள் அவ்ஸ் பின் ஸாபித் (ரழி) அவர்களுடனும் ஜஃபர் இப்னு அபீ தாலிப் (ரழி), மஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களுடனும் சகோதரத்துவ உறவில் பிணைக்கப்பட்டதை உதாரணமாகக் குறிப்பிடலாம். அவ்வாறு பிணைக்கப்பட்டவர்களுள் அன்ஸாரிகள் தமது நிலத்திலும், சொத்திலும், வீட்டிலும் பாதியை வழங்கினார்கள். விருப்பமாயின் தமது மனைவியருள் அவர் விரும்பிய ஒருவரை மணமுடித்து வைப்பதற்கும் இசைந்தார்கள். ஆனால் அதற்கு முஹாஜிர்கள் இசையவில்லை. சந்தையைக் காட்டித் தருமாறும் தாம் வியாபாரம் செய்து வாழ்வதாகவும் குறிப்பிட்டார்கள். ஏனெனில் மக்கா வாசிகளுக்கு விவசாயம் செய்யும் அறிவோ, அனுபவமோ இருக்கவில்லை. இதனை வெளிப்படுத்திய போது, *'நாங்களே தோட்டங்களில் பயிரிடுகிறோம், வேலைகளையும் செய்கிறோம். விளைவில் பாதியை உங்களுக்குத் தருகிறோம்* என்றார்கள். ஹி 4இல் பனூ நழீர்கள் மதீனாவிலிருந்து வெளியேறப்பட்ட போது அவர்களின் வளங்களை முஹாஜிர்களுக்கு வழங்குவதற்கு நபி (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளிடம் அனுமதி கேட்டார்கள். அப்போது நாம் கொடுத்த பயிர் நிலங்களும் அவர்களிடமிருக்கட்டும் புதிதாக கிடைத்தவற்றை அவர்களுக்கே கொடுத்துவிடுங்கள் என அனுமதியளித்தார்கள்.

- மதீனாவில் விதியாக்கப்பட்ட ஜமாஅத் தொழுகையை நபி (ஸல்) அவர்கள் சமூக அமைப்புக்கான ஒரு முன்னுதாரணமாக அமைத்தார்கள். 'அதான்; ஒலி கேட்டதும் அனைவரும் மஸ்ஜிதுக்கு வருவது சமூகம் தலைமைத்துவத்தின் குரலுக்கு செவிமடுப்பதாக அமைந்தது. தொழுகைக்காக இமாமைத் தெரிவது தலைமைத்துவத்தின் தேவையை உணர்த்தியது. இமாம் குனியும் போது குனிந்தும், நிமிரும் போது நிமிர்ந்தும் இயங்குவது தலைமைத்துவத்துக்கு, கட்டுப்படுவதாக அமைந்தது. இமாம் பிழைவிடும் போது திருத்துவது தலைமைத்துவம் பிழைவிட்டால் திருத்த வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இமாமினால் தொழுகையைத் தொடர முடியாத போது முன்னணியில் நிற்கும் ஒருவருக்கு இடமளிப்பது, தலைமை இயலாத நிலையை அடையும் போது தகுதியான ஒருவருக்கு இடமளித்துவிட்டு விலகிச் செல்ல வழிகாட்டுகின்றது. எனவேதான், நபி (ஸல்) அவர்களுக்குப் பின் தொழுகைக்கு இமாமாக நிறுத்தப்பட்ட அபூபக்ர் (ரழி) அவர்களை முஸ்லிம் சமூகம் தமது இமாமாகவும் கலீபாவாகவும் ஏற்றுக் கொண்டது.

- ஒழுக்கமான சமூக அமைப்புக்கு நியமமான குடும்ப அமைப்பொன்று காணப்பட

வேண்டும். ஜாஹிலிய்யா சமூகம் கோத்திரமாக பிரிந்திருந்ததையும் அதன் விளைவையும் அவதானித்தோம். எனவேதான் அல்குர்ஆன் இதனைத் தெளிவுபடுத்தியது. (49:13) அன்றிருந்த விபசாரத்துடன் தொடர்புடைய விவாகமுறைகள் ஒழுங்கான குடும்பத்தை உருவாக்குவதற்குப் பொருத்தமாக அமையாது என்பதால் வழக்கிலிருந்த நிகாஹ் அஸ்ஸாலிஹ் என்ற முறையை மாத்திரம் அங்கீகரித்து ஏனைய மண முறைகள் அனைத்தையும் நிராகரித்தார்கள். புறநடையானவர்களுக்கு நிபந்தனைகளுடன் கூடிய பலதார மணம் அங்கீகரிக்கப்பட்டது.

- பெண் குழந்தையை உயிருடன் புதைத்த சமூகத்துக்கு அது பற்றி எச்சரிக்கை செய்ததோடு பெண்கள் சுதந்திரமானவர்களாக உரிமையுடன் வாழ வழி காண்பிக்கப்பட்டது. அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த மணவுரிமை, மணவிலக்குரிமை, சொத்துரிமை நீதி கோரும் உரிமை போன்றவற்றை அவர்களின் இயல்புக்கேற்ப வழங்கிச் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ இடமளிக்கப்பட்டது. ஹலாலான சந்ததியை உருவாக்க வழியமைக்கப்பட்டது. கணவன், மனைவிக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும் செலுத்த வேண்டி கடமைகளும் பெற முடிந்த உரிமைகளும் வகுத்துத் தரப்பட்டன. உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவிக்கு நல்லவர் என்பது நபி (ஸல்) அவர்களின் வாக்காகும்.
- எழுத வாசிக்கத் தெரியாதிருந்த உம்மிச் சமூகத்தை, நபி (ஸல்) அவர்கள் எழுத வாசிக்கத் தெரிந்த சமூகமாக மாற்றியமைத்தார்கள். சிறுவர்களுக்கு எழுத்துக் கற்பிப்பதற்காக பத்றுக் கைதிகளைப் பயன்படுத்தி அதனை ஆரம்பித்தார்கள் அவர்கள் முதலில் அல்குர்ஆனையும் ஹதீஸ்களையும் எழுதினார்கள். தொடர்ந்து கடிதங்கள் எழுதவும், அரச ஆவணங்களைப் பதியவும் பயிற்றுவிக்கப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் பின்னர் சுற்றியிருந்த சிற்றரசர்களுக்கும் பேரரசர்களுக்கும் அழைப்புக் கடிதங்களை விடுக்கவும், நிருவாகப் பணிகளை விபரிக்கவும் ஆவணங்களை எழுதுவித்துள்ளார்கள்.
- சமூகத்தை ஒன்றிணைப்பதற்காகப் பரஸ்பரம் புரிந்துணர்வோடு வாழ்வதற்கான இலகுவான ஆறு கடமைகளைக் குறித்துக்காட்டியுள்ளார்கள். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குச் செலுத்த வேண்டிய கடமைகள் ஆறு உள்ளன. அவை, *ஸலாம் கூறினால் பதில் ஸலாம் கூற வேண்டும். தும்மி அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினால் யர்ஹகுமுல்லாஹ் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். விருந்துக்கு அழைத்தால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆலோசனை கேட்டால் நல்லாலோசனை வழங்க வேண்டும். நோயுற்றால் நலம் விசாரிக்க வேண்டும். மரணித்தால் மரண சடங்கில் கலந்து கொள்ள வேண்டும்.* இவை எல்லோராலும் இலகுவாக நிறைவேற்றக்கூடிய கடமைகளாக இருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

  இவ்வாறே சமூகத்தில் நலிவுற்ற - பிறரது உதவி தேவைப்படுகின்ற அநாதை, விதவை, அங்கவீனர், வயோதிபர், சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் அல்லாதவர் (திம்மி) பிரயாணிகள் போன்றோரின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். மனிதர்களல்லாத விலங்குகள், பறவைகள் தாவரங்கள், நீர் நிலைகள் போன்றவற்றுக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் அந்தச் சமூகத்துக்கு அறிவுறுத்தப்பட்டது.

- அவர்கள் உருவாக்கிய சமூகத்தில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன

வலியுறுத்தப்பட்டன. பிலால் (ரழி) அவர்களைப் பார்த்து, கறுப்பியின் மகனே என்று விளித்த போது, அது ஜாஹிலிய்யாத் எனக் கூறி கண்டித்தார்கள். குருடராக வாழ்ந்த இப்னு உம்மி மக்தூம் (ரழி) அவர்களை, நபி அவர்கள் மதீனாவிலிருந்து வெளியேறிய சந்தர்ப்பத்தில் தனது பிரதிநிதியாக அமர்த்திச் சென்றார்கள். அடிமையாகவிருந்து விடுதலை பெற்ற பிலால் (ரழி) அவர்களை மஸ்ஜிதுந் நபவியின் முதல் முஅஸ்ஸினாக அமர்த்தினார்கள். அடிமையாக இருந்து விடுதலையான ஸைத் (ரழி) அவர்களின் மகன், உஸாமா (ரழி) அவர்களை குறைஷியர் உள்ளடக்கிய படைக்குத் தளபதியாக நியமித்தார்கள். இவை இஸ்லாத்தின் சமத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

- நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்தை ஆரம்பித்த போது மிக மோசமான ஒரு சமூகத்தைக் கண்டார்கள். அவர்களது நுபுவ்வத் பணி நிறைவேறிய போது மிக உன்னதமான ஒரு சமூகத்தைக் கண்டார்கள். அது அவர்களது சாதனையாகவே அமைந்தது.
- இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட ஸஹாபா என்ற சமூகம் பின்னர், வந்த முஸ்லிம்களுக்கு ஒரு முன்னோடிச் சமூகமாக அமைந்தது. அவர்களும், அவர்களைப் பின்பற்றுவோரும் நடுநிலைச் சமூகமாகவும், சிறந்த சமூகமாகவும் இடம் பிடிக்கிறார்கள்.

**அரசியல்**

- மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நபி (ஸல்) அவர்கள் அங்கு ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பியதோடு, அந்தச் சமுதாயத்தை வழி நடத்தக்கூடிய ஓர் அரசாங்கத்தையும் ஏற்படுத்தினார்கள்.
- இஸ்லாத்தை முழுமைப்படுத்துவதற்காக, நபி (ஸல்) அவர்கள் ஓர் ஆட்சியை நிறுவும் நோக்கத்தோடு ஹிஜ்ரத் சென்றார்கள் என்ற கருத்தை ஹஸனுல் பஸரி (ரஹ்) இப்னு ஜரீர் (ரஹ்) போன்ற அறிஞர்கள் முன்வைக்கிறார்கள். ஹிஜ்ரத்தின் போது *'என் இறைவனே என்னை (மதீனாவில் நுழையவைக்க வேண்டுமென்று நீ கருதினால்) சத்தியத்தின் வழியாக என்னை நுழைய வைப்பாயாக. (மக்காவிலிருந்து வெளிப்படுத்த வேண்டுமென்று நீ கருதினால்) சத்தியத்தின் வழியாக என்னை வெளிப்படுத்தி வைப்பாயாக. உன்னிடமிருந்து எனக்குதவியாக ஓர் ஆட்சி அதிகாரத்தைத் தந்தருள்வாயாக என்று நீர் சொல்வீராக (17:80)* என்று அருளப்பட்ட அல்குர்ஆனின் வசனம் இதற்காதாரமாகவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.
- ஓர் அரசு உருவாவதற்கு மக்கள், பிரதேசம், தலைமை ஆகிய மூன்றும் தேவைப்படுவதாக அரசியல் அறிஞர்கள் குறிப்பிடுவர். இதன்படி அந்த மூன்றும் மதீனாவில் கிடைத்தன. எனவே, அங்கு ஓர் அரசாங்கம் உருவானது.

அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளில் தெய்வீக உரிமைக் கோட்பாடு, பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு என்பவற்றை விடச் சமூக உடன்படிக்கைச் கோட்பாடு பலமானதாகக் கொள்ளப்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் உருவாக்கிய அரசு இந்த நிலைப்பாட்டைக் கொண்டமைந்தது. நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தின் பின்னர் முஹாஜிர்களுக்கும் அன்ஸாரிகளுக்குமிடையில் ஏற்படுத்திய சகோதரத்துவ பிணைப்பு, யூதர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை (மதீனா சாசனம்) என்பன இதனை நிரூபிக்கின்றன.

எனவே தான், இவ்வுடன்படிக்கையின் அரசியல் முக்கியத்துவத்தைக் கருதி, மதீனா சாசனம் எனும் பெயர் வழங்கப்படுகின்றது. பிரித்தானியாவில் மன்னராட்சியை மக்களாட்சியாக மாற்றியமைத்த மகாசாசனம் பெறுகின்ற முக்கியத்துவத்தை மதீனா சாசனம் பெற்றுள்ளது. மகாசாசனம் கி.பி. 1215 இல் இடம்பெற மதீனா சாசனம் கி.பி. 622 இடம் பெற்றிருப்பது உலகில் தோன்றிய முதல் அரசியல் சாசனம் என்பதையும் சுட்டிக்காட்டுவதாக கலாநிதி எம்.ஹமீதுல்லாஹ் குறிப்பிடுகிறார். அதில் தனிநபர்களதும், யூத கோத்திரங்களினதும், முஸ்லிம்களதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதன் மூலமே நபி (ஸல்) அவர்கள், மதீனா அரசியல் சமூகத்தின் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள்.

- இது பற்றி, கலாநிதி ராஷித் அல் கன்னூஷி பின்வருமாறு கூறுகிறார். நபி (ஸல்) அவர்கள் மக்காவில் நம்பிக்கையால் பிணைக்கப்பட்ட ஒரு சமூகத்தை நிருவகித்தார்கள். இது இஸ்லாத்தின் இலக்காக இருக்கவில்லை. இஸ்லாத்தின் இலக்குகளை அடைவதற்குச் சாதகமாக மதீனாவைக் கண்டார்கள். நிலத்தையும் அதன் தலைமைத்துவத்தையும் பெற்றதன் பின்னரும் கூட, மதீனாவில் இந்நம்பிக்கைக் கோட்பாடுகளை மையப்படுத்திய சமூகத்தை நிர்மாணிப்பதற்குப் பதிலாக, பூரண சுதந்திரம் மற்றும் பன்மைத்துவம் போன்ற தூண்களின் மீது மதீனாவை வடிவமைத்தார்கள். இந்தப் பின்புலத்தில் மதீனா சமூகம் சுதந்திரம், பன்மைத்துவம் என்ற அடிப்படைகளில் தோற்றம் பெற்ற ஓர் அரசியல் சமூகமாக (உம்மதுஸ்ஸியாஸிய்யா) தோன்றியது எனக் குறிப்பிடலாம். (இஸ்லாமிய அரசியல் சிந்தனையின் அண்மைக்கால போக்குகள் : ப 55)

- பொதுவாக இஸ்லாமும் அரசியலும் வெவ்வேறு துறைகளாகவே நோக்கப்படுகின்றன. இது பற்றி, இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். ‘‘இந்த உலகம் மறுமைக்கான விளைநிலமாகும். அதிகாரமின்றி உலகத்தில் மார்க்கத்தை முழுமையாக நிறைவேற்ற முடியாது. ஆட்சியும், மார்க்கமும் இரட்டைக் குழந்தைகள். இவற்றில் மார்க்கம் அத்திவாரம் என்றால் ஆட்சியதிகாரம் அதன் காவலன் ஆவான். அத்திவாரம் இல்லாத எதுவும் நிலைக்காது இடிந்து விழும். காவல் இல்லாத எதுவும் தனது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது தொலைந்துவிடும். ஆட்சியும், கட்டுக்கோப்பும் அதிகாரமுமில்லாவிட்டால் அதைப் பெற்றுக் கொள்ள முடியாது தொலைந்துவிடும், ஆட்சியும், கட்டுக்கோப்பும் அதிகாரமுமின்றி நிலைபெற முடியாது.

- முஹம்மத் (ஸல்) அவர்கள் ஏக காலத்தில் மார்க்கத்தையும், அரசையும் கட்டியெழுப்பினார்கள். அவையிரண்டும் அவரது வாழ்நாள் முழுதும் ஒன்றோடொன்று இணைந்தே காணப்பட்டன என்று பேராசிரியர் சீ.எ. நல்லினோ குறிப்பிடுகிறார். இஸ்லாம் என்பது, மார்க்கம் மற்றும் அரசியலின் தோற்றப்பாடாகும் ஏனெனில், அதனைக் கட்டியெழுப்பியவர் ஓர் இறை தூதராகவும், ஞானமிக்க அரசியல்வாதியாகவும், நாட்டின் தலைவராகவும் இருந்திருக்கிறார்கள் என்று பேராசிரியர் ஸ்ரோத்கன் கூறுகிறார்.

- மதீனாவில் தான், முதலாவது அரசு உருவானது. மேலும் இஸ்லாமிய சட்டத்துக்கான அடிப்படைக் கோட்பாடுகளும் அங்குதான் உருவாக்கப்பட்டன என்று பேராசிரியர் மெக்டொனால்ட்ட குறிப்பிடுகிறார்.

இவை இஸ்லாத்துக்கும் அரசியலுக்குமுரிய தொடர்பை எடுத்துக்காட்டுகின்றன. தொழுகையின் இமாமத், சமூகத்தின் இமாமத்தை வழிநடத்திய நபி (ஸல்) அவர்களின் வழிமுறையைச் சட்ட அறிஞர் அஹ்மத் காதிரி என்பார் தொழுகையின் ஜமாஅத்தை *இமாமதுஸ் ஸுக்ரா* என்றும் முஸ்லிம் அரச சமூகத்தை *இமாமதுல் குப்ரா* என்றும் குறிப்பிடுகிறார். அல்குர்ஆன் போதனையால் நிர்மூலமாக்கப்படாத தீமைகளை அல்லாஹ் அரச அதிகாரத்தின் மூலம் இல்லாமலாக்குகிறான் என்ற உஸ்மான் (ரழி) அவர்களின் கருத்தும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

- ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்குமிடையிலான தொடர்பை ஏற்படுத்தும் சாதனமாக பைஅத் அமைகிறது. இதனை, நவீன சர்வசன வாக்குரிமையுடன் ஒப்பிட்டு நோக்கலாம். அல்குர்ஆன், ஸுன்னா வழியிலான தெய்வீக சட்டங்கள் ஆளுவோரும் ஆளப்படுவோரும் பின்பற்றத்தக்க ஆட்சிமுறையை அறிமுகப்படுத்தின. சட்டத்தின் முன் இரு சாராரும் சமம் என்பதை நபி(ஸல்) அவர்கள் உறுதிப்படுத்தினார்கள். *எனது மகள் பாத்திமா களவெடுத்தாலும் அவரது கையைத் துண்டிக்காமல் விடமாட்டேன்* என அவர்கள் பகிரங்கப்படுத்தினார்கள்.
- அரச நிருவாக விடயங்களில் கலந்தாலோசிப்பதை அவர்கள் கட்டாயப்படுத்தினார்கள். அல்குர்ஆன் பல்வேறு இடங்களில் கலந்தாலோசித்துக் காரியமாற்றுமாறு அறிவுறுத்துகின்றது. எனவே தான் உமர் (ரழி) அவர்கள் மஜ்லிஸுஷ்ஷூறாவை அரசின் ஓர் அங்கமாக ஏற்படுத்தியிருந்தார்கள். ஈஜாப், கபூல் பைஅத் என்பவற்றுக்கூடாக தலைமை உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில் தோன்றிய சனநாயகம் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளிலிருந்தே பல விடயங்களைக் கற்றுக்கொண்டது.
- நபி (ஸல்) அவர்கள் தமது நிருவாகத்தில் தகுதியானவர்களை அமர்த்தினார்கள். இராச தந்திர விவகாரங்களுக்கு உபைதா (ரழி) அவர்களும், உடன்படிக்கைகளுக்கு அலி (ரழி) அவர்களும் வெளிநாட்டு விவகாரங்களுக்கு முஆவியா (ரழி) அவர்களும் பொறுப்பாக அமர்த்தப்பட்டிருந்தார்கள். ஒரு முறை அபூதர் (ரழி) அவர்கள் நிருவாகப் பதவியொன்றைக் கேட்டு நின்ற போது, 'நீர் பலவீனர், உமக்கு நிர்வாகப் பணிகளைப் பொறுப்பேற்க முடியாது. மறுமையில் கவலையும் துயரமும் பிரதிபலிக்கும் என அறிவுறுத்தினார்கள்.' தகுதியுடையவரிருக்க தகுதியற்றவருக்குப் பதவி வழங்குவது அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மோசடி செய்வதாகும் என எச்சரித்தார்கள் (அஸ்ஸியாஸதுஷ் ஷரீஆ - இப்னு தைமியா)

- நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய அரசில் மதீனா தலைநகராக இருந்தது. அரச நிருவாகங்கள் யாவும் மதீனாவை மையப்படுத்தியே நடந்து வந்தன. நபி (ஸல்) அவர்கள் அங்கேயே இருந்தார்கள். ஏதாவது தேவைக்காக வெளியே செல்லும் சந்தர்ப்பங்களில் தமது நாஇபாக (பிரதிநிதி) மற்றொருவரை அமர்த்திச் செல்வார்கள். உதாரணமாக பத்றுக் களத்துக்குச் செல்லும் போது அபூலுபாபா அன்ஸாரி (ரழி) அவர்களையும் தபூக் போருக்கு செல்லும் போது முஹம்மத் பின் மஸ்லமா (ரழி) அவர்களையும் ஹஜ்ஜதுல் விதாவுக்குச் சென்றபோது இப்னு உம்மி மக்தூம் (ரழி) அவர்களையும் வதானுக்குச் சென்ற போது ஸஅத் இப்னு உப்பாதா (ரழி) அவர்களையும் புவாதுக்குச் சென்ற போது ஸஅத் இப்னு முஆத் (ரழி) அவர்களையும்

அமர்த்திச் சென்றார்கள். ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெவ்வேறு நபர்களை அமர்த்திச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

- பிரதேசங்களில் வாலி எனப்பட்ட நிருவாகிகளை அமர்த்தியிருந்தார்கள். இவ்வாறு 32 பேர் அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் நிருவாகத்துக்கு அப்பால் சமய சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார்கள். தக்வாவுடன் நடத்தல், சத்தியத்தைப் பேணல், மக்களுக்கு நல்லாசி வழங்குதல், குர்ஆனைக் கற்பித்தல், தீமையைக் களைதல், கடமை உரிமைகளை எடுத்துக்காட்டல், அநியாயம் செய்வோரைத் தண்டித்தல், சுவர்க்கத்தின் பால் ஆசையூட்டல், நரகத்தின் மீது வெறுப்பை உண்டாக்குதல் போன்றனவும் அதில் அடங்கும்.
- பிரதேச தலைவர்கள் ருஅஸா எனப்பட்டனர். கோட்பாட்டுத் தெளிவும் நிருவாகத் திறமையுமுடையவர்களிலிருந்து அவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். வரி அறவிடும் பொறுப்பும் இவரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. சந்தைகளைக் கண்காணிப்பதற்காக ஸாஹிபுஸ் ஸூக் அமர்த்தப்பட்டார். பிரதேச மக்களின் உள்விவகாரங்களைக் கவனிப்பதற்காக அவர்களிலிருந்தே நகீப் எனப்பட்ட பிரதிநிதிகளை நியமித்திருந்தார்கள். இவர்கள் ஸகீபா எனப்பட்ட நிழல் தரும் இடங்களில் அமர்ந்து கலந்தாலோசித்துத் தீர்மானங்களை எடுத்தார்கள். அரசு விரிவடைந்த போது ஆளுநர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதற்கு முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் யமனுக்கு அனுப்பப்பட்டதை உதாரணமாகக் குறிப்பிடலாம்.
- நபி (ஸல்) அவர்கள் சர்வதேச தூதராகவும், இறுதித் தூதராகவும் இருந்தமையால் தனது அரச அதிகாரத்தின் மூலம் இஸ்லாத்தைப் பல நாட்டுத்தலைவர்களுக்கும் தூதர்களை அனுப்பி அதனை அறிமுகப்படுத்தினார்கள். அவர்களுள் ஹபஷா, பஹ்ரைன் தலைவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். எகிப்தின் ஆட்சியாளர் இஸ்லாத்தை ஏற்காவிட்டாலும் தூதரை வரவேற்று அன்பளிப்புக்களையும் வழங்கி அனுப்பி வைத்தார். பைசாந்திய மன்னன் தூதரை வரவேற்றாலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பாரசீக மன்னன் நிருபத்தை துண்டுதுண்டாகக் கிழித்து நபி (ஸல்) அவர்களைக் கைது செய்து வருமாறு தூதர்களை அனுப்பி வைத்தார்கள். யமாமாவின் தலைவர் மதீனா அரசில் பாதியைக் கேட்டார். கஸ்ஸானிய சிற்றரசன் தூதரைக் கொலை செய்தான். உம்மான், யமன் அதிபர்கள் நிருபத்துக்கெதிராகப் பதிலளித்தார்கள். இதனால் பிற்காலத்தில் உரோம, பாரசீக எல்லையில் போர்கள் நிகழ்ந்த தோடு இஸ்லாமும் பரவ ஆரம்பித்தது.

- நபி (ஸல்) அவர்கள் தமது அரசுக்கு வலுசேர்க்கும் வகையில் சிலருடன் சமாதான உடன்படிக்கைகளையும் செய்து கொண்டார்கள். அவற்றுள், குறைஷிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஹுதைபியா உன்படிக்கை மிகப் பிரதானமானது. அதில் நபி (ஸல்) அவர்களின் இராசதந்திரம் வெளிக்காட்டப்பட்டது. போரின் மூலம் ஒரு பிரதேசம் வெற்றி கொள்ளப்படுவதை விட, உடன்படிக்கை மூலம் இணக்கம் காண முயல்வது வலுவானது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்கள். இது மட்டுமன்றி வடக்கே யூதரும், தெற்கே குறைஷியரும் சமகாலத்தில் போர்தொடுக்கும் நிலை ஏற்பட்டால் இரு முனைப் போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்பதைக் கருத்திற் கொண்டார். மதீனா அரசைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார்கள். குறைஷியர் உடன்படிக்கையை மீறிய போது போராடாமலே மக்காவை தமது கட்டுப்பாட்டில்

கொண்டு வந்தார்கள். இவ்வாறே யூதர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையும் (மதீனா சாசனம்) மதீனா அரசைப் பாதுகாத்தது.

- அவர்கள் பனூ ஹம்ஸாக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை இவ்வாறு அமைந்தது. ' இது அல்லாஹ்வுடைய தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பனூ ஹம்ஸாக்களுக்கு எழுதிக்கொடுக்கும் உறுதிச் சீட்டாகும். அவர்களுடைய உயிரும் பொருளும் பாதுகாக்கப்படும் எதிரிகள் எவரேனும் இந்தக் கோத்திரத்தைத் தாக்கினால் முஸ்லிம்கள் அவ்வெதிரியை எதிர்ப்பதற்காக எல்லா உதவிகளையும் செய்வார்கள். இஸ்லாத்தை எதிர்த்து நடக்கும் போரிலன்றி வேறெந்தப் போரில் சிக்கிக்கொண்டாலும் முஸ்லிம்கள் உதவி செய்வார்கள். இதற்குப் பதிலாக அல்லாஹ்வின் தூதருக்கு எந்த ஆபத்து வருவதாக இருந்தாலும் அவர்கள் அதற்கு எதிராக முன்வந்து உதவ வேண்டும். இவை போன்ற உடன்படிக்கைகள் மதீனா அரசை ஏற்றுக் கொள்ள வழிவகுத்தன.

  இவ்வாறான நடவடிக்கைகளால் நபி (ஸல்) அவர்களின் ஹஜ்ஜதுல் விதாவின் போது, வடக்கே ஷாம் முதல் தெற்கே யமன்வரையும் கிழக்கே இராக் முதல் மேற்கே பலஸ்தீன் வரை முஸ்லிம் அரசு விரிவடைந்திருந்தது.

- நபி (ஸல்) அவர்களின் ஆட்சியில் போர்கள் நிகழ்ந்தன. எனினும் அவை ஆக்கிரமிப்புப் போர்களாக இருக்கவில்லை. உடன்படிக்கைகள், உறுதி மொழிகள் மீறப்படும் போது உரிமைகள் பறிக்கப்படும் போதுமே போர்கள் நிகழ்ந்தன. இஸ்லாம் அவற்றை ஜிஹாத் என்றே அழைத்தது. அங்கு காவல் படை என்று ஒன்று இருக்கவில்லை. ஜிஹாதுக்கென நிர்ப்பந்தம் ஏற்படும் போது பொது அறிவித்தல் கொடுக்கப்பட்டு மக்கள் திரட்டப்பட்டனர். தம்மிடமிருக்கும் ஆயுதங்களோடு அவர்கள் ஒன்று கூடினர். தேர்ந்தெடுக்கப்படுவோர் போரில் கலந்து கொண்டனர். போர் முடிந்ததும் கலைந்து விடுவர். கனிமத்திலிருந்து அவர்களுக்குப் பங்கு கிடைக்கும். பொதுவாகத் தொண்டர் படையாகவே அது இருந்தது.
- நபி (ஸல்) அவர்களால் அனுப்பப்பட்ட தூதர் கொலை செய்யப்பட்டதற்கு எச்சரிக்கை விடுக்கும் பாங்கில் இடம்பெற்ற மு.்.தாப் போருக்குச் சென்ற படையினரைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். மோசடி செய்யாதீர்கள். பதுக்காதீர்கள், குழந்தைகள், பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், கோயில் குருமார்கள் முதலானோரைக் கொலை செய்யாதீர்கள். பேரீத்த மரங்களை மட்டுமல்ல எந்த மரங்களையும் வெட்டாதீர்கள். கட்டடங்களை இடிக்காதீர்கள். (புகாரி) இந்த யுத்த தர்மங்களைப் பின்வந்த கலீபாக்களும் வலியுறுத்தினார்கள்.

- எனவே, நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் முன்மாதிரியான ஓர் ஆட்சியை நடத்தித் தம்மைத் தொடர்வோருக்கு வழிகாட்டிச் சென்றுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

**தேர்ச்சி 6.0 : இஸ்லாத்துக்கு முற்பட்ட காலம் முதல் அப்பாஸியர்களின் வீழ்ச்சி வரையிலான கால கட்டங்களில் அரசியல், சமூக, நாகரிக வளர்ச்சி பற்றி விளக்கிக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.3: குலபாஉர் ராஷிதூன்களின் தனிப்பட்ட, சமய, சமூக, அரசியல் பங்களிப்புக்களை அறிந்து தர்க்க ரீதியாக முன்வைப்பார்.**

**பாடவேளைகள் : 15**

**கற்றல் பேறுகள்:**

- கிலாபத், அல்குலபாஉர் ராஷிதூன் என்ற சொற் பிரயோகங்களை விளக்கிக் கூறுவார்.
- கலீபாக்கள் தெரிவு செய்யப்பட்ட வழிமுறைகளைச் சரிகண்டு விளக்கமளிப்பார்.
- கலீபாக்கள் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இராச்சியப் பரம்பலையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் எடுத்துக் காட்டுவார்.
- நான்கு கலீபாக்கள் கால நிர்வாக ஒழுங்கு முறைகளையும் அதன் வளர்ச்சியையும் விளக்குவார்.
- கலீபாக்களால் எதிர்கொள்ளப்பட்ட சவால்களையும் அவற்றை வெற்றி கொண்ட பாங்கினையும் எடுத்துக் காட்டுவார்.
- குலபாஉர் ராஷிதீன்களின் தனிப்பட்ட, சமய, சமூக, அரசியல் பங்களிப்புகளை அறிந்து தர்க்க ரீதியாக முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**கலீபாத் தெரிவு :-**

- நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் தோன்றிய ஆட்சியை, கிலாபதுர் ராஷிதா எனவும், ஆட்சியாளரை குலபாஉர் ராஷிதூன்கள் எனவும் வழங்குவர். நபி (ஸல்) அவர்களுக்குப் பின், முஸ்லிம் சமூகத்தின் சமய, சமூக, அரசியல் தலைமைகளை ஏற்ற அபூபக்ர் (ரழி) அவர்கள், தன்னை கலீபது ரஸுலில்லாஹ் (அல்லாஹ்வின் தூதரின் பிரதிநிதி) எனவும், அடுத்து வந்த உமர் (ரழி) அவர்கள் கலீபது, கலீபதி ரஸுலுல்லாஹ் எனவும் அழைத்துக் கொண்டார்கள். அந்த நீண்ட தொடர் *கலீபா* என சுருங்கிவிட்டது.

- மற்றொரு வகையில் சொல்வதானால் நபி (ஸல்) அவர்களுடன் ரிஸாலத் முற்றுப் பெற்றுவிட்டது. ஆனால் சமூகத்துக்குத் தலைமை தாங்கும் இமாமத்-தலைமைத்துவம் முற்றுப்பெறவில்லை. முற்றுப்பெறாத இமாமத்துக்கு நபி (ஸல்) அவர்களின் பிரதிநிதியாக நின்று பணியாற்றுபவர் என்ற கருத்தில் ஆட்சித்தலைவர் கலீபா என அழைக்கப்பட்டார். முதல் நான்கு கலீபாக்களும் (சொந்த வாழ்விலும், கிலாபத் நிருவாகத்திலும்) நேர்வழி நின்று மக்களை வழிநடத்தியமையால்-ஆட்சி செய்ததால் அவர்கள் குலபாஉர் ராஷிதீன் என அழைக்கப்பட்டனர்.

- நபி (ஸல்) அவர்கள் வபாத்தாகும் போது, எவரையும் தனது பிரதிநிதியாக விட்டுச்செல்லவில்லை. ஆனால், அபூபக்ர் (ரழி) அவர்களே அடுத்த தலைவராக வர வேண்டும் என்பதற்கு அடையாளங்களை விட்டுச் சென்றார்கள். அதனை ஸஹாபாக்கள் புரிந்து கொண்டதன் காரணமாகவே, அபூபக்ர் (ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவானார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் நோயுற்ற போது, அபூபக்ர் (ரழி) அவர்களை தொழுகையின் இமாமாக நிறுத்துமாறு கூறினார்கள். அவர்களின் இளகிய உள்ளத்தைத் தெரிந்திருந்த ஆயிஷா (ரழி) அவர்கள், உமர் (ரழி) அவர்களை இமாமாக நிறுத்துமாறு சொன்ன போது, இல்லை, அபூபக்ர் (ரழி) அவர்களே இமாமத் செய்ய வேண்டுமென கண்டிப்பாகக் கூறினார்கள். இது நபி (ஸல்) அவர்களின் (அடுத்த தலைமைக்கான மறைமுக) தெரிவாக இருந்தது.

- ஹி. 9இல் ஹஜ் விதியாக்கப்பட்ட போது, நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுக்கு செல்லவில்லை. தமது பிரதிநிதியாக அபூபக்ர் (ரழி) அவர்களை ஹாஜிகளின் தலைவராக்கி அனுப்பி வைத்தார்கள்.

- நபி (ஸல்) அவர்களின் நோய் முற்றிய காலத்தில் மஸ்ஜிதுன் நபவியின் எல்லாத்திசைகளின் வாயில்களையும் மூடுமாறும், அபூபக்ர் (ரழி) அவர்களின் வீட்டுத் திசையிலுள்ள வாயிலை மாத்திரம் திறந்து வைக்குமாறும் கூறினார்கள். காரணம் வினவிய போது அல்லாஹ்வின் கட்டளை எனப் பதிலளித்தார்கள்.

- இவ்வாறான அடையாளக் குறிப்புகள் மூலம், தனக்குப் பின் அபூபக்ர் (ரழி) அவர்களே சமூகத்துக்குத் தலைமை தாங்க வேண்டுமென்று நபி (ஸல்) அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் வபாத்தான போது, அன்ஸாரிகள், ஸஅத் இப்னு உப்பாதா (ரழி) அவர்களைத் தெரிவு செய்யும் எண்ணத்துடன் ஸகீபா பனி ஸாஇதாவில் ஒன்று கூடினார்கள். இந்தத் தகவலை அறிந்த அபூபக்ர் (ரழி) , உமர் (ரழி) , அபூஉபைதா (ரழி) ஆகியோரும் அங்கு சென்றார்கள். இருபகுதியினருக்குமிடையில் கருத்துப்பரிமாற்றங்களும், வாக்குவாதங்களும் இடம்பெற்றன. இறுதியாக உமர் (ரழி) அவர்கள் அபூபக்ர் (ரழி) அவர்களை இமாமாகத் தெரிவு செய்து பைஅத் செய்தார்கள். முதலில் பைஅத் செய்தவர் அபூஉபைதா (ரழி) என்றும், பஷீர் பின் ஸஅத் என்றும் கூறுவோர் உளர். தொடர்ந்து ஸகீபாவில் கூடியிருந்தோர் பைஅத் செய்தனர். பின்னர் மஸ்ஜிதுன் நபவியில் பொதுமக்களின் பைஅத் நிகழ்ந்தது. சிலர் அலி (ரழி) அவர்களை நியமிக்க எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை.
  இஸ்லாத்தின் முதலாவது கலீபாவான அபூபக்ர் (ரழி) அவர்களே, கிலாபத்துக்கு உருக்கொடுத்தவர் ஆவார். ஏனெனில், அதற்கு முன்னர் கலீபா, கிலாபத் என்ற பெயர்களில் எவரும் ஆட்சி நடத்தவில்லை. அபூபக்ர் (ரழி) அவர்களின் கிலாபத் பிரசங்கம் கிலாபத்தின் ஜனநாயகப் பண்புகளைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

- மக்களே அல்லாஹ்வின் மீதாணையாக நான் எப்போதும் கிலாபத்தை விரும்பி நிற்கவில்லை. ஒரு போதும் அதை விரும்பியதும் கிடையாது. பகிரங்கமாகவோ, இரகசியமாகவோ அல்லாஹ்விடமோ, மக்களிடமோ அதைக்கேட்டதுமில்லை. எனினும் குழப்பம் தலைதூக்குமோ என்று பயந்தே நான் அதை ஏற்றுக் கொண்டேன். இன்றேல் தலைமைத்தவத்தால் எனக்கு எத்தகைய சுகமும் இல்லை. என்னால் சுமக்கவியலாத சுமையை என்மீது சுமத்திவிட்டீர்கள். அல்லாஹ்வின் உதவியின்றி நான் அதைத் திறம்பட நிறைவேற்ற முடியாது. இந்தச் சுமையை ஏற்றுக் கொள்வதற்கு என்னைவிடப் பலம் பொருந்திய ஒருவர் இருந்திருக்கக்கூடாதா?

- நான் உங்களைவிட மேலானவனல்லன். அப்படியிருக்க நீங்கள் என்னை

தலைவனாக்கிவிட்டீர்கள். நான் நல்லன செய்தால் எனக்கு உதவி செய்யுங்கள், கூடாதன செய்தால் என்னைத் திருத்துங்கள். உங்களில் பலவான் என்னிடத்தில் பலவீனனாவான். அவன் பலவீனனுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுக்கும்படி கட்டளையிடுவேன். உங்களில் பலவீனன் என்னிடத்தில் பலவான் ஆவான். அவனுடைய உரிமைகளை அவனுக்குப் பெற்றுக் கொடுப்பேன். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடந்தால் என்னைப் பினபற்றி நடவுங்கள், இல்லையேல் என்னை விலக்கிவிடுங்கள். (இப்னு ஹிஷாம்)
இங்கு ஆள்வோர், ஆளப்படுவோருக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் உரிமைகளும் முன்வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

- ஹி. 11இல் கிலாபத்தைப் பொறுப்பேற்ற அபூபக்ர் (ரழி) அவர்கள் ஹி. 13இல் நோயுற்று வபாத்தானார்கள். அவர்கள் நோயுற்ற போது சிரேஷ்ட ஸஹாபாக்களுடன் ஆலோசனை செய்து, உமர் (ரழி) அவர்களை அடுத்த கலீபாவாக நியமித்தார்கள். உமர் (ரழி) அவர்களின் கடும்போக்கை முன்வைத்து சிலர் ஆட்சேபனை தெரிவித்தபோது அபூபக்ர் (ரழி) அவர்கள், தான் மென்மையாக நடப்பதால், அவர் கடுமையாக நடப்பதாகவும், பதவியேற்றபின் தன்னை மாற்றிக்கொள்வார் என்றும் கூறி, அவர்களைச் சமாதானப்படுத்தினார்கள். இதுபற்றி அல்லாஹ் என்னிடம் கேட்டால் ‘உன் அடியார்களில் மிக மேலானவராக எவரைக் கண்டேனோ, அவரையே மக்கள் மீது அதிகாரியாக நியமித்து வந்தேனெனப் பதிலளிப்பேன்’ என்றார்கள். அவர்கள் கூறியது போன்றே உமர் (ரழி) அவர்கள் தமது பதவிக்காலத்தில் சிறப்பாகப் பணியாற்றி மக்களின் நல்லபிப்பிராயத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

- ஹி. 23இல் கலீபா உமர் (ரழி) அவர்கள், அபூலு.ஃலுஆ பைரோஸ் என்பானின் குறுவாளுக்கு இலக்காகி மரணிக்கும் நிலையை அடைந்த போது அவரது மகன் அப்துல்லாஹ் (ரழி) அவர்களை அடுத்த கலீபாவாக நியமிக்குமாறு மக்கள் கேட்டுக்கொண்டார்கள். எக்காரணம் கொண்டும் தனது குடும்பத்துக்கு அப்பதவி வழங்கக் கூடாதென கண்டிப்பாக உத்தரவிட்டார்கள். சுவர்க்கத்துக்கு நன்மாராயம் கூறப்பட்ட பதின்மருள் உயிரோடிருந்த எழுவரில் அறுவரைக் குறிப்பிட்டு அவ்வறுவரும் கலந்தாலோசித்துத் தமக்குள் தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அஷ்ரதுல் முபஷ்ஷிரீன்களில் உயிரோடிருந்த தனது மைத்துனரான ஸஈத் பின் ஸைத் (ரழி) அவர்களைத் தெரிவுக்குழுவில் உள்ளடக்கவில்லை. அபூதல்ஹா அன்ஸாரி (ரழி) அவர்களை அழைத்து அவ்வறுவரும் கலந்துரையாடும் இல்லத்தைக் காவல்புரியுமாறு கேட்டுக்கொண்டார்கள். மூன்று நாட்களில் கலீபா தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும், அதுவரை சுஹைப் ரூமி (ரழி) அவர்கள் தற்காலிகமாகப் பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். இறுதியாக உஸ்மான் (ரழி) அவர்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

- ஹி. 35இல் அப்துல்லா இப்னு ஸபா என்ற யூத நயவஞ்சகனால் தூண்டிவிடப்பட்ட ஸபயீக்கள், கலீபா உஸ்மான் (ரழி) அவர்களை வீட்டுக்குள் நுழைந்து கொலை செய்தார்கள். ஹஜ்ஜுக்காலமாக இருந்ததால் அநேக ஸஹாபாக்கள் மக்காவில் இருந்தார்கள்.

- சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய கிளர்ச்சியாளர்கள் கலீபாவைக் கொலை செய்துவிட்டு மதீனாவில் அராஜக நிலையை தோற்றுவித்தார்கள். கலீபாவாக யாரை அமர்த்துவது என்பதில் கருத்து வேறுபாடு தோன்றியது. அலி (ரழி) அவர்களை அணுகிய

போது கலீபாவைத் தெரியும் உரிமை அவர்களுக்கில்லை என மறுத்துவிட்டார்கள். எனினும் தல்ஹா (ரழி) சுபைர் (ரழி) அலி (ரழி) ஆகிய மூவரிலிருந்து அலி (ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். கிளர்ச்சியாளர்களின் வாள் முனையில் பைஅத் வழங்கியதாலும், கொலையாளியை இனங்காண முடியாதவாறு நடந்து கொண்டதாலும் அலி (ரழி) அவர்களது ஆட்சிக்காலம் குழப்பகாலமாகவே கடந்தது.

- கலீபாக்கள் நால்வரும் நான்கு முறையில் தெரிவாகியுள்ளார்கள். அபூபக்ர் (ரழி) அவர்கள் ஸகீபா பனி ஸாஇதாவில் கூடிய ஸஹாபாக்களால் தெரிவு செய்யப்பட்டார்கள். மக்கள் அவரை ஏகமனதாக ஏற்றுக் கொண்டார்கள். உமர் (ரழி) அவர்கள் பிரிந்து செல்லும் கலீபாவினால் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமானவர் எனக் கண்டு நியமிக்கப்பட்டார்கள். உஸ்மான் (ரழி) அவர்கள், கலீபா உமர் (ரழி) அவர்களால் பெயர் குறிக்கப்பட்ட ஆறு சிரேஷ்ட ஸஹாபாக்களால் தமக்குள் கலந்துரையாடித் தெரிவு செய்யப்பட்டார்கள். அலி (ரழி) அவர்கள் நான்காவது கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்ட சூழல் பயங்கரமானதாக இருந்தது. கிளர்ச்சிக்காரர்களையும், ஸஹாபாக்களையும் திருப்திப்படுத்த - இணங்க முடியாத ஒரு சூழ்நிலையில் அவர்கள் கலீபாவானார்கள். ஒவ்வொரு கலீபா தெரிவிலும் ‘குறைஷியரிலிருந்தே கலீபா வருவார்’ என்ற ஹதீஸ் பொது விதியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. நான்கு கலீபாக்களையும் அவர்களின் ஆட்சியையும் முஸ்லிம் உலகம் அங்கீகரித்தே வருகின்றது.

**கலீபாக்களின் பணிகள்**

- **இராச்சிய பரம்பல் :** ஹுதைபியா உடன்படிக்கை (ஹி. 6) நிகழ்ந்த பின்னர் நபி (ஸல்) அரபு நாட்டைச் சூழவிருந்த ஆட்சியாளர்களுக்கு அனுப்பிய அழைப்புக் கடிதங்கள், த.்.வாவை முன்னிலைப்படுத்தியதாக இருந்த போதிலும் அவை ஆட்சிப் பரம்பலுக்கான வழியாகவும் அமைந்தன. பைசாந்திய மன்னனுக்கு கடிதம் கொண்டு சென்ற தூதர், கஸ்ஸானிய சிற்றரசனால் கொலை செய்யப்பட்டார். அதற்கு எதிர் நடவடிக்கையாக ஹி. 8இல் மு.்.தாவிலும் ஹி. 9இல் தபூக்கிலும் போர்கள் நிகழ்ந்தன. ஹி. 11இல், நபி (ஸல்) உஸாமா (ரழி) தலைமையில் படையணி ஒன்றைத் தயாரித்தார்கள். அது புறப்படுமுன் நபி (ஸல்) அவர்கள் வபாத்தானார்கள்.

- எனவே அபூபக்ர் (ரழி) அவர்கள், எதுவித ஆட்சேபனைகளையும் பொருட்படுத்தாது, அந்தப் படையணியை அங்கு அனுப்பி வைத்தார்கள். அது மீண்ட பின், முர்தத்களுக்கு உதவுவதன் மூலம் பைசாந்தியர்கள் கிலாபத் விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தனர். அவ்வேளை கலீபா நான்கு படையணிகளை யஸீத் பின் அபூஸுஃப்யான் (ரழி) சுரஹ்பீல் பின் ஹஸனா (ரழி) அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி) அபூஉபைதா (ரழி) ஆகிய தளபதிகளின் கீழ் அனுப்பி வைத்தார்கள். ஷாமை நோக்கிச் சென்ற அவர்களை முறியடிப்பதற்காக நான்கு வீரர்களைக் கொண்ட படை எதிர் கொண்டது. நான்கு தளபதிகளும் இணைந்து போராடத் தீர்மானித்த போது கலீபா, காலித் இப்னு வலீத் (ரழி) அவர்களைப் பொதுத் தளபதியாக நியமித்து யர்மூக்கிற்கு அனுப்பிவைத்தார். போரில் வெற்றி பெற்ற முஸ்லிம் படை தொடர்ந்து ஹி. 14இல் டமஸ்கஸை வெற்றி கொண்டது. மர்ஜ்ராஹித், கின்ஸரின், கைஸாரியா முதலிய பிரதேசங்களையும் வெற்றி கொண்டனர்.

ஷாம் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்த போது பைசாந்தியர் எகிப்திலிருந்து

தாக்கினர். ஹி. 19இல் தளபதி அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி) எகிப்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். சுதேச மன்னன் முகவ்கிஸ் சமாதானம் செய்து கொண்டார். எகிப்தை இழந்த பைசாந்தியர் அலக்சாந்திரியாவிலிருந்து முஸ்லிம்களைத் தாக்கினர். கடற்படையின்மையால் பின்வாங்கிய முஸ்லிம்கள், கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் கடற்படை அமைக்கப்பட்டதால் ஹி. 28அல் அலக்சாந்திரியாவையும் மத்திய தரைக் கடல் தீவுகள் சிலவற்றையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்.

- நபி (ஸல்) அவர்களால் பாரசீக மன்னனுக்கு அனுப்பப்பட்ட கடிதம் கிழித்தெறியப்பட்டது. நபி (ஸல்) அவர்களைக் கைது செய்வதற்காக இருவர் மதீனாவுக்கு அனுப்பப்பட்டனர். அதேவேளை பாரசீக மன்னன் அவனது புதல்வனால் கொலை செய்யப்பட்டான். மன்னனின் கொலை பற்றிய செய்தியோடு இருவரும் மீண்டனர். இதனால் பாரசீகத்தில் அமைதி குலைந்தது.

அபூபக்ர் (ரழி) அவர்களின் காலத்திலேற்பட்ட முர்த்தத்களின் கிளர்ச்சியைப் பாரசீகர் நன்கு பயன்படுத்தினர். ஸஜாஹ் என்ற போலி நபி, மதீனாவைத் தாக்க முயன்ற போது தக்லப் கோத்திரக் கிறிஸ்தவர்கள் பாரசீகப் படையுதவியை அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

இவ்வாறே, பாரசீக எல்லையில் (பஹ்ரைன்) பக்ர், கைஸ் கோத்திரத்தினர் இஸ்லாத்தை ஏற்றிருந்தனர். ரித்தத் போர் நிகழும் கால கட்டத்தில் பக்ர்கள் முர்தத்தாகி, கைஸ்களை எதிர்த்தனர். தாக்குப் பிடிக்க முடியாத கைஸ்கள், கலீபாவிடம் முறையிட கலீபா, காலித் (ரழி) அவர்கள் தலைமையில் படையனுப்பினார். பக்ர்கள் பாரசீகரின் துணையுடன் போராடினர். பக்ர்-கைஸ்களுக்கிடையிலான போராட்டம் கிலாபத்திற்கும் பாரசீக அரசுக்குமிடையிலான போராட்டமாக திசை திரும்பியது. ஹி. 12இல் முஸ்லிம்கள் ஹிரா நகரை தமதாக்கினர். இவ்வேளையில் தான் காலித் (ரழி) யர்மூக் போருக்காக அனுப்பப்பட்டார்கள். தளபதி முஸன்னா (ரழி) கலீபாவிடம் படையுதவி கோரிய போது கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் மரணப்படுக்கையில் இருந்தார்கள். முஸன்னா (ரழி) அவர்களுக்குப் படையுதவி வழங்குமாறு கூறிவிட்டு அவர் வபாத்தானார். முஸன்னா (ரழி) மதீனாவுக்கு வந்து உதவி கோரிய போது கலீபாவின் வஸீயத்தைக் கேள்விப்பட்டார். அபூஉபைத் என்பவரின் தலைமையில் படையுதவி வழங்கப்பட்டது. இப்படை ஹி. 14இல் யூப்பிரடீஸ் நதிக்கரைப் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது.

- இதனால் வெறிகொண்ட பாரசீகர், எல்லா நகர்களிலும் படைகளைக் குவித்தனர். செய்தி கலீபாவுக்கு அறிவிக்கப்பட்ட போது, உமர் (ரழி) தாமே தலைமைதாங்கி வர ஆயத்தமானார். ஸஹாபாக்களின் வேண்டுகோளை ஏற்று, தனக்குப் பதிலாக ஸஅத் இப்னு அபிவக்காஸ் (ரழி) தலைமையில் படையனுப்பினார். 30,000 வீரர்கள், ஒரு லட்சம் பாரசீக வீரர்களோடு போராடி காதிஸிய்யாவைத் (ஹி. 14) தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள். தொடர்ந்து மதாஇன் (ஹி. 16), ஜெலூலா, ஜெஸீரா, அஹ்வாஸ், நிஹவாந்த் (ஹி. 21) நகர்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தன. நிஹவாந்த் வெற்றி பத்ஹுல் புதூஹ் (வெற்றிகளின் வெற்றி) எனக் கொள்ளப்பட்டது.

- கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் இஸ்பஹான், அஸர்பைசான். ஜுர்ஜான், தபரிஸ்தான், கிர்மான், ஸிகிஸ்தான் முதலிய மத்தியாசிய பிரதேசங்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தன.
- முஸ்லிம்கள் நாடுபிடிக்கும் ஆசையுடனோ, செல்வம் திரட்டும் நோக்கத்துடனோ, மக்களை அடிமைப்படுத்தும் ஆர்வத்துடனோ போராடவில்லை. போருக்காக எதிரிகள் வலிந்து இழுத்த போது தவிர்க்க முடியாத நிலையில் போராடினார்கள். பாரசீக, பைசாநதிய பேரரசுகள் மக்களை வருத்திய போது, அவர்களிலிருந்து விடுபட விரும்பிய பொதுமக்கள், முஸ்லிம்களுக்கு ஆதரவளித்தார்கள். அத்தோடு, முஸ்லிம் தளபதிகளின் வழிகாட்டல்கள், வீரர்களின் போரிடும் தகைமை, ஒழுக்கம் போன்ற பண்புகள் முஸ்லிம்களின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தன.

**நிருவாக ஒழுங்கு**

- நபி (ஸல்) அவர்கள், தமது குறுகிய ஆட்சிக்காலத்தில் ஹிஜாஸை மாத்திரம் உள்ளடக்கிய ஆட்சிப் பிரதேசத்தில் ஒரு நிருவாக ஒழுங்கின் மூலம் ஸஹாபாக்கள் ஓர் அரச சமூகத்தை வழிநடத்தினார்கள் என்பதை முன்னர் அவதானித்தோம்.
அவர்களை அடுத்துவந்த கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் முன்பை விட சற்று விரிவான பிரதேசத்தையும், அதிகமான மக்களையும் கொண்ட ஓர் ஆட்சியை நிருவகித்தார்கள். அவரது ஆட்சிப் பிரதேசம் பத்து நிருவாகப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றுக்கும் பொறுப்பாக 'வலி' எனப்பட்ட பொறுப்பாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள்.
- மத்திய அரசில் உஸ்மான் பின் அப்பான், ஸைத் இப்னு ஸாபித், அப்துல்லா பின் அர்கம் ஆகிய ஸஹாபாக்கள் கலீபாவின் எழுத்தாளர்களாக பணியாற்றினர். உமர் இப்னு கத்தாப், அலி இப்னு அபூதாலிப், அப்துர் றஹ்மான் இப்னு அவ்ப், முஆத் இப்னு ஜபல், உபை இப்னு கஅப் முதலிய ஸஹாபாக்கள் ஆலோசகர்களாக இருந்தனர்.
- தொழுகையை நிலைநிறுத்தல், வரி வசூலித்தல், மார்க்கத்தைப் பரப்புதல், படை திரட்டல் போன்றன அவர்களின் பொறுப்பில் இருந்தன. உமர் (ரழி) அவர்கள் மதீனாவின் நீதிபதியாகப் பணியாற்றினார்.
- கலீபா உமர் (ரழி) அவர்களின் காலத்தில் ஆட்சிப் பிரதேசம் விரிவடைந்தது. அப்பிரதேசங்களில் ஏற்கனவே ஒழுங்குபடுத்தப்பட்ட ஓர் ஆட்சி முறை (பாரசீக, பைசாந்திய பேரரசுகளில்) காணப்பட்டது. எனவே, ஒரு நிருவாக அமைப்பை உருவாக்கும் பணி அவரைச் சார்ந்திருந்தது.

- ஏனைய ஆட்சியாளர் போன்றே உமர் (ரழி) அவர்களும் மதீனாவையே தலைநகராகக் கொண்டார். மதீனா, அவரின் கண்காணிப்பில் இருந்தது. ஏனைய பிரதேசங்கள் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு வலி எனப்பட்ட ஆளுனர்கள் அமர்த்தப்பட்டனர். ஹிஜாஸ், யமன், தாயிப், ஷாம், கூபா, பஸ்ரா, எகிப்து, ஹிம்மஸ் என மாகாணங்கள் அமைந்தன. நிதி, நிருவாகம் 'ஆமில்' என்பவரின் கட்டுப்பாட்டிலும், நீதி காழியின் பொறுப்பிலும், இராணுவ விவகாரம் அமீரின் மேற்பார்வையிலும் அமைந்தன.

- நபி (ஸல்) அவர்களும், அபூபக்ர் (ரழி) அவர்களும் ஷூறாவை முக்கிய அம்சமாகக் கொண்டாலும் தனிச் சபையை வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் உமர் (ரழி) அவர்கள் மஜ்லிஸுஷ்ஷூறா என்ற தனிச்சபையை அமைத்தாகள். அதில் நிரந்தர

உறுப்பினர்களை அமர்த்தியதோடு சமயாசமய உறுப்பினர்களையும் சேர்த்துக் கொண்டார்கள். சமயா சமய உறுப்பினர்களாக துறை சார்ந்தோர், தேவைகேற்ப அழைக்கப்பட்டாகள். உஸ்மான் (ரழி), அலி (ரழி), அப்பாஸ் (ரழி), உபை இப்னு கஅப் (ரழி), முஆத் இப்னு ஜபல் (ரழி), ஸைத் இப்னு ஸாபித் (ரழி) முதலான தகுதி வாய்ந்த ஸஹாபாக்கள் அதில் அங்கம் வகித்தார்கள். இச்சபையின் சிபாரிசிலேயே மத்திய அரசின் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அதிகாரிகளின் கடமைகள், உரிமைகள், வாழ்க்கைப்படி முதாலானவற்றை அச்சபையே தீர்மானித்தது. நிருவாகிகளின் செயற்பாடுகளையும், ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் இச்சபையே கண்காணித்தது.

- நபி (ஸல்) அவர்களின் காலத்திலும், அபூபக்ர் (ரழி) அவர்களின் காலத்திலும் படைவீரர்கள் தொண்டர்களாகவே பணியாற்றினர். தேவையின் போது அழைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். கனீமத்தில் 1/5 பங்கு அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், உமர் (ரழி) அவர்கள், தீவானுல் ஜுந்த் என்ற திணைக்களத்தை உருவாக்கி அதற்கூடாகச் சிப்பாய்களைப் பதிவு செய்தும், பயிற்சியளித்தும், வாழ்க்கைப்படிகளைத் தீர்மானித்தும், நலன்களைக் கவனித்தும் ஒழுங்குபடுத்தினார்கள்.

- ஆரம்பத்தில் கிலாபத்தின் நிதி நிலைமை தாழ்ந்திருந்தமையால் வரக்கூடிய வருமானம் உடனுக்குடன் உரியவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. உமர் (ரழி) அவர்களின் காலத்தில் ஸகாத், ஸதகா, ஹிபத், ஜிஸ்யா, உஷ்ர், கராஜ், அல்பைஉ முதலான வழிகள் மூலம் நிதி நிலை உயர்வடைந்ததால் அரசை ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே பைத்துல் மால் என்ற நிதி நிறுவனத்தை உருவாக்கி அதன் மூலம் அரச ஊழியர்களும் பொதுமக்களும் நலன் பெறுவதற்கான முறைமைகள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திலும் மேலே குறிப்பிட்ட வருமானங்கள் சேகரிக்கப்பட்டு மாகாணத்தேவை போக எஞ்சியவை மத்திய பைத்துல் மாலுக்கு அனுப்பப்பட்டு நிருவகிக்கப்பட்டது. ஸாஹிபு பைத்துல் மால் என்ற அதிகாரி அதற்குப் பொறுப்பாக இருந்தார்.
- இவை தவிர நிருவாகத் தேவைக்காகப் பல தீவான்கள் அமைக்கப்பட்டன. தீவானுல் பரீத் (தபால் திணைக்களம்) தீவானுஷ் ஷுர்த்தா (பொலிஸ் திணைக்களம்) போன்றவையும், வேறு சில தேவைகளுக்காக தனிப்பட்ட நிருவாகிகளும் அமர்த்தப்பட்டனர். உதாரணமாக உஸ்மான பின் ஹனீப் (ரழி) நில அளவையாளராகவும், முஹம்மத் பின் மஸ்லமா (ரழி) குறைகேள் அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிடலாம். நிருவாகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக ஹிஜ்ரி ஆண்டுக்கணிப்பும், நாணய வெளியீடும் இடம் பெற்றன.

- இவ்வாறாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஓர் ஆட்சி முறை தேவை என்பதை அபூபக்ர் (ரழி) அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அவர்களது ஆட்சிக்காலம் குறைவாக இருந்ததால் அவரால் அதனை முழுமைப்படுத்த முடியவில்லை. இதனை, உமர் (ரழி) அவர்கள் ஆட்சியைப் பொறுப்பேற்க மறுத்த போது அவர்கள் கூறிய வார்த்தை நிரூபிப்பதாகவுள்ளது. ‘உமரே, உமக்கு கலீபா பதவி தேவையற்றதாக இருக்கலாம். ஆனால் இவை அது உம்மைக் கொண்டு அதிக தேவையுள்ளதாக இருக்கிறது. நீ அதனை ஏற்றே ஆக வேண்டும்.’ என வலியுறுத்தினார்கள்.

**அபிவிருத்தி நடவடிக்கைகள்**

- ஹிஜ்ரி முதலாமாண்டில் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் சமூக, அரசியல், பொருளாதார அபிவிருத்தி, குலபாஉர் ராஷிதூன்களின் காலத்தில் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்தது. குறிப்பாக உமர் (ரழி) அவர்களின் ஆட்சியோடு ஒரு திருப்பத்தைக் கண்டது எனக் குறிப்பிடலாம். கிலாபத், இன்றைய பேரரசுகள் இரண்டோடு மோதி தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தியது. இதனால் அன்று பேசப்பட்ட முக்கிய அரசாக வரலாற்றில் தடம் பதித்தது. இதற்கு ஆட்சி விஸ்தரிப்பு மாத்திரம் காரணமல்ல. கலீபாக்களின் ஆளுமையும் மக்கள் நலனில் ஆட்சி காட்டிய ஆர்வமும் முக்கியமானவை. ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் குடிமக்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்தார்கள். உதாரணமாக, அபூபக்ர் (ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்ட போது, பதவியேற்கும் முன்னர் தனிப்பட்ட முறையில் இயலாதோர்க்கு உதவிய பண்பு மாறிவிடுமோ என்ற பயம் ஏற்பட்டது.

- ‘வழமையாக எமக்குப் பால் கறந்து தரும் அன்டை வீட்டுப் பெரியார் இன்று கலீபாவாகிவிட்டார். நாளை எமக்குப் பால் கறந்து தருபவர் யாரோ?’ என்று ஏங்கிய சிறுமியரின் குரல் கேட்ட அபூபக்ர் (ரழி) அவர்கள் ‘நான் அன்றும் அபூபக்ர் தான்; இன்றும் அபூபக்ர் தான்’ எனக் கூறித் தொடர்ந்து பால் கறந்து கொடுக்கும் பணியைச் செய்தார்கள். நகர்வலம் வந்த கலீபா உமர் (ரழி) அவர்கள் மூட்டை சுமந்து வந்து ஏழைக் குடும்பத்துக்கு உதவிய போது, யார் என அறியாத அந்த மாது, ‘உமர் அல்லர், நீ தான் கலீபாவாக இருக்கத் தகுதியானவன்’ என்று கூறிய வார்த்தை, கலீபாக்கள் தம்மில் நல்ல பண்புகளை ஏற்படுத்திக் குடிமக்களில் அவ்வகைப் பண்புகளை வளர்த்துவிட்டமை ஒரு சிறந்த அபிவிருத்தியாகும். எனவே சிறந்த சமூகம் என்ற தரத்தை அவர்கள் பாதுகாத்துக் கொண்டார்கள்.

- ஹிஜாஸுக்கு வெளியே கிலாபத்தின் எல்லை விரிவடைந்த போது, மக்களின் சேமநலனில் அக்கறை கொண்ட கலீபாக்கள் பல்வேறு அபிவிருத்திப் பணிகளைச் செய்து முடித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் தாம் புகுந்த இடத்தில் மஸ்ஜித்களை நிறுவியது போல, கலீபாக்களும் தமது கட்டுப்பாட்டில் வந்த நகர்களில் மஸ்ஜித்களை நிர்மாணித்தார்கள். கூபா, பஸரா, புஸ்தாத், மூஸல் முதலிய நகர்களை நிர்மாணித்தார்கள். அங்கு நிறுவிய மஸ்ஜித்களை, சமய, சமூக, அரசியல் விவகாரங்களின் மத்திய நிலையமாக அமைத்தார்கள். மஸ்ஜிதுல் ஹரமையும் மஸ்ஜிதுந் நபவியையும் விஸ்தரித்தார்கள்.

- அரச நிருவாகக் கட்டடங்களை அமைத்ததோடு, பாடசாலைகளும், இடைத் தங்கல் நிலையங்களும் அமைக்கப்பட்டன. பைத்துல் மால் திறைசேரி போலச் செயற்பட்டது. வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றின் மூலம் மக்கள் நலம் பெற வழிகாட்டப்பட்டது. அரச நிருவாகம், வியாபார விருத்தி போன்றவற்றிற்காக கடை வீதிகளும், பாதைகளும், பாலங்களும், விடுதிகளும் அமைக்கப்பட்டன.

- மக்களின் குடிநீர்த் தேவைக்காகவும், விவசாய விருத்திக்காகவும் அமீருல் மு.்.மினீன், அபூம.்.ஷர், நஹ்ர் அபூ மூஸா, நஹ்ர் ஸஅத் போன்ற கால்வாய்கள் தோண்டப்பட்டன. நைல் நதியில், செங்கடல் வரை 70 மைல் நீளமான ஒன்றும் செங்கடலிலிருந்து மத்திய தரைக்கடல் வரையுமான ஒன்றுமாக இரண்டு நீண்ட கால்வாய்கள் வெட்டப்பட்டன. மக்கா – மதீனா நெடுஞ்சாலை செப்பனிடப்பட்டது. ஜித்தா துறைமுகம் விருத்தி செய்யப்பட்டது. கடற்படை உருவாக்கப்பட்டதோடு

சிரியாவில் கப்பல் கட்டும் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்பட்டது. அல்குர்ஆனைக் கற்பிக்கவும், எழுத்தறிவை விருத்தி செய்யவும் சிறுவர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து மஸ்ஜித்கள் வளர்ந்தோர் பாடசாலைகளாக பணியாற்றின. மஸ்ஜித் கலாநிலையங்கள் தோன்றின.

- ஹிஜ்ரி ஆண்டு வழக்கில் வந்தது. வழக்கில் இருந்த உரோம, பாரசீக நாணயங்களுக்குப் பதிலாக அரபு நாணயங்கள், திர்ஹம், தீனார் முதலான பெயர்களில் அறிமுகமாகின. அவற்றில் லா இலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரஸுலுல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர், உமர் முதலான சொற்களும் தொடர்களும் பதிக்கப்பட்டன. பொலிஸ் படையும், தபால் சேவையும், இராணுவ முகாம்களும் பணியாற்றின. அநாதையர், விதவையர் நலன்கள், அவர்களின் தேவைகள் பைத்துல் மால் மூலம் நிறைவுபெற்றன. சுருக்கமாகச் சொல்வதாயின் ஒரு சேமநலவரசின் எல்லாப் பணிகளும் அங்கு இடம் பெற்றன.

**எதிர்கொண்ட சவால்கள்**

- நபி (ஸல்) அவர்களின் காலத்துக்குப் பின்னர் தலைமையேற்ற கலீபாக்கள் நல்லாட்சியை நடத்தினாலும் கூட, சமூகம் அல்லது ஆட்சியில் காணப்பட்ட இரண்டு விளைவுகளால் பல சவால்களை எதிர்கெள்ள வேண்டியேற்பட்டது.

- ஹிஜ்ரி 8ஆம் ஆண்டுக்குப் பின்னர் மக்கா முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்த போது, சூழலில் வாழ்ந்தோர் சாரி சாரியாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இதனால் ஹி. 9ஆம் ஆண்டு ஆமுல் வப்த் என்ற பெயரையும் பெற்றது. இவ்வேளை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஆரம்ப கட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களிடமிருந்த அறிவுத் தரத்தையோ, பக்குவத்தையோ பெற்றுக் கொள்ளவில்லை. இதனால் அவர்களிடம் எதிரிகள் நுழைவது இலகுவாக அமைந்தது.

- கலீபா அபூபக்ர் (ரழி) காலத்தில் தோன்றிய ஸகாத் கொடுக்க மறுத்தல், முதநப்பிகளுடன் இணைதல் என்ற இரண்டு விடயங்களும் இந்தப் பின்னணியிலேயே தோன்றி உள்ளன. நபி (ஸல்) அவர்கள் உயிர் வாழும் போதே முதநப்பிகள் தோன்றினார்கள். 'நான் நபித்துவத்தில் உங்களுடன் பங்காளியாக இருக்கிறேன். உலகில் ஒரு பாதி உங்களுக்கும் மறு பாதி எனக்கும் உரியது.' எனக் கூறி போலி நபி முஸைலமா, நபி (ஸல்) அவர்களுக்கு கடிதம் எழுதினான். அவனது கருத்து தவறானது என்பதை நபி (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டிய போது அமைதியாக இருந்தான். நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் மீண்டும் தலையெடுத்தான்.

- அதேவேளை ஹனீப் கோத்திர முஸைலமா பின் ஹமீம் (யமாமா) தக்லிப் கோத்திரத்தைச் சேர்ந்த ஸஜாஹ் பிந்தி ஹாரிதா (யமாமா) அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த துலைஹா பின் குவைலித் (நஜ்த்) அன்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த அஸ்வத் (யமன்) தமீம் கோத்திரத்தைச் சேர்ந்த மாலிக் பின் நுவைரா முதலானோர் தம்மை நபியென பிரகடனப்படுத்தினர். அவர்களது பிரகடனம் தவறானது என்பதை சுட்டிக்காட்டியும் அதனைப் பொருட்படுத்தாமல் இருந்தமையால் கலீபா அவர்களுக்கெதிராக போர் பிரகடனம் செய்தார். பதினொரு தளபதிகளின் கீழ் பதினொரு படைப்பிரிவை அனுப்பி வைத்தார்.

1. காலித் இப்னு வலீத் - துலைஹா, மாலிக் பின் நுவைராவுக் கெதிராக
2. இக்ரிமா பின் அபூஜஹ்ல்- முஸைலமாவுக் கெதிராக
3. ஷரஹ்பீல் பின் ஹஸனா - இக்ரிமாவுக்குத் துணையாக (ஹழ்ரமவ்த்)
4. காலித் பின் ஸஈத் - சிரியா (மஷாரிக் கோத். எதிராக)
5. அம்ர் இப்னுல் ஆஸ் - குஸாஆக் கோத்திரத்துக் கெதிராக
6. ஹுதைபா பின் முஹ்ஸின்- உம்மான் (அஹ்லு வபாவுக் கெதிராக)
7. அர்பஜா பின் ஹர்தமா - அஹ்லுல் மிஹ்ராவுக் கெதிராக
8. தர்கா பின் ஹாஜிப் - ஸுலைம் (ஹவாஸின் கோத். எதிராக)
9. ஸுவைத் பின் முகர்ரின் - யமன், திஹாமா பிரதேசத்திற்கு
10. ஆலா பின் ஹழ்ரபி - பஹ்ரைன் (ஹுதைம் கோத். எதிராக)
11. முஹாஜிர் பின் அபூ உமையா - அப்னா, அன்ஸ் கோத். எதிராக

பிரதான முதநப்பிகளுள் அஸ்வத் அன்ஸி நபியவர்களின் காலத்தில் கொலை செய்யப்பட்டான். முஸைலமா யாமாமாப் போரில் கொலை செய்யப்பட்டனர். துலைஹா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். ஸஜாஹ் பஸராவில் மரணித்தான்.

குளிர்காலத்தில் மழை பொழிந்து கொண்டிருக்கும் ஓர் இரவில் இடையனின்றி வெளியே திரியும் ஆட்டு மந்தை போல மதமாற்றத்தின் போது முஸ்லிம்களின் நிலை இருந்தது என இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஸகாத்தை ஒழுங்காக கொடுத்து வந்த கத்பான், சுலைம் முதலான கோத்திரங்கள், ஸகாத்திலிருந்து விதிவிலக்குக் கோரிய அவ்வேளை 'நபி (ஸல்) அவர்கள் காலத்தில் கொடுக்கப்பட்ட ஓர் ஆட்டுக் குட்டியையேனும் தருவதற்கு மறுத்தால் அவர்களுக் கெதிராகப் போராடுவேன்' என கலீபா எச்சரிக்கை விடுத்தார். பயந்த சிலர் தமது ஸகாத்தை ஒப்படைத்தனர். கொடுக்க மறுத்தோருக் கெதிராக கலீபா போராடத் தயாரானார்.

'இந்த மனிதர் உயிரோடிருக்கும் வரை குழப்பங்களின் வாசல் அடைக்கப்பட்டிருக்குமென உமர் (ரழி) அவர்களைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் கூறியது போல அவர்களின் காலத்தில் குழப்பங்கள் நிகழவில்லை. ஒருமுறை உமர் (ரழி) அவர்கள், ஸாஹிபுஸ்ஸிர் எனப்பட்ட ஹுதைபா (ரழி) அவர்களிடம், 'கடல் அலைகளைப் போல வீசும் என நபி (ஸல்) அவர்கள் விபரித்த குழப்பத்தை அறிவீராயின் சொல்லுவீராக' எனக் கேட்டார்கள். அதற்கு 'அதன் கவலை உங்களுக்குத் தேவையில்லை பெரும் கதவொன்று அதனை அடைத்து நிற்கின்றது' என்றார்கள். அந்தக் கதவு திறந்து கொள்ளுமா, உடைந்து விழுமா, பாதுகாக்கப்படுமா என்று உமர் (ரழி) அவர்கள் திருப்பிக் கேட்டார்கள. 'அது திறக்கப்படமாட்டாது; உடைந்து விழும்' என ஹுதைபா (ரழி) அவர்கள் பதிலளித்தார்கள். இந்தக் கருத்தின் அடிப்படையில் உமர் (ரழி) அவர்களுக்குப் பின், குழப்பங்கள் அதிகரித்தன.

உமர் (ரழி) அவர்களின் காலத்தில் வெற்றி கொள்ளப்பட்ட பாரசீக, பைசாந்தியப் பேரரசுகள் பகைமையும், பொறாமையும் கொண்டன. கிலாபத்தை வீழ்த்த சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து நின்றன. அதன் முதல் நடவடிக்கையாகவே, அபூலு.ஃ. லு.ஃ. பைரோஸ் என்ற பாரசீகன் உருவாக்கப்பட்டான். உமர் (ரழி) அவர்களை கொலை செய்தான்.

கலீபா உமர் (ரழி) அவர்கள் கையாண்ட கட்டுப்பாடுகள், கலீபா உஸ்மான் (ரழி) அவர்களால் தளர்த்தப்பட்டன. அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி முஸ்லிம்களுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. யமனிலிருந்த வந்த அப்துல்லா இப்னு ஸபா என்ற யூதன், உஸ்மான் (ரழி) அவர்களுக்கு எதிராகவும், அலி (ரழி) அவர்களுக்கு சார்பாகவும் மறைமுக பிரசாரத்தில் ஈடுபட்டான். அவனது பிரசாரம் மக்கா, மதீனா நகர்களில் எடுபடவில்லை. எனவே கூபா, பஸரா, புஸ்தாத் முதலிய புதிய நகர்களில் முன்பு பாரசீக, பைசாந்திய ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளில் பிரசாரத்தை தூண்டிவிட்டான. மவாலிகள் (அறபி இல்லாத முஸ்லிம்கள்) பெருகியமை, சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு காணப்பட்டமை, கலீபாவின் இளகிய உள்ளம் காரணமாக எதிரிகளை அணுகிய முறை, மர்வான் இப்னு ஹகம் போன்ற அதிகாரிகளின் தவறான போக்குகள் வாய்ப்பாக அமைந்தன. இப்னு ஸபா வாய்ப்பை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். அலி (ரழி) அவர்களுக்குரிய அரசுரிமையை உஸ்மான் (ரழி) பறித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றவாறு பிரசாரம் செய்தான். அவனால் தூண்டிவிடப்பட்ட கூபா, பஸரா, எகிப்து ஆகிய பிரதேசங்களிலிருந்து மதீனாவுக்குத் திரண்டு வந்த கிளர்ச்சிக்காரர்கள் போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து கலீபாவைக் கொலை செய்ததோடு மதீனாவையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்கள். பல சிரேஷ்ட ஸஹாபாக்கள் ஹஜ்ஜுக்காக மக்காவுக்கு சென்றிருந்த வேளையில் தான் இது நடந்தது.

இந்நிலையில் அலி (ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவானாலும், உஸ்மான் (ரழி) அவர்களைக் கொலை செய்த கொலையாளிகளை கண்டுபிடிக்க முடியாமற்போனமை. கிளர்ச்சிக்காரர்களின் அட்டகாசங்களை அடக்க முடியாமற்போனமை, ஸஹாபாக்கள் மத்தியில் கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தி விட்டமை, வாள்முனையில் குறிப்பிட்ட ஸஹாபாக்களிடம் பைஅத் வாங்கப்பட்டமை போன்ற காரணங்களால் கலீபா அலி (ரழி) அவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கினார்கள்.

மதீனாவின் புனிதத்துவம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக கலீபா கூபாவைத் தலைநகராக்கி அங்கு குடியமர்ந்தார்கள். எனினும் தல்ஹா, ஸுபைர் (ரழி) ஆகியோர் தலைமையிலான ஒரு குழுவினர் கலீபாவின் கொலைக்குப் பழிவாங்க முயற்சித்து பஸராவில் ஒன்று கூடினார்கள். இதன் விளைவாக முஸ்லிம்களுக்கிடையில் போராட்டத்திற்கு இட்டுச் செல்லும் கவலைக்குரிய நிகழ்வு ஏற்பட்டது. இதில் ஆயிஷா (ரழி) அவர்கள் ஒட்டகையில் அமர்ந்தவாறு கலந்து கொண்டதனால், இதனை ஜமல்ப் போர் (ஹி. 36) என்பர்.

இதனைத் தொடர்ந்து, கலீபா அலி (ரழி) அவர்களுக்கு பைஅத் செய்யாத முஆவியா (ரழி) அவர்கள், டமஸ்கஸில் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். இதனால் இருவருக்குமிடையில் ஸிப்பீன் போர் (ஹி. 37) நிகழ்ந்தது. இப்போரிலும் முஸ்லிம்கள் பெருவாரியாகக் கொலையுண்டனர். போரை நிறுத்த மேற்கொண்ட முயற்சி மற்றொரு பிரிவைத் தோற்றுவித்தது. ஒரு பகுதியார் களத்திலிருந்து வெளியேறினார்கள். கவாரிஜ் எனப்பட்ட இவர்களுடனும் நஹர்வானில் (ஹி. 38) ஒரு போர் நிகழ்ந்தது.

ஸிப்பீன் போர் நிறுத்தத்தின் போது பிரிந்த அலி (ரழி) ஆதரவாளர்களில் ஒரு சாரார் ஷீயா என்ற பிரிவு தோன்றுவதற்குக் காரணமாகின்றனர். கவாரிஜ்களில் ஒருவரான அப்துர் றஹ்மான் இப்னு முல்ஜிம் என்பவரால் அலி (ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அவர்களது கொலையோடு கிலாபதுர் ராஷிதா முற்றுப் பெற்றது.

கிலாபதுர் ராஷிதாவின் வீழ்ச்சிக்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

- கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் கொலையும் அதன் பின்விளைவுகளும்.
- அப்துல்லா இப்னு ஸபாவின் சதி முயற்சிகள்.
- ஸஹாபாக்கள் அரசியல் ரீதியாக கருத்து முரண்பட்டமை.
- கவாரிஜ் சிந்தனைகளின் தோற்றம்.
- மர்வான் பின் ஹகம் போன்ற உமையாக்களின் மறைமுகமான நடவடிக்கைகள்.

**தேர்ச்சி 6.0 : இஸ்லாத்துக்கு முற்பட்ட காலம் முதல் அப்பாஸியர்களின் வீழ்ச்சி வரையிலான கால கட்டங்களில் அரசியல், சமூக, நாகரிக வளர்ச்சி பற்றி விளக்கிக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.4: கிலாபத்- முல்கிய்யத் பற்றிய தெளிவைப் பெற்று உமையா ஆட்சியின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளங்கி உமையா கலீபாக்களின் சாதனைகளை மதிப்பீடு செய்வார்.**

**பாடவேளை : 20**

**கற்றல் பேறுகள்:**

- கிலாபத் - முல்கிய்யத் எனும் பதங்களை விளக்கி அவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுவார்.
- உமையாக்களின் எழுச்சி பற்றி விபரித்துக் கூறுவார்.
- உமையாக்கால பிரதான கலீபாக்களின் பங்களிப்புக்களை மதிப்பீடு செய்வார்.
- உமையாக்களின் வீழ்ச்சிக்கும் அப்பாஸியர்களின் எழுச்சிக்குமான காரணிகளை விமர்சித்துக் கூறுவார்.
- அப்பாஸியர் கால பிரதான கலீபாக்களின் பங்களிப்புக்களை மதிப்பீடு செய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர், அபூபக்ர் (ரழி) அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட குலபாஉர் ராஷிதூன்களின் ஆட்சி, அலி (ரழி) அவர்களின் கொலையோடு முப்பது வருடங்களில் (ஹி 11-40) முற்றுப் பெற்றது. இவர்களின் ஆட்சியை கிலாபதுர் ராஷிதா என்பர். அலி (ரழி) அவர்களுக்குப் பின் ஆட்சியேற்ற முஆவியா (ரழி) அவர்கள், ஒரு ஸஹாபியாக இருந்த போதும் கலீபா என்ற பெயரால் தம்மை அழைத்துக்கொண்ட போதும் அவர் குலபாஉர் ராஷிதூன்களின் வழிமுறையைக் கையாளவில்லை. பதிலாக, உரோம, பாரசீக முறைகளைத் தழுவி உமையா வம்சத்தின் பரம்பரை முடியாட்சியையே தோற்றுவித்தார்கள். அவர் ஆரம்பித்த முடியாட்சி முறையையே உமையா வம்ச ஆட்சியாளர்களும், அப்பாஸிய ஆட்சியாளர்களும் ஏனையோரும் தொடர்ந்து நடத்தினர். இவ்வாட்சி முறை முலூகிய்யத் எனப்பட்டது.

- நுபுவ்வத் அடிப்படையான கிலாபத் முப்பது வருடங்கள் நீடிக்கும். பின்னர் அல்லாஹ் தான் விரும்பியோருக்கு முடியாட்சியைக் கொடுப்பான் என்ற ஹதீஸின்படி நடந்து முடிந்துவிட்டது. எனினும் இதன் கருத்து முப்பது ஆண்டுகளே கிலாபத் ஆட்சி நடக்க வேண்டும் என்பதல்ல. அதற்கப்பாலும் கிலாபத் ஆட்சியைத் தொடர முயற்சிக்க வேண்டும் என்பதாகும். இதனால் தான் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ஹி 99-101) உமையா ஆட்சிக்காலத்தில் கிலாபத் ஆட்சிமுறையை மீண்டும் தாபிக்க முயற்சித்தார். அதில் வெற்றி கண்டாலும் அவர் கொலை செய்யப்பட்டமையும் தொடர்ந்து வந்தோர் அதனைத் தொடர முன்வராமையும் ஒரு வரலாற்றுத் தவறாகவே தெரிகிறது.

- நபி (ஸல்) அவர்கள் கிலாபத்துக்குப் பின் தோன்றும் முலுக்கியத்தை தீங்கான ஒன்றாகவே கருதினார்கள். நன்மையை ஏவி, தீமையை தடுத்தல், செல்வங்களை உரிய முறையில் பகிர்ந்தளித்தல், பாதுகாப்பாக போக்குவரத்துச் செய்வதற்கான வழிவகைகளை அமைத்தல் சன்மார்க்கக் கடமைகள் போன்றவற்றில் குறைபாடுகள் தோன்றுமென்ற அச்சம் அதற்கான கராணமாக இருக்கலாம்.

  செல்வத்தையும் தலைமைத்துவத்தையும் விடாப்பிடியாக வைத்துக் கொள்ளல், செல்வப்பகிர்வில் பாரபட்சம் காட்டல், ஜிஹாதின் போது நிதானமின்றி நடத்தல், கருத்து வேறுபாடு கொண்டோரை கடுமையாக நசுக்குதல் போன்றன மன்னர்களிடத்தில் சாதாரணமாகக் காணப்பம் துர்ப்பண்புகளாகும். இவை உமையா, அப்பாஸிய ஆட்சிகளில் இயல்பாகவே நிகழ்ந்துள்ளன. இவவற்றின் காரணமாக சமூகத்தில் பல்வேறு குழப்பநிலைகள் தோன்றியிருக்கின்றன.

  எமக்கு முன்பிருந்த ஷரீஅத்களிலும் முடியாட்சி முறை அனுமதிக்கப்டிருந்தது. முடியாட்சி வளங்கப்பட்ட, தாவூத், ஸுலைமான், யூசுப் ஆகிய நபிமார்கள் பற்றி அல்குர்ஆன் விளக்குகிறது. அல்குர்ஆனில் ஆட்சித் தலைவரொருவர் இருப்பதைக் கடமையாக்கும் சட்டவசனங்கள் நிறைய உள்ளன. நுபுவ்வத் அடிப்படையிலான கிலாபத்தை உருவாக்குவதே கடமையாகும். அதனைப் பற்றி நிற்குமாறே நாம் கட்டளையிடப்பட்டுள்ளோம். அதற்கு மாற்றமாகத் தோன்றும் புதிய விடயங்கள் குறித்து நாம் எச்சிரிக்கப்பட்டுள்ளோம். நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் வந்த அபூபக்ர் (ரழி) உமர் (ரழி) ஆகிய இருவரையும் பின்பற்றுமாறு கட்டளையிடப்பட்டுள்ளோம்.

- எனினும், சமூகத்தில் நிகழ்ந்த வேறுபாட்டின் காரணமாக அவ்வுயர்ந்த நிலையை தளர்த்தி, தாழ்ந்த நிலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கிலாபத் அமைப்பு கடமையானது என்பது உண்மையே. எனினும் ஆட்சியதிகாரத்தால் செய்ய வேண்டியவற்றைக் கஷ்டமின்றி இலகுவாக நிறைவேற்றுவதற்கு முடியாட்சி முறையேனும் ஏற்க வேண்டிய நிலை உருவானது. ஏனெனில் அதிகார பீடமின்றி சமூகமொன்று நிலைக்க முடியாது. இதன் காரணமாக முரண்பட்ட இரண்டு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

- எல்லாக் காலங்களிலும் எல்லா நிலைகளிலும் அனைத்து மக்கள் மீதும் கிலாபத் ஆட்சி முறையை விட்டு வேறொரு முறையைக் கடைப்பிடித்தல் கண்டிக்கத் தக்கதாகும் என்ற கருத்தை ஒரு சாரார் கொண்டுள்ளனர். அறிவு ரீதியாகவோ நடைமுறை ரீதியாகவே கிலாபத் ஆட்சியைக் கொண்டு வருதல் சாத்தியமானதாகும். ஆயினும் கிலாபத் ஆட்சிமுறை கடமையானதன்று. அது ஸுன்னத்தானது. மன்னராட்சி முறை முன்பு வாழ்ந்த சமூகங்களின் அனுமதிக்கப்பட்டிருந்தது போன்று எமது சமூகத்திலும் அனுமதிக்கப்படுகிறது என்பது மற்றோர் இஜ்திஹாத் ஆகும். சில இஸ்லாமிய அறிஞர்கள் இவ்வாறான கருத்தைக் கொண்டுள்ளனர். அந்த வகையில் மன்னராட்சியைக் கடைப்பிடிக்கும் ஒரு நீதியான ஆட்சியாளன் குற்றவாளியாக மாட்டான் என்று இமாம் ய.்லா குறிப்பிடுகிறார்.

- அதாவது, கிலாபத் ஒழுங்கையும், மன்னராட்சி அமைப்பையும் இணைத்து கடைப்பிடித்தல் எமது ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மன்னராட்சி முறை நீதியான ஆட்சி முறைக்குமாறானதல்ல என்ற கருத்தை அவர் கொண்டுள்ளார். எனினும் தூய கிலாபத் ஆட்சிமுறையைக் கடைப்பிடிப்பதே உயர்ந்தது என்பதில்

கருத்து வேறுபாடில்லை. அத்தோடு மன்னன் நீதியானவனாக இருக்க வேண்டும் என்பது மன்னராட்சி முறையைக் கடைப்பிடிப்பதற்கு அடிப்படையான நிபந்தனையாகும்.

- நுபுவ்வத் அடிப்படையிலான ஆட்சிமுறை கடமையானது. அதேவேளை, அது சாத்தியமானதாக இருப்பின் அதனை விடுவது பாவமாகவே அமையும், அப்பாவம் பெரும்பாவமா, சிறுபாவமா என்ற கேள்வியும் எழுகிறது. முடியாட்சியை மேற்கொள்வோன் இறை கட்டளைகளை நடைமுறைப்படுத்தி நன்மைகளை அதிகம் செய்து தீமைகளை தவிர்த்துக் கொண்டு சிறந்த முறையில் ஆட்சி செய்யும் போது அவர் செய்த பாவத்தை விடவும் நன்மைகள் கூடிவிட முடியும். உமர் இப்னு அப்துல் அஸீஸையும், இஸ்லாத்தைத் தழுவிய நஜ்ஜாஷி மன்னரையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். நபி யூசுப் (அலை) அவர்களின் நிலையும் சில பகுதிகளில் இதற்கு ஒத்ததாக அமைகிறது. (கலாநிதி. காதிர் நூரி) இந்தப் பின்னணியில் தான் உமையாக் கால ஆட்சியை நோக்க வேண்டியுள்ளது.
- உமையாக்களின் எழுச்சி உஸ்மான் (ரழி) அவர்களின் கொலையோடு ஆரம்பித்ததா, ஜாஹிலிய்யாக்கால மரபிலிருந்து தோன்றியதா என்பது ஆய்வுக்குரியதாகும். எனினும் நபி (ஸல்) அவர்களோ, முதலிரு கலீபாக்களுமோ கோத்திர உணர்வுடன் செயல்படவில்லை. அவர்கள் மூவரும் தகுதிக்கேற்ப உமையாக்களையும் பதவியில் அமர்த்தியுள்ளார்கள்.

**உமையாக்களின் எழுச்சி**

- ஜாஹிலிய்யாக் காலத்தில் உமையாக்களுக்கும் ஹாஷிமிக்களுக்குமிடையிலான அதிகாரப் போட்டி இருந்து வந்தது. நபி (ஸல்) அவர்கள் தோன்றியதன் மூலம் ஹாஷிமிகள் இயல்பாகவே உயர்வடைந்தார்கள். எனினும் நபி (ஸல்) அவர்கள் கோத்திர உணர்வுக்கு முக்கியத்துவமளிக்கவில்லை. தகுதிக்கேற்ப அவர்களின் பரிபாலனத்தில் உமையாக்களுக்கும் இடமளிக்கப்பட்டது.
- முதலிரு கலீபாக்களின் தெரிவில் உமையாக்கள் பங்கு கொள்ளவில்லை. அது கோத்திர கண்ணோட்டத்தோடு நோக்கப்படவுமில்லை. மூன்றாவது கலீபாவாக உஸ்மான் (ரழி) அவர்கள் தெரிவான போது அவரின் செயலாளராகப் பணியாற்றிய மர்வான் இப்னு ஹகம் (கலீபா அறியாமலே) கோத்திர உணர்வோடு செயல்பட்டிருக்கிறார். கூடவே அப்துல்லா இப்னு ஸபா என்ற நயவஞ்சகன் அலி (ரழி) அவர்களுக்கு ஆதாவாக கூபா, பஸரா, புஸ்தாத் நகர்களில் வாழ்ந்த புதிய முஸ்லிம்களின் மத்தியில் செய்த வஞ்சகப் பிரசங்கம் அவர்களைத் தவறான வழிக்கு இட்டுச் சென்றது. அலி(ரழி) அவர்களுக்குரிய அதிகாரத்தை உஸ்மான்(ரழி) அவர்கள் கையேற்றிருக்கிறார் என்றவாறான அவனது பிரசாரத்தில் மயங்கினர். உஸ்மான் (ரழி) அவர்கள் மீது அவனால் சுமத்தப்பட்ட போலிக் குற்றச் சாட்டுகளை நம்பி, அவர்களைப் பதவியிறக்கச்செய்வதில் தீவிரமாக ஈடுபட்டனர். இதனால் உஸ்மான் (ரழி) அவர்கள் கொலையுற வேண்டி ஏற்பட்டது.
- அடுத்து பதவியேற்ற அலி (ரழி) அவர்கள், சூழ்நிலை சுமுகமில்லாத நிலையில் கொலைக்குப் பழிவாங்க முடியாமற் போகவே அதை சாட்டாக வைத்து

உமையாக்கள் கலீபாவுக்கெதிராக செயல்பட ஆரம்பித்தனர். இதே காரணத்துக்காக ஸிப்பீனில் முஸ்லிம்கள் தமக்குள் போரிட்டுக் கொண்டனர். வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படாத நிலையில் போர் நிறுத்தப்பட்டு நடுவர்களின் தீர்ப்புக்கு விடப்பட்டது. நடுவர்களின் தீர்ப்பிலும் சுமுகமான நிலை காணப்படவில்லை. இதற்கிடையில் கலீபா அலி (ரழி) அவர்கள் காரிஜி ஒருவனால் கொலை செய்யப்பட ஷாம் மக்கள் முஆவியா (ரழி) அவர்களையும் இராக் மக்கள் ஹஸன் (ரழி) அவர்களையும் கலீபாவாகத் தெரிவு செய்தனர்.

- அலி (ரழி) அவர்களுக்கு பைஅத் செய்யாமல், கொலை செய்யப்பட்ட கலீபாவின் இரத்தம் தோய்ந்த அங்கியை டமஸ்கஸுக்கு எடுத்து வந்து காட்சிப்படுத்தி கொலை செய்யப்பட்ட கலீபாவுக்காக பழிவாங்கல் என்ற பெயரில் ஸீப்பீனில் போராடிய முஆவியா (ரழி) ஷாமுடன் எகிப்தையும் இணைத்து, ஹஸன் (ரழி) அவர்களுடன் போராட முன்வந்த போது, ஹஸன் (ரழி) அவர்கள் பதவியை விட்டுக் கொடுத்தார். இதனால் முஆவியா (ரழி)அவர்கள் ஏக கலீபாவாக அமர்ந்தார்.

  இருபது வருடங்கள், ஷாமின் கவர்னராக பணியாற்றிய அனுபவம், ஷாம் மக்களை அவர்பால் ஈர்த்து வைத்தது. நா போதுமென்ற நிலையில் சவுக்கையோ, சவுக்கு போதுமென்ற நிலையில் வாளையோ பயன்படுத்தாத, இராசதந்திரம் மிக்க முஆவியா (ரழி) அவர்கள், பைசாந்தியரிடமிருந்து எல்லை மாகாணமான ஷாமைப் பாதுகாத்ததால், உமையாக்கள் ஷாமில் திரளாகக் குடியமர்ந்தனர்.

**உமையா கலீபாக்களின் சாதனை**

- கிலாபதுர் ராஷிதாவுக்குப் பின்னர் இஸ்லாமிய ஆட்சியில் முலூக்கியத்தை உருவாக்கியவர் என்ற வகையில், உமையா வம்ச ஆட்சியை உருவாக்கியவர் என்ற வகையிலும் முஆவியா (ரழி) அவர்கள் பிரதான இடத்தை வகிக்கிறார். ஹி. 41 முதல் 60 வரையான கால கட்டத்தில் இவர் உமையா ஆட்சியை நடத்தினார்.

- இவரிடம் காணப்பட்ட தனிப்பட்ட குணவியல்புகளும், நிருவாக அனுபவம், இராச தந்திரம், மக்களாதரவு, தளபதிகளின் ஒத்துழைப்பு போன்ற காரணங்களும் வம்ச ஆட்சியை உருவாக்குவதற்குத் துணையாக அமைந்தன. உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலம் முதல் சுமார் 20 ஆண்டுகள் ஷாம் பிரதேச ஆளுநராகப் பணியாற்றியதன் மூலம் அவருக்குக் கிடைத்த நிருவாக அனுபவமும், நிருவாக ஒழுங்குகள் மூலம் பெற்ற ஷாம் மக்களின் அபிமானமும், அம்ர் இப்னு ஆஸ், முகீரா இப்னு சுஅபா, ஸைத் இப்னு அபீஹ் முதலிய அதிகாரிகளின் ஒத்துழைப்பும் அவரை நிலைப்படுத்தின. எனவே, டமஸ்கஸை (திமிஷ்க்) தலைநகராகக் கொள்வதே தனக்கு சாதகமானது என்பதை உணர்ந்தார். டமஸ்கஸ் தலை நகராக்கப்பட்டதால் மதீனாவின் செல்வாக்குக் குறைந்தது. பைசாந்திய செல்வாக்கில் ஊறிப்போன அப்பிரதேசத்தில் இஸ்லாத்தைப் போன்றே பைசாந்திரிய மரபுகளும் தாக்கம் செலுத்தின. தாம் விரும்பிய வம்ச ஆட்சியைத் தொடர்வதற்கு இவை சாதகமாக அமைந்தன.
- தான் உயிர்வாழும் போதே, தனது வாரிசாக தகுதிகுறைந்த மகன் யஸீதை நியமித்த போது, ஹிஜாஸியர் எதிர்த்த போதிலும் ஷாமியரின் ஆதரவு அவருக்குக் கிடைத்தது. மட்டுமன்றி குலபாஉர் ராஷிதூன்களின் முறையிலிருந்து வேறுபட்ட முறையில் அரசியல், சமூக, நகர்வுகள் வளர்த்துவிடப்பட்டன. மஸ்ஜிதில்

கலீபாவுக்கான மக்ஸூரா அமைக்கப்பட்டமை, மெய்ப்பாதுகாவலரை அமர்த்திக் கொண்டமை, மஜ்லிஸுஷ் ஷூறாவுக்குப் பதிலாக ஆதரவாளர்களை உள்ளடக்கிய அரச சபை அமைந்தமை, புலவர்கள் அரச சபையை அலங்கரித்தமை போன்றன இதன் பிரதிபலிப்புகளாகும்.

- ஆட்சிப் பிரதேசத்தின் மேற்கில் கிடைத்த ஆதரவு கிழக்கில் கிடைக்காத போது, அடக்கு முறைகள் கையாளப்பட்டன. கொடுமையான தளபதிகள், யஸீதின் காலத்தில் கூபாவில் இடம் பெற்ற கர்பலா (ஹி.61) மதினாவில் இடம்பெற்ற ஹர்ரா (ஹி.63) போர்கள் இதற்கு ஆதாரமாகும். ஸைத் பின் அபீஹ், உபைதுல்லா பின் ஸியாத் போன்ற தளபதிகள் கடுமையாகவே நடந்து கொண்டனர்.
- எனினும், முஆவியா (ரழி) அவர்கள் ஆட்சியின் வட மேற்கொல்லையை வித்தரிப்பதில் வெற்றி கண்டார். உக்பா பின் நாபிஉ தலைமையிலான படை கைரவான் நகரைத் தனதாக்கியதோடு வட ஆபிரிக்க பிரதேசங்களில் ஆட்சி விரிவடையவும் அத்திபாரமிடப்பட்டது. அவர் ஏற்கனவே தாபித்த கடற்படையைப் பயன்படுத்தி மத்திய தரைக் கடல் தீவுகளிலும், கிழக்கில் ஆப்கானிஸ்தான் (ஹி.51) பல்கு (ஹி .53) புகாரா (ஹி.54) சமர்க்கந்து (ஹி.55) ஆகிய பிரதேசங்களிலும் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தினார்கள்.

***அப்துல் மலிக் பின் மர்வான்***

- கலீபா முஆவியா (ரழி) அவர்களுக்குப் பின் பதவியேற்ற யஸீதின் பலவீனமும் அவர்களுக்குப்பின் பதவி கொடுக்கப்பட்டவர்களின் இயலாமையும் உமையாக்களின் ஹர்பிய மரபின் தகுதியின்மையை எடுத்துக்காட்டின. எனவே மர்வான் பின் ஹகம் நிபந்தனையோடு பதவியேற்றார். எனினும் நிபந்தனையை மீறி அடுத்த வாரிசாக தமது மகன் அப்துல் மலிக்கை நியமித்தார். அவர் நலிந்து போன உமையா ஆட்சியை மீளெழுச்சி பெறச் செய்தார். இதனால் அவர் இரண்டாவது நிர்மாணி எனப் பாராட்டப்பட்டார்.
- அவர் பதவியேற்ற போது, டமஸ்கஸில் யஸீதின் மகன் காலிதின் தளபதியான அம்ர் பின் ஸஅத் ஹிஜாஸில் அப்துல்லா ஸுபைர்(ரழி) இராக்கில் முக்தார்பின் உபைத் , மொசபதோமியாவில் கவாரிஜ்கள், வட ஆபிரிக்கா பைஸாந்தியர் என ஐந்து முனைகளில் எதிர்ப்புக்கள் கிளம்பியிருந்தன. எனினும் அவற்றை பொருத்தமான அணுகுமுறைகளையும், போர் முறைகளையும் கையாண்டு முறியடித்தார். இழந்த பிரதேசங்களை மீட்டிக் கொண்டார்.

  தொடர்ந்து அறபு மொழியை அரசமொழியாகப் பிரகடனப்படுத்தியும், நாணய சாலை நிறுவி புதிய அறபு நாணயங்களை வெளியிட்டும், தபால் முறையை வித்தரித்தும் உள் நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார். பொருத்தமான நிருவாக ஒழுங்குகளை மேற்கொண்டார். இவரது செயற்பாடுகள் அடுத்து வந்த அவரது மகன் வலீதின் காலத்தை வளப்படுத்தின.

***வலீத் பின் அப்துல் மலிக்***

- அப்துல் மலிக் தனக்குப் பின்னால் வந்த மகன் வலீதுக்கு எதிரிகள் இல்லாத ஓர் ஆட்சியை விட்டுச் சென்றார். இதனால் உள்நாட்டில் அமைதி நிலவியது. அமைதியின்

மூலம் கிடைக்கப் பெற்ற வருமானத்தை சமூக நலப்பணிகளில் ஈடுபடுத்தினார். தேவையான இடங்களில் பாடசாலைகள், மருத்துவ மனைகள், அநாதை நிலையங்கள், நோயாளர் விடுதிகள், பொதுக் கிணறுகள், பாதைகள், பாலங்கள் , கால்வாய்கள், மஸ்ஜிதுகள் அமைக்கப்பட்டன. மஸ்ஜிதுந் நபவி வித்தரிக்கப்பட்டது. டமஸ்கஸ் ஜாமிஆ மஸ்ஜித் கட்டப்பட்டது. குப்பதுஸ்ஸக்ரா எழுப்பப்பட்டது.

- தொடர்ந்து வெளிநாடுகளிலிருந்து வந்த சவால்களையும் எதிர் கொண்டார். அவரது எதிர் நடவடிக்கைகளிலிருந்து வந்த சவால்களையும் எதிர்கொண்டார். அவரது எதிர் நடவடிக்கைகள் ஆட்சியை விஸ்தரித்தன. சிந்து மன்னன் அறபுகளின் கப்பல்களைச் கொள்ளையடித்து பயணிகளைச் சிறைப்படுத்தி அவர்களை முடியுமானால் விடுவிக்குமாறு சவால்விட்டான். முஹம்மத் பின் காஸிம் என்ற இளைஞனின் தலைமையிலான படை, கைதிகளை விடுவித்ததோடு அவர்களின் பிரதேசத்தையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. அவ்வாறே வட ஆபிரிக்க பிரதேசங்களில் மூஸா பின் நுஸைர் தலைமையில் நல்லாட்சி நடந்து கொண்டிருந்தது. அங்கு காணப்பட்ட அமைதி, கொந்தளிப்புடன் வாழ்ந்த ஸ்பானிய மக்களை முஸ்லிம்களின் பக்கம் திருப்பின. தமது நாட்டைக் கையேற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தாரிக் பின் ஸியாத் என்ற இளைஞனின் தலைமையில் சென்ற வட ஆபிரிக்க முஸ்லிம் படை ஸ்பானியாவை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. இதே போன்று தளபதி குதைபா மத்தியாசிய பிரதேசங்களை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். கஸ்பியன் கடல் பிரதேசங்களை தளபதி மஸ்லமா வெற்றி கொண்டார். கலீபா வலீதின் மதீனாவின் கவர்னராக பணியாற்றிய உமர் இப்னு அப்துல் அஸீஸ், அவர்கள் தாம் விரும்பிய நல்லாட்சியை அங்கு நடத்திக் காட்டினார். எனவே கலீபா வலீதின் காலம் உமையா ஆட்சியின் சிறப்பான காலமாக அமைந்தது. தளபதிகளும் ஆளுனர்களும் உரிய பங்களிப்பை வழங்கினர்.

### *உமர் இப்னு அப்துல் அஸீஸ் (99-101):*

- வலீதுக்குப் பின்னர் பதவியேற்ற சுலைமானின் காலம் முக்கியமானதாக இல்லாவிட்டாலும் அவர் யாரும் அறியாத நிலையில் உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களை அடுத்த வாரிசாக நியமித்தமை முக்கியமானதொரு விடயமாகும். அது உமையா ஆட்சியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.

- ஆறு தசாப்தங்கள் நீடித்த முடியாட்சியை தகர்த்து மீண்டும் கிலாபத்தை உருவாக்கும் முயற்சியில் அவர் இறங்கினார். ஆட்சித் தலைவர் என்ற வகையில் கலீபாவும் அவரின் கோத்திரமும் பெற்றுவந்த ஆட்சி மூலமான சலுகைகளை இல்லாமலாக்கினார். கலீபா வலீதின் காலத்தில் மதீனாவின் கவர்னராக சிறிது காலம் பணியாற்றிய போது செய்த நன்முயற்சிகளை கிலாபத் பிரதேசம் முழுவதும் அமுல் நடத்த ஆரம்பித்தார்.

- உமையாக்களுக்கென விசேடமாக வழங்கப்பட்ட எல்லாச் சலுகைகளையும் தடை செய்தார். பைத்துல் மாலைத் தூய்மைப்படுத்தும் வகையில் அதற்குக் கிடைத்த

முறைகேடான வருமானங்களையும் வரிகளையும் நிறுத்தியதோடு பொருத்தமற்ற செலவினங்களையும் தடுத்து நிறுத்தினார். தாமும் குறைந்த அளவிலேயே வாழ்க்கைப் படியைப் பெற்று எளிமையாக வாழ்ந்தார்.

- வெளிநாட்டுப் படையெடுப்புகளில் கவனம் செலுத்தாது கிலாபத்தில் சமய சூழலை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். மஸ்ஜித்களில் கல்விக் கூடங்களை அமைத்தார். பாடசாலைகளையும் உருவாக்கினார். மாணவர்களுக்கு சகாய நிதியும், ஆசிரியர்களுக்கு வாழ்க்கைப் படியும் வழங்கினார். தகுதிவாய்ந்த பயிற்றுவிக்கப்பட்ட பிரசாரகர்களை மாகாணங்களுக்கு அனுப்பி வைத்தார். ஹதீஸ்களைத் தொகுக்குமாறு கேட்டுக் கொண்டார். நீதித்துறையை சுதந்திரமாக இயங்க வைத்தார். பகிரங்கமாக நிகழும் பாவங்களுக்கு தடை விதித்தார். இவ்வாறான சீர் திருத்தங்கள் உமையா வெறியர்களைக் கிலி கொள்ளச் செய்தன. இதனால் திட்டமிட்டு, நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டார். இன்னும் சில ஆண்டுகள் அவர் பதிவியிலிருந்தால் மீண்டும் கிலாபத்தை தொடர்ந்திருக்கலாம்.
- அவரைத் தொடர்ந்து வந்த கலீபாக்கள், முன்னைய உமையா ஆட்சியாளர்களின் வழிமுறையைப் பின்பற்றியதாலும், தகுதியானவர்களாக இல்லாதிருந்தமையாலும் மவாலிகள், அலவியர்கள் போன்றோரின் எதிர்ப்பு படிப்படியாக வளர்ந்தமையாலும் ஆட்சியை தக்கவைக்க முடியாமற் போய்விட்டது.

**வீழ்ச்சி**

- இரண்டாவது உமரின் நடவடிக்கைகள் உமையாக்களின் தவறுகளை சுட்டிக்காட்டின. நல்ல வழிமுறையொன்றிருக்க தவறான வழிமுறையில் ஆட்சியாளர்கள் நடந்து கொள்வதை மக்கள் அவர் மூலம் கண்டு கொண்டனர். இதனால் பொதுமக்கள் உமையாக்கள் மீது வெறுப்புக் கொள்ளலாயினர். எனவே, உமையாக்களால் பாதிக்கப்பட்ட அலவியர்கள், ஷீயாக்கள், மவாலிகள், திம்மிகள் போன்ற அணியினரும், பாரசீகம் முதலான பிரதேசவாசிகளும் காட்டிய எதிர்ப்புகளில் பொது மக்களும் கலந்து கொண்டனர். குறிப்பாக அஹ்லுபைத்களுக்கே ஆட்சியுரிமை உடையது என்ற கோஷம் மேலெழ ஆரம்பித்தது. அவர்கள் ஒன்றிணைந்து ஆட்சியை வீழ்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

  - வாரிசு ஒழுங்கின்மை
  - கோத்திர உணர்வு
  - ஷீஆ, காரிஜி போன்றோரின் எதிர்ப்பு
  - மவாலிகள், திம்மிக்களின் பலம்
  - பைத்துல் மால் துஷ்பிரயோகம்
  - அப்பாஸியர்களின் எழுச்சி

போன்றன உமையாக்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயின

எனினும், இவர்களின் சில நடவடிக்கைகள் எதிர்த்து வந்த அப்பாஸிகளுக்கு வாய்ப்பாக அமைந்தன. எனவேதான், ஹிட்டி என்ற கீழேத்தேய ஆய்வாளர் உமையாக்கள் காலத்தை அடைகாக்கும் காலம் எனக் குறிப்பிடுகிறார்.

- பின்பு தோன்றிய அறிவியல் மலர்ச்சிக்கு உமையாக்கள் அத்திவாரமிட்டனர்.
- அறபு மொழி, விஞ்ஞான, தத்துவ கருத்துக்களை முன்வைக்கக் கூடிய தகுதியைப் பெற்றுக் கொண்டது.
- கூபா, பஸரா போன்ற அறபுமொழி வழக்கில்லாதிருந்த பிரதேசங்களில் அறபு மொழி கற்பதற்கான வளங்கள் கிடைக்கப் பெற்றன. (இலக்கணம் வகுக்கப்படல், பழைய இலக்கியங்கள் தொகுக்கப்படல்)
- இலக்கண நூல்கள் அகராதிகள் தோன்றின
- பிக்ஹ், ஹதீஸ் கலைகளின் வளர்ச்சிக்கான ஆரம்ப முயற்சிகள் இடம்பெற்றன.
- பல்துறை சார்ந்த அறிஞர்கள் தோன்றினார்கள்.
- கட்டடக்கலை விருத்தியடைந்தது.
- அறிவுத்துறையை வளர்க்கும் நகரங்கள் உருவாகின. (மதீனா, மக்கா, கூபா, பஸறா, காஹிறா, டமஸ்கஸ்)
- தலை நகர் டமஸ்கஸ் அழகியலை வளர்க்கும் நகராக விருத்தியடைந்தது.
- பரந்த பேரரசொன்றை உருவாக்கினர்.
- கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வரும் எதிர்ப்புகளிலிருந்து பாதுகாத்தனர்.
- அரசியல், சமூக, பொருளாதார விருத்திக்கு உதவினர்.

**தேர்ச்சி 6.0 : இஸ்லாத்துக்கு முற்பட்ட காலம் முதல் அப்பாஸியர்களின் வீழ்ச்சி வரையிலான கால கட்டங்களில் அரசியல், சமூக, நாகரிக வளர்ச்சி பற்றி விளக்கிக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5: அப்பாஸியர் எழுச்சி, அவர்களின் சாதனை வீழ்ச்சி, சிற்றரசுகள் என்பவற்றை எடுத்துக்காட்டுவார்.**

**பாடவேளை : 20**

**கற்றல் பேறுகள்:**

- சிற்றரசுகளின் தோற்றம், வளர்ச்சி, பங்களிப்பு பற்றி எடுத்துக் கூறுவார்.
- சிலுவை யுத்தங்களுக்கான பின்னணி பற்றியும் அதனால் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றியும் எடுத்துக் கூறுவார்.
- அப்பாஸியர்களின் வீழ்ச்சிக்கான காரணங்களை உமையாக்களின் வீழ்ச்சிக்கான காரணங்களுடன் ஒப்பு நோக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- இஸ்லாத்துக்கு முற்பட்ட காலத்தில் குறைஷிகளில் பனூ உமையா, பனூ ஹாஷிம் ஆகிய இரு கோத்திரங்களும் தலைமைத்துவத்திற்கு உரித்துடையவர்களாக கணிக்கப்பட்டனர். குலபாஉர் ராஷிதீன்களுக்குப் பின்னர், உமையாக்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். எனினும் ஹாஷிமிகளை ஆதரிக்கக் கூடியவர்களும் இருந்தனர். ஹாஷிமிகளில் அலவியர், அப்பாஸியர் என்போர் பிரபலமானவர்களாக கணிக்கப்பட்டனர். முதலாவது கலீபா தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர், ஹாஷிமிகளில் சிலர் அலி (ரழி) அவர்களை அமீராகத் தெரிவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும் அது சாத்தியமாகவில்லை. உமையாக்கள் தமது ஆட்சிக்காலத்தில் ஹாஷிமிகள் தலையெடுக்க முடியாதவாறு காத்து வந்தனர். என்றாலும் உமையா ஆட்சியில் விடப்பட்ட தவறுகள், அலவியரோடு ஏற்பட்ட மோதல்கள் மக்கள் கவனத்தை ஹாஷிமிகள் பக்கம் திருப்பின.

- உமையா ஆட்சியை நிறுவிய முஆவியா (ரழி) அவர்கள், இராக்கில் ஹஸன் (ரழி) அவர்களை தலைவராகத் தெரிவு செய்த மக்களை எதிர்ப்பதற்காக கூபாவுக்குச் சென்றார். அப்போது அவர்களால் பைஅத் செய்யப்பட்ட ஹஸன் இப்னு அலி (ரழி) பதவியை விட்டுக் கொடுத்தார். இதனால் அமைதி நிலவினாலும் உமையா கலீபாக்கள், அலி (ரழி) அவர்களையும் அவர்களின் சந்ததியையும் குத்பாவில் சபிக்கும் புதிய மரபொன்றை ஏற்படுத்தினர். இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்படாத இந்த வழிமுறை, கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் பதவியேற்கும் வரை (ஹி. 99) நடந்து வந்தது. அவர் அதனை தடை செய்து அல்குர்ஆனில் (16:90) வசனத்தை ஓதி மக்களுக்கு அறிவுறுத்தினார். இன்றும் அது பின்தொடரப்பட்டு வருகின்றது.

- உமையா ஆட்சியில் அலி (ரழி) ஆதரவாளர்கள் (அலவியர்) தொடர்ந்தும் இன்னல்களுக்கு உட்பட்டு வந்தனர். அவர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உமையா ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் இரகசியமாகவும், பகிரங்கமாகவும் ஈடுபட்டனர். வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு காலப்பிரிவில் வெவ்வேறு நபர்களால் இம்முயற்சி ஆரம்பிக்கப்பட்டும், ஆட்சியாளரால் கட்டுபடுத்தப்பட்டும் வந்துள்ளன. ஹுஸைன் (ரழி) கர்பலாவில் கொலை செய்யப்பட்டார். அவரின் சந்ததியில் ஸைத், யஹ்யா என்போர் உமையாக்களால் கொலை செய்யப்பட்டனர்.

- உமையா ஆட்சியில் அறபித்துவம் மேலோங்கிக் காணப்பட்டது. அறபியல்லாத முஸ்லீம்(மவாலி)களும் பிறரும் இரண்டாந்தரப் பிரசைகளாகக் கணிக்கப்பட்டனர். பல சிரமங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களுள் பாரசீகர்கள் குறிப்பிடத்தக்கோர் ஆவர். மொழி, இனம், பிரதேசம் சார்ந்த வேறுபாடுகள் காண்பிக்கப்பட்டமையால் அவர்கள் உமையாக்களுக்கெதிராக செயல்பட்டனர். அலவியர்களுக்கு தமது ஆதரவை வழங்கினர். ஆதலால் அபூமுஸ்லிம் போன்ற பாரசீகர்கள் உமையாக்களுக்கெதிராக செயல்படுபவர்களோடு இணைந்து கொண்டனர். பாரசீக அரசு தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் பரம்பரை ஆட்சியை அங்கீகரித்ததால் நபி (ஸல்) அவர்களின் வாரிசான அலி (ரழி) அவர்கள் ஆள்வதுக்கு உரிமையுடையவர் என்பதை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்டனர்.

- மக்களாதரவு இருந்த போதிலும் அலவியர்களுக்குத் தலைமை தாங்கியோர், அப்பாஸியர் போன்று அரசியல் ரீதியாக வழிநடத்தும் தகுதியுடையவர்களாக இருக்கவில்லை. ஆதலால் அப்பாஸியர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆட்சியுரிமை அஹ்லுல்பைத்துகளுக்கே உரியது என்பதை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தனர். இதற்காக பிரசாரகர்களை பயிற்றுவித்து எல்லாப் பிரதேசங்களுக்கும் அனுப்பிவைத்தனர். துறவிகள் போன்றும் வியாபாரிகள் போன்றும் நடித்துப் பிரசாரத்தை நுணுக்கமாக வழிநடத்தினர். சுமார் முப்பது வருடப் பிரசாரம் ஹி. 132 இல் வெற்றியைக் கொடுத்தது.

- முதலில் இரகசியமாக செயல்பட்டவர்கள், இறுதியாக பகிரங்கப் பிரசாரத்தில் இறங்கினர். ஹி. 125 இல் உமையாக்களிடையே ஏற்பட்ட முரண்பாடு 2 ஆம் வலீத் கொலை செய்யப்படவும் 2 ஆம் மர்வான் பதவியேற்கவும் செய்தது. அறபிகள், குறாஸானில் கோத்திர வன்முறைகளில் இறங்கினர். இதேவேளை அபூமுஸ்லிம், குறாஸானுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் 129 முதல் 132 வரை குறாஸானை வன்முறை மூலம் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்.

- இதேவேளை குறாஸான் அறபிகளைக் கொல்லுமாறு இப்றாஹீம் பின் அலி அனுப்பிய கடிதம் கலீபா மர்வானின் கையில் சிக்கியது. இப்றாஹீம் சிறையிடப்பட்டார். அவர் சிறையில் மரணமடைந்த போது சகோதரன் அபுல் அப்பாஸ் தலைமையை ஏற்று புரட்சியை நடத்தி முதலாவது அப்பாஸிய கலீபாவாக கூபாவில் (ஹி. 132இல்) பதவியேற்றார். எனினும் கூபா அலவியரின் செல்வாக்குக்குட்பட்ட நகராக இருந்தமையால் அம்பாரை தலை நகராக்கிக் கொண்டார்.

- பின்னர் கலீபா மன்ஸூர் (136) பக்தாதைத் தலைநகராக்கினார். ஏற்கனவே அலவியரான முஹம்மத் பின் அலியை கலீபாவாக பைஅத் செய்திருக்க இவர்களிருவரும் வெற்றி கிடைத்ததும் பைஅத்தை முறித்தக் கொண்டனர். எனவே, அப்பாஸிய ஆட்சியில் அலவியரின் புரட்சிகள் தொடராகத் தோன்றிக் கொண்டிருந்தன. பிற்காலத்தில் அலவிய சிற்றரசுகளும் தோன்றி மறைந்தன.

- இவ்வாறு இடம் பெற்ற அப்பாஸிகளின் எழுச்சி, வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. முஸ்லிம் அரசின் தலைநகர் மதீனாவிலிருந்து டமஸ்கஸுக்கு மாறி, இப்போது பக்தாதுக்கு மாறுகிறது. இதுவரை பைசாந்திய செல்வாக்குக்குட்பட்டிருந்த தலைமைப் பீடம் சாசனிய செல்வாக்குக்கு உட்படும் பீடமாக மாற்றமடைந்தது. பக்தாதைத் தலைநகராகக் கொண்ட அப்பாஸிய ஆட்சியும், அப்பாஸிகளின்

கொடுமையிலிருந்து தப்பிச்சென்ற அப்துர்றஹ்மானினால் கோர்டோவாவைத் தலைநகராகக் கொண்ட உமையா ஆட்சியுமாக, முஸ்லிம் அரசு இரண்டாக பிளவுபட்டது. சமூக, அரசியல் துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. சிற்றரசுகள் தோன்றி முஸ்லிம் அரசின் தனித்துவத்தை சிதைத்தன. கலை இலக்கியத்துறைகளில் பங்காற்றும் வாய்ப்பு முஸ்லிம்களுக்குக் கிடைத்தது. அப்பாஸியர், உமையா ஆட்சியை வீழ்த்தி மற்றொரு வம்ச ஆட்சியை உருவாக்கினர். சில வேறுபாடுகளுடன் உமையாக்களைப் போன்ற ஓர் ஆட்சியையே அவர்களும் நடத்தி வந்தார்கள். உமையாக்களுக்கெதிராக பிரசாரம் அஹ்லுல் பைத்களுக்கே ஆட்சியுரிமையுடையது என்ற கோஷத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

- கர்பலாவில் ஹுஸைன் (ரழி) அவர்கள் ஷஹீதான போது அலவியரில் ஸைனுல் ஆப்தீன் என்ற சிறுவன் மாத்திரமே எஞ்சியிருந்தார். அவர் இறக்க அலி (ரழி) அவர்களின் மற்றுமொரு மனைவி (ஹனீப் கோத்திரம்) மூலம் கிடைத்த அபூ ஹாஸிம் என்பவருக்கு வாரிசுரிமை இடம் மாறியது. (பாத்திமா (ரழி) மூலமாக வரும்) பெண் வாரிசுரிமை செல்லுபடியாகாது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

- அப்பாஸிகள், பதவியேற்றதால் கிலாபத்தின் தலைநகர் மேற்கிலிருந்து கிழக்கிற்கு மாறியது. பைசாந்திய கலாசாரத்துக்கு மாறாக சாசானிய (பாரசீக) கலாசாரம் செல்வாக்குப் பெற்றது. ஆட்சியை உருவாக்குவதில் பாரசீகர் பங்கேற்றமையால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய கடமைப்பாடும், தேவையும் இருந்தன. இதனால் அறபித்துவம் மேலோங்கிய உமையா ஆட்சிக்குப் பதிலாக சாசனியம் மேலெழுந்தது. அறபுப்படைக்குப் போட்டியாக பாரசீகப்படையொன்று உருவாக்கப்பட்டது. பின்னர் பாரசீகப்படையை அடக்க துருக்கிப் படையை அழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் அறபு, பார்ஸி, துருக்கிய இனங்களுக்கிடையில் இணக்கத்துக்குப் பதிலாக பிணக்குகள் வளர ஆரம்பித்தன.

- கலீபா அபுல் அப்பாஸ் (ஹி. 132) முதலாவது கலீபாவாகப் பதவியேற்றாலும் அவர் குறுகிய காலத்தில் மரணித்ததால் அவரால் எதனையும் சாதிக்க முடியவில்லை. எதிரிகளை இல்லாமலாக்கும் பணி மட்டுமே நடந்தது. அடுத்து வந்த கலீபா மன்ஸுர் (136-154) அப்பாஸிய ஆட்சியின் உண்மையான நிர்மாணியாவார். அவர் பதவியேற்றதும் அப்பாஸியர் ஆட்சிக்கு வருவதற்கு துணையாக நின்ற பலரை 'ஆட்சியின் எதிரிகளாக மாறிவிடுவார்களோ' என்ற பயத்தில், தந்திரமாக கொலை செய்தார். அவர்களுள் அபூ முஸ்லிம், குறாஸானி, முஹம்மத் பின் அலி என்போர் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

- இதற்கு முன் எவரும் செய்யாத ஒன்றாக, பொருத்தமான இடத்தில் திட்டமிட்ட அமைப்பில் தலை நகரொன்றை மன்ஸுர் உருவாக்கினார். அது மதீனத்துஸ் ஸலாம் எனப்பட்டது. இதற்கு முன்னர் தோன்றிய நகர்கள் பழைய நகரங்களை புனரமைப்பதாகவே இருந்தன. ஆனால் கலீபா மன்ஸுர் பக்தாதை ஒரு தலைநகருக்கு இருக்க வேண்டிய எல்லாப் பண்புகளையும் உள்ளடக்கி காலித் பர்மகியின் மேற்பார்வையில் ஐந்து ஆண்டுகள் செலவிட்டு வடிவமைத்ததால் மதீனத்துஸ் ஸலாம் எனவும் வழங்கினர். 130 மீற்றர் உயர்ந்த குப்பதுல் கழ்ராவும் கஸ்ருல் குல்த் என்ற மாளிகையும் அங்கு அமைந்தன.

- அவர், உமையா ஆட்சியில் இடம் பெறாத நிருவாக முறைமையை உருவாக்கினார். வஸீர், ஹாஜிப் என்ற பெயருடைய உயர் நிருவாகிகளை அமர்த்தினார். பிரதம

அமைச்சர் அதிகாரமிக்கவராக செயற்பட்டார். இதற்கு காரணமாக யஹ்யா பர்மகி, நிஸாமுல் முல்க் என்போரைக் குறிப்பிடலாம்.

- கலீபா மன்ஸூர் இராச்சிய விஸ்தரிப்பை விட, அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் விவசாய விருத்திக்கான வழிவகைகளை மேற்கொண்டார். நீர்ப்பாசன வழிகளை அதிகரித்தார். பாதைகளை அமைத்தார். மத்ரஸாக்களையும், மருத்துவமனைகளையும் உருவாக்கினார். அறிவியல் துறை வளர்ச்சிக்கான வழிவகைகளையும் மேற்கொண்டார். பிற்காலத்தில் அறிவியல் துறையில் ஏற்பட்ட விருத்திக்கு அத்திவாரமிட்டார். சமயப்பற்றும், அமானிதங்களைக் காக்கும் பணியும் அவரிடம் காணப்பட்டன.

- எனவே தான், தனது வாரிசுக்கு ‘குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட வேலையை முடிக்க வேண்டும். சில காரியங்களை ஒத்திவைக்கக் கூடாது. அறிவும் அனுபவமுமுள்ளவர்களை அணுகி ஆலோசனை பெற வேண்டும். பொதுமக்களையும் இராணுவத்தையும் திருப்திப்படுத்த வேண்டும். திறைசேரியைக் காலியாக்கிவிடாது கண்காணிக்க வேண்டும். தண்டனை வழங்குவதில் நீதமாக நடந்து கொள்ள வேண்டும். குறாஸானியரை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும்.’ என உபதேசித்தார்.

- கலீபா மன்ஸூருக்குப் பின் மகன் மஹ்தி(158-169) ஆட்சிப்பீடமேறினார். மனைவி கைஸூரான் அரச நிருவாகத்தில் செல்வாக்குச் செலுத்தினார். அடுத்து கலீபாக்களாக வந்த ஹாதி, ஹாரூன் ஆகியோரின் தாயாரான இவர் பிள்ளைகளின் ஆட்சிக்காலத்திலும் தனது செல்வாக்கைப் பயன்படுத்தினார். முகன்னா, ஸிந்தீக்கள் முதலானோரின் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. பைசாந்தியர், அதிகாரப் பரவலுக்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஹாதி அலவியருக்கும் சாசனியருக்கும் எதிராக செயல்பட்டனர். வட ஆபிரிக்காவில் இத்ரீஸிய ஆட்சி ஆரம்பித்தது.

- இவரை அடுத்து வந்த ஹாரூன் (786-809) அப்பாஸியக் கலீபாக்களில் முக்கியமான ஒருவராவார். அவரது இயல்பான ஆற்றல்கள், தாய் கைஸூரான், பர்மகி குடும்பம் ஆகிய மூன்றும் இவரின் ஆட்சியை உயர்த்திவைத்தன. அப்பாஸியக் கலீபாக்கள் முன்னைய அரச பரம்பரையின் மரபுகளைப் பேணாமல் அறபிகளில் மட்டுமன்றி ஏனைய இனப் பெண்களையும் மணமுடித்தமையால் அறபு-பாரசீகப் போராட்டம் அரச மாளிகைக்குள்ளேயே இடம்பெற ஆரம்பித்தது. ஹாரூனின் பாரசீக மனைவி மர்ஜால் (மாமூனின் தாய்) அறபு மனைவி சுபைதா (அமீனின் தாய்) இரு இனங்களுக்குமிடையில் ஒரு வகையில் இணக்கத்தையும் மறுவகையில் பிணக்கையும் ஏற்படுத்தும் நிலையைத் தோற்றுவித்தனர்.

- ஹாரூனின் ஆட்சியில் உயர் பதவிகளை ஏற்றிருந்த பர்மகீகள் அவரது ஆட்சியின் இழப்பிற்கு காரணமாக அமைந்தனர். அவர்கள் கையாண்ட இராச தந்திரம், பக்தாதில் நிறுவிய கட்டடங்கள், அறிஞர்களை வரவழைத்து உபசரித்தல், எல்லைப் பாதுகாப்பிலும் மக்கள் நலனிலும் அக்கறை கொண்ட கலீபாவின் கவனம், ஓய்வு நேரத்தை அறிவியல், கலை விருத்தியில் பயன்படுத்தல் போன்றன அவரது ஆட்சியை சிறப்பித்தன.

- அவரது காலத்தில் யஹ்யா பின் அப்துல்லா, தைலம் பிரதேசத்தின் ஆட்சியாளராக பிரகடனப்படுத்தினார். அது தடுக்கப்பட்டது. சிரிய அறபிகள் அப்பாஸியரை ஆதரிக்க

மறுத்தனர். வட ஆபிரிக்காவில் பேபர்கள் கிளர்ச்சி செய்த போது, அக்லபிகளின் கோரிக்கையை ஏற்று ஆண்டுதோரும் 40,000 தீனார் செலுத்தும் நிபந்தனையோடு தனியாட்சி நடத்த அனுமதிக்கப்பட்டது.

- மகன் மாமூனை விட அமீன் இளையவராக இருந்தும் கூட அறபுப் பெண்ணுக்குப் பிறந்தவர் என்பதற்காக அமீனை முதல் வாரிசாக நியமித்தார். இதனால் பல சிக்கல்கள் தோன்றின. அமீன் பதவியேற்ற போது மாமூனுக்குரிய (க.ஃபாவில் தெரிவுக்கு விடப்பட்டிருந்த) வாரிசுரிமைப் பத்திரத்தைக் கிழித்தெறிந்தார். இதனால் அமீன்-மாமூன் போராட்டம் அறபு-பார்ஸி போராட்டமாக மாறியது.

- ஹாரூன், பைசாந்திய படையெடுப்புகளிலிருந்து கிலாபத்தைப் பாதுகாத்து வந்தார். அதற்காக ரக்கா நகரில் குடியிருந்தார்.

- உமையா ஆட்சி மூலம் ஊருடுவிய அறபுத்துவம் நலிவடைந்தது
- பாரசிக, துருக்கிய இனத்தவரும் ஆட்சியில் பங்கேற்றனர். மவாலிகள் திருப்தியடைந்தனர்.
- மேற்காசியாவிலிருந்த தலைமை பீடம் கிழக்காசியாவுக்கு நகர்ந்தது.
- திட்டமிட்ட அடிப்படையிலும் அழகியல் அம்சங்களுடனும் தலைநகர்களும், புறநகர்களும் அமைக்கப்பட்டன. பக்தாத் எல்லாத் துறைகளிலும் பிரபலமானது.
- உமையாக்கள், பாரசீகர், அலவியர் எழுச்சி பெறுவது தடுக்கப்பட்டது.
- புதிய நிருவாக அமைப்பொன்று உருவானது அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு அதிகாரங்கங்கள் வழங்கப்பட்டன. அமீருல் உமரா சுல்தான் எனப்பட்டோர் அதிகாரத்தைக் கையேற்றனர்.
- சமூக நலப்பணிகளோடு அறிவியல், அழகியல் துறைகளில் பங்களிப்புகள் வழங்கப்பட்டன.
- வெளிநாடுகளுடனான உறவுகள் ஏற்பட்டன.
- வணிக, விவசாய, கைத்தொழில் துறைகள் விருத்தியடைந்தன
- சிலுவைப் போர்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

**சிற்றரசுகள்**

- குலபாஉர் ராஷிதூன்களின் காலத்திலோ, உமையாக்களின் காலத்திலோ சிற்றரசுகள் தோன்றவில்லை. ஆனால் அப்பாஸியராட்சியில் சிற்றரசுகள் தோன்றுதற்கான வாய்ப்புக்கள் அதன் ஆரம்ப கட்டத்திலேயே திறந்து விடப்பட்டன. ஏற்கனவே இருந்துவந்த இனவாதம், கொள்கை வாதம், பிரதேச வாதம் போன்றன தலைதூக்கியமையாலும், ஆட்சியில் இஸ்லாமிய ஒழுங்குகள் பின்பற்றப்படாமையாலும், அறபிய, பாரசீக, துருக்கிய அதிகாரங்கள் மேலெழுந்ததாலும் ஆட்சி பிளவுபட ஆரம்பித்தது. இதனைத் தவிர்க்கும் ஓர் உத்தியாக சிற்றரசுகள் நடத்தப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது எனலாம்.

- அப்பாஸிய ஆட்சியில் இரு நிலைகளில் சிற்றரசுகள் தோன்றியுள்ளன. கொள்கை வேறுபட்ட ஷீஆக்கள் சில பிரதேசங்களில் கிளர்ச்சி செய்த போது கலீபா ஹாரூனின் ஆட்சிக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பர்மகிய அதிகாரிகள், கிளர்ச்சியாளர்கள் பேரரசுக்குத் திறை செலுத்தி தனியரசு நடத்தும் ஒரு மரபை உருவாக்கினர். இது பிற்காலத்தில் சிற்றரசுகளாக பரிணாமம் பெற்றது. அடுத்து, ஆளுனர்களாக அல்லது தளபதிகளாக அமர்த்தப்பட்டோர் திறையோ, சன்மானமோ வழங்கி குறிப்பிட்ட

பிரதேசத்தை தமது பரம்பரையினர் ஆள்வதற்கான அனுமதியைப் பெற்றனர். கலீபாக்கள் பலவீனப்பட்டபோது சுயாட்சி நடத்த ஆரம்பித்தனர். உதாரணத்துக்காக சில சிற்றரசுகளின் பட்டியலைத் தருகிறோம்.

| சிற்றரசு | பிரதேசம் | தாபகர் | காலம் |
|---|---|---|---|
| அக்லபி | மொரக்கோ (டியுனேசியா) | இப்றாஹீம் பின அக்லப் | 184 - 296 |
| ஸியாதி | யெமன் | முஹம்மத் பின் இப்றாஹீம் ஸியாத் | 203 - 402 |
| தாஹிரி | குராஸான் | தாஹிர் பின் ஹுஸைன் | 205 - 225 |
| ஜ.்.பரிய்யா | ஸன்ஆ | ஜ.்.பர் பின் சுலைமான் | 247 - 387 |
| ஹம்தானி | மவ்ஸில் | அப்துல்லா பின் ஹம்தான் | 289 - 389 |
| ஸப்பாரி | சீஸ்தான் | ய.்.கூப் பின் லைஸ் ஸப்பார் | 261 - 389 |
| தூலூனி | எகிப்து | அஹ்மத் பின் தூலூன் | 254 - 292 |
| அக்ஷீதி | எகிப்து | அக்ஷீத் பின் தூலூன் | 325 - 358 |
| கஸ்னவி | ஆப்கான் | முஹம்மத் கஸ்னவி | 351 - 552 |

- மற்றொரு வகையிலும் சிற்றரசுகள் தோன்றின. உமையா ஆட்சியில் அறபுப் படை மட்டுமே இருந்தது. அப்பாஸியர், பாரசீகரின் துணையோடு ஆட்சிக்கு வந்ததால் பாரசீக படையொன்றும் உருவாக்கப்பட்டது. கலீபா மு.்.தஸிம் துருக்கிய படைப்பிரிவொன்றை ஏற்படுத்தினார். அறபியரைக் கட்டுப்படுத்த பாரசீகரும், பாரசீகரரை கட்டுப்படுத்த துருக்கியரும் அமர்த்தப்பட்டனர்.

- பிற்காலத்தில் கலீபாக்கள் பலவீனப்பட்டபோது அமைச்சர்கள், தளபதிகள், ஆளுனர்கள் போன்றோரின் அதிகாரம் வலுப் பெற்றது. அப்போது அவர்களை அடக்குவதற்காக வேறிடங்களிலிருந்து தளபதிகள், அழைக்கப்பட்டனர். அழைக்கப்பட்ட தளபதிகள் கிளர்ச்சியை அடக்கிய பின்னர் தாமே அதிகாரத்தைப் பிடித்துக் கொண்டனர். கலீபா குறிப்பிட்டளவு மானியத்துடன் பொம்மையாக இருக்க, வந்தவர்கள் முழு அதிகாரத்தையும் பயன்படுத்தினர். இவ்வாறு அதிகாரம் பெற்றவர்களே புவைஹித்களும், சல்ஜுக்கியர்களும் ஆவர்.

**புவைஹித்கள் (ஹி.334 - 447)**

கஸ்பியன் கடலின் தென்மேற்குப் பகுதியில் தைலம் எனும் பிரதேசம் உண்டு. அது முன்னர் பாரசீகப் பேரரசின் ஒரு மாகாணமாக இருந்தது. உமர் (ரழி) அவர்களின் காலத்தில் அது கிலாபத்தில் இணைந்தது. அங்கு வாழ்ந்தோர் முதலில் திம்மிகளாக இருந்தனர். பின்னர் முஸ்லிம்களாக மாறினர்.

- தைலமில் வாழ்ந்த அபூசுஜாஅ புவையா என்பவரின் சந்ததியினரே புவையர் அல்லது புவைஹித் எனப்பட்டனர். இவரின் புதல்வர்களான அஹ்மத், ஹஸன், அலி என்போர் ஷிராஸை தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். கலீபா முஸ்தகபீ (ஹி. 333 -334) துருக்கிய படையினரின் அட்டகாசத்தை அடக்குவதற்காக ஹி 334 இல் அஹ்மத் புவைஹியை பக்தாதுக்கு அழைத்தார். அவர் வந்து துருக்கியரை அடக்கியமையால் கலீபா அவருக்கு ‘‘முஇஸ்ஸுத்தவ்லா’’ என்ற பட்டத்தை வழங்கினர். அவரது சகோதரர்கள் ‘‘இமாமுத்தவ்லா’’ (அலி) ‘‘றுக்னுத் தவ்லா’’ (ஹஸன்) எனும் பட்டங்களைப் பெற்றனர்.

- அஹ்மத் ''அமீருல் உமரா'' எனும் பெயரில் ஆட்சி நடத்தினார். கலீபாவின் பெயரோடு தனது பெயரையும் குத்பாக்களின் இணைத்துக் கொண்டார். தினமும் கலீபாவுக்கு 5000 திர்ஹம்களை வழங்கி அதிகாரத்தைத் தன் வயப்படுத்திக் கொண்டார். பின்னர், தனது பதவி போய்விடுமென்று கருதிய கலீபா, அவரை வெளியேற்ற முயற்சித்தார். தைலமிகள் இருவர் கலீபாவை சிறைப்படுத்தி பதவி நீக்கம் செய்தனர். அடுத்த கலீபாவாகப் பதவியேற்ற முதீஉவின் காலத்தில் துருக்கியர் அடக்கப்பட்டு மெசபடோமியா இராக் முதலிய பிரதேசங்கள் யாவும் புவைஹித்களின் கட்டுப்பாட்டில் வந்தன.

- முஇஸ்ஸுத் தவ்லா இறக்க அவர் மகன் பக்தியார் ''இஸ்ஸுத் தவ்லா'' எனும் பெயரில் அமீருல் உமராவானார். அவர், ஏற்கனவே, இழந்த பிரதேசங்களை மீட்டெடுத்தார். கலீபாவின் பெயரோடு தனது பெயரையும் சேர்த்து நாணயங்களை வெளியிட்டார். கலீபா, அவருக்கு ''ஷாஹ் இன் ஷாஹ்'' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கினார்.

- இவரையடுத்து மகன் ஸம்ஷுத் தவ்லா பதவியேற்றர். அவர் மூன்றாண்டில் பதவி நீங்க, ஷரபுத் தவ்லாவும் அவர் மரணிக்க பஹாவுத் தவ்லாவும் பதவியிலிருந்தனர். எனினும் இரண்டாமவர் ஓராண்டிலேயே பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

- கலீபா அல் காதிர், பக்தியும், நற்குணமும் கொண்டவர். கல்விமானாவும் திகழ்ந்தார். மு.்.தஸிலாக்களுக்குக் கெதிராகவும் செயல்பட்டார். இவரது காலத்தில் கிலாபத்தின் சில பிரதேசங்களை பாத்திமிகள் கைப்பற்றினர். கஸ்னவியர், சாமானியரை வெற்றி கொண்டார். அடுத்த கலீபாவான அல் காஇமின் காலத்தில் மாலிகுர் ரஹீம் என்ற புவைஹித், அமீருல் உமராவானார். அவர் செல்ஜுக்கியரரின் தாபகரான துக்ரில் பேக்கினால் துரத்தப்பட்டார்.

- அப்பாஸிய ஆட்சியில் புவைஹித்கள் 110 வருடங்கள் அதிகாரம் செலுத்தினர். அவர்களது குடும்ப ஐக்கியமும், இராணுவ பலமும், நிருவாகத் திறனும் அவர்களை ஸ்திரப்படுத்தி வந்தன, ''முஇஸ்ஸுத் தவ்லா'' முதல் மாலிகுர் ரஹீம் வரை பதினொரு பேர் அமீருல் உமராவாக பணியாற்றியுள்ளனர்.

- அவர்களது காலத்தில் நாட்டில் சமாதானம் ஏற்பட்டது. அதிகமான கட்டடங்கள் எழுப்பப்பட்டன. பக்தாதிலும், ஷீராஸிலும் மருத்துவ மனைகள் நிர்மாணிக்கப்பட்டன. பக்தாதில் வானியல் அவதான நிலையமொன்று உருவாக்கப்பட்டது. ஷீராஸ், ரைஉ, இஸ்பஹான் நகர்களில் நூலகங்கள் அமைக்கப்பட்டன. மஸ்ஊதி (கவிஞர்) முதலானோர் இஸ்ஸுத்தவ்லாவின் காலத்தில் வாழ்ந்தனர். அல்மாரிஸ்தானில் அபூதி என்ற பிரபல மருத்துவ நிலையம் உருவாக்கப்பட்டது.

- இந்தியா, மத்திய தரைக்கடல், செங்கடல் என்ற மும்முனைத் தொடர்புடன் நீண்ட வணிகப் பாதைகளுக்கூடாக வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. எனினும், பிற்பகுதியில் நிதிப்பற்றாக்குறை, ஷீஆ ஸுன்னி கொள்கை வேறுபாடுகளால் ஏற்பட்ட கிளர்ச்சிகள், இராணுவ பலவீனம் போன்ற காரணங்களால் புவைஹித்கள் வீழ்ச்சியடைந்தனர்.

**செல்ஜுக்கிய சிற்றரசு.**

- அப்பாஸிய கலீபா காசிமின் காலத்தில் (432 - 467) புவைஹித்களின் அதிகாரம் ஆட்டங்கண்டது. செல்ஜுக்கிய அதிகாரம் ஆரம்பமானது. செல்ஜுக் என்ற துருக்கிய அமீரின் வழித்தோன்றல்களே செல் ஜுக்கியர் எனப்பட்டனர். இந்தியாவின் வட எல்லையை அண்டிய பிரதேசங்களில் கஸ்னவிய ஆட்சி இடம் பெற்றது. அங்கு மஹ்மூத் கஸ்னவி ஆட்சி நடத்திய போது டிரான்ஸ் ஒக்ஸியானா பிரதேசத்தில் துருக்கியர் குடியேரினர். அவர்களை மஹ்மூத் கஸ்னவி, திறை செலுத்தி வாழ்வதற்கு அனுமதித்தார். எனினும் அவர்களில் ஒரு தொகுதியினரை செல்ஜுக் தலைமையில் குராஸானில் குடியமர்த்தினார்.

- சுல்தான் மஹ்மூதுக்குப் பின்னர் பதவியேற்ற சுல்தான் மஸ்ஊத் அவர்களின் காலத்தில் அவர்கள் தனியாட்சி நடத்த முயற்சித்தார். சுல்தான் மஸ்ஊத் ஹி. 429 இல் அவர்களை வெளியேற்றுவதற்காக ஷீரத் எனுமிடத்தில் போராடினார். போரில் மஸ்ஊத் தோல்வியுற செல்ஜுக்கியர் குராஸானின் ஆட்சியாளராயினர். கஸ்னவியர் செல்ஜுக்கியருடன் சமரச உடன்படிக்கை செய்து கொண்டனர்.

- அப்பாஸிய ஆட்சியில் துருக்கிய தளபதி அர்ஸலான் பஸாஸுரி, அமீருல் உமரா மாலிக் ரஹீமை ஹி. 446இல் பதவி நீக்கி, தன்னை அமீருல் உமராவாகப் பிரகடனப்படுத்தினார். இவ்வேளை கலீபா காஇம் செல்ஜுக்கிய துருக்கியரான துக்ரில் பேக்கின் உதவியை நாடினார். அவர் பஸாஸுரியைத் துரத்தி கலீபாவை விடுவித்தார்.

- துக்ரில் பேக், பாரசீக கிளர்ச்சியை அடக்குவதற்காக பக்தாதிலிருந்து வெளியேறிய போது, மவ்ஸிலில் இருந்தே பஸாஸுரி மீண்டு வந்து கலிபா காஇமைத் துரத்திவிட்டு அல் முஸ்தன்ஸிரை கலீபாவாக்கினார். பாத்திமிய கலீபாவின் பெயரால் குத்பா ஓத வேண்டுமெனவும் பணித்தார். மீண்டு வந்த துக்ரில்பேக் பஸாஸுரியைக் கொன்று காஇமை மீண்டும் கலீபாவாக்கினார். கலீபா, துக்ரில் பேக்கிற்கு சுல்தான் பட்டத்தை வழங்கியதோடு அவரது செல்ஜீக்கிய ஆட்சியையும் அங்கீகரித்தார்.

- மத்தியாசியாவில் சில மாகாணங்களையும் கையளித்தார். செல்ஜுக்கின் பேரனான துக்ரில் பேக், கல்வியார்வமும், சமயபக்தியும் எளிய வாழ்வும் அறப்பணியும் மிக்கவகராக காணப்பட்டார். ஜுர்ஜான், ஈராக், குவாரிஸ்மி முதலிய பிரதேசங்களை வெற்றி கொண்டார். வெற்றி கொண்ட பிரதேசங்களில் மஸ்ஜித்துகளையும், கல்வி நிலையங்களையும் ஏற்படுத்தினார்.

- ஹி. 452 இல் அவர்களுக்கெதிராகப் போராடிய துக்ரிக் பேக், அவர்களால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை மீட்டுக் கொடுத்தார். 455 இல் துக்ரில் இறக்க அவரது சகோதரர்களின் மகன் அலிப் அர்ஸலான் சுல்தானானார். இவர் 464இல் மலஸ்கார்ட் போரில் உரோமரை வெற்றி கொண்டார். உரோம மன்னன், கைதியாகப் பிடிபட, நட்டஈடும், திறையும் செலுத்த ஒப்புக் கொண்டார். இவ்வேளை உரோமர் அவனை பதவியிலிருந்து விலக்கிவிட்டனர்.

- அலப் அர்ஸலான், தனது மருமகன் சுலைமானிடம் சின்னாசிய பிரதேசங்களை ஒப்படைத்தார். இவர்களின் சந்ததிகளே ரூம் செல்ஜுக்கியர் எனப்பட்டனர். தாத்தாரிகளின் படையெடுப்புவரை இப்பிரதேசங்கள் அவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. ஹி. 465 இல் டிரான்ஸ் ஒக்ஸியானாவில் நிகழ்ந்த போரில் யூசுப் அல்

குவாரிஸ்மி என்பவரால் சுல்தான் குத்திக் கொல்லப்பட்டார். 467 இல் கலீபா காஇமும் மரணமடைந்தார்.

- இவரது காலத்தில் முதலமைச்சராக இருந்த நிஸாமுல் முல்க், அடுத்த சுல்தானாக மாலிக் ஷாவை பதவியமர்த்தினார். 19 வயதினரான முக்ததி, கலீபாவானார். இளைஞரக இருந்தாலும் திறமையும், வல்லமையும் மிக்கவராக காணப்பட்டார். தலை நகரில் இடம்பெற்ற கேளிக்கைகளை தடை செய்தார். சூதாட்டக்காரர்களை வெளியேற்றினர். இவரது காலத்தில் கலீபா மாமூனின் காலம் போல் கல்வி கலாசார முயற்சிகள் இடம்பெற்றன. அந்தாக்கியா, புகாரா, குவாரிஸ்மி, சமர்க்கந்து, கஸ்கர் பிரதேசங்களை வெற்றி கொண்டார். இவரது ஆட்சியின் எல்லையும் விரிவடைந்தது.

- முதலமைச்சர் நிஸாமுல் முல்க், ஆட்சி சிறக்கப் பங்காற்றினார். நிருவாக, இராணுவ பொறுப்புக்கள் அவரிடமே கொடுக்கப்பட்டிருந்தன. இவர், 'இஸ்லாமிய வரலாற்றை அணி செய்தவர்' (ஹிட்டி) ஹாரூன் கால யஹ்யா பர்மகிக்குப் பின் திறமை வாய்ந்த அமைச்சர் (அமீர் அலி) எனவும் பாராட்டப்படுகிறார். 'ஸியாஸத் நாமா' என்ற அரசியல் நூலை எழுதிய இவ்வமைச்சரின் காலத்தில் ஒழுங்கும் அமைதியும் காணப்பட்டன.

- வீதிகளும், கால்வாய்களும், விடுதிகளும், கல்லூரிகளும், மருத்துவ நிலையங்களும் அமைக்கப்பட்டன. பக்தாதிலும், பஸராவிலும் நிஸமிய்யாக் கல்விப் பீடங்கள் நிறுவப்பட்டன. கல்விமான்களும் கவிஞர்களும் ஆதரிக்கப்பட்டனர். இமாம் கஸ்ஸாலி, ஸஅதி போன்றோர் கௌரவிக்கப்பட்டனர்.

- அமைச்சர் போலவே ஸுல்தானும் மாறுவேடம் பூண்டு மக்களின் குறைகளை அவதானித்தார். வர்த்தகமும் கைத்தொழிலும் விருத்தியடைந்தன. முறையற்ற வரிகள் நீக்கப்பட்டன. அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. கலை, இலக்கிய முயற்சிகள் எழுச்சி பெற்றன. கல்விமான்கள் அரசவையை அலங்கரித்தனர். கவிஞரும் கணித மேதையுமான உமர் கையாம், *ஜலாலி* என்ற நாளட்டவணையைத் தயாரித்தார்.

- இதே காலத்தில் ஹஸன் பின் ஸலாஹ் என்ற நிஸாமுல் முல்கின் பள்ளித் தோழன் பொறாமை காரணமாகவோ என்னவோ ஹஷீஷி என்ற அமைப்பை உருவாக்கி, பாத்திமிய கலீபாவின் இஸ்மாயீலிய்யா, சிந்தனையின் பிரதானியாக செயற்பட்டார். சுல்தான் மாலிக்ஷாவையும் அமைச்சர் நிஸாமுல் முல்கையும் ஒழிப்பதற்காக திட்டமிட்டான். அவனது திட்டம் செயற்படுவதற்கு முன்பே சுல்தான் மரணமானார். நிஸாமுல் முல்க் 485 இல் கொலை செய்யப்பட்டார். ஹஷீஷிகளை தாத்தாரியர் முறியடித்தனர்.

செல்ஜுக்கியரின் வீழ்ச்சிக்கான காரணங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- சுல்தான் மாலிக்ஷாவுக்குப் பின்னர், அவரது புதல்வர்களிடையே ஏற்பட்ட போட்டியும், போராட்டங்களும்
- ஹஸன் இப்னு ஸலாஹ்வின் ஹஷீஷி இயக்கம் எழுச்சி பெற்றமை
- கலீபாவின் அதிகாரம் மீண்டும் வலுப்பெற ஆரம்பித்தமை
- சிலுவை படையெடுப்பும் அதன் தாக்கங்களும்
- செல்ஜுக்கிய சுல்தான் குஸ் துருக்கிய புரட்சியாளர்களால் தோற்கடிக்கப்பட்டு

சிறை பிடிக்கப்பட்டமை (பின்னர் விடுவிக்கப்பட்டாலும் மன அழுத்தத்தால் மரணமடைந்தார்)

**பாத்திமிய சிற்றரசு**

- அப்பாஸிய ஆட்சிக்காலத்தில் எகிப்தை தலைநகராகக் கொண்ட பல சிற்றரசுகள் தோன்றின. அவற்றில் ஷீஆக்களின் பாத்திமிய சிற்றரசும், ஸுன்னிகளின் ஐயூபிய சிற்றரசும் குறிப்பிடத்தக்கவை.

- அபூ முஹம்மத் உபைதுல்லாஹ் என்பவரால் ஹி. 269 இல் பாத்திமிய சிற்றரசு தாபிக்கப்பட்டது. அவர் தம்மைத்தாமே இமாம் எனவும், மஹ்தி எனவும் அழைத்துக் கொண்டார். இத்ரீஸ் என்பவர் காலிப் முதலான கோத்திரங்களின் துணையோடு ஹி. 280 இல் கைரவான் நகரை வெற்றி கொண்டார். பெஸ் நகரில் ஆரம்பத்தில் இவ்வரசு ஹி. 295 இல் வன்மை பெற்றதும் உபைதுல்லா தன்னை கலீபா எனப் பிரகடனப்படுத்தினார். சமகாலத்தில் பக்தாதிலும் கோர்டோவாவிலும் மற்றிரு கலீபாக்கள் காணப்பட்டனர். எகிப்து கைப்பற்றப்படும் வரை, கைரவானுக்கருகில் நிர்மாணிக்கப்பட்ட மஹ்தியா தலைநகராக இருந்தது. ஹி. 301 - 307 ஆகிய ஆண்டுகளில் எகிப்தைக் கைப்பற்ற முயற்சித்தாலும் வெற்றி கொள்ள முடியவில்லை.

- ஹி. 332 இல் உபைதுல்லாஹ் மஹ்தி இறக்க, முஹம்மத் காசிம் அம் ரில்லாஹ் கலீபாவானார். அப்போது எகிப்திலிருந்து துரத்தப்பட்ட கவர்னர் அஹ்மத், எகிப்தைக் கைப்பற்றுமாறு கலீபா காஇமைத் தூண்டினார். சிரியவை ஆண்ட அக்ஷிதுகள் வீழ்ச்சியடைந்த போது காஇமின் புதல்வர் முஇஸ்ஸு எகிப்தை வெற்றி கொள்ளுமாறு கலீபாவின் அடிமையான ஜவ்ஹரை அனுப்பிவைத்தார். அவ்வேளை எகிப்து பஞ்சத்தால் வாடியது. அமீர்களும் பொதுமக்களும் பாத்திமிகளுடன் இணைய விரும்பி ஜவ்ஹரை வரவேற்றனர்.

- ஹி. 358 இல் எகிப்தை வென்ற ஜவ்ஹர், மஸ்ஜித் அம்ரிப்னு ஆஸில் குத்பா ஓதினார். பாத்திமிகளின் வெள்ளைக் கொடியை பறக்கவிட்டார். பக்தாத் நகர அமைப்பில் காஹிரா (கெய்ரோ)வை புனரமைத்தார். ஜாமிஉல் அஸ்ஹரை ஆரம்பித்தார். சிரியாவையும் வெற்றி கொண்டார். ஹி. 362 இல் கலீபா, மஹ்தியாவிலிருந்து அலக்சாந்திரியாவுக்கு வந்தார். சத்திய பிரசாரத்துக்கன்றி ஆட்சியை விரிவுபடுத்தும் நோக்கில் வரவில்லை என்றார். மக்கள் அவரை ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

  அடுத்த ஆண்டில் ஷீஆக்களின் மற்றொரு பிரிவினரான கராமிதாக்கள், ஹஸன் பின் அஹ்மத் தலைமையில் எகிப்து நோக்கி வந்தனர். வந்தமைக்கான காரணத்தை பாதிமிகள் வினவிய போது பதிலளிக்காமல் எதிர்த்து நின்றனர். அவ்வேளை கராமிதாக்களுக்கு துணையாக வந்த அறபுப் படைக்கு ஒரு லட்சம் தீனாரை வழங்கி திருப்பி அனுப்பினர்.

  ‘‘முஇஸ் லிதீனில்லாஹ்’’ எகிப்தில் நுழைந்த போது அவரைப் பயமுறுத்திய செய்யித் குடும்பத்தினரை அச்சுறுத்தியும் அன்பளிப்புக்கள் வழங்கியும் தம் பக்கம் சேர்த்துக் கொண்டனர். அஸீஸ்லி தீனிய்யாஹ்வின் காலத்தில் (365-386) பாத்திமிய ஆட்சி மக்கா வரை விரிவடைந்தது. ஜவ்ஹரிடம் இராணுவமும் யஃகூப்பின் யூசுபிடம் நிருவாகமும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. கலீபா சுகபோக வாழ்வில் ஈடுபட்டிருந்தார்.

- அடுத்து வந்த ஹாக்கிம் (586-441) புத்தி சுவாதீனமற்றவர் போல் நடந்து கொண்டார். பகலில் கடைகளை மூடிவிடுமாறும் இரவில் திறந்திருக்குமாறும் கோரினார். பெண்கள வீட்டுக்கு வெளியே வருவதை தடைசெய்தார். பொது குளிகூடங்களுக்குச் செல்லும் பெண்களை சிறையிலிட்டார். நாய்களைக் கொல்லுமாறும், கழுதைகள் காஹிராவுக்குள் நுழைவதைத் தடுக்குமாறும் கட்டளையிட்டார். ஸஹாபாக்கள் மீது வசைபாடினார். அல்லாஹ் தன்னுடன் பேசுவதாகக் கூறி தினமும் ஜபல் முகத்திஸிக்குச் சென்று வந்தார். குத்பாவில் தனது பெயர் குறிப்பிடப்படும் போது ஸுஜூது செய்யுமாறு பணித்தார். நபி (ஸல்) அவர்களின் உடலை மதீனாவிலிருந்து எடுத்துவர அபுல் புதூஹ் என்பவரை அனுப்பிவைத்தார். ஹஜருல் அஸ்வதை பெயர்த்துவர எடுத்த முயற்சி அந்தக் கல்லை பிளக்கச் செய்தது. மக்களது எதிர்ப்புக்கு மத்தியில் ஹி 411 இல் அவர் காணாமற் போனார்.

- அடுத்து வந்த ஸாஹிர், வீண் பொழுது போக்குகளில் ஈடுபட ஆரம்பித்ததால் அமைச்சர்களின் அதிகாரம் ஓங்கியது. பஞ்சமும், தொற்று நோய்களும் பரவ ஆரம்பித்தன. அடுத்து வந்த முஸ்தன்ஸிர் வயதில் குறைந்தவராக இருந்தமையால் அவரது தாயார் நிருவாகத்தை கையிலெடுத்தார். இதனால் ஹலப், இப்ரீக்கிய பிரதேசங்கள் அவர்களின் ஆட்சியிலிருந்து பிரிந்தன. ஹி 443 இல் பஞ்சமும், நோயும் மீண்டும் தலைதூக்கின. பைசாந்தியரின் மோதல்களும் இடம்பெற்றன. பக்தாதில் துக்ரில் பேக் ஸல்ஜுக்கி, ஸுன்னிகளின் ஆட்சியை உறுதிப்படுத்தினார்.

  கலீபா அஸீஸ் பில்லாஹ், துருக்கியரையும், தைலமியரையும் இணைத்துக் கொண்டதால் பேபர்களுக்கும் பாத்திமிகளுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டன. கவர்னர்களும், அமைச்சர்களும் துருக்கியர்களாக இருந்தனர். கலீபா முஸ்தன்ஸித் ஹபஷிகளை இணைத்துக் கொண்டதால் துருக்கிய ஹபஷிய மோதல்கள் ஆரம்பித்தன. கலீபா துருக்கியருக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் திண்டாடிய போது, நாஸிரு தவ்லா ஹபஷி, கலீபாவை பதவியிறக்க முயற்சித்தார். வேறு வழியின்றி கலீபா சிரியாவின் பத்ர் ஜமாலியை (ஹி 467) அழைத்தார். அவர் துருக்கிய தலைவர்களைக் கொன்றும், உடமைகளைப் பறித்தும் நிலைமையைக் கட்டுப்படுத்தினார். அலக்சாந்திரியாவிலும் குழப்பங்கள் ஏற்பட்டன.

- பத்ர் ஜமாலியின் காலத்தில் அமைதி நிலவியது. வியாபாரம் விருத்தியடைந்தது. நைல் நதியின் அணை புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. அடுத்த வந்த மு∴தஸ் (492) காலத்தில் சிலுவை வீரர்கள் ஜெரூஸலத்தைக் கைப்பற்றினர். எனினும் எகிப்துக்கு வராமல் தடுக்கப்பட்டனர். 490 முதல் 690 வரையான காலப்பகுதியில் எட்டு சிலுவைப் போர்கள் நிகழ்ந்துள்ளன. எனினும் அப்பாஸிய கலீபாக்கள் போன்றே பாத்திமிய கலீபாக்களும் வாளாவிருந்தனர். இவ்வேளை பாத்திமியரால் பதவி நீக்கப்பட்ட ஷாவிர், எகிப்திலிருந்து வெளியேறி நூருத்தீன் ஸங்கியுடன் இணைந்தான். அவனோடு ஷேர்க்கோ, ஸலாஹுத்தீன் என்போர் எகிப்துக்குப் படையுடன் வந்தனர். சிலுவை வீரர்கள் ஸலாஹுத்தீனைத் துரத்த ஷாவிரின் உதவியை நாடினர். ஷாவிர் கொல செய்யப்பட ஸலாஹுத்தீன் எகிப்தின் அதிகாரத்தை (567) கையேற்றார்.

- எகிப்து கைப்பற்றப்பட்ட போது, கலீபாக்களின் மாளிகையில் நிறைய ஆபரணங்களும்

வைரக்கற்களும், பொற்குவியல்களும், ரொக்கப் பணமும் காணப்பட்டன. ஸலாஹுத்தீன் அவற்றை அரச உடமையாக்கினார்.

**ஐயூபிய சிற்றரசு**

- அப்பாஸியர் வீழ்ச்சிக்காலத்தில் தோன்றிய சிற்றரசுகளில் ஐயூபிய சிற்றரசு பிரபலமான ஒன்றாகும். அவ்வரசு தோற்றம் பெற்ற காலத்தில் பக்தாதை தலை நகராகக் கொண்ட அப்பாஸிய கலீபா, கோர்டோவாவைத் தலைநகராகக் கொண்ட உமையா கலீபா, காஹிரா (கெய்ரோ) வைத் தலைநகராகக் கொண்ட பாத்திமிய்ய கலீபா என முஸ்லிம் உலகில் மூன்று கலீபாக்கள் காணப்பட்டனர். முதலிருவரும் ஸுன்னிகளாக இருக்க மூன்றாமவர் ஷீஆவாக இருந்தார்.

  கலீபா மு.ஃ.தஸிமின் காலத்தில் அப்பாஸிய ஆட்சியில் நுழைந்த துருக்கிய படை வன்மை பெற்றபோது, அவர்களை அடக்குவதற்காக புவைஹித்களை அழைத்தார். (324) அவர்கள் ஷீஆக்களாக இருந்ததால் சிறிது காலத்தில் (பஸாஸீரி என்பான்) பக்தாதில் பாத்திமிகளுக்காக குத்பா ஓதினான். எனவே, அவர்களை அடக்குவதற்காக கலீபா காஇம் செல்ஜுக்கியரை அழைத்தார். (447) அவர்கள் புவைஹித்களை வெளியேற்றினர்.

- இக்காலத்தில் எகிப்திய பாத்திமிய ஆட்சி வன்மையுடன் காணப்பட்டது. அதானில் ‘ஹய்ய அலல் கைருல்அமல்’ என்று ஒலியெழுப்பிய அபுல்காஸிம் என்பாரின் நா துண்டிக்கப்படுமளவு அவர்களின் வெறி மேலோங்கியிருந்தது. அப்பாஸிய ஆட்சி போன்றே பாத்திமிய ஆட்சியிலும் அமைச்சரின் அதிகாரம் மேலோங்கியிருந்தது. ஸாவிர் அஸ்ஸஅரி என்பானின் உச்ச அதிகாரத்தை விரும்பாத பிரமுகர்கள் அவனை வெளியேற்றினர். அவன், நூருத்தீன் ஸங்கி என்ற டமஸ்கஸ் சுல்தானிடம் தஞ்சமடைந்தான்.

- நூருத்தீன், அஸதுத்தீன், ஷேர்கோ என்பாரின் தலைமையில் எகிப்துக்குப் படை அனுப்பினார். இவ்வேளை ஸாவிர், நூருத்தீனுக்குக் கொடுத்த வாக்கை மீறி, சிலுவைப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிராங்கியரின் உதவியுடன் ஷேர்க்கோவை வெளியேற்ற முயற்சித்தான். ஷேர்க்கோ அவர்களைத் தோற்கடித்து அலக்சாந்திரியாவையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். பிராங்கியர் வெளியேற நூர்தீன் எகிப்தை தனதாக்கினார்.

- ஸலாஹுத்தீன், நஜ்முதீன் ஐயூபியின் மகனாவார். அவர் இராக்கில் தக்ரீத் கோட்டையில் பிறந்து டமஸ்கஸில் வளர்ந்தார். சிறிய தந்தை ஷேர்கோவுடன் எகிப்துக்கு வந்தார். அங்கு இடம்பெற்ற போர்களில் தனது திறமைகளை வெளிக் காட்டினார். துணிவுமிக்க அவர், மனந்தளராத தன்மையும், மனிதாபிமானமும் கொண்டவர். கிறிஸ்தவ தளபதிகளுக்கு சிறிதும் சளைத்தவரல்ல. (ஏ.ஐ. கிராண்ட்) நூருத்தீன் ஸங்கியின் எகிப்திய பிரதிநிதியாக இருந்த ஸலாஹுத்தீன் படிப்படியாக தனது படைப்பலத்தை அதிகரித்துக் கொண்டார். அஸ்வான், நூபியா, யமன் வரையிலான பிரதேசங்களை தனதாக்கிக் கொண்டார். இவ்வேளை, நூருத்தீன் ஸங்கி சிலுவைப் போருக்காக அழைத்த போது அவரால் பங்கேற்க முடியவில்லை. தந்தை நஜ்முத்தீன், நூருத்தீனுடன் நன்றியுணர்வோடு நடந்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். விஷத்துக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார். தந்தையின் வேண்டுகோளுக்கிணங்க அவர் அனுப்பிய கடிதம் நூருத்தீனைத்

திருப்திப்படுத்தியது.

- ஸலாஹுத்தீன் எலப்போ சென்றிருந்த போது பிராங்கியர் எகிப்தை முற்றுகை இட்டனர். மக்கள் ஸலாஹுத்தீனை அழைத்தனர். (569) அழைப்பை ஏற்ற ஸலாஹுத்தீன் அங்கு வந்து பிராங்கியரைத் துரத்தியதோடு, தனது ஆட்சிப் பிரதேசத்தையும் விரிவுபடுத்திக் கொண்டார். 571 இல் நூருத்தீன் இறக்க, அவர் மகன் மாலிக் ஸாலிஹ் இளவயதில் பதவியேற்றார். எனினும் அரச பிரமுகர்களால் ஏமாற்றப்பட்டார். அவ்வேளை, ஸலாஹுத்தீன் அவர்களை எச்சரித்தார். மாலிக் ஸாபிக் சில பிரதேசங்களை சலாஹுத்தீனுக்கு வழங்கினார். இவ்வேளை ஷீயாக்களின் தாஇஉல் துஆத்தின் தூண்டுதலால் அப்ஸில் என்பார் ஸலாஹுத்தீனை கொலை செய்ய முயன்றார் எனினும் அவர் தப்பித்துக் கொண்டார்.

- அவ்வேளை ஸலாஹுத்தீன் எகிப்தின் சுல்தான் ஆனார். எகிப்தில் பாதிமிய்யரால் ஏற்பட்ட தீமைகளைக் களைவதில் அதிக கவனம் செலுத்தினார். அமைச்சராக நியமிக்கப்பட்ட பஹாஉத்தீன் அவருக்குப் பக்க பலமாக அமைந்தார். பாத்திமிய்யரால் விதிக்கப்பட்ட அநியாயமான தீர்வைகளை நீக்கினார். நூற்றுக் கணக்கான பாடசாலைகளை உருவாக்கினார். அறிஞர்களை ஆதரித்தார். அவர்களுக்கு உபகார நிதி வழங்கினார். தனது மக்களான அஸீஸ், அப்ஸால் ஆகியோருடன் அலக்ஸான்திரியா சென்று இமாம் ஸலபியிடம் ஹதீஸ் பாடம் கற்றார். சட்டமேதை ஈஸா அர்ஸலான் போரில் (574) சிலுவை வீரர்களால் கைதுசெய்யப்பட்ட போது ஆறு லட்சம் தீனார் வழங்கி அவரை விடுவித்தார். ஜாமிஉல் அஸ்ஹரில் போதிக்கப்பட்ட இஸ்மாயிலிய்யாக் கோட்பாட்டுக்குப் பதிலாக ஸுன்னத் வல் ஜமாத் கோட்பாட்டைப் போதிக்கும் கலாபீடமாக மாற்றினார். நெடுஞ்சாலைகளை உருவாக்கியதோடு விவசாய, வியாபார விருத்தியிலும் அதிகம் கவனம் செலுத்தினார்.

- சிலுவை வீரர்கள் எகிப்தில் வணிகக் குழுவொன்றை கொள்ளையிட்ட போது அவற்றைத் திருப்பித் தருமாறும் கைதிகளை விடுவிக்குமாறும் சுல்தான் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்காத போது ஹி.583 இல் ஹித்தீனில் சிலுவை வீரர்களோடு போராடி வெற்றி கண்டார். இரக்கம் மிகுந்த சலாஹுத்தீன் முதலாவது சிலுவைப் போரில் அவர்கள் நடந்தது போன்று மிலேச்சத் தனத்தைக் கைவிட்டு தான் அவ்வாறு நடக்கப் போவதில்லை என்று கூறி குறைவான இழப்பீடுகளோடு தனது செல்வங்களையும் கொண்டு செல்ல அனுமதித்தார். இழப்பீடு செய்ய முடியாதவர்களுக்கு தனது சொந்தப் பணத்தைக் கொடுத்து விடுவிக்க வழி செய்தார்.

- யுத்தகாலத்தில் ரம்லாவில் நோயுற்றிருந்த இங்கிலாந்து மன்னம் ரிச்சட்டை மாறுவேடத்தில் சென்று சந்தித்தார். மருத்துவ, மனிதாபிமான உதவிகளைச் செய்தார். தனது சிப்பாய் ஒருவர் குழந்தை ஒன்றை எடுத்து வந்தபோது தாயின் அலரலை கருத்திற் கொண்டு விற்கப்பட்ட அக்குழந்தையை வாங்கி தாயிடம் ஒப்படைத்தார்.

- அவரது பின்வரும் கூற்று மறக்க முடியாததொன்றாகும். ‘‘நாங்கள் எங்களது ஆயுத பலத்தாலோ ஆட்பலத்தாலோ வெற்றி பெறவில்லை. மாறாக எம்மிடம் குர்ஆன் ஓதக்கூடிய , இரவில் நின்று வணங்கக் கூடிய உத்தமர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மூலமாகத்தான் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று சிலுவைப் போர் முடிவில் எடுத்துக் கூறினார்.

- இஸ்லாமிய வரலாற்றில் சுல்தான் ஸலாஹுத்தீன் ஒரு முக்கிய புள்ளி ஆவார்.

பாத்திமியர் தனியாக கிலாபத் ஆட்சி நடத்திய காலகட்டத்தில் பாத்திமிய ஆட்சியை ஒழித்தமையும், சிலுவை வீரர்கள் ஜெரூசலத்தை வெற்றி கொண்டு அதன் சுற்றுவட்டாரத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒரு கால கட்டத்தில் அவர்களுடன் போராடி வெற்றி கண்டு சமரச உடன்படிக்கை மூலம் பைத்துல் மக்தஸை பாதுகாத்தமையும் அவர் முஸ்லிம் உலகிற்குச் செய்த பெரும்பணியாகும்.

- அவருக்குப் பின்னர், அவரது மூன்று பிள்ளைகளுக்கும் மந்திரி பிரதானிகளின் ஆலோசனைப்படி பகிர்ந்து கொடுத்தமையாலும், அவரைப் போன்ற எளிமையும், வலிமையும், பக்தியுமுடைய சுல்தான்கள் ஐயூபிகளில் தோன்றாமையாலும் ஐயூபிய ஆட்சி பலவீனப்பட்டது. பதினான்கு ஆண்டுகள் போரிட்டு மூன்றாவது சிலுவைப் போரின் பின்னர் நோயுற்ற சுல்தான் ஸலாஹுத்தீன் 589 இல் டமஸ்கஸில் வபாத்தானார். பற்றற்ற வாழ்வு நடத்திய அவர், ஒரு சில தீனார்களை மட்டுமே விட்டுச் சென்றார்.

- அவருக்குப் பின்னர் பதவியேற்றவர்களிடம் ஒருமைப்பாடு காணப்படவில்லை. தகுதியான ஆட்சியாளர்கள் கிடைக்காமற் போயினர். சுல்தான் மாலிக் ஸாலிஹ் 647 இல் சிலுவை அணியினருடன் போராடி மடிந்தார். அவர் மனைவி ஷஜ்ருத்துர் வாரிசு இல்லாத நிலையில் காழியாக இருந்த இஸ்ஸுத்தீன் பின் அப்துஸ்ஸலாம் என்பவரை மந்திரியாக அமர்த்தி ஆட்சியைத் தொடர்ந்தார். பின்னர் அவர் இஸ்ஸுத்தீனை மணந்தார். அவர் மம்லூக்கியராக இருந்தமையால் ஆட்சி மம்லூக்கியருக்கானது. ஹி. 648 இல் ஐயூபிய சிற்றரசு மம்லூக்கிய சிற்றரசாக மாற்றுருவம் பெற்றது.

**சிலுவைப் போர்கள்**

- முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையில் இரு நூற்றாண்டு காலம் (ஹி 490-690) நிகழ்ந்த போர்கள் சிலுவைப் போர் எனப்படுகின்றன. மேற்கிலிருந்து வந்த போராளிகள் தமது மேலங்கியில் சிலுவைச் சின்னங்களை அணிந்து வந்ததால் இப்பெயர் வழக்கில் வந்தது. இதனைக் கிறிஸ்தவர்கள் புனிதப் போர் என்பர்.

- கலீபா உமர் (ரழி) அவர்களின் காலத்தில் (ஹி. 17) ஜெரூஸலம் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தது. எனினும், முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் அங்கு சுதந்திரமாக வாழ அனுமதிக்கப்பட்டனர். பிரதேசம் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் இருந்த போதிலும் கிறிஸ்தவர்களுக்கு உரிமைகளும் வழங்கப்பட்டிருந்தன. அவர்கள் வழிபாட்டுத்தலங்களை அமைக்கவும் யாத்திரை செய்வதற்கும் அனுதிக்கப்பட்டதோடு அவர்கள் தங்குவதற்கான விடுதிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன.

- இவ்வாறான சாதகமான சூழ்நிலையிலும் இப்போர்கள் நிழ்வதற்கு சமயம் மட்டுமன்றி அரசியலும் பொருளாதாரமும் காரணமாக அமைந்தன.

- முஸ்லிம் ஆசியாவில் கிறிஸ்தவ ஐரோப்பாவின் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றமை
- மேற்கில் இடம்பெற்று வந்த பாப்பரச - பேரரச ஆதிக்கப் போட்டி
- கிரேக்க திருச்சபைக்கும் உரோமத் திருச் சபைக்குமிடையிலான பகைமை

- மத்திய தரைக்கடலின் கிழக்குப் பிரதேசம் கிரேக்க திருச்சபையின் கட்டுப்பட்டிலிருந்தமையும் உரோமத் திருச்சபை கிரேக்க திருச் சபையில் மேலாதிக்கம் செலுத்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தமையும்.

- முஸ்லிம்களுடனான போரின் மூலம் பாப்பரசர் கிறிஸ்தவர்களை தம்பக்கம் திருப்ப முயற்சித்தமை

- போர் மூலம் நிறுவப்பட்ட குறுநில மன்னராட்சி நிலவி வந்த காலமாக இருந்தமையால் அதனைக் காப்பதற்கு போர்ப்பயிற்சி பெற்றிருந்தோர் போரூக்கத்தால் தூண்டப்பட்டவர்களாகவும் போரை எதிர்பார்த்தவர்களாகவும் இருந்தமை. எனவே அவர்களை திசை திருப்ப சிலுவை யுத்தத்தின் பால் திசை திருப்பியமை

- சல்ஜுக்கிய சுல்தான் அல்ப் அர்ஸலான் ஹி. 464 இல் (1071) வானேரிக்கரையில் மலஸ்கார்ட்டில் நடத்திய போரில் உரோமர் தோல்வியடைந்து அதிபர் ரோமனால் கைது செய்யப்பட்டமை

- ஜெரூஸலம் வரும் வெளிநாட்டு யாத்திரிகர்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை.

- பீற்றர் சந்நியாசி அதனை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி ஆத்திரமூட்டும் வகையில் உடையணிந்து கிறிஸ்தவத்துக்கு ஆபத்து என ஐரோப்பிய, நாடுகளில் அதிரடிப் பிரச்சாரம் செய்தமை

- இஸ்லாம், ஐரோப்பியா ஆபிரிக்க நாடுகளில் பரவி வந்தமை

- மத்திய தரைக்கடல் தீவுகள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் இருந்தமையும் அவர்களின் கிழக்கு வர்த்தகத்துக்கு இவை தடையாக இருந்தமையும்

- முஸ்லிம்களின் தோற்றத்தில் வந்த கொள்ளையர்கள், யாத்திரீகர்களைக் கொள்ளையிட்ட போது அவர்கள் முஸ்லிம்கள் என்றும் முஸ்லிம் அரசினால் தூண்டிவிடப்பட்டவர்கள் என்றும் குற்றம் சுமத்தப்பட்டமை

- உரோம மன்னன் அல்கிஷ் செல்ஜுக்கிய எழுச்சியைத் தடுக்க பாப்பரசர் உம்றானிடம் உதவி கேட்டு வந்தமை

- இந்நிலையில் ஜெரூசலத்தை மீட்பதற்காக 300 மத குருமார் பிரான்ஸில் ஒன்று கூடினர். இது *கிலமண்ட மாநாடு கி.பி 1095* எனப்பட்டது. ஜெரூசலத்தையும் கிழக்குக் கிறிஸ்தவரையும் மீட்பதற்கு ஆள் திரட்டப்பட்டது. இதில் ஈடுபடுவோரின் பாவங்கள் மன்னிக்கப்படுமெனவும் அவர்களுக்கு சுவர்க்கம் கிடைக்குமெனவும் ஆர்வமூட்டப்பட்டது. அதேவேளை 1096 இல் டுவர்ஸ் எனும் நகரில் மற்றொரு மகாநாடும் கூட்டப்பட்டது. பீட்டர் சந்நியாசி உணர்ச்சிவசப்பட ஆற்றிய உரை மக்களை தட்டியெழுப்பியது.

- இதனால் மேற்கிலிருந்து புறப்பட்ட பன்னாட்டுப் படைகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி நகரங்களில் நுழைந்து கொள்ளையிட்டனர். அப்பாஸியக் கலீபா பொம்மையாக இயங்கிய அக்காலத்தில் சுல்தான் எனப்பட்ட குறுநில மன்னர்களே ஆட்சி நடத்தினர்.

அவர்களிடையே காணப்பட்ட போட்டியும் பொறாமையும் ஒன்றுபட்டுச் செயற்படத் தடையாக அமைந்தன. எனவே ஒன்றுக்குப் பின் மற்றொன்றாக நகரங்கள் கைப்பற்றப்பட்டன. கொள்ளையிடப்பட்டன. ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் கூட ஈவிரக்கமின்றி கொலைசெய்யப்பட்டனர். எதிர்க்க வந்த சுல்தானின் படைகளும் தோல்வி கண்டன. சுல்தான் நூருத்தீன் ஸங்கி, சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி ஆகிய இருவரும் தோன்றும் வரை இந்நிலை தொடர்ந்தது. இவர்கள் இருவரினதும் தொடரான போராட்டங்கள் மூலம் ஜெரூஸலம் மீட்கப்பட்டது. இரண்டாவது சிலுவைப்போரை நூருத்தீன் சங்கியும், மூன்றாவது சிலுவைப் போரை (583) ஸலாஹுத்தீன் அய்யூபியும் எதிர்கொண்டனர். (588) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபியுடன் சமாதான உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டது. இதன் பின்பும் பல சிலுவைப் போர்கள் இடம்பெற்றாலும் அவை நகரங்களைக் கொள்ளையிடும் நோக்கிலேயே இடம்பெற்றன.

போராசிரியர் ஏ.ஜே. கிரான்ட் சிலுவைப் போர்களின் தாக்கம், விளைவுகளைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

- சிலுவைப் போரியக்கததை நிறுவிய அரசுகள் அழிந்தன.
- தடைப்பட்டடிருந்த முஸ்லிம்களின் முன்னேற்றம் மீண்டும் அதிகரித்தது.
- இஸ்லாமிய ஆக்கிரமிப்புகள் மூலம் ஏற்படவிருந்த அபாயம் தடுக்கப்பட்டது ஐரோப்பிய கிறிஸ்தவத்தின் பலம் குன்றியது.
- நிலப்பிரபுக்கள் வெளியே சென்றதால் முடியாட்சி வலுப்பெற்றது.
- கிழக்கிற்கும் மேற்கிக்கும் இடையிலான தொடர்பு ஏற்பட்டது.
- இஸ்லாமிய பண்பாட்டையும் நாகரிகத்தையும் மேற்குலகம் அறிந்தது.

**வீழ்ச்சி**

- பொதுவாக எந்த ஆட்சியும் வீழ்ச்சியடைவதற்கு ஆட்சியாளரின் தனிப்பபட்ட போக்குகள், அரசியல், சமூக பொருளாதார நிலைகளில் ஏற்படும் சரிவுகள், ஆட்சிக்கு வெளியே இருந்து வரும் ஆக்கிரமிப்புக்கள் காரணமாக அமைகின்றன. உமையா, அப்பாஸிய ஆட்சிகளின் வீழ்ச்சிகளை அவதானிக்கும் போது இத்தகைய காரணிகள் இடம்பெற்றிருப்பதை காணலாம்.

- இரு வம்ச ஆட்சிகளின் வீழ்ச்சிகளுக்கும் பொதுவான, குறிப்பான காரணங்கள் உள்ளன. இரு ஆட்சிகளும் மன்னராட்சி முறையைத் தழுவியே இடம்பெற்றன. மன்னராட்சியில் மன்னரின் ஆளுமை மிக முக்கியமானதாகும். அந்த வகையில் உமையா அப்பாஸிய ஆட்சியாளர்களுள் மிகச் சிலரே ஆளுமையுடையவர்களாக இருந்திருக்கின்றார்கள். உமையா ஆட்சியில் முஆவியா (ரழி) அப்துல் மலிக், வலீத், உமர் இப்னு அப்துல் அஸீஸ் ஆகியோரும் அப்பாஸிய ஆட்சியில் மன்ஸுர், ஹாரூன், மஹ்தி, ம.்.மூன் ஆகியோரும் குறிப்பிடத்தக்கோராவர். ஏனையோரின் ஆளுமையில் பல குறைபாடுகள் காணப்பட்டன.

- பொதுவாக ஆட்சியின் ஆரம்ப கட்டத்தில் வலிமையுள்ளோரும் பின்னர் பலவீனர்களும் கலீபாக்களாகப் பணியாற்றிய நிலையை அவதானிக்கின்றோம். முதலில் வருவோர் சேகரிப்போராகவும் பின்னர் வருவோர் அனுபவிப்போர்களாகவும் காணப்பட்டனர். இது ஆட்சி பற்றிய சரியான அறிவும் தெளிவும் ஆட்சியாளரிடம் காணப்படவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அரசியல் வேறு, சமயம் வேறு என்ற நிலைப்பாடு அனேகமானோரால் ஏற்கப்பட்டிருந்தது. அறிஞர்களை அணுகுதல் அரிதாகவே இடம்பெற்றது. சிலபோது அறிஞர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். சிலர் தண்டிக்கப்பட்டார்கள். இதனால் ஆளுமையுடையவர்களின் சாதனைகளும் காலப்போக்கில் சரிந்து விட்டன.

- ஆளுமை உடையவர்களை உருவாக்குவதிலோ, பயிற்றுவிப்பதிலோ, தெரிவு செய்வதிலோ ஆட்சியாளர்களோ குறிப்பிட்ட வம்சங்களோ கவனம் செலுத்த வில்லை. (புறநடையாக கலீபா மஹ்தி ஹாரூனைப் பயிற்றுவித்தார்) பொது நலனைஅன்றி சுய நலனையே கருத்திற் கொண்டனர்.
  இரண்டு ஆட்சிகளும் வம்ச ஆட்சிகளாக இருந்த போதும் வாரிசுரிமை எவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தத் தவறிவிட்டது. சிலபோது வாரிசுகள் எற்கனவே நியமிக்கப்பட்டிருந்தாலும் கூட அவர்கள் பதவிகள் வகிக்க முடியாமல் தடுக்கப்பட்டனர். இரு ஆடசியிலும் கலீபாக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. உதாரணமாக உமையாக்களின் இரண்டாவது வலீத், இரண்டாவது மர்வான் அப்பாஸியர்களில் அமீன், முதவக்கில் என்போரைக் குறிப்பிடலாம்.

- ஆட்சியாளர்களின் ஆளுமையில் அறிவு, வீரம், தக்வா, சமூக தேசிய நலநோம்பல்,பொது நிதி அல்லது அரசுடமை, அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படாதிருத்தல் போன்றன காணப்பட வேண்டும். இரு வம்ச ஆட்சிகளிலும் இப்பண்புகள் அரிதாகவே காணப்பட்டன. இராணுவ நிர்வாக அறிவும் அனுபவமும் இல்லாத கலீபாக்கள் தளபதிகளிலும் நிர்வாகிகளிலும் தங்கியிருந்தனர். அதனால் அவ்வுயர் அதிகாரிகளின் சுயநலம் ஆட்சியில் இடம்பெற்றதனை அவதானிக்க முடிந்தது. இதற்கு ஆதாரமாக ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப் (வலீத்) யஹ்யா பர்மகீ (கலீபா ஹாரூன்) பஸ்ல் பின் ரபீஆ (கலீபா அமீன்) பஸ்ல் பின் ஸஹ்ல் (கலீபா ம.்.மூன்) போன்றோரைச் சுட்டிக் காட்டலாம். மதீனதுல் பாழிலா அஹ்காமுஸ் சுல்தானிய்யா, சியாசத் நாமா போன்ற அரசியல் துறை சார்ந்த நூல்கள் தோன்றுவதற்கு இவையும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம்.

- ஆட்சியில் ஒரே இனம், ஒரே சமயம், ஒரே மொழி என அமைவது மிக அரிதாகவே இருக்கும். பல்வேறு இன, மத, மொழி குழுமங்கள் கொண்ட மக்களே அதிகமான நாடுகளில் காணப்படுகின்றனர். உமையா அப்பாஸிய ஆட்சிகளிலும் இவ்வாறான நிலை காணப்பட்டது. இந்நிலையில் கலீபாக்கள் அனைவரையும் சமநிலையில் நோக்கும் பண்புடன் காணப்படுவதே ஆட்சியின் மாட்சிக்கு துணையாக இருக்கும். ஆனால் உமையா ஆட்சியில் அறபித்துவம் மேலோங்கியது. அறேபியரல்லாதோரும் (மவாலிகள்) முஸ்லிம் அல்லாதோரும் (திம்மிகள்) இரண்டாம் தரப் பிரஜையாகக் கணிக்கப்பட்டனர். இதனால் ஏற்பட்ட வெறுப்பு அப்பாஸிய பிரசாரத்தில் மவாலிகள் களம் இறங்கியதை எடுத்துக் காட்டலாம். இன்னும் அப்பாஸிய ஆட்சியிலும் அறபி, பார்ஸி, துருக்கிய வேறுபாடுகள் தோன்றின. அலவி - அப்பாஸி, ஷியா - ஸுன்னி, மு.்.தஸிலா - அஷ்அரிய்யா போன்ற பிரிவுகளும் நல்லாட்சிக்கு தடையாகவும் சவாலாகவும் அமைந்தன.

''அஹ்லு பைத்களுக்கே ஆட்சி உரிமை உடையது என்ற கோசத்தை அலவியரே முன்வைத்தனர். எனினும் அப்பாஸியரே ஆட்சியை ஏற்றனர். இதனால் அப்பாஸிய ஆட்சியில் அலவியரின் கிளர்ச்சிகளும், சிற்றரசுகளும் ஆட்சிக்குச் சவாலாக அமைந்தன. ஒரு நூற்றாண்டுக்கு மேல் நல்லாட்சி நடத்த முடியாமல் போய்விட்டது.

- போதாக்குறைக்கு அறபிகள் ஒதுக்கப்படல், பாரசீக- துருக்கிய மோதல், சிற்றரசுகளின் தோற்றம், கலீபா அதிகாரமற்ற பொம்மை போல பீதியுற்ற நிலைக்கு உட்படுதல், சிலுவைப்போர்கள், தாத்தாரியப் படையெடுப்பு, போன்றன அப்பாஸியர்களின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தன. கலீபாவை விட சிற்றரசுகளின் சுல்தான்கள் அதிகாரம் செலுத்தினர். இதனால் கலீபாவுக்கு கிடைத்த வருமானங்கள் குறைந்தன. இராணுவத்தை பலப்படுத்துவதற்கான வழி அடைக்கப்பட்டது. சுல்தான்களுக்கிடையிலும் போட்டிகள், போராட்டங்கள் இடம்பெற்றன. சிலுவைப்போர் தொடர்வதற்கும் தாத்தாரியர் படையெடுப்பதற்கும் கூட இவை வழிவகுத்தன.

- இரண்டு வம்ச ஆட்சியிலும் பைத்துல் மால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. பொது மக்களின் நலனைவிட கலீபாக்களதும் அவரைச் சார்ந்தவர்களதும் வீண் செயல்களுக்கு செலவிடப்பட்டன. மற்றும் யாரெல்லாம் தமது வம்ச ஆட்சியை தோற்றுவிப்பதற்கு அல்லது பலப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தார்களோ அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். அல்லது அதிகாரத்திற்கு வந்து விடுவார்கள் என்ற பயத்தில் கொலை செய்யப்பட்டார்கள். உமையா ஆட்சியில் வலீதின் கால நிருவாகிகளும் தளபதிகளும் கொலை செய்யப்பட்டனர். கலீபா மன்ஸூரின் காலத்தில் அப்துல்லா பின் அலி, அபூ முஸ்லிம் குராஸானி போன்றோர் கொலை செய்யப்பட்டனர். ஹாரூனின் காலத்தில் பர்மகிகள் கொல்லப்பட்டனர். ஒழுங்கான திட்டமிடலோ விதிமுறைகளோ இல்லாமையால் அடுத்தடுத்து வந்த கலீபாக்கள் முரண்பட்ட வழிமுறைகளைக் கையாண்டனர். உமர் இப்னு அப்துல் அஸீஸுக்கு முந்திய, பிந்திய கலீபாக்கள் ஹாரூன், அமீன், மஃமூன், முஃதஸிம், முதவக்கில் முதலானோரின் செயற்பாடுகளில் இதனை அவதானிக்கலாம். உமையாக்கள் சுமார் ஒரு நூற்றாண்டு காலம் ஆண்டார்கள். அப்பாஸியர்கள் சுமார் 5 நூற்றாண்டுகள் ஆண்டார்கள். உமையா ஆட்சியில் பைஸாந்திய செல்வாக்கும் அப்பாஸிய ஆட்சியில் ஸாஸானிய செல்வாக்கும் காணப்பட்டன. மற்றொரு வகையில் சொல்வதனால் உமையா ஆட்சியில் அறபித்துவமும் அப்பாஸிய ஆட்சியில் பாரசீக, துருக்கிய தன்மையும் காணப்பட்டன. உமையா ஆட்சியில் நிலவிய அறபித்துவ உணர்வு ஒருவகையில் முஸ்லிம்களின் சமயத் தேவைகளை நிவர்த்திக்க வழிசெய்தன. சுருக்கமாகச் சொல்வதாயின் *இல்முன் நக்லிய்யா* எனப்படும் அல்குர்ஆனுடன் நேரடியாகத் தொடர்புடைய பல கலைகள் தோன்றின. ஸஹாபாக்களிலும், தாபிஈன்களிலும் தோன்றிய அறிஞர்கள் அறபுமொழி, தப்ஸீர், பிக்ஹ் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டு பெரும் பங்காற்றினர். ஆனால், அப்பாஸிய ஆட்சியில் பல்வேறு இனக்குழுக்கள் பங்கேற்றதால் மவாலிகளின் செயற்பாடுகள் மூலம் பிற கலாசாரச் செல்வாக்குகளும் இடம் பெற்றன. இதனால் சாதகமானதும் பாதகமானதுமான விளைவுகள் இடம்பெற்றன. இல்முல் அக்லிய்யா வளர்ச்சியடைந்தது. நக்லிய்யா விருத்தியடைந்தது. உமையா ஆட்சியாளரைவிட அப்பாஸிய ஆட்சியாளரின் பங்களிப்பு அதிகமாக இருந்தது. எனவே உமையாக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அறிவியல் முயற்சி அப்பாஸிய காலத்தில் கிளைவிட்டுப் பரந்ததால் ஆட்சி வீழ்ந்தாலும் அறிவியல் வளர்ச்சி ஓய்ந்துவிடவில்லை. அறிஞர்களின் பங்களிப்புக்கள் தொடர்ந்தன.

- உமையாக் காலத்தில் முஸ்லிம்கள் ஒரே ஆட்சியில் வாழ்ந்தனர். அப்பாஸியர்கள் பல ஆட்சிகளுக்கு கட்டுண்டு வாழும் நிலை ஏற்பட்டது. சிற்றரசுகளின் தோற்றமும் பணிகளும் ஸ்பானியாவின் உமையா ஆட்சியும் இதனைச் சாதித்தன. உமையாக்கள் மேற்கைக் கைப்பற்றினர். ஆனால் அப்பாஸியரினால் அதனைச் சாதிக்க முடியவில்லை. எனினும் அப்பாஸியரின் கொடுமையிலிருந்து தப்பிச் சென்ற அப்துர் ரஹ்மான் என்றவர் ஸ்பானியாவில் உமையா ஆட்சியைத் தாபித்து பக்தாதுக்கு நிகராக கோர்டோவாவில் அறிவியல் பங்களிப்புக்காக அத்திபாரமிட்டார். பக்தாதிலும் கோர்டோவாவிலும் ஆட்சி வேறுபட்டாலும் அறிவியல் பங்களிப்பில் ஒத்த தன்மையை காண முடிந்தது. மேற்கில் இஸ்லாமிய பண்பாட்டையும், நாகரிகத்தையும் அறிமுகப்படுத்தி மேற்கின் அறிவியல் எழுச்சிக்குப் பங்களித்தவர்களாக உமையாக்கள் காணப்பட்டனர்.

- உமையாக்களின் வீழ்ச்சி மற்றொரு முஸ்லிம் குழுவினருக்கு (அப்பாஸியர்) விட்டுச் சென்றது. ஆனால் அப்பாஸியரின் வீழ்ச்சி முஸ்லிம் அல்லாதவரின் கைக்கு ஆட்சியை விட்டுச் சென்றது. இதனால் ஆறரை நூற்றாண்டு கால தொடரான முஸ்லிம் ஆட்சி சுமார் ஒரு நூற்றாண்டு காலம் சூனியமாக இருந்தது. எனினும் 717 இல் புருஸாவைக் கைப்பற்றிய உஸ்மானியர் உஸ்மானிய ஆட்சியை உருவாக்கி நவீன காலம் வரை (முதலாவது உலகப் போர்) முஸ்லிம்களின் ஆட்சியைத் தொடரச் செய்தனர்.

**மேலதிக வாசிப்புக்குரியவை:**


1. அபூபக்கர் ஏ.எம். (1998) இஸ்லாமிய வரலாறு பாகம் 1,2,3 சாய்ந்தமருது 05, இஸ்லாமிய ஆராய்ச்சி கழகம்

2. அமீன் எம்.ஐ.எம். (1998) அறேபியர் வாழ்வியல், ஹெம்மாதகம, அல் ஹஸனாத் பதிப்பகம்

3. ஸைபுர் ரஹ்மான் முபாரக் (1979) அர்ரஹீக், சென்னை 01, தாருல் ஹுதா

4. அமீன் எம்.ஐ.எம். (1998) முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் (2002) ஹெம்மாதகம, அல் ஹஸனாத் பதிப்பகம்

5. மார்டின் லிங்ஸ், செய்யித் அபூபக்கர் சிராஜுதீன் 1989 முஹம்மத் (ஸல்), தர்காநகர்

6. நாளிர் எம்.எச்.எம். இஸ்லாமிய நாகரீகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்(1983), அஷ்ஷபாப் பதிப்பகம், கொழும்பு 10.

7. இப்றாஹீம் செய்யத், நாற்பெரும் கலிபாக்கள் 1963 சென்னை, வளர்மதி பதிப்பகம்.

8. இப்றாஹீம் செய்யத், ஐரோப்பிவில் இஸ்லாம், சென்னை, வளர்மதி பதிப்பகம்.

**தேர்ச்சி 07: இலங்கைக்கும் அறபுகளுக்குமிடையிலான தொடர்பு முதல் சுதந்திர காலம் வரையிலான இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, தேசிய பங்களிப்புக்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறுவார்**

**தேர்ச்சி மட்டம் 7.1: இலங்கைக்கும் அறபுகளுக்கும் இடையிலான தொடர்புகளை இனங்கண்டு எடுத்துக்காட்டுவார்.**

**7.2 இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமான பின்னணி, முஸ்லிம் உலகுடனான உறவு, முஸ்லிம்களின் குடியேற்றங்கள் பற்றி எடுத்துக் காட்டுவார்.**

**7.3 இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புக்களை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.**

**நேரம்: : 55 பாடவேளைகள்**

**கற்றல்பேறுகள்**

- இலங்கை- அரேபிய உறவு தொன்மையானது என்பதனை எடுத்துக்காட்டி அவ்வுறவுக்கான காரணிகளை பட்டியற் படுத்துவார்.
- கிறிஸ்துவுக்கு முற்பட்ட பிற்பட்ட கால அரேபியர் இலங்கையர் உறவு பற்றி ஆதாரங்களுடன் முன்வைப்பார்.
- அரேபியர் இலங்கை உறவினால் ஏற்பட்ட விளைவுகளை நலனாய்வார்.
- இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகத்தை எடுத்துக் காட்டுவார்.
- முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றங்களை அடையாளப்படுத்தி உள்நாட்டில் அதன் பரம்பலை எடுத்துக் கூறுவார்.
- முஸ்லிம்கள் இலங்கை மன்னர்களுடன் கொண்டிருந்த உறவுகள் பற்றி விளக்கிக் கூறுவார்.
- இலங்கையை சர்வதேசத்துடன் தொடர்புபடுத்துவதில் முஸ்லிம்களின் பங்கினை விபரிப்பார்.
- இலங்கை முஸ்லிம்கள் தேசியத்துக்கு பங்களிப்புச் செய்வதற்குத் தூண்டிய காரணிகளை கண்டறிந்து கூறுவார்.
- இலங்கை முஸ்லிம்கள் தேசியத்துக்கு ஆற்றிய பங்களிப்புக்களைப் பட்டியற்படுத்துவார்.
- இலங்கையின் இறைமையைப் பாதுகாப்பதில் முஸ்லிம்களின் பங்களிப்பை எடுத்துக் கூறுவார்.
- இலங்கை முஸ்லிம்கள் தேசியத்துக்கு ஆற்றிய பங்களிப்புக்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**
**அறேபியருக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகள்**

- இலங்கையில், மனிதர்கள் கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே வாழ்ந்துள்ளமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இந்து சமுத்திரத்தைக் கடந்தே இவர்கள் இலங்கைக்கு வந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

- மேற்குறித்த வரலாற்றுப் பாரம்பரியத்துக்கு உரித்துடைய இலங்கையின் பூர்வீகக் குடிகளாக வேடர்கள் அமைந்துள்ளனர். இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட புராதன மனிதர்களுக்கும் வேடர்களுக்குமிடையே கலாசார உறவுகளும், உயிரியல் உறவுகளும் காணப்படுவதை நவீன ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. வேடர்களைத் தவிர்த்து இலங்கையில் இன்று வாழும் சகல இன மக்களும் இங்கு வந்து குடியேறியவர்களாவர் என்றதொரு கருத்து நிலவுகிறது.

- மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பு மிக நீண்ட காலங்களுக்கு முன்பிருந்தே நிலவியுள்ளமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. மகாவலி திசை திருப்பும் திட்டத்தின் கீழ் நடைபெற்ற அகழ்வு வேலைகளின் போது மாதுருஓயாவின் மிகப் பழமையான வெள்ள நீர் கட்டுப்பாட்டு வாசல் *(Sluice -Gate)* ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. வாஷிங்டனில் செய்யப்பட்ட கார்பன் சோதனையில் அது 4000 ஆண்டுகள் பழைமயானது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இத்தொழிநுட்பம் எகிப்து, மொஸபதோமியா, வட அறேபியாவின் ஹழரமௌத் போன்ற நாகரிகங்களில் காணப்பட்டது. இப்பிரதேசங்களுடன் நிலவிய உறவின் காரணமாகவே இது இலங்கைக்கு அறிமுகமாகியுள்ளது எனலாம்.

- கி.மு. 500 முதல் இங்கு ஆரியர்கள் குடியமர ஆரம்பித்துள்ளனர். விஜயன் வருகை, பாண்டுவாசுதேவன் குழுவினர் வருகை, பந்த கச்சனா குழுவினர் வருகை என்பன ஆரியக் குடியமர்வுகளை இலங்கையின் பண்டைய இலக்கியங்கள் குறித்துக் காட்டுகின்ற முறைகளாகும்.

- வரலாற்றுக்கு உட்பட்ட கால இலங்கையில் வந்து குடியேறிய பிரதான இனக் குழுக்களில் ஆரியர்கள், திராவிடர்கள், அறேபியர்கள் எனும் முப்பிரிவினரும் அடங்குகின்றனர். இன்று இலங்கையில் வாழ்கின்ற சகலரும் இந்த இனக் குழுக்களின் வம்ச வழியில் வந்தவர்களாவர்.

- பண்டுகாபய மன்னன் கி.மு. 377-307 அனுராதபுரத்தை ஆட்சி புரிந்த காலத்தில் அனுராதபுரத்தின் மேற்குவாயில் பகுதி ''*யவன*'' வணிகர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என மகா வம்சம் குறிப்பிடுகின்றது. *யவன* என்ற பதம் மிக ஆரம்ப காலத்தில் கிரேக்கர்களைக் குறித்தாலும் பிற்காலத்தில் அரேபியரைக் குறிப்பதாக மகாவம்சத்தை மொழிபெயர்த்த ஆனந்த டப்ளியு. பி. குருகே குறிப்பிடுகிறார். மகாவம்சம் குறிப்பிடும் பண்டுகாபய மன்னனின் காலப்பிரிவில் காணப்பட்ட *யோனாஸ்* என்பது அறபு வணிகர்களே என மகாவம்சத்தை மொழி பெயர்த்த மற்றொருவரான டப்ளியு. கைகர் கருதுகிறார். *(Mahawansa, Ed by W. Geiger, London, 1950-xv-90)*

- கி.மு. 1000 ஆண்டுகளில் நபி சுலைமான் (அலை) அவர்கள் காலப்பிரிவில் சாம்பிராணி, வாசனைப் பொருட்கள், குதிரை என்பவற்றுக்கு மாற்றுப் பொருட்களாக இலங்கையில் இருந்து நறுமணச் சரக்குகள், மாணிக்கக் கற்கள், கருங்காலி, மயில், யானைத் தந்தம் முதலியவை எடுத்துச் செல்லப்பட்டன. இவை அனைத்தும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே காணப்பட்ட உறவின் தொன்மையைக் காட்டுகின்றன.

- வரலாற்றுப் பேராசிரியைகளான கலாநிதி சிறிமா கிரிபமுன, கலாநிதி லோனாதேவராஜா ஆகியோர் ''*யோனாஸ்*'' எனும் பதம் அறேபியர்ளைக் குறிப்பதாக

கருதுகின்றனர். கி.பி. 15 ஆம் நூற்றாண்டு சந்தேச இலக்கியங்கள் முஸ்லிம் பெண்களைக் குறிக்க ''*யொன்லிய*'' எனும் சொல்லைப் பயன்படுத்துவது இதற்கு சான்றாகும் என்பது கலாநிதி லேனாதேவராஜாவின் கருத்தாகும்.

- கி.மு. 4ஆம் நூற்றாண்டிலேயே அறபு வணிகர்கள் தமது குடியிருப்பினை இலங்கையில் நிறுவியுள்ளனர். J.R. சின்னத்தம்பி எனும் வரலாற்றாய்வாளர் ''Ceylon in ptomay's Geography' எனும் நூலில் பின்வருமாறு எழுதுகிறார்.

  ''*தெதுருஓயா சோணா நதி அல்லது அறேபியரின் நதி என்று கூறப்பட்டது. தெதுருஓயாவுக்கு வடபாகத்தில் சோணாஸ் அல்லது அறேபியப் பழங்குடிகள் வாழ்ந்துள்ளனர். Igonacivitas என்பது மாந்தோட்டத்தின் தென்பாகத்தில் உள்ள அரிப்பை அல்லது தற்போதைய புத்தளம் பொன்பரப்பினைக் குறிக்கின்றது. இது பெரும்பாலும் அறேபியர் வாழ்ந்த பட்டினமாகும். சோணா நதி என்பதன் பொருள் சோனகர் நதியாகும். இது தெதுரு ஓயாவுக்கு வடக்கே உள்ள புத்தளம் பிரதேசத்தினைக் குறிக்கின்றது. கிறிஸ்துவுக்கு முன்னர் இருந்தே இங்கு அறேபியர் வாழ்ந்து வந்ததற்கான தடயங்களாக இவை அமைந்துள்ளன.*

- ஜாஹிலிய்யாக் கால கவிஞரான இம்ரஉல் கைஸின் கவிதைகளில் கற்பூரம், இஞ்சி, கராம்பு போன்ற வாசனைத் திரவியங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இது இலங்கை, கேரளம் முதலிய இடங்களுக்கும் அறபு நாட்டுக்குமிடையே இருந்த வணிகத் தொடர்புகளுக்கான சான்றாகும்.

- இவையனைத்தும் இஸ்லாம் அறபுலகில் அறிமுகமாவதற்கு முன்னரே அறேபியர் இலங்கையோடு தொடர்புற்றிருந்தனர் என்பதையும், இங்கு குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்துள்ளனர் என்பதையும் காட்டுகின்றன.

**இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகமும் பரவலும்**

- இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தெற்கே இந்து சமுத்திரத்தின் கிழக்கு-மேற்கு வர்த்தகப் பாதையின் நடுவாக இலங்கை அமைந்துள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே இலங்கை சர்வதேச உலகில் அறியப்பட்டிருந்தமைக்கு இதுவே பிரதான காரணியாக அமைந்தது. அவ்வாறே இலங்கையின் இயற்கைச் சூழலும், பௌதீகக் நிலக் கட்டமைப்பும், இயற்கையாக அமைந்த துறைமுகங்களும் இலாபம் தரும் வணிகப் பொருட்களும் பிறநாட்டவர்களை இலங்கையை நோக்கி ஈர்க்கும் அம்சங்களாக அமைந்தன.

- இலங்கையில் கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து அறபு வணிகர்கள். இந்திய கரையோர நகர்களுடனான வர்த்தகத்தில் பெரும்பங்கு வகித்தனர். இஸ்லாம் அறபு தீபகற்பத்தில் அறிமுகமான கி.பி. 610ஆம் ஆண்டுகளில் இந்தியத் துணைக் கண்ட கடற்கரையோரங்களில் வலிமைமிக்க வணிகர்களாக அறேபியர் நிலைபெற்றிருந்தனர். அறபு தீபகற்பத்தில் மிகப்பெரும் சக்தியாக இஸ்லாம் வளர்ச்சியடைந்தபோது கீழைத்தேய நாடுகளில் வாழ்ந்த அறபு வணிகர்களும் இஸ்லாத்தை தமது நெறியாக ஏற்றுக்கொண்டனர்.

- இலங்கையில் இஸ்லாம் எப்போது அறிமுகமானது என்பது குறித்து தெளிவான சான்றுகள் காணப்படவில்லை. எனினும், இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான காலப்பிரிவு பற்றி பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. நபி (ஸல்) அவர்களது காலப் பிரிவில் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமானது.
2. கலீபா உமர் (ரழி) அவர்களது காலப்பிரிவில் அறிமுகமானது.
3. உமையாக்கள் காலப்பிரிவில் இடம்பெற்ற ஹாஷிமியர் புலம்பெயர்வுகள் மூலம் அறிமுகமானது.

- நபி (ஸல்) அவர்களின் தூதுவராக சீனாவுக்குச் சென்ற வஹப் இப்னு அபீஹப்ஸா (ரழி) இலங்கைக்கும் வந்ததாகவும் இலங்கை அரசனுக்கு இஸ்லாத்தின் அழைப்பை விடுத்ததாகவும் அறிஞர் சித்திலெவ்வை (கி.பி 1838 - 1898) ஹுஸைன் இப்னு முஹம்மத் என்பவர் கோவை செய்த '*அல்கியா பாக்கரி*' எனும் நூலின் முதலாம் பாகத்தின் 184 ஆம் பக்கதிலிருந்து பெற்றுக் கொண்டதாக ஆதாரம் காட்டி முஸ்லிம் நேசனில் பின்வரும் செய்தியைத் தந்துள்ளார்.

  > *ஹிஜ்ரி ஆறாம் வருடத்திற்குச் சரியான கி.பி. 628 ஆம் ஆண்டில் வஹப் இப்னு அபீ ஹப்ஸா எனும் பெயருடைய ஒரு ஸஹாபியை நபிகளார் இலங்கை அரசனிடத்தில் அனுப்பியதாகவும் அவர் நபிகளாரின் கடிதத்தை இலங்கை மன்னனிடம் கொடுத்ததாகவும் அதில் அம்மன்னனுக்கு இஸ்லாத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகவும் அதனால் அந்த ஸஹாபிக்கு மார்க்கத்தைப் போதிப்பதற்கு அனுமதியளித்து பள்ளியொன்றைக் கட்டவும் விரும்பியோர் அம்மதத்தை ஏற்கவும் சுயாதீனம் கொடுத்தார். அவர் ஏற்கனவே இங்கிருந்த அறேபியருக்கும் பின்னர், பிறருக்கும் உபதேசித்து சிலரைத் தம் மதத்தவராக்கி ஹிஜ்ரி பத்தில் (கி.பி 632இல்) அறேபியாவுக்குச்* சென்றார். (முஸ்லிம் நேசன் 1898 ஒக்டோபர் 22)

- நபி (ஸல்) அவர்களது காலப்பிரிவில் இஸ்லாத்தின் அழைப்பு உலகின் பல நாடுகளுக்கும் விடுக்கப்பட்டது. உரோம, பாரசீக ஆட்சியாளர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் எழுதிய கடிதங்கள் இதற்கு ஆதாரமாக அமைகின்றன. அவ்வாறே கீழைத்தேய நாடுகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன என்ற கருத்தை சில வரலாற்றாசிரியர்கள் முன்வைத்துள்ளனர். *இவ்வகையில் கி.பி. 628ஆம் ஆண்டு சீனாவுக்கு நபி (ஸல்) அவர்களின் கடிதத்தை வஹப் இப்னு அபீஹப்ஸா (ரழி) அவர்கள் எடுத்துச் சென்றார்கள் என சேர் தோமஸ் ஆர்னல்ட் தனது The Preaching of Islam எனும் நூலின் முதறப்பதிப்பில் குறிப்பிடுவதாக கலாநிதி ஹமீதுல்லாஹ் தனது Foreign Relations of the Prophet Muhamad எனும் நூலில் குறிப்பிடுகிறார்.* மார்சல் புரூம்ஹால் என்பவர் 'சீனாவில் இஸ்லாம்' எனும் தனது நூலில் சீனாவில் இஸ்லாத்தின் பரவல் பற்றி எழுதும் போது அங்கு வழக்கில் உள்ள மரபு வழிக்கதை ஒன்றைக் குறிப்பிடுகிறார். கி.பி 628இல் அல்லது 629இல் வஹப் இப்னு அபீ ஹப்ஸா என்பவர் கடல் வழியாகக் கன்டன் துறைமுகத்தை அடைந்து தலைநகர் செயின் பூவில் வைத்து இஸ்லாமியப் பிரசாரம் செய்யவும் கன்டனில் மஸ்ஜித் ஒன்றைக் கட்டவும் அனுமதி பெற்ற பின் கி.பி. 632 அல் மதீனாவுக்கு மீண்டார். இச்செய்தி, சித்திலெப்பை தரும் தகவல் பற்றி சாதகமாக சிந்திக்க உதவுகிறது எனலாம்.

- கி.பி. 7 ஆம் நூற்றாண்டுகளில் அநுராதபுர ஆட்சியாளர்களின் முக்கிய துறைமுக நகரமாக மாந்தை விளங்கியது. இத்துறைமுக நகரம் கிழக்கிற்கும்

மேற்கிற்குமிடையிலான வணிகத்தில் ஒரு மத்திய நிலையமாக விளங்கியது. இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளும் கண்டெடுக்கப்பட்ட அறபு கல்வெட்டுகளும் அறபுக் குடியிருப்புகள் காணப்பட்டமைக்கான சான்றுகளாக அமைவதாக கலாநிதி எம்.ஏ.எம். ஷுக்ரி குறிப்பிடுகிறார். 'மாந்தையிலும், அதனைச் சூழ உள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட கி. பி. 8 ஆம் - 11 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையிலான மத்திய கிழக்கு நாடுகளைச் சார்ந்த மட்பாண்டங்களும் சீனாவைச் சார்ந்த மட்பாண்டங்களும் இவ்வணிகத்தில் அறேபியா, சீனா (ஆகிய நாடுகள்) வகித்த பங்கை விளக்குகின்றன.' எனவே இக்காலப்பகுதியில் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியிருக்கலாம் எனக் கொள்ளலாம்.

கலீபா உமர் (ரழி) அவர்களின் காலப்பகுதியில் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமானது என்ற கருத்தை கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்னு ஷஹ்ரயார் தாம் எழுதிய 'அஜாஇபுல் ஹிந்த்' எனும் நூலில் தருகிறார். இலங்கை மக்கள் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி கேள்வியுற்றனர். அது பற்றி சரியான தகவல்களை அறிந்துவர இலங்கை மன்னன் (அக்ரபோதி III) ஒரு தூதுவரை அனுப்பினார் என்ற தகவலை கலாநிதி சிறிமா கிரிபமுன *Muslims of Sri Lanka Avenues to Antiquity* எனும் நூலில் சுட்டிக்காட்டுகிறார். மன்னனால் அனுப்பப்பட்ட அத்தூதர் அங்கு சென்றடைந்த போது நபி (ஸல்) அவர்களும், அபூபக்ர் (ரழி) அவர்களும் காலஞ்சென்று கலீபா உமர் (ரழி) அவர்கள் (கி. பி. 634 - 644) ஆட்சி செய்து கொண்டிருந்தார். அவரிடமிருந்து இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொண்டு இலங்கைக்கு மீண்டார். அவர் வரும் வழியில் இன்றைய பாகிஸ்தானில் உள்ள மக்ரான் கரையில் காலமானார். அவருடன் வந்த பணியாள் இலங்கையை அடைந்து இஸ்லாம் பற்றிய செய்தியை வழங்கினார்.

- கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய கிலாபத்தில் ஆட்சியாளர்களாக இருந்த உமையா கலீபா அப்துல் மலிக் பின் மர்வான், வலீத் இப்னு அப்துல் மலிக் ஆகியோரது ஆட்சிக்காலத்தில் ஈராக்கின் கவர்னராக இருந்த ஹஜ்ஜாஜ் பின் யூசுபின் கொடுமைக்கு அஞ்சி உமையாக்களின் அரசியல் எதிரிகளாக இருந்த ஹாஷிம் கிளையினர் தென்னிந்திய இலங்கைக் கரையோர நகரங்களில் குடியேறினர். வரலாற்றாசிரியர் *James Tannat* தனது *'Ceylon'* எனும் நூலில் இவ்வாறு புலம் பெயர்ந்து வந்த பனூ ஹாஷிம் கிளையினர் இலங்கையின் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், கொழும்பு, காலி, பேருவளை ஆகிய இடங்களில் குடியமர்ந்ததாக குறிப்பிடுகிறார்.

- இதே காலப்பிரிவில் நடைபெற்ற இன்னோர் நிகழ்வையும் வரலாற்றாசிரியர் அல் பலாதுரி தமது 'புதூஹுல் புல்தான்' எனும் நூலில் தருகிறார். 8ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையை ஆண்ட மன்னனான மாணவம்மன் (கி. பி. 684 – 719) இலங்கையில் காலஞ்சென்ற அறேபிய வர்த்தகர்கள் சிலரின் விதவைகளையும். பெண் மக்களையும் அறேபியாவுக்கு அனுப்பி வைத்தான். இவர்கள் பிரயாணம் செய்த கப்பலை இந்தியாவின் *தேபல் (Daybal)* (தற்போதைய கராச்சி) எனும் இடத்தில் கடற் கொள்ளைக்காரர்கள் தாக்கி கைப்பற்றிக் கொண்டனர். பெண்கள் அனைவரும் சிறைபிடிக்கப்பட்டனர். அவர்களில் பனூயர்பூக் குழுவைச் சேர்ந்த ஒரு பெண் *'யா ஹஜ்ஜாஜ்'* என சப்தமிட்டாள். இவ்விடயத்தை ஈராக்கின்

ஆட்சியாளராக இருந்த ஹஜ்ஜாஜ் பின் யூசுப் கேள்வியுற்றதும் சிறைபிடிக்கப்பட்ட பெண்களை விடுவிக்குமாறு சிந்தின் அப்போதைய ஆட்சியாளரான *ராய் தாஹிருக்கு (Rai Dahir)* செய்தி அனுப்பினார். இதற்கு எத்தகைய பதிலும் கிடைக்காததால் முஹம்மத் பின் காஸிமின் தலைமையில் பெரும் படையொன்று அனுப்பப்பட்டு கி. பி. 715 இல் சிந்து வெற்றி கொள்ளப்பட்டது.

- இது ஹி. 1 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு சமூகமாக வாழ்ந்தார்கள் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. இலங்கை மன்னர் இந்த அநாதைப் பெண்களை அவர்களின் தாய் நாட்டிற்கு அனுப்பியமையை உமையா மாகாண அதிபரான ஹஜ்ஜாஜுடன் நல்லுறவை வளர்க்க எடுத்த முயற்சியாகவும் கருத முடியும்.
- இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமான காலப்பிரிவு பற்றிய மேற் குறித்த தகவல்கள் இஸ்லாம் அறபுத் தீபகற்பத்தில் அறிமுகமான அதே காலப்பிரிவில் இலங்கைக்கும் அறிமுகமானது என்பதில் ஒன்றுபடுகின்றன.

**இலங்கையில் முஸ்லிம்களின் பரவல்.**

- கி. பி. 9 ஆம் 10 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் முஸ்லிம் குடியிருப்புகள் காணப்பட்டன. அநுராதபுர ராஜதானியின் முக்கிய துறைமுகமான மாந்தையிலும் அதை அண்டிய பிரதேசங்களான திருக்கேதீஸ்வரம், எல்லுப்பிட்டிய, புளியந்தீவு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட அறபு சிலாசனங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன என்று *கலாநிதி எம். ஏ. எம். ஷுக்ரி* தனது இலங்கை முஸ்லிம்கள் எனும் நூலில் (பக். 08) சுட்டிக்காட்டுகிறார்.
- கி. பி. 9 ஆம் 10 ஆம் நூற்றாண்டுகளில் இக்குடியிருப்புகள் படிப்படியாக இலங்கையின் உள்ளக நகரங்களை நோக்கி நகர்ந்த அமைப்பினைக் காணலாம். இஸ்லாமிய உலகைப் பொறுத்தவரையில் இது அப்பாஸியரின் பொற்காலமாக அமைந்தது. இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் அப்பாஸிய கலீபாக்களுடன் தொடர்புள்ளவர்களாக விளங்கினர். இலங்கை முஸ்லிம்களின் சமய அறிவை மேம்படுத்த அப்பாஸிய கலீபா, காலித் இப்னு அபூ பகாயா என்ற மார்க்க அறிஞரை அனுப்பி வைத்தார். இது இலங்கையில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தவும், போதிக்கவும் எடுக்கப்பட்ட நிறுவன ரீதியான முதல் முயற்சியாக அமைந்தது எனலாம். இலங்கை வந்த அவர் இங்கு தங்கி இஸ்லாமிய வாழ்க்கை முறையைப் போதித்து வந்தார். இங்கேயே வாழ்ந்து கி. பி. 929 இல் (ஹிஜ்ரி 317) காலஞ்சென்ற இவரது கல்லறை நடுகல் கேம்ப்ரிரிஜ் பல்கலைக்கழகத்தின் அறபுப் பேராசிரியர் *சாமுவேல் லீ (Samuwal Lee)* அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. பின்னர், 1827 ஆம் ஆண்டு பிரிடன் ரோயல் ஆராய்ச்சிக் கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் இது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
- கி. பி. 10, 12ம் நூற்றாண்டுகளில் இலங்கையின் உள்ளக நகரங்களில் பல முஸ்லிம் குடியிருப்புக்கள் காணப்பட்டமையை இலங்கையின் உள்ளக நகரங்களான

கம்பொள, கலகெதர போன்ற பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட உமையா, அப்பாசிய கால நாணயங்கள் உணர்த்துகின்றன.

அவ்வாறே, இலங்கையின் அரசியல் வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படுகின்ற பொலனறுவைக் காலப் பகுதியில் முஸ்லிம்களின் பரவல் கணிசமாக இருந்திருக்க வேண்டுமென்பதற்கான சான்றுகளை நாம் காண முடிகின்றது.

- பொலனறுவைக் கால மன்னர்களுள் சிறப்பிடம் பெறும் மகா பராக்கிரமபாகு (1156-1186) வின் காலப் பகுதியில் தேசிய வர்த்தகத்தில் முக்கியத்துவமிக்கவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். இதுவே, ஏற்றுமதி வர்த்தகத்தை மேம்படுத்த மன்னன் உருவாக்கியிருந்த *'அந்தரங்கதுர'* என்ற மேல் சபையில் நான்கு முஸ்லிம்கள் இடம்பெற்றிருந்தமைக்கு காரணமாக இருந்திருக்கலாம். *அறபுப் புவியியலாளரான அல் இத்ரீஸ் தரும் இத்தகவலை இலங்கையின் தொல்பொருளியல் பேராசிரியரான எஸ். பரனவிதாரன History of Ceylon எனும் நூலில் Civiliztion of Polonnaruwa Period எனும் பகுதியில் குறிப்பிடும் இக்கருத்தை, கலாநிதி வஸன்தரா மோகன தனது Muslims in Sri Lanka எனும் நூலில் 8 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.* இத்தகவல் பொலனறுவை ராஜதானியில் செல்வாக்குள்ளவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர் என்பதற்கும் சான்றாக அமைகின்றது.

- பொலனறுவையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி.1232 இல் தம்பதெனிய இலங்கையின் தலை நகராகியது. இக்காலப்பகுதியில் தம்பதெனிய அரசுக்கு வலுவூட்டும் வளம்மிக்க சமூகமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்தது. கி.பி.1270 தம்பதெனிய அரசின் மன்னனாக முடிசூடிய 4ம் விஜயபாகு அவரது இராணுவத் தளபதியாக இருந்த *'மித்த'* என்பவனால் கொலை செய்யப்பட்ட போது அந்த இராணுவத்தின் இன்னொரு பிரிவுக்கு தலைமை தாங்கிய *'தாகூர்'* எனும் முஸ்லிம் இராணுவ வீரர் 'மித்த' வைக் கொன்று அரசைப் பாதுகாத்ததோடு 1272இல் யாப்பஹுவையை தலைநகராகக் கொண்டு புவனேகுபாகு ஆட்சியமைப்பதற்கும் காரணமாக இருந்தார் என ஆய்வாளர் ஜே. கருணாதிலக தனது *வயம்பலங்காவே ராஜதானி* எனும் நூலில் குறிப்பிடுகிறார். இது இலங்கையின் உள்ளக நகரங்களில் முஸ்லிம்கள் வலுவான சமூகமாக பரவி வாழ்ந்தனர் என்பதைக் காட்டுகின்றது.

- யாப்பகுவ அரசியலில் முஸ்லிம்கள் பெற்றிருந்த உயர் இடமே 1283இல் எகிப்துக்குச் சென்ற வர்த்தகத் தூதுக்குழுவின் தலைமைப் பதவி *அபூ உஸ்மான்* என்ற முஸ்லிம் பிரதானிக்கு கிடைப்பதற்கு காரணமாகியது.

தம்பதெனிய, யாப்பகுவை ஆசியல் காலப்பிரிவில் நடைபெற்ற மேற்குறித்த நிகழ்வுகள் முஸ்லிம்களின் உள்நாட்டுப் பரவலுக்கான சான்றுகளாக அமைகின்றன. இக்கருத்துகள் அக்காலப்பிரிவில் உள்நாட்டில் முஸ்லிம்கள் அரசர்களோடு சமதரத்தில் உறவாடக்கூடிய பிரதானிகளின் அந்தஸ்த்தைப் பெற்றிருந்தமையைக் காட்டுகின்றன.

- 13 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியலில் முஸ்லிம்கள் செல்வாக்குச் செலுத்துமளவுக்கு வலிமைமிக்க சமூகமாக வளர்ச்சி பெற்றிருந்தனர். 13ம் நூற்றாண்டின் இறுதிக்கூறில் குருநாகலை இலங்கையின் தலைநகராகியது. 2ம் புவனேகபாகு குருநாகலையைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 1287-1293 வரை ஆட்சி செய்தான். இம்மன்னன் குருநாகலை அஸ்வத்தும பிரதேசத்தைச் சேர்ந்த

பிரபுவாக விளங்கிய *அதினாவிதின வீர விக்ரமசிங்க* என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட முஸ்லிம் பிரமுகரின் மகளாகிய *மெதகெடிய குமாரி* என்ற யுவதியை திருமணம் செய்தான். இருவருக்கும் பிறந்த முஸ்லிம் மகனே '*வத்ஹிமி*' என்ற பெயரில் இலங்கையின் வரலாற்றில் குறிக்கப்படுகிறார். இத்தகவலை ஆய்வாளர் என். ஜே. கருனாதிலக தனது '*வயம்ப லங்காவே ராஜதானி*' என்ற நூலில் தருகிறார்.

- 2ம் புவனேகபாகுவின் பின் அவரே குருநாகலையில் இலங்கையின் மன்னனாக முடிசூட்டப்பட்டார். எனினும், சூழ்ச்சியாளர்கள் சதி செய்து இவரைக் கொலை செய்தனர். அரசனின் சிங்கள மனைவிக்குப் பிறந்த மகனை 4ஆம் பராக்கிரமபாகு என்ற பெயரில் மன்னராக முடிசூட்டினர்.

- குருநாகலை ராஜதானியாக மாற்றப்பட்டமைக்கான காரணிகள் பல கூறப்பட்டாலும் கூட 2ம் புவனேகபாகுவின் அரசியல் வாழ்வை உற்று நோக்கும்போது அங்கு குடியேறி வாழ்ந்த பொருளாதாரப் பலமிக்க சமூகமாக இருந்த முஸ்லிம்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் தமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும், உறுதியும் அதற்கான ஒரு காரணியாக இருந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது.

- கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் இலங்கையின் உள்ளகப் பகுதிகளில் பெருமளவில் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான சான்றுகள் பல காணப்படுகின்றன. இவ்வகையில் கி.பி.1344ல் இலங்கையைத் தரிசித்த இப்னு பதூதா விட்டுச் சென்றுள்ள குறிப்புகள் முக்கியம் பெறுகின்றன. அவர் புத்தளத்திலிருந்து சிலாபம், குருநாகல், கம்பொள, வழியாக ஆதம் மலையைத் தரிசித்து இரத்தினபுரி, தெவுந்தர, காலி, கொழும்பு வழியாக புத்தளம் நோக்கித் திரும்பிச் சென்றுள்ளார். இப்பயணப் பாதையில் தான் சந்தித்த பல முஸ்லிம் பெரியார்களைப் பற்றியும் அவர்களைச் சூழ இருந்த பள்ளிவாயில்கள், குடியிருப்புக்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். இந்தவகையில் பார்க்கும்போது இலங்கையின் கரையோர நகரங்களில் போலவே உள்ளக நகரங்களிலும் முஸ்லிம்கள் இக்காலப் பிரிவில் வாழ்ந்துள்ளனர் எனலாம்.

- கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் அரசியலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாக போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டமையைக் குறிப்பிடலாம். கி. பி. 1505 ஆம் ஆண்டு சீனாவிலிருந்து பாரசீகக் குடாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓர் அறபுக் கப்பல் கூட்டத்தை தாக்கி கைப்பற்றுவதற்காக கோவாவிலிருந்து புறப்பட்ட *டொன் லோரன்ஸோ டீ அல்மேய்டா* கடும் புயலில் சிக்குண்டு திசைமாறி இலங்கையின் காலிக் கரையை வந்தடைந்தான். இவனது இவ்வருகை இலங்கையின் வரலாற்றுப் போக்கையே மாற்றியமைத்துவிட்டது. போர்த்துக்கேயர் இலங்கையை அடைந்த நேரத்தில் இலங்கையின் கரையோர நகரங்களில் வர்த்தக வலிமை பெற்ற சமூகமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்தது. பொதுவாக முஸ்லிம்களை தமது வர்த்தகப் போட்டியாளராகக் கண்ட போர்த்துக்கேயர்கள் அவர்களைத் தமது எதிரிகளாகவே கருதினர். முஸ்லிம் ஸ்பெய்னில் முஸ்லிம்களுக்கு எதிராக மிகக் கடுமையான போக்கை கடைப்பிடித்ததைப் போலவே போர்த்துக்கேயர்கள் இலங்கையிலும் முஸ்லிம்களுக்கு எதிரான போக்கையே தமது எல்லா நடவடிக்கைகளிலும் கடைப்பிடித்தனர். கோட்டை இராச்சியத்தில்

உருவான அரசியல் பிரச்சினைகளும், அது துண்டாடப்பட்டமையும் போர்த்துக்கேயர் இலங்கையில் நிரந்தரமாக காலூன்றுவதற்கு காரணமாகியது.

- ஆரம்பத்தில் முஸ்லிம்கள் விடயத்தில் ஓரளவு நெகிழ்வுத் தன்மையோடு நடந்துகொண்ட போர்த்துக்கேயர்கள் 1597ம் ஆண்டில் கோட்டை அரசின் கடைசி மன்னனான *டொன் ஜோன் தர்மபால* வாரிசின்றி இறக்க அவன் எழுதி வைத்திருந்த சாசனத்தின்படி போர்த்துக்கேய மன்னனே கோட்டை அரசுக்கும் அதிபதியானவுடன் கடும் போக்கை கடைபிடிக்கத் தொடங்கினான். இதன் விளைவாக கி.பி.1575ஆம் ஆண்டு முதல் கரையோர நகரங்களில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்வாண்டில், வெலிகம பிரதேசத்தில் செல்வாக்குடன் வாழ்ந்த முஸ்லிம்களின் செல்வங்களை கொள்ளையடித்ததோடு பலரைக் கொலையும் செய்தனர். கி.பி.1626ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த எல்லா பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் கண்டி மன்னன் செனரத் (கி.பி. 1604-1635) கண்டியின் உட்புறங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் புகலிடமளித்து குடியமர்த்தினான். மட்டக்களப்பில் மட்டும் நாலாயிரம் பேர் குடியமர்த்தப்பட்டனர். கி.பி.1642ல் மாத்தறையில் 200-300 வரையிலான முஸ்லிம் ஆண்கள் போர்த்துக்கேயரால் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களது பெண்களையும், பிள்ளைகளையும் கைது செய்து கொழும்புக்கு கொண்டு சென்றனர். இதுவும் முஸ்லிம்கள் புலம்பெயரத் தூண்டியது.

- எனவே, கி. பி. 16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை முஸ்லிம்கள் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் குடியேறியிருந்தனர் என்ற முடிவுக்கு வரலாம். பாணகமுவ, கண்டி, கம்பளை போன்ற உள்ளக நகரங்களில் கணிசமாக அளவு முஸ்லிம்கள் குடியேறி இருந்தனர்.

- கி. பி. 1656 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் கைப்பற்றிக் கொண்டனர். இவர்களின் ஆட்சியிலும் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை. முஸ்லிம்களின் வர்த்தக முயற்சியில் ஒல்லாந்தர் தலையிட்டனர். குறித்த சில தொழில்களை மட்டுமே முஸ்லிம்கள் செய்ய வேண்டுமென்றும் ஏற்றிறக்குமதி வர்த்தகத்தில் ஒல்லாந்தர்களுடன் சேர்ந்தே செயற்பட வேண்டுமென்றும் சட்டமியற்றினர்.

- ஒல்லாந்தர் சுதேச முஸ்லிம்களுடன் முரண்பாடு கொண்டிருந்த போதிலும் தமது சுய தேவைகளுக்காக இந்தோநேசிய முஸ்லிம்களை இலங்கைக்கு அழைத்து வந்தனர். அவ்வாறே அங்கு ஒல்லாந்தருக்கு எதிராக கிளர்ச்சி செய்த இளவரசர்கள், பிரதானிகள், மார்க்க அறிஞர்கள் முதலானோர் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டனர். இதனால் இலங்கை முஸ்லிம்களிடையே மலாய் சமூகம் தோற்றம் பெற்றது. இது முதல் அறேபிய, பாரசீக, இந்திய சுதேச முஸ்லிம்களை உள்ளடக்கியிருந்த இலங்கை முஸ்லிம் சமூகத்தில் மலாய் சமூகமும் ஓர் அங்கமாகியது. ஒல்லாந்தர் சுதேச முஸ்லிம்களுக்கு இழைத்த கொடுமைகளைப் போன்று இவர்களுக்கு கொடுமைகள் எதுவும் செய்யவில்லை.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல், சமூக கலாசார வாழ்வில் 18ம், 19ம் நூற்றாண்டு வரையான காலப்பிரிவு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தர்களாலும் இன்னல்களுக்குள்ளான முஸ்லிம்கள் கண்டி மன்னர்களின்

ஆதரவைப் பெற்று கண்டி அரசியலிலும் முக்கியத்துவம் மிக்கவர்களாகினர். மலையக ராஜதானியின் பல்வேறு பகுதிகளிலும் குடியமர்ந்த முஸ்லிம்கள் பொறுப்புவாய்ந்த அரச பதவிகளையும் வகித்தனர்.

- கண்டி அரசியலில் உள்நாட்டு நிர்வாகம் மிகத் திட்டமிட்ட அடிப்படையில் வகுக்கப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்டு அரசனின் நிர்வாகம் கிராமிய மக்கள் வரைக்கும் சென்றமை இக்காலப் பிரிவின் சிறப்பியல்பாகும். ஒழுங்கான சமூக, பொருளியல், தொழிநுட்ப முறையொன்று சமகால திணைக்கள முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த திணைக்களங்கள் ஒவ்வொன்றும் குறித்த சில நிர்வாகப் பணிகளுக்கு பொறுப்பாக இருந்தது.

- இத்திணைக்களங்கள் சிலவற்றின் பொறுப்பாளர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். கீர்த்தி சிறி ராஜசிங்கனின் (1747-1781) காலப்பிரிவில் மீன்பிடித்தலுக்கும் தவளம் வியாபார முறைக்குமான திணைக்களமாக இருந்த 'மடிகே பத்த' திணக்களத்தின் தலைமைப் பதவியான 'மடிகே பத்த நிலமே' பதவியை ஷேக் ஆலிம் எனும் முஸ்லிம் வகித்துள்ளார். இவரது மறைவுக்குப் பிறகு இவரது பேரப்பிள்ளையான ஷேக் அப்துல் காதர் என்பவரும் ஏழுகோறளையில் இப்பதவியை மௌலா முஹாந்திரம் என்பவரும் வகித்துள்ளனர். இவை தவிர மிகக் குறைவான எண்ணிக்கையிலானவர்கள் சிங்கள மக்களுக்கு மத்தியில் வாழ்ந்து கிராமத்தின் தலைமைப் பொறுப்புக்குரிய 'லேகம்' 'முஹாந்திரம்' போன்ற பதவிகளையும் முஸ்லிம்கள் வகித்துள்ளனர் எனக் கலாநிதி லோனா தேவராஜா தனது நூலில் குறிப்பிடுகிறார்.

- நாம் இதுவரை நோக்கிய கருத்துக்களைத் தொகுத்து நோக்கும் போது அநுராதபுர ராஜதானியின் தோற்றம் முதல் கண்டி அரசின் வீழ்ச்சி வரையான மிக நீண்ட இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆரம்பகால முதலேயே அறிமுகமாகி கடைசி வரைக்கும் நிலைத்து நின்ற வரலாறு முஸ்லிம்களுக்கு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கிறோம். பெரும்பான்மை சமூகத்தோடு ஒரு சிறுபான்மை சமூகம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தனது தனித்துவத்தைப் பேணிக் கொண்டே இணைந்து சுமுகமாக வாழ்ந்த வரலாறு இலங்கை முஸ்லிம்களின் சிறப்புக்கு சான்றாகின்றது.

### *முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு*

- ஒரு சமூகத்தின் சமூக, பண்பாட்டுப் பங்களிப்புகள் பற்றிய ஆய்வுகள் அனைத்தும் அதன் நம்பிக்கைகள், விசுவாசக் கோட்பாடுகள், பழக்க வழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் என்பவற்றின் பின் புலத்திலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். இலங்கை முஸ்லிம்களின் சமூக, பண்பாட்டு பங்களிப்புகள் பற்றிய ஆராய்வுக்கும் இக்கருத்து ஏற்புடையதாகவே அமைகின்றது.

- இலங்கை முஸ்லிம்களின் தோற்றமும், பரவலும் வணிக முயற்சிகளினடியாக நடைபெற்ற போதிலும், இலங்கை மக்களோடு நல்லுறவைப் பேணி நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டவர்களாக வாழ்நதனர். எனினும், முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ

இயல்புகளையோ அல்லது பண்பாட்டுக் கூறுகளையோ இழந்து இரண்டறக் கலந்த நிலையை வரலாற்றில் எங்கும் காணமுடியவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் முஸ்லிம்கள் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்த போதிலும், எக்குழுவினருக்கு மத்தியில் இருந்த போதிலும் தமது வாழ்க்கைக்கும், நம்பிக்கைகளுக்கும் அடிப்படையாக அமைகின்ற அல்குர்ஆன், சுன்னா என்பவற்றின் போதனைகளுக்கு அமைய நடந்துகொள்வதாகும். இலங்கை முஸ்லிம்களும், ஐரோப்பியரின் வருகை வரை குறிப்பாக ஆங்கிலேயரின் அரசியல் யாப்பு, சீர்திருத்தங்கள் முன்வைக்கப்படும் வரை சிங்கள சமூகத்தோடு தமது தனித்துவத்தைப் பேணிக்கொண்டே இணைந்து வாழ்ந்தனர். ஐரோப்பியர் தமது அரசியல் நோக்கங்களுக்காக இரு சமூகங்களுக்குமிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்ததாக கலாநிதி லோனா தேவராஜா குறிப்பிடுகிறார்.

இலங்கையின் பிரதான சமூகக் குழுவாக வாழ்ந்த முஸ்லிம்களின் சமூக பண்பாட்டுப் பங்களிப்புகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் நோக்கலாம்.

1. பொருளியல் பங்களிப்பு
2. அரசியல் பங்களிப்பு
3. தேசிய பாதுகாப்புப் பங்களிப்பு
4. மருத்துவத் துறைப் பங்களிப்பு
5. கலாசார பண்பாட்டுப் பங்களிப்பு

***பொருளியல் பங்களிப்புகள்.***

- இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் வரலாற்றில் முஸ்லிம்கள் வகித்த பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அநுராதபுர ஆட்சிக்காலம் முதல் இலங்கையின் சர்வதேச வணிகத்தை இலங்கை முஸ்லிம்களே பிரதிநிதித்துவப்படுத்தினர். இலங்கையை ஊடறுத்துச் சென்ற சர்வதேச வணிகப் பாதைகளில் இவர்களுக்கிருந்த பரிச்சயம், உள்நாட்டு வணிகத்தை சர்வதேச மயப்படுத்துவதற்கு உதவியது. அநுராதபுர ஆட்சிக்காலப் பிரிவின் முக்கிய துறைமுகமாக விளங்கிய மாந்தையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

- அநுராதபுர ஆட்சிக்காலப் பகுதிகளில் நடைபெற்ற படையெடுப்புக்களின் போது பாதிக்கப்பட்ட கால்வாய்கள், குளங்கள் என்பவற்றை புனர்நிர்மாணம் செய்யவும், சிதைந்து போன விவசாய நடவடிக்கைகளை மீளமைக்கவும் பயன்படுத்தப்பட்ட நிதி வெளிநாட்டு வணிகத்தின் மூலமாகவே பெறப்பட்டது. இலங்கையின் நீர்பாசன நாகரிகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பேராசரியர் ஆர். ஓ. எல். எச். குணவர்தன தரும் இத்தகவல் இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் முஸ்லிம்கள் வகித்த பங்கிற்கு ஆதாரமாகின்றது.

பொலனறுவைக் காலப்பிரிவில், கொழும்பு வளர்ச்சியடைந்த ஒரு துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் கொழும்பில் முஸ்லிம்கள் செறிவாக

வாழ்ந்துள்ளனர் என்பதைக் கொழும்பு சிலாசனம் உணர்த்துகின்றது. பொலனறுவையின் பொற்காலத்துக்கு உரிமை கோரும் மன்னனாக மகா பராக்கிரமபாகு (கி.பி.1156-1186) வின் காலப்பிரிவில் முஸ்லிம்கள் வணிகத்துறையின் அபிவிருத்திக்காக உருவாகியிருந்த ‘அந்தரங்கதுர’ என்ற மேல்சபையில் அங்கம் வகித்தமை வணிகத்துறையில் அவர்கள் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கு சான்றாகின்றது.

- இலங்கை மாணிக்கக் கற்களுக்கு பிரபல்யம் பெற்றிருந்தது. இலங்கையில் இரத்தனக்கற்களை சர்வதேச வர்த்தக உலகிற்கு முஸ்லிம்கள் தான் அறிமுகப்படுத்தினர். கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் அல் பெரூனி எழுதிய ‘கிதாபுல் ஜமாஹிர் பீ ம.்.ரிபதில் ஜவாஹிர்’ என்ற நூலில் இலங்கையின் இரத்தினக்கல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இது, அக்காலப் பகுதியில் இலங்கையின் இரத்தினக்கற்கள் பற்றிய அறிமுகம் முஸ்லிம் உலகுக்கு இருந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

- ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றும் காலப்பிரிவுகளிலும் தேசிய வர்த்தகத்தில் முஸ்லிம்களே முன்னணி வகித்தனர். கரையோரப் பகுதிகளில் இருந்து முஸ்லிம்கள் துரத்தப்படுவதற்கும் அவர்கள் பெற்றிருந்த வர்த்தக வலிமையே பிரதான காரணமாகியது. 19 ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டத்துறை அறிமுகமாகிய போது குறிப்பிடத்தக்களவு முஸ்லிம்களும் பெருந்தோட்டத்துறை உரிமயாளர்களாகக் காணப்பட்டனர். இது தவிர ஏற்கனவே இருந்த இரத்தினக்கல் வியாபாரத்திலும், நகை வியாபாரம், புடைவை வியாபாரம் என்பவற்றிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டனர். எனினும் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் முஸ்லிம்களின் வணிக வலிமை படிப்படியாகக் குறையத் தொடங்கியதைக் காணலாம்.

***அரசியல் பங்களிப்புகள்.***

- இலங்கையின் அரசியலிலும் முஸ்லிம்கள் அநுராதபுரம் ஆட்சிக்காலம் முதல் கண்டி அரசின் வீழ்ச்சி வரைக்கும் குறிப்பிடத்தக்கவர்களாகத் திகழ்ந்துள்ளனர். சுதந்திர இலங்கையின் பாராளுமன்றங்களிலும், அமைச்சரவைகளிலும் முஸ்லிம்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர். இது முஸ்லிம்கள் இலங்கை வரலாற்றின் ஆரம்ப காலம் முதல் இன்று வரை தேசிய அரசியலில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் இனமாக வாழ்ந்தமைக்கான சான்றாகும்.

  அநுராதபுர, பொலனறுவைக் காலங்களில் துறைமுக நகரங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் நாட்டின் வணிகத்துறைப் பகுதிக்கு ஒத்துழைப்பு நல்கியுள்ளனர்.

- பொலனறுவையின் முதல் மன்னனாக விஜயபாகு (கி.பி.1055-1070) மன்னனின் முடிசூட்டு விழாவுக்கு ஒத்துழைப்பு வழங்கி, மன்னனின் வலது கரமாக செயற்பட்ட முஸ்லிம் பிரமுகர் ஒருவர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. பெரிய தம்பி மரிக்கார் என அழைக்கப்பட்ட இவர் அரசனது விசுவாசத்துக்குரியவராகவும், வணிகத்துறை தொடர்பான இணைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். அவ்வாறே, பராக்கிரமபாகு மன்னனின் காலப்பிரிவிலும் தாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு அரசனின் நிதித்துறை ஆலோசகர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர்.

- இலங்கையின் தலைநகரங்கள் இடம் விட்டு இடம் நோக்கி நகர்ந்து சென்ற வேளைகளில் குறித்த தலைநகரங்களில் முஸ்லிம்களும் குடியேறி வாழ்ந்துள்ளனர்.

இக்காலப் பிரிவுகளில் அரசனின் ஆலோசகர்களாக, வெளிநாட்டுத் தூதுவர்களாகப் பணிபுரிந்த முஸ்லிம் பிரதானிகளை இலங்கையின் வரலாற்றில் காணலாம். கி.பி.1282 இல் புவனேகபாகுவின் தூதுவராக எகிப்துக்குச் சென்ற அபூ உஸ்மான், குருனாகலை அரசின் மன்னனாக முடிசூடிய வத்ஹிமி போன்றவர்கள் அதற்கான வரலாற்று உதாரணங்களாவர்.

- கண்டிய அரசியலில் முஸ்லிம்கள் வகித்த பங்கு மகத்தானதாகும். அரச திணைக்களங்களின் தலைவர்களாக, அரச தூதுவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. கி.பி1762 இல் இலங்கைக்கு வந்த ஆங்கிலேய தூதுவரான ஜோன் பைபஸை வரவேற்று அழைத்து வர மன்னனால் அனுப்பப்பட்ட உதுமான் லெப்பை, மடிகேபத்த நிலமே பதவியை வகித்த ஷேக் ஆலிம், ஷேக் அப்துல் காதர், கர்நாடக நவாப் முஹம்மத் அலியிடம் தூதுவராகச் சென்ற உதுமான் லெப்பை ஆகியோர் கண்டி அரசியலில் முஸ்லிம்கள் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கான ஆதாரங்களாக அமைகின்றன.

- அவ்வாறே கண்டியின் இறுதி மன்னனாக சிறி விக்ரம ராஜசிங்கனின் (கி.பி.1798-1815) காலப்பிரிவில் பிரதம அமைச்சராக இருந்த பிலிமத்தலாவை திசாவையுடனும், எஹெலேபொல திசாவையுடனும் இணைந்து பிரதம நீதிபதியாக ராஜ கருண கோபால் முதியான்ஸே ராலகாமி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்த முஸ்லிம் பிரமுகர் கடமையாற்றினார் என கலாநிதி லோனா தேவராஜா குறிப்பிடுகிறார். சுதந்திர இலங்கையிலும் முஸ்லிம்கள் அமைச்சர்களாகவும் வெளிநாட்டுத் தூதுவர்களாகவும் அரச துறைகளில் முக்கிய பங்காற்றியுள்ளனர். பாராளுமன்ற சபாநாயகர் பதவியைக் கூட முஸ்லிம்கள் வகித்துள்ளனர். இவை அனைத்தும் முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்புக்கான சான்றுகளாகும்.

### *தேசிய பாதுகாப்புப் பங்களிப்புகள்.*

- இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கும், பந்தோபஸ்துக்கும் முஸ்லிம்கள் பங்காற்றியுள்ளனர். தம்பதெனிய அரசியலில் கி.பி1270 இல் இராணுவத் தளபதியாகப் பணிபுரிந்த முஸ்லிம் தளபதி தாஹோர் அவ்வாண்டு உருவாகிய கிளர்ச்சியை அடக்கி 1272 இல் 1ம் புவனேகபாகு யாப்பஹுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சியமைப்பதற்கு காரணமாக அமைந்தார்.

- கோட்டை அரசிலும், கண்டி அரசிலும் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு பங்களிப்பு நல்கிய முஸ்லிம்களின் பெயர்கள் பதியப்பட்டுள்ளன. சீதாவக்கை இராச்சியத்தின் மன்னனாக மாயாதுன்னை (கி.பி.1521-1581) யின் காலப்பிரிவில் போர்த்துக்கேயருக்கு எதிராக மாயாதுன்னையின் இராணுவத்தில் இணைந்து போராடினர். அத்தோடு கல்லிக்கோட்டை மன்னனாக இருந்த ஸமோரினின் கடற்படை உதவியைப் பெற்றுக் கொடுக்கும் பணியிலும் ஈடுபட்டனர். இம்மன்னனது புதல்வரான 1ம் இராஜசிங்கன் (கி.பி.1582-1592) காலத்திலும் அரச படையில் இணைந்து போராடினர். போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் Queyroz தரும் தகவல்களின் படி மேற் குறித்த இராணுவ நடவடிக்கைகளில் துப்பாக்கிப் படைப் பிரிவாக முஸ்லிம்களே செயற்பட்டுள்ளனர்.

- கண்டி மன்னனான 1ம் விமலதர்மசூரியனின் ஆட்சிக்காலத்தில் கரையோரப் பாதுகாப்புக்கான தளபதியாகவும், பிரதான கட்டளையிடும் அதிகாரியாகவும் ஒரு முஸ்லிம் பணி புரிந்தார். இவர் போர்த்துகேயரால் கைது செய்யப்பட்ட போது இவரை விடுவிக்க மன்னன் 5000 வெள்ளி நாணயங்களைக்கூட வழங்கத் தயாரானமை இவர் மீது மன்னனுக்கிருந்த நம்பிக்கைக்கு ஆதாரமாகும். அவ்வதறே, 2ம் இராஜசிங்கனின் காலப்பிரிவில் (கி.பி.1634-1684) நடைபெற்ற வெள்ளவாயப் போரில் 'ஒடுபந்திய' என அழைக்கப்பட்ட முஸ்லிம்களின் ஒட்டகப்படை மிக முக்கிய பங்காற்றியது. இப்போரில் தானடைந்த வெற்றியை நினைவு கூறும் வகையில் ஹங்குரன்கெட்ட மகா தேவாலயத்துக்கு வழங்கிய அன்பளிப்புப் புடவையில் இந்த ஒட்டகப்படையை மன்னன் ஓவியமாக சித்தரித்து வைத்துள்ளான். கண்டியின் இறுதி மன்னன் வரை முஸ்லிம்கள் தேசிய இராணுவத்தில் முக்கிய பங்காற்றியுள்ளனர். கி.பி.1810 ஆம் ஆண்டு தேசிய இராணுவத்தில் 850 முஸ்லிம் வீரர்கள் இடம்பெற்றிருந்தனர்.

***மருத்துவத்துறைப் பங்களிப்புகள்.***

- இலங்கைக்கு யூனானி மருத்துவ முறையை அறிமுகப்படுத்தி அதனை ஒரு தனிப்பெரும் துறையாக விருத்தி செய்த பெருமை முஸ்லிம்களையே சாரும். இது இலங்கைக்கு எக்காலப்பிரிவில் அறிமுகமானது என்பது பற்றி உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. கி.பி. 10ம் நூற்றாண்டளவில் சின்னாசியாவிலுள்ள கோன்யாவின் ஸுல்தானின் புதல்வரான இளவரசர் ஜமாலுத்தீன் ஒரு மருத்துவராக விளங்கினார் என்றும் பேருவலையில் குடியேறிய இவரும், இவரது புதல்வர்களுமே யூனானி மருத்துவத்தை அறிமுகப்படுத்தியதாகவும் ஒரு வரலாற்றுக் குறிப்பு உள்ளது. கி.பி.7-9ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த மருந்துகளை சேமித்து வைப்பதற்கான ஸஸானிய இஸ்லாமிய மட்பாண்டங்கள் அநுராதபுரம், மிகிந்தலை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளின் போது புராதன மருத்துலமனையொன்றின் இடிபாடுகளுக்கிடையில் கண்டெடுக்கப்பட்டன. இது யூனானி மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றது.

  வரலாற்றாசிரியர் கலாநிதி லோனா தேவராஜா தரும் தகவலொன்றின் படி தம்பதெனிய மன்னனான 2ம் பராக்கிரமபாகு (கி.பி.1236-1270) தனது 22 ஆவது ஆட்சியாண்டில் பேசமுடியாத நிலைக்குள்ளான போது, அரசனின் வேண்டுகோளின் பேரில் டில்லி சுல்தான் வட இந்திய மாநிலமான சிந்து பிரதேசத்தின் 'புழி' பகுதியில் இருந்து ஸ்பெயின் வழி வந்த ஒரு மருத்துவரை இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும் அவரே, இலங்கையில் யூனானி மருத்துவத்தை அறிமுகப்படுத்தி வளர்த்ததாகவும் அறிய முடிகின்றது. வைத்தியரத்ன கோபால முதலிகே அன்சார் இப்னு துபைல் உடையார் என்ற பெயரை உடைய இம்மருத்துவரது சந்ததியினரே பிற்கால இலங்கையின் அரச மருத்துவர்களாக பணிபுரிந்ததாக அவர் குறிப்பிடுகிறார்.

- கண்டிய அரசின் யூனானி மருத்துவத்துறை சிறப்புற்று விளங்கியது. பல யூனானி மருத்துவர்கள் கண்டிய மன்னர்களுக்கு மிக நெருக்கமானவர்களாக இருந்துள்ளனர். கீர்த்தி சிறி ராஜசிங்கன் (1749-1781) காலப்பிரிவிலும் அதனைத் தொடர்ந்து வந்த

காலங்களிலும் 'பெஹேத்கே முஹாந்திரம் நிலமே' பதலியை வகித்து வந்த பல முஸ்லிம் மருத்துவர்களைக் காண முடிகின்றது. இவர்கள் கண்டி மாவட்டத்தில் உடுநுவரைத் தொகுதியில் அரசனால் நிலங்கள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். இத்தகைய மருத்துவர்கள் 'ராஜபக்ஷ வைத்தியதிலாகே கோபால முதலி' 'ராஜகருண வைத்தியதிலக கோபால முதலி' எனும் பெயர்களை வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இக்காலப்பிரிவில் கண்டியில் மட்டுமல்லாது இலங்கையின் கரையோர நகரங்களான கொழும்பு, காலி, மாத்தறை முதலிய பிரதேசங்களில் ஒல்லாந்தர்கள் நிறுவியிருந்த வைத்தியசாலைகளிலும் முஸ்லிம் மருத்துவர்கள் பணிபுரிந்தனர். கி.பி. 1791 ஆம் ஆண்டு மீராலெப்பை மேஸ்தியார், சேக் மரிக்கார், சேக் லெப்பை ஆகியோர் இவ்வைத்தியசாலைகளில் பிரதம மருத்துவர்களாக இருந்தனர். இன்று யூனானி மருத்துவம் இலங்கையில் பல்கலைக்கழக அந்தஸ்த்து பெற்ற ஒரு துறையாகவும் சுதேச மருத்துவத்துறையின் ஒரு கூறாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### *கலாசாரப் பண்பாட்டுப் பங்களிப்புகள்.*

- இலங்கை முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டுப் பங்களிப்புகள் சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் பங்களிப்புகளோடு ஒப்பு நோக்கி ஆராயப்பட முடியாத ஒன்றாகவே விளங்குகின்றது. எந்த ஒரு சமூகத்தின் கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களும் அந்த சமூகம் ஆட்சி பீடத்தில் அமர்ந்த நாடுகளிலும், நகரங்களிலுமே வளர்ச்சி பெறும். ஆட்சியாளர்களின் அனுசரணையின்றி இவை வளர்ச்சிபெற முடியாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

- இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜித்கள் ஓரளவுக்கு தனித்துவமான கட்டிடக்கலைப் பாரம்பரியமொன்றைக் கொண்டுள்ளது. முஸ்லிம்களின் பொதுவான கட்டிடக்கலை அம்சங்களான கும்மட்டம், அறபு எழுத்தணி மரபுகள் ஆரம்ப கால மஸ்ஜித்களில் காணப்படவில்லை. ஏனைய நாடுகளில் காணப்படாத 'ஹவுள்' உட்பள்ளி, வெளிப்பள்ளி என்பன இங்கு காணப்பட்டன. இலங்கை முஸ்லிம்கள் ஆரம்ப கால முதலேயே இஸ்லாமியப் பண்பாடுகளைப் பேணிக்காக்கும் இயல்புள்ளவர்களாக இருந்தமையால் சுதேசிகளின் வாழ்விலும் அதன் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருந்துள்ளனர்.

- ஆங்கிலேயர் காலப்பிரிவில் தமது பண்பாட்டுச் சின்னமாக அமைந்த துருக்கியத் தொப்பியை நீதிமன்றத்தில் அணிய அனுமதி தரப்படல் வேண்டுமென சட்டத்தரணி எம். ஸி. அப்துல் காதர் ஆரம்பித்து வைத்த உரிமைப் போராட்டம் ஆங்கிலேயருக்கு எதிரான நிறுவனமயப்படுத்தப்பட்ட அறிவுபூர்வமான போராட்டமாக அமைந்தது. இது சிங்களத் தலைவர்களுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான தூண்டுதலில் ஒன்றாக விளங்கியது.

- இவ்வகையில் பார்க்கும் போது, இலங்கையின் வரலாற்றில் அதன் ஆரம்ப கட்டங்களிலேயே அறிமுகமாகும் அறபிகளின் வழித்தோன்றல்களாக அமைந்த முஸ்லிம்கள் இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இரண்டறக்கலந்து வாழ்ந்த ஒரு சமூகமாக அமைகின்றனர். அநுராதபுர அரசு முதல் சுதந்திர இலங்கை வரைக்கும் அதற்குப் பின்னும் தேசத்தைக் கட்டியெழுப்புவதிலும், பாதுகாப்பதிலும், முஸ்லிம்கள்

ஆற்றியுள்ள பங்கு குறிப்பிடத்தக்கதாகும். மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமொன்றின் பங்குதாரர்கள் என்ற வகையில் இனி வரும் காலங்களிலும் எம்மால ஆற்ற முடியுமான எல்லாப் பணிகளுடாகவும் இத்தேசத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயலாற்ற பாடுபடுவது ஒவ்வொரு இலங்கை முஸ்லிமினதும் கடப்பாடாகும்.

**மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் :**

1. அமீன் எம்.ஐ.எம், இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (2000), அல்ஹஸனாத் பதிப்பகம், ஹெம்மாதகம.

2. சுக்ரி எம்.ஏ.எம், இலங்கை முஸ்லிம்கள் தொன்மைக்கான வரலாற்றுப் பாதை (2010), ஏ.ஜே பதிப்பகம், கொழும்பு

3. அஸீஸ் ஐ.எல்.எம், இலங்கையில் சோனகர் வரலாறு, சோனகர் இஸ்லாமிய கலாசார நிலையம், கொழும்பு.

4. மரிக்கார், ஏ.ஐ.எல் குழு, இலங்கையில் சோனகர் பற்றிய கடந்தகால நினைவுகள் (1981), சோனகர் இஸ்லாமிய கலாசார நிலைய வெளியீடு

5. அமீன் எம்.ஐ.எம், முன்னோடிகள் (2010), அல்ஹஸனாத் பதிப்பகம், ஹெம்மாதகமை.

**தேர்ச்சி 08 : தனிமனிதன், குடும்பம், சமூகம் தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோட்டத்தையும் அந்நிறுவனங்களுக்கு இடையிலான உறவையும், சமூக உருவாக்கத்துக்கான பங்களிப்புக்களையும் விளங்கி எடுத்துக் காட்டுவதோடு சமூக நல்லிணக்கத்துக்கான வழிமுறைகளையும் அதற்காக இஸ்லாமிய நாகரிகம் வழங்கியுள்ள அடிப்படைகளையும், முன்மாதிரிகளையும் விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 8.1 : முஸ்லிம் சமூகத்தில், தனிமனிதனதும், குடும்பத்தினதும் பங்கை எடுத்துக் காட்டுவார்.**

**பாடவேளைகள் : 20**

**கற்றல் பேறுகள் :**

- சமூகவியல் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விபரிப்பார்.
- சமூகத்தில் தனிமனிதனின் பங்கை எடுத்துக் காட்டுவார்.
- சமூகத்தில் குடும்பத்தின் பங்கை எடுத்துக் காட்டுவார்.
- தனிமனிதனும் சமூகமும் இறைவனுடன் கொள்ள வேண்டிய உறவினை விளக்கிக் கூறுவார்.
- சீரிய சமூக உருவாக்கத்தில் பல்தரப்பினரதும் பங்கை எடுத்துக் காட்டுவார். இஸ்லாமிய குடும்பம் தனது இரட்சகனுடனும் சக குடும்ப உறுப்பினர்களுடனும் கொண்டிருக்க வேண்டிய தொடர்புகளின் ஒழுங்கை விபரிப்பார்.
- இஸ்லாமிய குடும்பம் தனது உறவினர்கள், அயலாருடனும் சமூகத்துடனும் கொண்டிருக்க வேண்டிய தொடர்புகளின் ஒழுங்கை விபரிப்பார்.
- ஒரு சமூகம் அதன் உறுப்பினர்கள், குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் தனது இரட்சகனுடன் பேண வேண்டிய தொடர்புகளையும் அவற்றின் பால் கொண்டிருக்கும் கடமைகளையும் விபரிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

சமூகவியல் என்பது தனித்து வாழ முடியாத உயிரினங்களின் வாழ்க்கைக் கோலத்துடன் தொடர்பான ஓர் அறிவியலாகும். உயிரினங்கள் மத்தியில் மனிதன் தனிச்சிறப்பு வாய்ந்தவன், அவனது வாழ்க்கைக் கோலம் வேறுபட்ட நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் முரண்பாடுகளையும் காலத்தால் மாற்றமடையக் கூடிய இயல்புகளையும் கொண்டது. ஆகவே சமூகவியலில் மனிதனே பிரதாண தலைப்பாகின்றான்.

சமூகவியல் என்றால் என்ன என்பதற்கு சமூகவியல் அறிஞர்கள் பல்வேறு விதமான வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர். அவற்றுள் சில வருமாறு:

- சமூகவியல் என்பது மனித சமூக உறவுகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான ஆய்வு

- மனித இனம்சார்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களின் அபிவிருத்தி, கட்டமைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் நடத்தைகள் தொடர்பான முறையான ஆய்வு

- மனித சமூகம், கலாசாரம், மற்றும் குழுக்களுக்கிடையிலான தொடர்புகள் பற்றிய முறையான ஆய்வு

  மேற்கூறப்பட்ட வரைவிலக்கணங்களின்படி சமூகவியல் ஆனது தனிநபர்கள், குடும்பங்கள், சமூகங்கள், இனங்கள், அவற்றின் விருத்தி, சமய நம்பிக்கைகள், கோட்பாடுகள், ஒழுக்கங்கள், அவற்றுக்கிடையிலான வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், அவற்றின் கல்வி பொருளாதாரம் அரசியல் சார்ந்த நடவடிக்கைகள், சமூக சூழல் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள், தனிநபர்களுக்கிடையிலான வேறுபாடுகள், வரலாற்றுப் பாதையில் சமூகங்கள் அடைந்து வந்த மாற்றங்கள் போன்ற விடயப்பரப்புக்களை உள்ளடக்கியதாகும்.

- ஐரோப்பிய மறுமலர்ச்சியைத் தொடர்ந்து புதிதாகத் தோன்றிய மனிதன் பற்றிய எண்ணக்கருவில் ஆன்மாவுக்குரிய இடம் புறக்கணிக்கப்பட்டது. மனிதன் பரிணாமவாத அடிப்படையில் தோன்றியவன் எனக் கூறி நாகரிகமடைந்த ஒரு விலங்காகவே மனிதன் நோக்கப்பட்டான். மனிதனது பிரச்சினைகளுக்கு உயிரியல் உளவியல் அடிப்படைகளில் மனிதனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலமாக மாத்திரமே தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. இதனால்தான் நவீன சமூகவியல்சார் கோட்பாடுகள் அனைத்தும் முழுமையான சடவாதப் போக்குடையவைகளாகக் காணப்படுகின்றன.

- இஸ்லாமிய நாகரிகத்தில் மனிதன் ஆன்மா உடல் என்ற இரு கூறுகளைக் கொண்டவனாகவே நோக்கப்படுகின்றான். ஆன்மாவும் உடலும் சமமாகப் போசிக்கப்படுகின்றபோதுதான் அவன் இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைவான். அவன் உலகிற்கு பரிபூரணமாக வந்தவன். பரிணாமம் பெற்றவனல்ல. அவன் அல்லாஹ்வின் உயர்ந்த படைப்பு. உலகில் இறைவனின் சட்டத்துக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டிய பிரதிநிதி. இவை மனிதன் பற்றிய இஸ்லாமிய நோக்கு. இந்நோக்கின் அடிப்படையில் எழுந்த சமூகவியல்சார் கோட்பாடுகள் அனைத்திலும் ஆன்மீக சிந்தனை சமபங்கு வகிப்பதைக் காணமுடியும்.

- மேலைத்தேய சமூகவியல் சிந்தனைக்கும் இஸ்லாமிய சமூகவியல் சிந்தனைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை சமூகவியலின் உள்ளடக்கமாக அமையக் கூடிய அனைத்துத் தலைப்புக்களிலும் அவதானிக்க முடியும். உதாரணத்திற்காக மனிதர் மத்தியில் காணப்படும் இனரீதியான பிரதேச ரீதியான வேறுபாட்டை எடுத்துக்கொண்டால் மேற்கத்திய சமூகவியல் அதனை பரிணாம அடிப்படையில் தோன்றிய வேறுபாடுகள் எனக்குறிப்பிடுகிறது. ஆனால் இஸ்லாமிய அடிப்படையில் இவ்வேறுபாடுகள் அனைத்தும் தனித்துவமானவை, விஷேடத்துவமானவை. அவற்றைக் கொண்டு சமூகங்கள் இனங்காணப்படுகின்றன. சிறப்பம்சங்கள் பரிமாற்றப்படுகின்றன. இதன் மூலம் மனித சமூகங்கள் பரஸ்பரம் வளர்ச்சியடைகின்றன. இதுதொடர்பான அல்குர்ஆனின் போதனை மிகவும் தெளிவானதாகும். (பார்க்க 49:13)

**முஸ்லிம் சமூகத்தில் தனிமனிதன்.**

- தனிமனிதனே சமூகத்தின் அடிப்படையாவான். இதனால் மனிதன் தனித்து வாழ முடியாது என்பது சமூகவியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு யதார்த்தமாகும். இஸ்லாமியக் கோட்பாடுகளின்படி தனிமனிதன் சமூகத்தின் உருவாக்கத்ததிற்கும் அதன் வெற்றிக்கும் பங்களிப்புச் செய்யும் அதேவேளை அவன் தனிப்பட்ட முறையில் தனக்கு முதற் பொறுப்பாளியாகவும் இருக்கிறான். மறுமையில் ஒவ்வொரு தனிமனிதனும் தனித்தனியாகவே அல்லாஹ்வினால் விசாரிக்கப்படுவான்.

- இவ்வகையில் தனிமனிதனுக்குரிய வழிகாட்டல் இஸ்லாத்தில் தெளிவானதும் முழுமையானதுமாகும். அதை தனிமனிதன் தனது இரட்சகனுடன், தனி மனிதன் தனது நப்ஸுடன் தனிமனிதன் தனது குடும்பத்துடன், தனிமனிதன் தனது சமூகத்துடன் என வகுத்து நோக்க முடியும்.

**1. தனது இரட்சகனுடன்**

- இஸ்லாம் ஒவ்வொரு தனிமனிதனும் அல்லாஹ்வுடனான தொடர்பை எப்போதும் சீராக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன் அதற்கான தெளிவான வழிகாட்டல்களையும் வழங்குகிறது. ஆகவே அல்லாஹ்வுடனான தொடர்பு என்றால் என்ன என்று முதலில் நோக்குவோம்.

- தகவலை அல்லது நட்பை அல்லது கண்ணுக்குப் புலப்படக்கூடிய அல்லது புலப்படாத ஏதேனும் ஒன்றை பரிமாறிக் கொள்ளத்தக்க விதமாக இன்னொருவருடன் உறவைப் பேணுவதே தொடர்பு எனப்படுகிறது. இத்தொடர்பு நேரடியானதாகவோ அல்லது இன்னொருவர் ஊடாகவோ அல்லது தொலைபேசி, வானொலி, பத்திரிகை, கடிதம் போன்ற சாதனங்கள் ஊடாகவோ அல்லது உணர்வலைகளினூடாகவோ இருக்க முடியும்.

- அல்லாஹ் அனைத்துப் பௌதிக விதிகளுக்கும் சொந்தக்காரன். அவன் எந்த ஒரு பௌதீக விதிக்குள்ளும் தன்னை உட்படுத்திக்கொள்ளாமல் மிகச் சுதந்திரமானவனாக இருக்கின்றான். அத்தகையவனை பௌதிக வரம்புகளால் பின்னிப் பிணைக்கப்பட்ட மனிதனால் எப்படித் தொடர்பு கொள்ள முடியும் என்பது முக்கியமான வினாவாகும்.

- அல்லாஹ்வைத் தொடர்புகொள்வதற்கு மனிதனிடம் காணப்படக்கூடிய ஒரே ஒரு சாதனம் எண்ணஅலைகளின் பிறப்பிடமாகிய உள்ளம் மட்டுமே. அல்லாஹ்வைப் பார்க்க முடியாது. அவனைத் தொட்டுணர முடியாது. எந்த ஒரு சாதனத்தின் மூலமும் தொடர்பு கொண்டு நேரடியாக அவனுடன் பேச முடியாது. ஆனால் உள்ளத்தால் அவனை நினைக்க முடியும். அவன் எம்மைப் பார்த்துக் கொண்டு இருப்பது போன்ற உணர்வுடன் இருக்க முடியும். இது போன்ற உளச் செயற்பாடுகள் மூலமே அல்லாஹ்வுடன் தொடர்பில் இருக்க முடியும். எனவே இஸ்லாம் உள்ளம் இறை தொடர்பில் இருக்கவேண்டுமாயின் அது எப்போதும் தூய்மையானதாகவும் உள நோய்களில் இருந்து சுகம் பெற்றதாகவும் லௌஹீக எண்ணங்களில் இருந்து தொடர்பு துண்டிக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். ஆகவேதான் இஸ்லாம் உளத் தூய்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அதற்கான பயிற்சியையும் வழங்குகிறது.

அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. யார் தன் உள்ளத்தை பரிசுத்தப்படுத்திக் கொள்கிறாறோ அவர் வெற்றியடைந்த விட்டார். யார்...............(அல்மு.ஃமினூன்:1)

உடலில் ஒரு மாமிசத் துண்டு இருக்கிறது. அது சீர்பட்டால் உடல் முழுதும் சீர்படும் அது சீர் கெட்டால் உடல் முழுதும் சீர் கெடும் என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்

## உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தலும் இறைதொடர்பை ஏற்படுத்தலும்.

உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தவும் இறை தொடர்பை ஏற்படுத்தவும் இஸ்லாம் பல வழிகளைக் கற்றுத் தருகிறது. அவை வருமாறு...

1. ஈமான்
2. தவ்பா
3. திக்ர்
4. பிரார்த்தனை
5. குர்ஆன் திலாவத்
6. தொழுகை
7. நோன்பு
8. தர்மம்
9. ஹஜ்
10. இஹ்லாஸ்

மேற்கூறப்பட்ட வழிமுறைகள் அனைத்தும் அவற்றின் பூரண அர்தத்துடன் நிறைவேற்றப்படுதன் மூலம் உள்ளம் பரிசுத்தமடைகிறது. அத்தோடு உள்ளத்தில் இறைதொடர்பும் ஏற்படுகிறது.

அல்லாஹ் பற்றிய தெளிவில்லாமல் மேற்கொள்ளப்படுகின்ற மனப்பயிற்சிகள், தியானம் போன்ற ஆன்மீக செயற்பாடுகள் மூலம் ஓரளவு உள்ளத்தைக் கட்டுப்படுத்த முடிந்த போதிலும் அவற்றின் மூலம் இறைதொடர்பை ஏற்படுத்திக் கொள்ள ஒருபோதும் முடியாது. தொடர்பாடல் வழிமுறையொன்றின் மூலம் ஒருவருடன் தொடர்புகொள்ள இரு விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

1. இருவரையும் தொடர்புபடுத்தக் கூடியதாக இருக்கவேண்டும்.
2. இருசாராரும் பொருந்திக் கொண்டதாக இருக்கவேண்டும்.

அல்லாஹ்வுடன் தொடர்பு கொள்ள அவன் காட்டித்தந்த வழிமுறையல்லாமல் வேறொன்றினை அவன் பொருந்திக் கொள்வதில்லை என்பதே இஸ்லாமிய நம்பிக்கையாகும். இஸ்லாம் காட்டிய வழிமுறைகளினூடாக இறைதொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயலும் ஒரு முஸ்லிம் நம்பிக்கை, மனஓர்மை, தியாகம், ஆர்வம், விடாமுயற்சி என்பவற்றுக்கேற்பவே அடைவுகளைக் காண்பார்.

## இறைதொடர்பின் பயன்கள்

ஒரு தனிமனிதன் அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதால் ஏற்படும் பயன்கள் ஏராளம். அவற்றுள் சில வருமாறு

1. உள்ளம் பலம் பெறுகிறது

2. உள்ளத்தில் நம்பிக்கை உருவாகிறது
3. பொறுமையும் மனஆறுதலும் கிடைக்கின்றன.
4. துணிவும் தைரியமும் ஏற்படுகின்றன.
5. மனச்சோர்வும் விரக்தியும் நீங்குகின்றன.
6. நன்மைகள் செய்வதில் ஆர்வம் ஏற்படுகிறது.
7. பாவங்கள் செய்வதில் வெறுப்பு ஏற்படுகிறது
8. உறவுகளை சீராக்குகிறது.
9. நீதி நேர்மையுடன் செயற்படத் தூண்டுகிறது.
10. மறுமை வெற்றிக்குக் காரணமாய் அமைகிறது.

முஸ்லிம் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனும் குறைந்தபட்ச அளவிலாவது இறைதொடர்பை ஏற்படுத்திக் கொள்வது கட்டாயமாகும். ஆகவேதான் இஸ்லாம் சில வணக்கங்களை ஒவ்வொரு தனிநபர் மீதும் பர்ளு ஐன் என்ற விதத்தில் கடமையாக்கியுள்ளது.

## 2. தனது நப்ஸுடன்

“தனது நப்ஸுடன்” என்பதன் மூலம் ஒரு முஸ்லிம் தனது உடல் உள அறிவுத் தேவைகள் விடயத்தில் எவ்வாறு நடந்துகொள்வார் என்பதையே குறிப்பிடுகிறது. இம்மூன்றும் மனிதனுக்கு இன்றியமையாதவைகளாகும். இஸ்லாம் இவற்றின் அவசியத்துக்கும் முக்கியத்துவத்துக்கும் ஏற்ப வழிகாட்டல்களை வழங்குகிறது.

### அ) உடல்

இஸ்லாமிய வழிகாட்டலின்படி உடல் என்பது அல்லாஹ் எமக்களித்த அமானிதமாகும். அதை முறையாகப் பேணி அதன் தேவைகளை நல்லமுறையில் நிறைவேற்றி ஆரோக்கியமாகவும் அழகாகவும் வைத்திருப்பது கடமையாகும். இவ்வகையில் உணவு, உடல் வலிமை, தூய்மை போன்றவற்றிற்கு இஸ்லாம் முக்கியத்துவம் வழங்குகிறது

*உணவு:*

உடலியல் தேவைகளில் உணவு பிரதானமான ஒன்றாகும். உடலுக்குத் தீங்கிழைக்கக் கூடிய சகல விதமான உணவு வகைகளையும் குடிவகைகளையும் இஸ்லாம் ஹராமாக்கியுள்ளது. அதேநேரம் ஹராமான உணவைத்தவிர உயிரைக் காப்பற்ற வேறு எந்த ஓர் உணவும் இல்லாத நிர்ப்பந்தமான சூழலில் ஹராமாக்கப்பட்டதைக் கூட உண்ண அனுமதிக்கிறது. இது உடலைப் பாதுகாக்க இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

உண்ணல் குடித்தல் விடயத்தில் ஆரோக்கியமான வழிமுறைகளைக் கைக்கொள்ளுமாறு இஸ்லாம் போதிக்கிறது. அவற்றுள் சில வருமாறு

- ✓ சாப்பாட்டுக்கு முன் கை கழுவுதல்
- ✓ உண்ணல் குடித்தலில் நடுநிலைமை பேணல்
- ✓ அமர்ந்த நிலையில் உண்ணலும் குடித்தலும்
- ✓ கூட்டாக இருந்து மகிழ்ச்சியாக உண்ணல்

*உடல் வலிமை:*

உடல் வலிமை இஸ்லாத்தில் வலியுறுத்தப்படுகின்ற ஒன்றாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உடல் வலிமைமிக்க மு.்.மின் பலவீனமான மு.்.மினைவிட அல்லாஹ்வுக்கு மிக உவப்பானவர் ஆவார். உடல் வலிமை பேணுவதற்காக இஸ்லாம் காட்டும் வழிமுறைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ✓ உடற்பயிற்சி
- ✓ முறையான தூக்கம்
- ✓ சிறந்த உணவுப் பழக்கம்
- ✓ நோய்க் காப்பு
- ✓ நோய் ஏற்பட்டுவிட்டால் சிகிச்சை செய்தல்
- ✓ உடலைப் பலவீனப்படுத்தும் தீய காரியங்களை ஹராமாக்கியிருத்தல்

*தூய்மை:*

உடலும் உடையும் வாழுமிடமும் சுத்தமாக இருப்பதே தூய்மையாகும். இஸ்லாம் இதற்கு கூடிய முக்கியத்துவம் வழங்கியுள்ளது. சுத்தம் ஈமானின் பாதி என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். அல்லாஹ் பாவமன்னிப்புக் கோருபவர்களையும் தூய்மையானவர்களையும் நேசிக்கினறான் என்று அல்குர்ஆன் கூறுகிறது.

### ஆ) உள்ளம்

உள்ளம் அல்லாஹ்வின் படைப்புகளில் மிகவும் அற்புதமான ஒன்று. ஆன்மீகம் உளவியல் என்ற இரு கலைகளுக்கு உள்ளமே அடிப்படையாகும். பௌதிக வரம்புகளுக்கு அப்பால் உள்ளவற்றுடனான உள்ளத்தின் ஈடுபாடு ஆன்மீகம் எனப்படுகிறது. மனிதனின் ஏனைய நடத்தைகளில் காணப்படும் உள்ளத்தின் செல்வாக்கு உளவியல் எனப்படுகிறது.

உளவியல் ரீதியாக மனிதன் பாதிக்கப்படுகின்ற போது தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். அதன் மூலம் அவன் சிலவேளை புத்திக் கோளாறு (மன நோயாளி), பொறாமை, குரோதம், நயவஞ்சகம், குற்றச்

செயல்களில் நாட்டம், தீவிரவாதம், அச்சம், தூக்கமின்மை, மனச்சோர்வு, விரக்தி, மனஅழுத்தம், பிடிவாதம் போன்ற நடுநிலை தவறிய நிலைகளுக்கு ஆளாகலாம்.

இவ்வாறான உளப்பாதிப்புக்கள் ஏற்பட பின்வருவன காரணமாகலாம்

1. அளவு கடந்த ஆசைகள்
2. தோல்விகளைத் தாங்க முடியாமை
3. மற்றவர்களோடு தன்னை ஒப்பிடுதல்
4. சமூக அநீதிகள்
5. பாதுகாப்பின்மை
6. தவறான மனப்பதிவுகள்
7. உடற் கோளாறுகள்
8. அறியாமை
9. ஓய்வின்மை
10. தனிமை உணர்வு

இப்பாதிப்புக்களில் இருந்து தனிநபர்களைக் காப்பதற்கான இஸ்லாமிய வழிமுறைகள்

1. தனிநபர்களை ஆன்மிக செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.
2. உளவலுவூட்டற் போதனைகள்
3. சமூகக் கூட்டுறவையும் கூட்டுப் பொறுப்பையும் மேம்படுத்தல்
4. தீய மனப்பதிவுகளை உண்டாக்கும் விடயங்களை தடைசெய்தல்
5. இறையச்சம் எனும் சுயகட்டுப்பாட்டைப் பழக்கப்படுத்தல்

மேற்கூறப்பட்ட வழிகாட்டல்கள் பின்பற்றப்படும் போது முஸ்லிம் சமூகத்தில உள்ள ஒரு தனிமனிதன ஒருபோதும் உளவியல் கோளாறுகளுக்கு ஆளாகமாட்டான். அவனது உளநிலை எப்போதும் சீரானதாக இருக்கும். எனவே ஒவ்வொரு தனிமனிதனும் இது விடயத்ததில் கவனம் செலுத்தி சிறந்த உளநிலையை ஏற்படுத்திக் கொள்வது அவனது கடமையாகும்.

### இ) அறிவு

ஒவ்வொரு தனிமனிதனும் அறிவைத் தேடிப் பெறவேண்டும் என இஸ்லாம் பணிக்கிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் '' அறிவைத் தேடுதல் ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.'' (இப்னு மாஜா) ''கற்றவர்களும் கல்லாதவர்களும் சமமாவார்களா?'' (சுமர் :9) என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

மேலும் தன் அடியார்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் அஞ்சுபவர்கள் கற்றறிந்தவர்களே'' (பாதிர் : 28) எனவும் கூறுகிறது. நபியவர்கள் கூறினார்கள் ''கல்வி மு.்.மினின் காணாமல்போன சொத்து. அதைக் கண்ட இடத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்''

### 3. தனிமனிதன் குடும்பத்துடன்

குடும்பம் என்பது இரத்த உறவின் மூலம் உருவாகும் ஒரு சமூக நிறுவனமாகும். பாட்டன், பாட்டி, தாய், தந்தை, சகோதரர்கள், கணவன், மனைவி, பிள்ளைகள் என்போர் இங்கு மிக நெருக்கத்துக்குரிய உறவுகளாவர். இத்தகைய உறவுகள் உருவாவதற்கு ஆண்பெண் என்ற இரு தனிநபர்களே காரணமாகின்றனர். இவ்வாறு உருவாகும் குடும்பத்திற்கும் உறவுக்கும் இஸ்லாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. (நிஸா: 05)

மனைவி கணவனுடன், கணவன் மனைவியுடன், பெற்றார்கள் பிள்ளைகளுடன், பிள்ளைகள் பெற்றாருடன்..

முஸ்லிம் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனிநபரும் இக்குடும்ப உறவை மதித்து அதனைப் பேணி நடப்பதும் குடும்பத்துக்கான பொறுப்புக்களை மேற்கொள்வதும் அவனது மார்க்கக் கடமையாகும். இவ்வுறவைத் துண்டிப்பதையும் உறவுகள் விடயத்ததில் தன்மீதுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றாமல் இருப்பதையும் இஸ்லாம் வண்மையாகக் கண்டிக்கிறது.

குடும்பம் திருமண உறவின் மூலம் உருவாகும் ஒரு சமூக அலகாகும். இதில் உள்ள தனிநபர்கள் இரத்த உறவால் பிணைக்கப்பட்டவர்கள். குடும்பம் விரிவடையும் இயல்பைக் கொண்டது. அவ்வாறு விரிவடையும் போது உறவினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். காலப்போக்கில் பல குடும்பங்கள் தோன்றி வம்சம் கோத்திரம் குலம் என்ற பெரிய சமூக அலகுகளை அது தோற்றுவிக்கும். தொடக்கத்தில் குடும்பம் தந்தை, தாய், பிள்ளைகள் ஆகியோரையே உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.

இஸ்லாமிய சமூக அமைப்பில் குடும்பத்தின் தலைமைத்துவம் தந்தையைச் சார்ந்தாயினும் குடும்பத்தில் அதிகூடிய அந்தஸ்துக்குரியவளாக தாயே மதிக்கப்படுகிறாள்.

(குடும்ப கௌரவத்தைப் பாதகாத்தல்)

### 4. தன் சமூகத்துடன்

ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுப்பண்புகளின் அடிப்படையில் ஒன்றுபட்ட பல சமூக நிறுவனங்களின் கூட்டமைப்பே சமூகமாகும். இவ்வகையில் மொழி அடிப்படையில், இன அடிப்படையில், மதஅடிப்படையில், வயதடிப்படையில், தொழிலடிப்படையில், தேசிய அடிப்படையில் என பல்வேறு சமூகங்கள் உலகில் காணப்படுகின்றன. ஒரு சமூகத்தின் அழகிய சிறப்பம்சம் அதன் பன்மைத்துவமாகும். இது பற்றி அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

மனிதர்களே! நிச்சயமாக நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம் . பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன். (ஹுஜுராத் : 13)

மேற்படி அல்குர்ஆன் வசனம் பன்மைத்துவத்தின் நோக்கம் தத்தமது சிறப்பம்சங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பதை தெளிவாகக் குறிப்பிடுகிறது. அத்துடன் தனிமனிதனின் சிறப்பு இறைபக்தியினால் தீர்மானிக்கப்படுகிறது என்ற விடயமும் சுட்டிக் காட்டப்படுகிறது. இதன்மூலம் ஒவ்வொரு தனிமனிதனும் பன்மைத்துவ சமூகத்தினுள் இறைபக்தியை வெளிப்படுத்த வேண்டும் என்ற முக்கியமானதோர் விடயம் முன்வைக்கப்படுகிறது.

பன்மைத்துவ சமூகத்தினுள் சிறந்த தனிமனிதனை உருவாக்குவதற்கு இஸ்லாம் தரும் வழிகாட்டல்கள் மிகவும் உயர்வானவை. அவற்றை கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய முடியும்

- சமூக வளர்ச்சிக்குப் பங்காற்றுதல்
- சமூகத்தின் பாதுகாப்புக்கு ஒத்துழைத்தல்
- மன்னிக்கும் மனப்பாங்கு
- தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படுதல்
- நீதி நேர்மையாய் நடத்தல்
- நம்பிக்கை நாணயமாய் நடத்தல்
- சகோதரத்துவத்தைப் பேணல்

சமூகத்தினுள் வாழும் ஒரு முஸ்லிம் இவ்வழிகாட்டல்களை அல்லாஹ்வின் திருப்தியை நாடி மேற்கொள்கின்ற போது அல்லாஹ்விடம் கண்ணியத்துக்குரியவனாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறான்.

## 5. முஸ்லிம் பிற படைப்புக்களுடன்

பிறபடைப்புக்கள் எனும் போது மனிதன் அல்லாத ஏனைய உயிருள்ள உயிரற்ற அனைத்தும் நாடப்படுகின்றன. இவை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் மிகத் தெளிவாக அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புவியில் உள்ள அனைத்தும் மனிதனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் அவை அனைத்தும் மனிதனுக்குரியவளங்களாகும். மனிதன் புவியில் பிரதிநிதி. ஆகவே புவியில் உள்ள வளங்களை பயன்படுத்துவதும் பாதுகாப்பதும் மனிதனது உரிமையும் பொறுப்புமாகும். இவ்வடிப்படைச் சிந்தனையை மனதிற்கொண்டே ஒவ்வொரு முஸ்லிமும் செயற்பட வேண்டும்.

இவ்வகையில் இஸ்லாம் தரும் வழிகாட்டல்களாவன

1. படைப்பினங்களுக்கிடையே சூழல் சமநிலை பேணல்.
2. வளங்களை அனுபவிப்பதில் சமநிலை பேணல்
3. வளங்களின் சொந்தக்காரன் அல்லாஹ் என்றவகையில் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ளவனாக இருத்தல்.

மேற்கூறப்பட்ட வழிகாட்டல்கள் பொதுவானதாகும். இவையல்லாமல் உயிருள்ள படைப்புக்கள் விடயத்தில் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி தனியாகக் குறிப்பிடுகிறது.

1. விலங்கினங்களும் மனிதனைப் போன்ற சமூகப்பிராணி எனப் போதிக்கிறது
2. அல்லாஹ்வின் அன்பைப் பெறவேண்டுமாயின் உயிரினங்கள் மீது அன்பு செலுத்துவதை கடமையாக்கியுள்ளது.
3. உயிரினங்களின் தேவைகளை புரிந்து செயல்படுவதை முன்னுரிமைப் படுத்தியுள்ளது.

சில உயிரினங்களை அறுத்து உண்பதற்கு இஸ்லாம் அனுமதித்துள்ளமையும் அறுத்துப்பலியிடும் சில வணக்கங்களை இஸ்லாம் அறிமுகம் செய்துள்ளதையும் வைத்து சிலர் இஸ்லாத்தில் ஜீவகாருண்யம் இல்லை என விமர்சிக்கின்றனர்.

இவ்விமர்சனத்திற்கு இரு கோணங்களில் பதில் கூற முடியும்

- பௌதீக நோக்கில் உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் பௌதீக சட்டத்திற்கு அமையவே வாழ்கின்றன. முயல் தாவரத்ததை உண்கிறது. புலி முயலை வேட்டையாடி உண்கிறது. நாய் தாவர உணவையும் உண்கிறது. முயலையும் வேட்டையாடி உண்கிறது. இப்பௌதிக விதிப்படியே மனிதனும் தாவரத்தை உண்கிறான். மாமிச உணவையும் உண்கிறான். ஆகவே பௌதிக சட்டத்தில் மனிதன் மிருகங்களை அறுத்து அல்லது வேட்டையாடி அதன் மாமிசத்தை உண்பது குற்றமானதல்ல.
- இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் அனைத்தும் அல்லாஹ்வின் சட்டத்துக்கமையவே செயல்படுகின்றன. அல்லாஹ்வின் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட எந்த ஒன்றையும் அனுபவிப்பது குற்றமல்ல. இவ்வகையில் அல்லாஹ் மனிதனுக்கு உண்ண அனுமதித்த விலங்கினங்களை அவன் கூறியபிரகாரம் உண்பதும் குற்றமானதல்ல

ஆகவே முஸ்லிம் சமூகத்தில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனும் ஏனைய படைப்பினங்கள் விடயத்தில் தனக்குள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இஸ்லாத்தின் வழிகாட்டல்களைப் பின்பற்றி நடப்பது அவனது கடமையாகும்.

**குடும்பம்**

குடும்பம் விரிவடையும் இயல்பைக் கொண்டது. அவ்வாறு விரிவடையும் போது உறவினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். காலப்போக்கில் பல குடும்பங்கள் தோன்றி வமிசம் கோத்திரம் குலம் என்ற பெரிய சமூக அலகுகளை அது

தோற்றுவிக்கும். தொடக்கத்தில் குடும்பம் தந்தை, தாய், பிள்ளைகள் ஆகியோரையே உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.

இஸ்லாமிய சமூக அமைப்பில் குடும்பத்தின் தலைமைத்துவம் தந்தையைச் சார்ந்ததாயினும் குடும்பத்தில் அதிகூடிய அந்தஸ்துக்குரியவளாக தாயே மதிக்கப்படுகிறாள்.

ஒரு முன்மாதிரி முஸ்லிம் குடும்பம் தமது இரட்சகனுடனான தொடர்பையும் குடும்ப உறுப்பினர்களுடனான தொடர்பையும் உறவினர்கள் அயலவர்களுடனான தொடர்பையும் சமூகத்துடனான தொடர்பையும் எவ்வாறு பேணுகிறது என்பது கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

### 1. தமது இரட்சகனுடன்.

குடும்பத்தின் அல்லாஹ்வுடனான தொடர்பு எனும்போது குடும்ப உறுப்பினர்கள் ஒன்றிணைந்து மேற்கொள்கின்ற ஆன்மீக செயற்பாடுகளையும் உறுப்பினர்களிடையே காணப்படவேண்டிய கூட்டுப் பொறுப்பையும் பரஸ்பர ஒத்துழைப்பையுமே அது குறிக்கிறது. இது இஸ்லாமியக் குடும்பத்தின் ஒரு சிறப்பம்சமாகும். இவ்வாறு இறைதொடர்பை ஏற்படுத்திக் கொள்வதில் குடும்ப அங்கத்தவரிடையே ஒருமைப்பாடு ஏற்படுகின்ற போது அக்குடும்பம் இம்மையில் மாத்திரமன்றி மறுமையிலும் மகிழ்ச்சியடையக் காரணமாகின்றது.

இறைதொடர்பை ஏற்படுத்திக் கொள்தற்காக இஸ்லாமியக் குடும்பத்தில் காணப்பட வேண்டிய பண்புகள் வருமாறு.

- குடும்பத் தலைமைக்குக் கட்டுப்படுதல்
- குடும்பத்தில் உள்ள ஆண்கள் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுவதற்காக பள்ளிவாசலுக்குச் செல்வதை உறுதி செய்தல்
- குடும்பத்தில் உள்ள பெண்கள் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுவதை உறுதி செய்தல்
- காலை மாலை திக்ர் குர்ஆன் திலாவத் போன்றவற்றை குடும்ப அங்கத்தவர்கள் கூட்டாக நிறைவேற்றல்
- வீட்டில் ஆன்மீக சூழலை ஏற்படுத்தல்.
- தஹஜ்ஜத் போன்ற சுன்னத்தான வணக்கங்களை நிறைவேற்றுவதில் குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உதவியாய் நிற்றல்

### 2. தமது குடும்ப உறுப்பினர்களுடன்

ஒவ்வொரு உறுப்பினரும் குடும்பத்துக்காக கடமைப்பட்டிருப்பது போன்று குடும்பமும் தன் உறுப்பினர்கள் பால் கடமைப்பட்டுள்ளது. இவ்வகையில் குடும்பம் அதன் உறுப்பினர்கள் பால் உள்ள பொறுப்புக்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்
2. சன்மார்க்க விடயங்களில் குடும்ப உறுப்பினர்களின் ஈடுபாட்டை உறுதிப்படுத்தல்
3. குடும்ப உறுப்பினர்கள் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்தல்
4. குடும்ப உறுப்பினர்களிடையே முரண்பாடுகள் தோன்றும் போது நடுநிலையில் நின்று அதைத் தீர்த்து வைத்தல்
5. உறுப்பினர்களின் வயதுமட்டத்துக்குரிய இஸ்லாமிய வழிகாட்டல்களைக் கடைபிடித்தல்
6. குடும்பத்தைவிட்டு பிரிந்து சென்று விடாமல் ஒவ்வொறு உறுப்பினரையும் அரவணைத்தல்

குடும்ப உறுப்பினரின் தவறுகளை நியாயப்படுத்துவதும் குடும்பம் சேர்ந்து குடும்பத்தில் உள்ள குற்றவாளிகளைப் பாதுகாப்பதும் இஸ்லாமிய வழிமுறையல்ல. அது ஜாஹிலிய்ய வழிமுறையாகும்.

### 3. தமது உறவினர் அயலாருடன்

உறவினர்கள் என்போர் தந்தை வழியில் அல்லது தாய் வழியில் இரத்த உறவால் தொடர்புறுகின்றவர்களைக் குறிக்கிறது. அயலவர்கள் என்போர், அருகாமையில் இருக்கின்ற உறவினர்கள் உறவினர்கள் அல்லாத முஸ்லிமான, முஸ்லிமல்லாத அனைவரையும் குறிக்கின்றது.

ஒரு குடும்பத்துடன் தொடர்பாகின்றவர்களுள் உறவினர்களும் அயலவர்களும் தவிர்க்க முடியாதவர்களாவர். இஸ்லாமிய வழிகாட்டல் அனைத்தும் இத்தொடர்பை வலுப்படுத்துவதாகவே காணப்படுகின்றன. உறவினர் அயலவர்களில் இருந்து பிரிந்து தனி ஒரு நபராகவோ அல்லது தனித்த ஒரு குடும்பமாகவோ இருப்பதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஒரு குடும்பம் அதன் உறவினர் அயலவர்களுடன் உறவு கொள்வதில் கடைபிடிக்க வேண்டிய இஸ்லாமிய நெறிமுறைகளாவன

1. உறவினர் அயலவர்களின் உரிமைகளைப் பேணல்
2. அவர்களின் அழைப்புக்களை மதித்து ஏற்றல்
3. அவர்களின் சுகதுக்கங்களில் பங்குகொள்ளல்
4. சந்திப்புக்களையும் தொடர்பாடல்களையும் ஏற்படுத்திக் கொள்ளல்
5. அவர்களின் இம்மை மறுமை நலன்களுக்காக உதவி செய்தல்

### 4. சமூகத்துடன்

குடும்பம் என்பது சமூகத்துக்கான பல்வேறு ஆளுமையுள்ள சிறந்த தனிநபர்களை உருவாக்கிக் கொடுக்கும் நாற்று மேடை போன்றதாகும். எனவே குடும்பத்துக்கும்

சமூகத்துக்கும் இருக்கவேண்டிய தொடர்பு புரிந்துணர்வுடையதாகவும் சுயநலம் அற்றதாகவும் இருக்க வேண்டும். சமூகத்தின் பாதுகாப்பிலேயே குடும்பத்தினதும் தனிநபர்களினதும் பாதுகாப்பு தங்கியுள்ளது. சமூகத்தின் கௌரவமே குடும்பத்தினதும் தனிநபர்களினதும் கௌரவமாகும். ஆகவே சமூக உருவாக்கத்தில் குடும்பங்களின் பங்கு மிகவும் அளப்பரியது. முஸ்லிம் சமூகத்தினுள் இஸ்லாமியக் குடும்பத்தின் பங்கு பின்வருமாறு அமையும்

1. சமூகத்தின் தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படுதல்
2. சமூக நலன்களுக்கும் குடும்ப நலன்களுக்கும் இடையே நடுநிலை பேணல்
3. சமூகத்தின் இலட்சியத்திற்கும் குடும்ப இலட்சியத்திற்கும் இடையே இணக்கம் காணல்
4. சமூகம் சார்ந்த பொதுப்பணிகளில் முழுமையாகப் பங்கெடுத்தல்
5. பர்ளு கிபாயாவான காரியங்களில் ஆர்வத்துடன் செயற்படல்

**தேர்ச்சி 08: தனிமனிதன், குடும்பம், சமூகம் தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோட்டத்தையும் அந்நிறுவனங்களுக்கு இடையிலான உறவையும், சமூக உருவாக்கத்துக்கான பங்களிப்புக்களையும் விளங்கி எடுத்துக் காட்டுவதோடு சமூக நல்லிணக்கத்துக்கான வழிமுறைகளையும் அதற்காக இஸ்லாமிய நாகரிகம் வழங்கியுள்ள அடிப்படைகளையும், முன்மாதிரிகளையும் விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 8.2 : சமூக உருவாக்கத்திலும், மேனிலைப்படுத்துவதிலும் பெண்களின் பங்கை முன்வைப்பார்.**

**பாடவேளைகள் : 30**

**கற்றல் பேறுகள் :**

- ஆண்கள், பெண்கள் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை எடுத்துக் காட்டுவார்.
- இஸ்லாமிய வரலாற்றில் ஆண்களது பங்களிப்பையும் பெண்களது பங்களிப்பையும் இனம் கண்டு கூறுவார்
- குடும்ப உருவாக்கத்தில் ஆண்களினதும் பெண்களினதும் பங்களிப்புக்களுக்கிடையே இணக்கம் காண்பார்
- சமூக உருவாக்கத்தில் இருசாராரது பங்களிப்புக்களையும் அங்கீகரித்து பணியாற்றுவார்

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**ஆண்கள், பெண்கள் தொடர்பான கண்ணோட்டம்**

- உயிரினங்கள் மத்தியில் ஆண் பெண் என்ற இரு சாராரும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவர்கள். ஒன்றோடொன்று இணைந்தும் ஒன்றையொன்று புரிந்தும் வாழ்வதன் மூலமே ஒவ்வொரு உயிரினங்களினதும் இருப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. இவ்வியற்கை நியதி எல்லா வகையான உயிரினங்கள் மத்தியிலும் எக்காலத்திலும் ஒரே விதமாகவே பின்பற்றப்பட்டு வருகின்றது. என்றாலும் மனித இனத்தில் மாத்திரம் அது விதிவிலக்கான ஒன்றாகவே காணப்படுகிறது.
- மனித இனத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் புரிந்துணர்வு, இணைப்பு என்பன என்றும் ஒரேவிதமாக இருந்ததில்லை. அவ்வப்போது பெண்கள் சமூகத்தில் மதிக்கப்பட்டாலும் பெரும்பாலும் ஆண்களின் அத்துமீறல்களால் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாகவும் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவுமே இருந்து வந்துள்ளனர்.
- உன்னத நாகரிகங்களாகக் கருதப்படுகின்ற கிறேக்க, பாரசீக, ரோமானிய, இந்திய சீன நாகரீகங்களில் கூட, பெண்கள் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவே

கருதப்பட்டுள்ளனர். கிரேக்க நாகரிகத்தைக் கட்டியெழுப்பிய தத்துவஞானிகளான சோக்ரடீஸ் பிலேட்டோ போன்றோரது பெண்கள் பற்றிய கருத்துக்கள் பெண்களை மிகவும் இழிவுக்குள்ளாக்குபவைகளாகவே உள்ளன.

எகிப்திய நாகரிகத்தில் பாரோ மன்னர்களின் காலத்தில் பெண்கள் நல்ல முறையில் நடத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. அவ்வாறிருந்தும்கூட வருடாவருடம் நைல் நதிக்காக பெண்ணை அலங்கரித்து நரபலியிடுகின்ற கொடூரமான மரபும் அங்கு பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

- ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளை, அவ்வப்போது தோன்றிய சமயங்கள் மேற்கொண்டுள்ளதை வரலாற்றில் காணமுடியும். இதன் மூலம் பெண்கள் தமது பிரச்சினைகளை தனிப்பட்ட முறையில் முறையிட்டு தீர்வு கண்டு கொள்ளக்கூடிய அளவில் மாத்திரமே அது இருந்தது. எனினும் காலப்போக்கில் சமயநெறிகளிலும் ஆணாதிக்கத்தின் செல்வாக்கே மேலோங்கலாயிற்று.

- பெண்கள் தமது உரிமைகளுக்காக தாமே போராடுகின்ற நிலை 17ம் நூறாண்டின் இறுதிக்கால கட்டத்ததில் ஏற்பட்ட பிரான்ஸியப் புரட்சிக்காலத்திலேயே இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி மற்றும் கைத்தொழில் புரட்சி ஆகியன, பெண்கள் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்குச் சமமான நிலையில் செயற்பட காரணமாய் அமைந்தன.

என்றாலும் நவீன சிந்தனை, பெண்கள் பற்றிய அதன் நோக்கில் சில தவறுகளையும் விட்டுள்ளது. அவை வருமாறு.

- ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உடலியல் வேறுபாட்டை கவனத்திற் கொள்ளாமை
- ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உளவியல் வேறுபாட்டை கவனத்திற் கொள்ளாமை
- ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாலுணர்வு வேறுபாட்டை கவனத்திற் கொள்ளாமை
- சுதந்திரம் என்ற பெயரில் பெண், கவர்ச்சி காட்டுவதற்கு தூண்டப்பட்டமை
- ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே விட்டுக் கொடுப்பும் புரிந்துணர்வும் ஏற்படுத்தப்படாமை
- ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஒழுக்க வரம்புகளை ஏற்படுத்தாமை

- நவீன சிந்தனை விட்ட தவறுகளால் இன்றைய பெண்கள் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் சம அந்தஸ்த்துடன் வாழும் உரிமையைப் பெற்றிருந்தாலும்கூட பெண்களுக்குரிய அந்தஸ்துடன் வாழ்வதற்கான உரிமையை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. ஐரோப்பிய நாகரிகத்தில் தற்போது மறுக்கப்படுகின்ற பெண்களினதும் சிறுவர்களினதும் உரிமைகளாக பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

- தாய் என்ற நிலையில தன் பிள்ளைகளுக்கு முழுமையாகப் பாலூட்டும் உரிமையை இழந்துள்ளாள்
- பொது இடங்களில் தன் உடலை வெளிக்காட்டுவதற்கு உரிமைபெற்ற அளவு தன் உடலை மறைப்பதற்கு உரிமை பெறவில்லை.
- பல சந்தர்ப்பங்களில் தான் கருவுருவதற்கு காரணமான ஆணின் அன்பையும் ஒத்துழைப்பையும் பெறமுடியாதுள்ளமை
- ஆண்களின் அத்துமீறல்களில் இருந்தும் பாலியல் சேட்டைகளில் இருந்தும் தப்பி வாழ முடியாமை
- பிள்ளைகள் தேவையான சந்தர்ப்பங்களில் தாயிடம் பால் குடிக்கின்ற உரிமையினை இழத்தல்
- சிறுவர்கள் தாய் தந்தையரின் பராமரிப்பின் கீழ் வளர்க்கப்படுவதற்கான உரிமையை இழந்துள்ளமை

மேற்கத்திய நாடுகளில் தோன்றி இன்று ஆசிய ஆபிரிக்க நாடுகளிலும் பரவிக் கொண்டிருக்கும் பெண்நிலைத்துவ சிந்தனைகளுக்கும் போராட்டங்களுக்கும் மேற்கில் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளே காரணமாகும்.

- **ஆண்கள் பெண்கள் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்**

இஸ்லாமிய சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆணும் பெண்ணும் தனித்தனியாக முழுமை பெறுவதில்லை. ஒருவர் மற்றவரின் சோடி, ஆகவே இருவரும் இணைந்தே முழுமை பெறுகின்றனர். சமூக உருவாக்கத்தில் ஆண்களுக்கென்ற சிறப்புப் பணியை ஆண்கள் நிறைவேற்ற வேண்டும். பெண்களுக்கென்ற சிறப்புப் பணியை பெண்கள் நிறைவேற்ற வேண்டும். இரு பாதணிகள் சோடியாக இருக்கும் போது ஒருகால் பாதணி அடுத்த காலிற்கு பொருந்தாதது போலவே ஆணும் பெண்ணும் சோடியாக இருக்கும் வரை ஆணின் சமூகப் பங்களிப்பை பெண்ணினாலோ பெண்ணின் பங்களிப்பை ஆணினாலோ பூரணமாக நிறைவேற்ற முடியாது என்பதே இஸ்லாமிய அடிப்படையின் சுருக்கமாகும்.

**“மனிதர்களே நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் (ஆண் பெண் என்ற இருபாலாராகிய) உங்களை ஒரே ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். அதே ஆன்மாவில் இருந்து அதன் சோடியைப் படைத்தான். அவ்விருவரிலும் இருந்து அதிகமான ஆண்களையும் பெண்களையும் படைத்தான்”** (3:1)

- மேலுள்ள அல்குர்ஆன் வசனம், மனிதன் படைக்கப்பட்ட முதல் மூலத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம பங்குள்ளதை உணர்த்துகிறது. பின்னர் அந்த மூலத்திலிருந்து படைக்கப்பட்ட அதன் சோடி ஆணா பெண்ணா என்ற விடயம் குறிப்பிடப்படவில்லை. இதன் மூலம் ஆண் பெண் என்ற இருபாலாரிலும் முதன்மை இடம் யாருக்கு என்ற வாதத்திற்கு இஸ்லாத்தில் இடமில்லாமல் போகிறது. ஒன்றையொன்று பூர்த்தியாக்கும் அச்சோடியில் இருந்தே ஏனைய ஆண்களும் பெண்களும் படைக்ககப்பட்டதாகக் குறிப்பிடப்படுவதிலிருந்து ஆணும் பெண்ணும் சமமாக மதிக்கப்பட்டு சோடியாக வாழவேண்டும் என்ற விடயம் வலியுறுத்தப்படுகிறது.

- இஸ்லாம், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உடலியல், உளவியல், பாலுணர்வு சார்ந்த வேறுபாடுகள் இருக்கின்றன என்ற அடிப்படையிலேயே இருபாலாரையும் நோக்குகின்றது. அதற்கமையவே இருபாலாருக்குமான சமூகப்பணிகள் வகுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய ஆண்களும் பெண்களும் அவர்களது உடல் உள பாலுணர்வு வேறுபாட்டுக்கமை, மிகையான, சமமான, குறைவான என்ற அடிப்படையில் பொறுப்புக்களையும் உரிமைகளையும் பெறுகின்றனர். இதனை பின்வரும் வரைபு மூலம் இலகுவாக விளங்க முடியும்




1.ஆண்கள் கூடுதலாகவும் பெண்கள் குறைவாகவும்

2.இரு பாலாரும் சமமாகும்.

3.ஆண்கள் குறைவாகவும் பெண்கள் கூடுதலாகவும்.

- மேலுள்ள வரைபுகள் இரண்டு பரப்பிலும் சுற்றளவிலும் ஒரே சமமானவை. ஆனாலும் இரண்டுக்கும் இடையே தோற்ற வேறுபாடுகள் இருக்கின்றன. ஆண் கூடுதலாக பொறுப்புக் கூற வேண்டிய விடயத்தில் பெண் குறைவாகவே பொறுப்புக் கூற வேண்டியவளாவாள். அவ்வாறே பெண் கூடுதலாக பொறுப்புக் கூற வேண்டிய விடயத்தில் ஆண் குறைவாகவே பொறுப்புக் கூற வேண்டியவனாவான். இன்னும் சில விடயங்களில் இரு சாராரும் சமமாகப் பொறுப்புக் கூற வேண்டும். அதுபோலவே இரு பாலாரும் பெறுகின்ற உரிமைகளிலும் கூடுதலாக, சமமாக, குறைவாக என்ற அடிப்படையில் வேறுபடுகின்றனர்.

**பொருளாதார முயற்சி**

- குடும்பத்திற்கான செலவினங்கள் அனைத்தும் ஆணைச் சார்ந்துள்ளதால் அவன் பொருளாதார முயற்சியில் ஈடுபடுவது கட்டாயமாகும். பெண்ணுக்கு அது கட்டாயமல்ல. எனினும் பொருளாதார முயற்சியில் ஈடுபடும் உரிமையினை இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கியுள்ளது.

**கல்வியைத் தேடல்**

- இஸ்லாம் கல்வி கற்றலை ஆண் பெண் வேறுபாடு இன்றி பொதுவாக வலியுறுத்துகிறது. “கல்வியைத் தேடல் ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும்” என்ற நபியவர்களின் ஹதீஸ் கல்வியைத் தேடுவதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள சம உரிமையை உறுதிப்படுத்துகிறது. நபியவர்கள் கல்வியைத் தேடி துணிந்து வரும் பெண்களை வரவேற்றார்கள். அவ்வாறான துணிச்சல் மிக்க மதீனாப் பெண்களைப் பாராட்டினார்கள்.

**பார்வையைத் தாழ்த்தலும் கற்பைப் பேணலும்**

- இஸ்லாத்தின் பார்வையில் கற்பு என்பது ஆண் பெண் இரு பாலாரும் பேணவேண்டிய பொதுவான ஒன்றாகும். ஆணும் பெண்ணும் தமது பாலுணர்வைத் தீர்ப்பதற்காக

  ஷரீஅத் அனுமதிக்காத வழியில் செல்லாதிருப்பதையே கற்பைப் பேணல் என்ற பதம் குறிக்கிறது. எனவே இருபாலாரும் கற்பை இலகுவாகப் பேணுவதற்கு இஸ்லாம் சில வழிமுறைகளைப் பரிந்துரைக்கிறது.

**1. இருபாலாரும் தம் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளல்.**

"நபியயே! மு.ஃ.மினான ஆண்களுக்குச் சொல்லுங்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளும்படியும் கற்பைப் பேணிக் கொள்ளும்படியும். …" (24:31) "நபியே! மு.ஃ.மினான பெண்களுக்குச் சொல்லுங்கள். தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளும்படியும் கற்பைப் பேணிக் கொள்ளும்படியும். …" (24:32)

**2. மஹ்ரமல்லாத ஆணும் பெண்ணும் தனித்திருப்பதைத் தவிர்ந்து கொள்ளல்.**

**3. மஹ்ரமல்லாத ஆணுக்கு முன்னால் பெண் ஹிஜாப் அணிதல்**

**4. திருமணம்**

**குடும்ப உருவாக்கத்தில் ஆணும் பெண்ணும்**

குடும்பம் எனும் சமூக நிறுவனத்தில் ஆணும் பெண்ணும் தவிர்க்க முடியாத பங்காளிகள். சட்டபூர்வமான முறையிலும் தமது விருப்பத்தின் அடிப்படையிலும் ஆணும் பெண்ணும் இணைவதன் மூலமே குடும்பம் உருவாகிறது. குடும்பமானபின் ஆணும் பெண்ணும் கணவன் மனைவி என்ற சமூகப் பாத்திரங்களை ஏற்கின்றனர். இதன் மூலம் இன்பம் அனுபவித்தல் என்ற உரிமையையும் பொறுப்புக் கூறல் என்ற கடமையையும் இருவரும் பெறுகின்றனர்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காணப்படும் உடல் உள பாலூக்க வேறுபாட்டுக்கு அமைய இஸ்லாத்தில் கணவன் மனைவி ஆகிய இருவரினதும் உரிமைகளும் கடமைகளும் வேறுபடுகின்றன.

| **கணவனின் கடமைகள்** | **மனைவியின் கடமைகள்** |
|---|---|
| 1. மகர் கொடுத்தல் | 1. கட்டுப்படுதல் |
| 2. செலவுகளைப் பொறுப்பேற்றல் | 2. கணவன் விரும்பாதோரை வீட்டிற்குள் அனுமதிக்காதிருத்தல் |
| 3. வாழுமிடம் ஏற்படுத்திக் கொடுத்தல் | 3. அனுமதியின்றி வெளியே செல்லாதிருத்தல் |
| 4. நீதியாக நடத்தல் | |
| 5. அன்பாக நடத்தல் | 4. அன்பாக நடத்தல் |
| 6. நம்பிக்கையாக நடத்தல் | 5. நம்பிக்கையாக நடத்தல் |
| 7. பிள்ளைகளின் செலவினங்களைப் பொறுப்பேற்றல் | 6. பிள்ளைகளை வளர்த்துக் கொடுத்தல் |
| 8 மனைவியின் தேவைகளையும் உரிமைகளையும் அறிந்து செயற்படல் | 7. கணவனின் தேவைகளையும் உரிமைகளையும் அறிந்து செயற்படல் |

- கணவன் மனைவி ஆகிய இருவரும் தம்மீதுள்ள பொறுப்புக்கள் பற்றி அல்லாஹ்விடம் விசாரிக்கப்படுவார்கள். எனவே இருவரும் தம்மீதுள்ள பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவது கடமையாகும். ‘‘ஆண் தன் வீட்டாரின் மீது பொறுப்புடையவனாவான். எனவே அவர்கள் பற்றி அவன் விசாரிக்கப்படுவான். பெண் அவளது கணவன் மீதும் அவனது பிள்ளைகள் மீதும் பொறுப்புடையவளாவாள். எனவே அவர்கள் பற்றி அவள் விசாரிக்கப்படுவாள்’’ (முத்தபகுன் அலைகி)

- குடும்பத்திற்குத் தலைமை தாங்கும் விடயத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே போட்டி ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பாதுகாப்பையும் செலவினங்களையும் பொறுப்பேற்கும் உடல் உள வலிமை கொண்ட ஆணின் தலைமைத்துவம் இஸ்லாத்தில் வலியுறுத்தப்படுகிறது.

‘‘ஆண்களே பெண்களை நிர்வகிப்போராவர். காரணம் அல்லாஹ் அவர்களுள் ஒருசாராரை (ஆண்களை) மற்றொரு சாராரை (பெண்களை) விட சிலவற்றால் சிறப்படையச் செய்துள்ளான். அத்துடன் ஆண்கள் தமது செல்வத்தின் மூலம் பெண்களுக்கு செலவும் செய்கிறார்கள்’’ (4:34)

‘‘ஆண்களுக்கு முறைப்படி பெண்களின் மீதுள்ள உரிமைகள் போன்றதே ஆண்கள் மீது பெண்களுக்கும் உண்டு. ஆயினும் ஆண்களுக்குப் பெண்கள் மீது ஓர் உயர் பதவி உண்டு. அல்லாஹ் மிகைத்தவனும் நுண்ணறிவுடையவனாகவும் இருக்கின்றான்.’’ (2:228)

- குடும்பத்தில் தலைமைத்துவம் வழங்கப்பட்டுள்ள ஆண் சர்வாதிகாரியாக நடந்து கொள்ள இஸ்லாம் அனுமதிப்பதில்லை. குடும்ப விவகாரங்களில் மணைவியுடன் கலந்தாலோசிப்பது அவனது கடமையாகும்.

‘‘(தாய் தந்தை) ஆகிய இருவரும் திருப்தி, கலந்தாலோசனை என்பவற்றின் அடிப்படையில் இரு வருடங்களுக்குள் குழந்தையின் பால் குடியை மறக்கடிக்க நாடினால் இருவர் மீதும் குற்றமில்லை’’ (2:233)

- ஆணும் பெண்ணும் ஒரே ஆத்மாவில் இருந்து படைக்கப்பட்டவர்கள். இதனால் இருசாராரிலும் காணப்படும் அதிகமான பொதுத்தன்மைகளால் ஒருவர் இன்னொருவரை மிகைக்க முயலும் நிலை ஏற்பாடுமாயின் அது குடும்பத்திலும் சமூகத்திலும் எதிர்மாரான விளைவுகளைத் தோற்றுவிக்க முடியும். எனவே குடும்ப வாழ்வில் இருபாலாருக்குமிடையிலான புரிந்துணர்வை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

‘‘அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள்’’ (2:187)

“நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள் சோடிகளை உங்களில் இருந்தே அவன் உற்பத்தி செய்து உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டுபண்ணி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும்” (30:21)

“மேலும் அவர்களுடன் கண்ணியமான முறையில் கூடி வாழுங்கள். நீங்கள் அவர்களை வெறுப்பீர்களானால் அல்லாஹ் பல நன்மைகளை வைத்துள்ள ஒன்றை நீங்கள் வெறுத்தவர்களாக ஆகலாம்” (4:19)

“மு.்.மின்களில் ஈமானால் பூர்த்தியானவர் அவர்களில் மிக அழகிய குணமுடையவரே. உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவிகளிடத்தில் சிறந்தவரே.” (திர்மிதி)

**சமூக உருவாக்கத்தில் ஆணும் பெண்ணும்.**

- சமூகம் சார்ந்த ஆன்மீக லௌஹீக விடயங்களில் கடினமான பகுதிகள் ஆண்களுக்குக் கடமையாக்கப்பட்டு பெண்களுக்கு அவற்றில் சலுகை வழங்கப்படுகிறது. பெண்களின் உடல், உள, குடும்ப நிலைமைகளைக் கவனத்திற் கொள்ளாது சமூகம் சார்ந்த பொது விடயங்களில் அவள் வற்புறுத்தப்படக் கூடாது என்பதே அதற்கான காரணமாகும்.

  உதாரணம், ஐந்து நேரமும் பள்ளி வாசலுக்குச் சென்று ஜமாஅத்துடன் தொழுதல் ஆண்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் பெண்களுக்கு அது சலுகையாக விடப்பட்டுள்ளது. அவர்கள் ˙விரும்பினால் செல்லலாம். அவ்வாறே ஜிஹாத் ஆண்களுக்குக் கடமையாக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு அது கடமையல்ல. அவர்கள் விரும்பினால் கலந்து கொள்ளலாம். பெண்கள் செய்கின்ற ஹஜ் ஆண்கள் செய்கின்ற ஜிஹாதுக்கு சமனாக நோக்கப்படுகிறது. நபியவர்கள் குறிப்பிட்டார்கள் “நீங்கள் செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்தான் உங்களது ஜிஹாதாகும்.”

- நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் சமூக மேம்பாட்டுப் பணியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமபங்கு இருப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. “நம்பிக்கை கொண்ட ஆண்களும் நம்பிக்கை கொண்ட பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாவர். அவர்கள் நன்மையை ஏவுவார்கள். தீமையை தடுப்பார்கள். தொழுகையை நிலை நாட்டுவார்கள். ஸக்காத்தை கொடுப்பார்கள். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுவார்கள். இத்தகையவர்களுக்கு அல்லாஹ் அதிசீக்கிரத்தில் அருள்புரிவான்”. (9:71)

- பெண்கள் சமூகப் பணிகளில் ஈடுபட அனுமதிக்கவில்லை என்ற இஸ்லாத்திற்கெதிரான விமர்சனத்தை மேற்படி அல்குர்ஆன் வசனம் பொய்ப்பிக்கிறது. அதற்கு அடுத்த வசனம் சமூகப் பணியில் ஈடுபடுவோர்க்கு வழங்கப்படும் மறுமைப் பேற்றில் ஆண்களும் பெண்களும் சமமாகவே கவனிக்கப்படுவர் என்பதைக் குறிப்பிடுகிறது. “நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் அல்லாஹ் சுவனபதிகளை வாக்களித்திருக்கின்றான். அவற்றில் நீரருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கும்.........” (9:72)

- அரசியல் உரிமையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இஸ்லாம் அனுமதித்துள்ள எல்லைகள் ஆண்களே பெண்களின் காவலர்கள் என்ற அதன் அடிப்படைக் கோட்பாட்டைத் தழுவியே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இதனால் ஆண்களுக்கும் பெண்களுக்குமான அரசியல் உரிமைகள் வேறுபடுகின்றன.

- நாட்டிற்கும் சமூகத்திற்கும் தலைமைத்துவத்துவம் வழங்கும் பொறுப்புக்கு இஸ்லாம் ஆண்களையே முற்படுத்தியுள்ளது. ஆண்கள் அப்பொறுப்பை சுமக்க முன்வராமல் பெண்களின் கைகளில் ஒப்படைப்பது சமூகத்தினுள் காணப்படும் ஒரு பலவீனமாகும். இவ்வாறு பலவீனமடைந்த சமூகம் ஏனைய சமூகங்களுக்கு முன்னால் வெற்றி பெறுவது சாத்தியமற்றதாகும். அதனையே பின்வரும் ஹதீஸ் சுட்டிக்காட்டுகிறது. ‘‘நாட்டின் தலைமைத்துவத்தை பெண்களின் கைகளில் கொடுத்த சமூகம் வெற்றி பெறுவதில்லை’’ (புஹாரி)

- ஆட்சியாளன் நீதி தவறும்போது அல்லது தவறிழைக்கின்ற போது அவனைத் திருத்துவது இஸ்லாத்தின் பார்வையில் பொதுமக்களான ஆண்பெண் இருசாராரினதும் உரிமையாகும். ஆகவே ஜனநாயக முறையில் ஆட்சியாளன் தெரிவு செய்யப்படும் போது நீதியான ஆட்சியாளனைத் தெரிவு செய்வதற்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமஉரிமை உண்டு.

**பெண்ணிற்கு இஸ்லாம் வழங்கும் பாதுகாப்பும் கண்ணியமும்**

- மனித வரலாற்றில் ஆணாதிக்க சிந்தனையே அதிகமாமக மேலோங்கியிருந்தது. இதன் காரணமாக பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும் அநீதிகளும் ஏராளம். இஸ்லாம் ஆரம்பித்த காலமாகிய ஜாஹிலிய்யாக் காலத்தில் ஆணாதிக்கம் எல்லை மீறி இருந்தது. வீட்டில் கூட ஒரு பெண் தனது உயிருக்கோ கற்புக்கோ ஆபத்தில்லாமல் நிம்மதியாய் இருக்க முடியாதிருந்தாள். இக்காலகட்டத்தில் தான் ஒரு பெண் தன்னந் தனியாக பயணம் செய்யும் அளவு பாதுகாப்பான சூழலை உருவாக்குதல் இஸ்லாத்தின் இலட்சியமாக முன்வைக்கப்பட்டது. நபியவர்கள் தன்தோழருக்கு ஆறுதல் கூறும் போது தெரிவித்த வார்த்தை இதை உறுதிசெய்கிறது.

‘‘நிச்சயமாக ஒரு காலம் வரும். அப்போது ஒரு பெண் பயண அச்சமின்றி ஸன்ஆவில் இருந்து ஹழர மௌத் வரை தன்னந் தனியாகச் செல்வாள்’’.

- நபியவர்களின் இக்கூற்று ஆண்கள் பெண்களை மிகைப்பதற்குப் பதிலாக பெண்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற மனப்பாங்கை ஆண்களின் உள்ளத்தில் ஏற்படுத்தியது. எனவே ஒரு பெண் மகளாக இருக்கும் போது தந்தையின் பூரண பாதுகாப்பையும் சகோதரியாக இருக்கும் போது தன் சகோதரர்களின் பாதுகாப்பையும் மனைவியாக இருக்கும் போது கணவனின் பாதுகாப்பையும் பெற்றுக் கொள்கிறாள். அவள் தாயாக மாறும் போது அவளது அந்தஸ்த்து இஸ்லாத்தில மேலும் உயர்கிறது. அவளது பாதத்தின் கீழ்த்தான் சுவர்க்கம் இருக்கிறது எனக் கூறி தாய்க்குப் பணிவிடை செய்வதை பிள்ளைகளின் கடமை எனப் போதிக்கிறது.

**தேர்ச்சி 08:** **தனிமனிதன், குடும்பம், சமூகம் தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோட்டத்தையும் அந்நிறுவனங்களுக்கு இடையிலான உறவையும், சமூக உருவாக்கத்துக்கான பங்களிப்புக்களையும் விளங்கி எடுத்துக் காட்டுவதோடு சமூக நல்லிணக்கத்துக்கான வழிமுறைகளையும் அதற்காக இஸ்லாமிய நாகரிகம் வழங்கியுள்ள அடிப்படைகளையும், முன்மாதிரிகளையும் விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 8.3 : சமூக நல்லிணக்கத்துக்கும், சகவாழ்வுக்கும் இஸ்லாமிய நாகரிகத்தின் முன்மாதிரிகளை எடுத்துக் காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 8.4 : இலங்கையில் நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் கட்டடியெழுப்புவதற்கான வழிமுறைகளை இனங்கண்டு விளக்கமளிப்பார்.**

**பாடவேளைகள் : 26, 20**

**கற்றல் பேறுகள் :**

- சகவாழ்வு பற்றிய இஸ்லாத்தின் போதனைகளை தெளிவாக எடுத்துக் கூறுவார்.
- சகவாழ்வு தொடர்பாக நபி (ஸல்) அவர்களின் கால மற்றும் பிற்பட்ட கால முன்மாதிரிகளை தொகுத்துக் கூறுவார்.
- சகவாழ்வைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகள் பற்றி அறிந்து விளக்கமளிப்பார்.
- இலங்கையில் சகவாழ்வைக் கட்டியெழுப்புவதன் அவசியத்தை தர்க்க ரீதியாக எடுத்துக் கூறுவார்.
- இலங்கையில் சகவாழ்வைக் கட்டியெழுப்புவதற்கான இஸ்லாமிய வழிமுறைகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்துவார்.
- சகவாழ்வைப் பாதிக்கும் அம்சங்களை இனங்கண்டு அதனைத் தவிர்க்க வழிகாண்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**சமய, சமூக நல்லிணக்கம்**

- இஸ்லாம் ஒரு சம்பூர்ண வாழ்க்கைத் திட்டம்: அது மனித சமூகத்திற்கு அருளப்பட்ட இறுதி வேதம். அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்பட்ட ஒரே சத்திய மார்க்கம். அது மற்றைய மதங்களிலும், கொள்கை, கோட்பாடுகளினதும் இருப்பை ஏற்றுக் கொள்கின்றது. வித்தியாசமான மதங்களும், கொள்கை கோட்பாடுகளும் உலகில் காணப்படுவது பிரபஞ்ச நியதி. அது இறைவனின் ஏற்பாடு. இதனையே அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

‘‘உமது இரட்சகன் நாடியிருந்தால் பூமியிலுள்ள எல்லோருமே ஈமான் கொண்டிருப்பர். அவ்வாறு உமது இரட்சகன் விரும்பவில்லை. எனவே மக்கள் அனைவரும் ஈமான் கொண்ட விசுவாசிகளாக மாறவேண்டுமென விரும்பி, அவர்களை நிர்ப்பந்திக்கின்றீர்களா? (யூனுஸ் :99)

- நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தைத் தொடர்ந்த மக்கா வாழ்க்கைப் பகுதியில் முஸ்லிம்கள் மிகச் சொற்பமாகவே இருந்தனர். ஆனால் மதீனா காலப் பகுதியில் முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர். எனினும் அவர்கள் முஸ்லிம் அல்லாதோருடன் சமய நல்லிணக்கத்தைப் பேணி வாழ்ந்து வந்தனர். குறைஷியர்களால் மக்கா காலப்பகுதியில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அத்துணை துன்பங்களையும் அவர்கள் சகித்துக் கொண்டனர். மதீனா காலப்பகுதியில் முஸ்லிம்களுக்கு அதிகாரம் கிடைத்த போதும் கூடச் சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்தார்கள். இது ஸஹாபாக்கள், தாபிஈன்கள் காலத்திலும் பின்பற்றப்பட்டது.

- பல மதங்களின் இருப்பை ஏற்றுக் கொள்ளும் இஸ்லாத்தின் நிலைப்பாடு, இஸ்லாம் மட்டும் தான் அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட சத்திய மார்க்கம் என்ற சிந்தனைக்கு முரண்பட மாட்டாது. ஒரு முஸ்லிம் ஏற்றுப் பின்பற்றுவதற்குரிய சத்திய மார்க்கம் இஸ்லாம் மாத்திரமே என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் ஏனைய அசத்தியமான மார்க்கங்கள் உயிர்வாழும் உரிமை கொண்டுள்ளன என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த வகையில் மாற்று மதத்தவர்களுக்கு இஸ்லாத்தை எத்திவைப்பது, அதன் போதனைகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதும் முஸ்லிம்களது கடமையாகும். அவர்களுக்கு ஹிதாயத் எனும் நேர்வழிகாட்டுவது அல்லாஹ்வுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

- இஸ்லாம் முன்வைக்கும் சமய நல்லிணக்கம் எவ்வாறு என்பதை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. ‘‘உங்களுடைய மார்க்கம் உங்களுக்குரியது. என்னுடைய மார்க்கம் எனக்குரியது’’

  ஒவ்வொருவரும் தத்தமது மார்க்கத்தைப் பின்பற்றி வாழச் சுதந்திரமாக விடப்பட வேண்டும். ஒருவர் அடுத்தவரின் மார்க்க விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற கருத்தையே மேற்படி வசனம் உணர்த்துகின்றது. இன, மத, மொழி வேறுபாடுகள் பிரபஞ்ச நியதி. அது இறைவனின் ஏற்பாடு என்பது மேற்குறிப்பிட்ட குர்ஆனிய வசனங்களினூடாகத் தெளிவாகின்றது.

- மனிதர்களுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள வித்தியாசங்களுக்குப் பின்னாலுள்ள இன்னொரு இறை நாட்டம், மனிதர்களிடையே பரஸ்பர அறிமுகத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதே என அல்குர்ஆன் கூறுகின்றது.

  ‘‘மக்களே! நாம் உங்களை நிச்சயமாக ஒரு ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். பின்னர் உங்களை நீங்கள் ஒவ்வொருவரும் பரஸ்பரம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சிறு சிறு குழுக்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக உங்களில் மிகவும் பயபக்தியுடையவரே அல்லாஹ்விடத்தில் மிகவும் உயர்ந்தவர், மிகவும் கண்ணியத்துக்குரியவர். நிச்சயமாக அல்லாஹ்

மிகவும் நன்கறிந்தவன். (ஹுஜுராத் : 13)

- எனவே வித்தியாசங்கள் அல்லாஹ்வின் ஏற்பாடு என்பதை மனதில் ஏற்று, அடுத்த மதங்களினதும், அவற்றைப் பின்பற்றுவோரினதும் இருப்பை அங்கீகரிப்பது சக வாழ்வினை சாத்தியப்படுத்துவதற்கான அடிப்படை அம்சமாகும். அடுத்த மதங்களும், கொள்கைகளும் அசத்திய விடயங்களை தன்னகத்தே கொண்டிருந்த போதும் அவை குறித்து இழிவாகப் பேசலாகாது.

- இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமான அல்குர்ஆன் சமாதானத்தினதும், சக வாழ்வினதும் மார்க்கமாக இஸ்லாத்தை அறிமுகப்படுத்துகின்றது. இஸ்லாம் எனும் சொல்லின் கருத்தே அமைதியும், சமாதானமுமே. யுத்தத்தைக் குறிக்கும் 'ஹர்ப்' எனும் சொல் அல்குர்ஆனில் 6 இடங்களில் மாத்திரமே இடம்பெறுகின்றது. ஆனால் சமாதானத்தைக் குறிக்கும் 'ஸில்ம்' எனும் பதமும் அதிலிருந்து பிரிந்த சொற்களும் சுமார் 140 இடங்களில் இடம் பெறுகின்றன.

**இஸ்லாம் போதிக்கும் சமய, சமூக நல்லிணக்கத்தின் சில அடிப்படைகளைப் பின்வருமாறு முன்வைக்கலாம்.**

1. அனைத்து மனிதர்களும் ஒரே இறைவனான அல்லாஹ்வின் படைப்பினமே
   ''மக்களே! நாம் உங்களை நிச்சயமாக ஒரு ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். பின்னர் உங்களை நீங்கள் ஒவ்வொருவரும் பரஸ்பரம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சிறு சிறு குழுக்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக உங்களில் மிகவும் பயபக்தியுடையவரே அல்லாஹ்விடத்தில் மிகவும் உயர்ந்தவர், மிகவும் கண்ணியத்துக்குரியவர். நிச்சயமாக அல்லாஹ் மிகவும் நன்கறிந்தவன். (ஹுஜுராத் : 13)

2. உலகிலுள்ள அனைத்து மனிதர்களும் கண்ணியமானவர்கள். இந்தக் கண்ணியம் அல்லாஹ்வால் மனிதனுக்கு வழங்கப்பட்டது.
   ''நாம் ஆதமின் சந்ததியினரை கண்ணியப்படுத்தி விட்டோம். கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்தோம்'' (அல்இஸ்ரா : 70)

3. கொள்கைச் சுதந்திரம் : - ஒவ்வொரு மனிதனுக்கும் தாம் விரும்பும் கொள்கையை அல்லது மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் உள்ளது. எனவே, மாறுபட்ட கொள்கையையோ, மதத்தையோ பின்பற்றுபவர்கள் தமக்குள் பரஸ்பம் எதிரிகள் அல்லர். அவ்வாறே ஒருவர் ஏற்றிருக்கும் மார்க்கத்தை அல்லது கொள்கையை பிறர் மீது திணிக்கும் உரிமையும் எவருக்குமில்லை. '' மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது. ஏனெனில் வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது. (அல்குர்ஆன்)

4. மனித குலத்திற்கு நன்மை பயப்பது ஒவ்வொரு மனிதர் மீதும் கடமை. அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரிய மனிதன், சக மனிதனுக்கு நன்மை பயப்பவன் என இஸ்லாம் வலியுறுத்துகிறது.
   ''மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் குடும்பம். அல்லாஹ்வின் குடும்பத்திற்கு மிகவும் பயனுள்ளவர்களே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர்கள். (முஸ்லிம்)

5. எல்லா மனிதர்களும் சகோதரர்கள் : சகோதரத்துவத்தைப் போன்று இஸ்லாம் வலியுறுத்திய வேறெந்த அடிப்படைகளும் கிடையாது. மனித இனத்தின் மூதாதையர் ஆதமும் ஹவ்வாவுமே. அதனால் மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள்.

6. எல்லா மனிதர்களும் அடிப்படையில் நல்லவர்கள். சூழ்நிலை நிர்ப்பந்தங்களே மனிதர்களின் நல்ல தன்மையைப் பாதிக்கின்றது.

7. சமூகங்கள், மொழிகள், கலாசாரங்கள் போன்ற பன்மைத்துவம் இறை நியதிகளில் ஒன்று. இப்பன்மைத்துவம் அழகானது, இயல்பானது, பிரபஞ்ச விதிகளில் அதுவும் ஒன்று. அல்குர்ஆன் கூறுகின்றது

   ''உமது இரட்சகன் நாடியிருந்தால் அனைத்து மக்களையும் ஒரே சமூகமாக ஆக்கியிருக்கலாம். ஆயினும் மக்கள் தொடர்ந்து கருத்து வேறுபாடு கொண்டவர்களாகவே உள்ளனர். (அல்குர்ஆன்)

   நிற மற்றும் மத மொழி வித்தியாசங்கள் இறைவன் இருக்கின்றான் என்பதற்கான அத்தாட்சிகள் எனக் கூறிய அல்லாஹ், அந்த அத்தாட்சிகளைப் பற்றி அறிஞர்கள் சிந்தித்துப் படிப்பினை பெற வேண்டும் என்றும் பணிக்கின்றான்.

   ''வானங்கள் பூமியின் படைப்பு அமைப்பும் உங்களது மொழிகளும் நிறங்களும் வித்தியாசமாக இருப்பதும் அவனைக் காட்டும் அத்தாட்சிகளைச் சேர்ந்தவையாகும். இதில் அறிவாளிகளுக்குப் பல அத்தாட்சிகள் உள்ளன. (அர்ரூம்: 22)

8. பரஸ்பர உதவிகள்
   ஒரு முஸ்லிமை தன் கொள்கை சாராதவர்களுடன் இணைக்கும் பிரதான பாலமாக அமைவது பரஸ்பர உதவிகளும், ஒத்தாசைகளுமாகும். வறுமை, நோய், அறிவீனம் போன்ற நிலைகளில் சிக்கித் தவிக்கும் எவருக்கும் முஸ்லிம்கள் உதவிகளைச் செய்வது கடமையும், இறைவனிடம் நன்மையைப் பெற்றுத் தரும் கைங்கரியமுமாகும்.

   ''மார்க்க விடயத்துக்காக உங்களுக்கெதிராகப் போராடாமலும், உங்கள் வீடுகளிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருப்பவர்களுக்கு நீங்கள் உதவி செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செலுத்துவதையும் விட்டு உங்களை அல்லாஹ் தடுக்கமாட்டான். நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துபவர்களை நேசிக்கின்றான்.'' (அல்மும்தஹ்னா: 08)

9. யாவருக்கும் பொதுவான முறையில் செலுத்தப்பட வேண்டும்.
   மனிதர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சரிசமனாக நடத்தப்பட வேண்டும். அதில் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர்கள், நண்பன் - பகைவன், உறவினன் - அல்லாதவன் போன்ற வித்தியாசங்கள் பார்க்கப்படக் கூடாது என்பதில் இஸ்லாம் மிகவும் உறுதியாக இருக்கிறது. நல்லிணக்கம், சமூக இணக்கப்பாடு பாதிக்கப்படுவதற்குப் பாரபட்சம், அநீதி, ஓரவஞ்சனை என்பன மிகப் பிரதான காரணங்களாக அமைந்துள்ளதை உலக வரலாறு நிரூபிக்கின்றது. யுத்தங்கள், கொலைகள் கூட இவ்வாறான காரணங்களால் நிகழ்ந்துள்ளதைப் பார்க்கின்றோம்.

அல்குர்ஆன் (அந்நிஸா: 105) ஆவது வசனம் நபி (ஸல்) அவர்களது ஒரு பிழையான அனுமானத்தைத் திருத்திக் கொடுப்பதற்காக இறக்கப்பட்டதாகும். ஒரு திருட்டுச் சம்பவத்தில் ஒரு முஸ்லிம் சம்பந்தப்பட்டிருந்தார். ஆனால் அவர் அப்படி செய்திருக்க மாட்டார் என்று நபி (ஸல்) அவர்கள் உறுதியாக நம்பினார்கள். காரணம், திருட்டில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்பட்டவர் இஸ்லாத்தை எதிர்த்து வந்த நயவஞ்சகர்களில் ஒருவராவார். ஆனால் அல்லாஹ் ''நீர் மக்களுக்கு மத்தியில் உமக்குக் காட்டித் தந்தபடி தீர்ப்பளிக்க வேண்டும் என்பதற்காக உமக்கு வேதத்தை இறக்கினேன். நீர் மோசடிக் காரர்களுக்காக வாதிடுபவர்களில் ஒருவராக இருக்காதீர்... (4: 105) எனக் கூறினான்.

10. கரைந்துவிடாமல் கலந்து வாழ்வது :-
முஸ்லிம்கள் - முஸ்லிம் அல்லாதவர்களுடன் சமாதான சக வாழ்வை மேற்கொண்டாலும் தமது தனித்துவங்களை விட்டுக் கொடுக்க முடியாது. ஒரு முஸ்லிமையும் முஸ்லிம் அல்லாதோரையும் பிரித்துக் காட்டும் பல வித்தியாசங்கள் உள்ளன. நம்பிக்கைக் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், சட்டவிதிகள், பண்பாட்டு அம்சங்கள் என்பனவே அவைகளாகும். சமூக, மத நல்லிணக்கம் என்ற பெயரில் மார்க்கத்தின் அடிப்படையிலான அம்சங்களில் ஒரு போதும் நெகிழ்ந்து கொடுக்க முடியாது. தமது தனித்துவங்களை பேணிக் கொண்ட நிலையில் பிறரை மதித்து, கௌரவித்து இனங்கி வாழ்வதில் தப்பில்லை.

எனவே முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து முற்று முழுதாக ஒதுங்கியிருப்பது, அவர்களுடன் இரண்டறக் கலந்து தனித்துவங்களையும் கூட இழந்து விடுவது ஆகிய இரு துருவ நிலைகளில் ஏதாவது ஒன்றில் நிற்காமல் நடுநிலையில் நிற்பதையே இஸ்லாம் ஆதரிக்கிறது. கரைந்துவிடாமல் கலந்து வாழ்வது என்பது இதனையே குறிக்கும்.

**சமய, சமூக நல்லிணக்கம், நடைமுறைகள்**

இஸ்லாமிய வரலாற்றில் சமய, சமூக நல்லிணக்கமானது உயர்ந்த நிலையில் பேணப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம். பிற சமுதாயத்தவர்கள் தமக்கருகில் வாழ்வதற்கு முஸ்லிம்கள் அங்கீகாரம் வழங்கியது மாத்திரமன்றி அவர்களுடன் சகல விதத்திலும் சமூக உறவுகளைப் பேணி வந்திருக்கிறார்கள். அதற்காகப் பின்வரும் உதாரணங்களைக் குறிப்பிட முடியும்.

1. முஸ்லிம்கள் மதீனாவுக்கு வந்தவுடன் அமைத்த இஸ்லாமிய அரசில், முஸ்லிம் அல்லாதவர்களும் திம்மீக்கள் (முஸ்லிம்களது பாதுகாப்பைப் பெற்றவர்கள்) என்ற பெயரில் வாழ்வதற்கும் சமூக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய மதீனா அரசில் சிறுபான்மை என்ற பெயரில் யாரும் இருக்கவில்லை. அங்கு வாழ்ந்த எல்லோரும் எல்லாவிதமான உரிமைகளையும் பெற்று வாழ்ந்தனர். அதன் பிரதான அம்சங்கள் பின்வருமாறு அமைந்தன.

1. யூதர்களும், முஸ்லிம்களும் தத்தமது சமயத்தை முழுமையாகப் பின்பற்றலாம்.
2. இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் யூதர்கள் உதவி செய்யப்படுவர், நீதியாக

நடத்தப்படுவர்.
3. தமது தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்கு அன்னிய சமூகத்தோடு இணைந்து போர் புரிய முஸ்லிம்களுக்கு யூதர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.
4. பொது நன்மைகளை எட்டுவதற்காக யூதர்களும், முஸ்லிம்களும் பரஸ்பரம் உபதேசம் செய்து கொள்வார்கள். பாவங்கள் அத்துமீறல்களுக்கு பரஸ்பரம் உதவ மாட்டார்கள்.
5. யாராவது ஏதும் ஒரு தவறு செய்தால் அது அவனுக்கு எதிரானதாக மட்டுமே பார்க்கப்படும். சமூக விவகாரமாக பார்க்கப்பட மாட்டாது.

ஹுதைபிய்யா உடன்படிக்கை, நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்களோடு நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட நஜ்ரான் ஒப்பந்தம், அபூ உபைதா (ரழி) அவர்கள் சிரியாவின் ஹிம்மஸ் பிரதேச மக்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தம், ஆர்மேனியர்களுடன் கலீபா முஆவியா (ரழி) அவர்கள் செய்த உடன்படிக்கை என்பன சமூக, சமய நல்லிணக்கத்துக்கான சிறந்த வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன.

நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்கள் மதீனா வந்த போது நபி (ஸல்) அவர்கள் நடந்து கொண்ட முறை இன்றும் போற்றப்படுகின்றது. அவர்களை அன்னார் மஸ்ஜிதுன் நபவியில் வரவேற்று தங்க வைத்ததோடு மஸ்ஜிதின் ஒரு பகுதியில் தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் இடமளித்தார்கள். அவர்கள் தமது மார்க்கம் பற்றி விவாதித்த போது அதற்குச் செவிமடுத்தார்கள். மிகவும் இங்கிதமான முறையில் கேள்விகளுக்கு விடை பகர்ந்தார்கள்.

2. மதீனாவில் முஸ்லிம் அல்லாத யூத, கிறிஸ்தவர்களும் பல தெய்வ வணக்கத்தில் ஈடுபட்டவர்களும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் தாராளமாக ஈடுபட்டனர்.

3. நபி (ஸல்) அவர்களும் அன்னாரது தோழர்களும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு வறுமை, நோய், இறப்பு போன்ற துன்பங்கள் சம்பவித்த போது மனிதாபிமான உதவிகளைச் செய்திருக்கின்றார்கள்.

4. முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து அன்பளிப்புக்களைப் பெற்றதுடன் அதற்குப் பதிலாக அன்பளிப்புக்களை வழங்கியமைக்கான பல சான்றுகளும் உள்ளன. எகிப்தின் கிறிஸ்தவ மன்னராக இருந்த முகௌகஸ் நபி(ஸல்) அவர்களுக்குப் பல அன்பளிப்புக்களை அனுப்பினான். நபியவர்கள் அவ்வன்பளிப்புக்களை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள்.

இந்தியாவிலும் ஸ்பெய்னிலும் முஸ்லிம்கள் அமைத்த ஆட்சி பல்லின சமுதாயங்களுக்கான கொட்டிலாக அமைந்திருந்தது. உமைய்யா, அப்பாஸிய, உஸ்மானிய ஆட்சிக் காலங்களில் பிற சமயத்தவர்கள் ஆட்சி, கல்வி, சமூக முன்னேற்றம், பொருளாதாரம் போன்ற துறைகளில் முஸ்லிம்களோடு தோளோடு தோள் நின்று உழைத்திருக்கின்றார்கள்.

**இலங்கையில் சமூக, சமய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான முயற்சிகளில் ஒன்றாக பல்லின சமூக அமைப்பில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.**

- அனைத்து மக்களையும் ஆதம் (அலை) அவர்களின் சந்ததியினர் என நோக்குதல்
- பிற சமயத்தவர்களின் இன்ப துன்பங்களில் கலந்துகொள்ளல்
- முஸ்லிம்களது கொண்டாட்டங்கள், வைபவங்கள், நிகழ்வுகள் முதலானவற்றில் கலந்து கொள்வதற்குப் பிற சமயத்தவர்களை அழைத்தலும், அவர்களை உபசரித்தலும்
- வைத்தியசாலைகள், பாடசாலைகள், முதலானவற்றுக்கு உதவுதல்
- சிரமதானங்கள், இரத்த தான நிகழ்வுகள், மருத்துவ முகாம்களை இனபேதம் பாராது நடாத்துதல்
- அனர்த்தங்களின் போது மனித நேயத்துடன் உதவுதல், நிவாரண உதவிகளை வழங்குதல், பங்கேற்றல்
- இஸ்லாம் கூறும் ஜீவகாருண்யம் தொடர்பான ஒழுக்கங்களை உயர்ந்த பட்சம் பேணுதல்
- போதைப் பொருள் ஒழிப்பு, சூழல் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள், சமூக விரோதச் செயல்கள் முதலான பொது வேலைத்திட்டங்களில் பங்கேற்றல்.
- விழாக்கள், வைபவங்கள், மற்றும் பொது நிகழ்வுகளின் போது எளிமையைக் கடைப்பிடிப்பதோடு பயணிகளின் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் நடந்து கொள்ளல்
- எமது மஸ்ஜிதுகளிலும் ஏனைய மத நிறுவனங்களிலும் ஒலிபெருக்கிகள், வானொலிகள் என்பவற்றைப் பயன்படுத்தும் போது அண்டை அயலவர்களுக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் நடந்துகொள்ளல்.
- எப்போதும் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் வகையில் பிரதேச, தேசிய நலன்களுக்காக ஈடுபாட்டுடன் உழைத்தல்.

மேலும் தாம் வாழும் பிரதேசத்தில் காணப்படுகின்ற சமய, சமூக நிறுவனங்களோடு ஒன்றிணைந்து சமூக மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்து செயற்படுத்துவதன் ஊடாக நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்க முடியும். இதற்காக நிரந்தமான அமைதி, ஒத்துழைப்பு, அபிவிருத்தி, சமூக மேம்பாடு மற்றும் ஒழுக்க மேம்பாடு ஆகியவற்றை அடையும் வகையில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானது.

அவ்வாறே சமூக நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகளில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கான முனைப்பான செயற்பாடுகளும், மேற்பார்வைகளும் அவசியமாகும்.

**மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் :**

1. சுக்ரி எம்.ஏ.எம், இஸ்லாமும் மனித உரிமைகளும் (1995), நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டு பணியகம்,பேருவல.
2. மணவை முஸ்தபா, இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்(1996), சௌதா பப்ளிகேஷன், சென்னை.
3. அன்ஸார் மௌலானா, எப்.எம்.எஸ்.ஏ இலங்கையின் பன்மைச் சமூக கலாசாரக் கூறுகளிடையே நல்லினக்கங்கள் (2008), முஸ்லமும் பெண்கள், ஆராய்ச்சி வெளியீடு, கொழும்பு
4 ஸாஹிர் எம்.ரீ.எம், சகவாழ்வு (2014), ஸாஹிர் பதிப்பகம், மாவனல்லை.
5. ஹாஷிம் உமரி, முன்மாதிரி முஸ்லிம், ஐப்டி பதிப்பகம், சென்னை

**தேர்ச்சி 09 : இஸ்லாமிய நாகரிகத்தைப் பாதுகாப்பதில் ஷரீஆவின் பங்கை விரிவாக எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1 : தீன், ஷரீஆ, பிக்ஹ் என்பவற்றை விளக்கி சமூக வாழ்வுக்கு ஷரீஆவின் அவசியத்தை எடுத்துக் காட்டுவார்.**

**பாடவேளைகள் : 10**

**கற்றல் பேறுகள் :**

- தீன், பிக்ஹ், ஷரீஆ ஆகிய பதங்களை விபரித்துக் கூறுவார்.
- இறை நீதிக்கும் மனித நீதிக்கும் இடையிலான வேறுபாட்டை இனங்கண்டு கூறுவார்.
- ஷரீஆவின் அவசியத்தை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- **தீன் பத விளக்கம்**

அல்குர்ஆனில் ''தீன்'' எனும் சொல், மொழி ரீதியாக பல்வேறு கருத்துக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை மூன்று வகையாக அறிஞர்கள் பிரித்து விளக்கியுள்ளனர். அவற்றுள்,

**முதலாவது** : கண்ணியம், அதிகாரம், ஆட்சி, கட்டளையிடுதல் முதலியன.

**இரண்டாவது** : அடிபணிதல், உட்படுதல், அடிமைப்படுத்துதல், பின்பற்றுதல் போன்றன.

**மூன்றாவது** : விசாரணை செய்தல், தீர்ப்பு வழங்குதல், செயல்களுக்கு நற்கூலியும் தண்டனையும் கொடுத்தல் என்பன.

அல்குர்ஆனில் 'தீன்' எனும் பதம் பிரயோகிக்கப்பட்டுள்ள இடங்கள் சில,

(பாத்திஹா: 04), (அந்நிஸா:164,171), (ஷூரா:13), (ஆலஇம்ரான்:19,83,85), (அத்தௌபா:33), (அல் பத்ஹு: 28), (அஸ் ஸப்: 09), (அல்காபிரூன்: 06) (அல் அ.்.ராப்: 51),

**பரிபாஷை ரீதியில்:**

'இறைவனை அதிகாரம் செலுத்துகின்றவனாக ஏற்றுக் கொண்டு, இறைத்தூதர் மூலம் வந்திருக்கின்ற சட்டங்கள் அனைத்துக்கும் அடிபணிந்து, இறைத் தூதர்களையும் பின்பற்றி நடத்தல்'' தீன் என அழைக்கப்படுகின்றது.

''தீன்'' எனும் சொல் இஸ்லாத்தைக் குறிப்பதற்கான ஒரு பதமாக மாத்திரம் அல்குர்ஆன் பயன்படுத்தவில்லையென்பதை இஸ்லாமிய அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். தீன் என்பது ஒரு பொதுவான பதப் பிரயோகமாக அல்குர்ஆன் பயன்படுத்தியுள்ளது. மனிதர்களால் பின்பற்றப்படுகின்ற சகல விதமான மார்க்கங்கள் மற்றும் கொள்கைகள் என்பவற்றைக் குறிப்பதற்கு இப்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நேர்வழியில் உள்ள, வழிகேடான மார்க்கங்களைக் குறிப்பதற்கும் இப்பதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

‘உங்களுக்கு உங்களுடைய மார்க்கம், எனக்கு என்னுடைய மார்க்கம்’ (ஸூரா காபிரூன்:06)

மேற்படி வசனத்தில் இறை மறுப்பாளர்கள் பின்பற்றும் மார்க்கத்தைக் குறிப்பதற்கும், இஸ்லாத்தைக் குறிப்பதற்கும் தீன் எனும் சொற்பிரயோகமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று அல்குர்ஆன் பல இடங்களில் தீன் என்ற பதத்தை பொதுவான கருத்தில் பிரயோகித்துள்ளது. (ஸூரா நிஸா: 171), (ஸூரா அ.்.ராப் :51), (ஸூரதுத் தௌபா:33), (ஸூரத்துல் பத்ஹு: 28), (ஸூரதுஸ்ஸப்: 09).

இருப்பினும், இஸ்லாம் வந்ததன் பின்னர், இஸ்லாத்தைத் தவிர வேறு ஒரு மார்க்கத்தை தீன் எனக் குறிப்பிட முடியாது எனவும் சில அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

‘நிச்சயமாக (தீனுல்) இஸ்லாம்தான் அல்லாஹ்விடத்தில் (ஒப்புக்கொள்ளப்பட்ட) மார்க்கமாகும்.’ (ஸூரா ஆல இம்ரான்: 19)

‘மேலும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்படமாட்டாது’ (ஸூரா ஆல இம்ரான் :85)

மேற்படி இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ள இஸ்லாம் அல்லாத வேறு மார்க்கங்கள் என்பது முன்னைய திரிபுபடுத்தப்பட்ட வேதங்களையே குறிப்பிடுவதாகவும், இஸ்லாம் வந்தபின்னர், அவை அனைத்தும் செல்லுபடியற்றதாக மாற்றப்பட்டது என்பதைக் குறிப்பதாகவும், தீன் என்பது இஸ்லாத்தை மட்டுமே குறிக்கும் சொல் எனவும் அவ்வறிஞர்கள் இக்கருத்துக்கு விளக்கமளிக்கின்றனர்.

தீன் என்பது எப்போதும் ஒன்றுதான். அது எப்போதும் ஒன்றாகவே இருந்தது. இப்போதும் ஒன்றாகவே இருக்கின்றது. ஆனால், ஷரீஅத் எனப்படும் மார்க்கங்கள் பல வந்திருக்கின்றன. பல ஷரீஅத்துக்கள் ரத்து செய்யப்பட்டன. பல ஷரீஅத்துக்கள் திருத்தமும் மாறுதலும் செய்யப்பட்டன. இருப்பினும், ஷரீஅத்தைத் திருத்துவதால், என்றைக்கும் தீன் மாறியதில்லை.

நூஹ் (அலை) அவர்களின் தீனே தான் இப்றாஹீம் (அலை) அவர்களின் தீனாகும். அதுவே மூஸா (அலை) அவர்களின் தீனாகும். அதுவேதான் சுஐப் (அலை), ஸாலிஹ் (அலை), ஹூத் (அலை) ஆகியோரின் தீனும் ஆகும். அதுவே முஹம்மத் (ஸல்) அவர்களின் தீனும் ஆகும்.

ஆனால், இவர்களின் ஷரீஅத்கள் (மார்க்கங்கள்) ஏதேனும் ஒரு விதத்தில் ஒன்றுக்கொன்று மாறுபட்டே இருந்தன. உதாரணமாக, இபாதத்துக்கள் நிறைவேற்றும் வழிமுறைகள் ஷரீஆக்களுக்கிடையில் வேறுபட்டிருந்தமையை கூறலாம்.

**ஷரீஆ பத விளக்கம் :**

ஷரீஆ என்ற பதத்துக்கு மொழி ரீதியில் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆரம்பம், விளக்கம், நீர் ஊற்று, தெளிவு, தெளிவான பாதை என இந்த சொல்லுக்கு மொழி ரீதியில் கருத்துக்கள் கொள்ளப்படுகின்றன.

அல்குர்ஆன், ஷரீஆ எனும் பதத்தை ஒரேயொரு இடத்தில் பயன்படுத்தியுள்ளது. ‘இதன் பின்னர் உம்மை ஷரீஅத்தில் (மார்க்கத்தில்) ஒரு நேரான வழியில் நாம் ஆக்கியுள்ளோம்’. (அல் ஜாஸியா:18)

அல்குர்ஆன், ‘ஷரீஅ’ எனும் சொல்லில் இருந்து பிரிந்துவரும் வேறு பல பதங்களை பல்வேறு இடங்களில் பயன்படுத்தியுள்ளது. அவற்றுள், ஷரஅ, ஷரஉவ், ஷிர்அதன், ஷுர்ரஅன் என்பன குறிப்பிடத்தக்கன.

பரிபாஷை ரீதியில், ஷரீஆ என்ற பதத்துக்கு அறிஞர்கள் இரு வகையான விளக்கங்களை வழங்கியுள்ளனர். அவற்றுள்,

**முதலாவது :** ‘உலகில் தோன்றிய எந்தவொரு நபியும் கொண்டு வந்த அல்லாஹ்வால் தனது அடியார்களுக்கு வகுக்கப்பட்ட சட்டங்கள் ஷரீஆ’ ஆகும்.

இந்த விளக்கத்தின்படி, ஷரீஆ என்பது நம்பிக்கைக் கோட்பாடுகள், பண்பாடுகள், சட்டங்கள் ஆகிய அனைத்தையும் பொதுவாக உள்ளடக்கியுள்ளது.

**இரண்டாவது :** ‘ஷரீஆ என்பது நம்பிக்கைக் கோட்பாடுகள் மற்றும் பண்பாடுகள் என்பன தவிர்ந்த மனித வாழ்வுடன் அன்றாடம் தொடர்புறும் நடைமுறைசார் சட்டங்களாகும்’.

ஷரீஆ எனும் பதத்தை சட்டவியல் எனும் கருத்தில் எந்தவொரு இடத்திலும் அல்குர்ஆன் பயன்படுத்தவில்லை. நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய சமூகத்தில் மதீனாவிலேயே சட்டவாக்கம் அமுலாகியது. அல்குர்ஆன் ஷரீஆ எனும் சொல்லை ஒரேயொரு இடத்தில் மக்கி ஸூராவிலேயே பயன்படுத்தியுள்ளது. அதுவும், சட்டவியல் எனும் கருத்தில் அவ்வசனத்தில் ஷரீஆ எனும் சொல் பயன்படுத்தப்படவில்லை என அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**பிக்ஹு பத விளக்கம் :**

அறபு மொழியில் ‘பிக்ஹ்’ என்ற சொல்லுக்கு விளக்கிவைத்தல், தெளிவுபடுத்துதல், வார்த்தைகளிலுள்ள சிக்கல்களை நீக்குதல் என்ற கருத்துக்கள் கொள்ளப்படுகின்றன. ஒரு சட்ட விடயத்தில் ஒருவர் ஆழமான அறிவைப் பெற்றிருப்பின் அவரை ‘பகீஹ்’ என்ற பெயர் கொண்டு அழைக்கப்படும்.

ஒன்றை ஆழமாகப் புரிந்துகொள்வதனைக் குறிப்பதற்கும் பிக்ஹு என்ற சொல் அல்குர்ஆனில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ‘அவர்களில் ஒவ்வொரு வர்க்கத்தாரிலிருந்தும் ஒரு சிறிய கூட்டத்தார் சன்மார்க்க ஞானத்தை கற்றுக் கொள்வதற்காக’ (யூனுஸ்: 122)

‘யாருக்கு அல்லாஹ் நலவை நாடுகின்றானோ, அவனுக்கு மார்க்கத்தில் விளக்கத்தைக் கொடுக்கின்றான்’ (அல் ஹதீஸ்)

**பரிபாஷை ரீதியில்**, பருவமடைந்த ஒரு மனிதனின் வாழ்க்கையில் உருவாகும் சகல விவகாரங்களையும் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, இஜ்மா, கியாஸ் என்ற மூலாதாரங்களின் அடிப்படையில் விளக்கும் ஒரு கலையே ‘பிக்ஹ்’ எனப்படுகின்றது.

**ஷரீஅத் சட்டம் தொடர்பாக அறிஞர்கள் முன்வைக்கும் வரைவிலக்கணங்கள்**

மனித வாழ்வை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்துவது சட்டம் என இஸ்லாத்தின் பார்வையில் பொதுவாகப் பார்க்கப்பட்டாலும் இதற்கு பல்வேறு வரைவிளக்கணங்கள் கூறப்படுகின்றன.

'மனித குழுமங்களுக்கு மத்தியில் மனித நடத்தைகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தும் நெறிமுறைகளே இறைசட்டங்கள்' (கலாநிதி உமர் ஸுலைமான்)

'அனைத்துத் துறைகளிலும் மொத்தமாக செல்வாக்குச் செலுத்தும் ஒரு சொல்லே ஷரீஅத் எனும் இறைசட்டமாகும்' (அல் ஜுர்ஜானி)

'ஒவ்வொரு பொருட்களுக்கும் உள்ள அளவீடே ஷரீஅத் சட்டமாகும்' (ஆபாதி)

**மனித சட்டத்துக்கும் இறை சட்டத்துக்கும் இடையிலான வேறுபாடுகள்:**

ஏனைய சட்டங்களிலிருந்து இஸ்லாமிய ஷரீஆ சட்டம் முற்றிலும் சிறப்பான இடத்தைக் கொண்டுள்ளது.

1. ஏனைய சட்டங்கள் மனித சிந்தனைக்கு உட்பட்டுள்ளது. ஆனால், ஷரீஆ சட்டம் குறை அறிவுள்ள மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டு நிறைவான இறைசட்டமாக மாத்திரம் பிரதிபலிக்கின்றது.
2. ஏனைய சட்டங்களை நோக்கின், அதனைத் தேவைக் கேற்றவாறு காலத்துக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கலாம். ஆனால், ஷரீஆ சட்டங்கள் எப்போதும் எக்காலத்துக்கும் ஒரே சட்டமாகத் தான் உள்ளது. அதனை மாற்ற முடியாது.
3. மனித சட்டங்கள் மறைவான நிலையில் மீறப்படுகின்றது. ஆனால், ஷரீஆ சட்டங்கள் இறைவனுக்குப் பயந்து பேணப்படுகின்றது. உதாரணம்: ஹலால் ஹராம், இபாதத்துக்கள் போன்ற விடயங்களில் உள்ள சட்டதிட்டங்கள்.
4. மனித சட்டங்களைப் பேணுவதனால், இவ்வுலகில் மாத்திரமே நன்மை அடையலாம். ஆனால், இறை சட்டங்களை பேணுவதனால் ஈருலகிலும் நன்மைகள் கிடைக்கின்றன.
5. மனித சட்டங்கள் உலகில் மீறப்படும் போது, சாட்சிகளுடன் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே தண்டனை வழங்க முடியும். ஆனால், இறை சட்டங்கள் மீறப்படும் போது, இம்மையில் தண்டனை கிடைக்காவிடினும் கூட கப்ரிலும், மறுமையிலும் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும்.
6. இவ்வுலகிலுள்ள குற்றவியல் சட்டங்களைப் பேணி நடப்போருக்கு சன்மானங்கள் கிடைப்பதில்லை. ஆனால், ஷரீஆ சட்டங்களை பேணி வந்தால் மறுமையில் சன்மானம் கிடைக்கும்.
7. மனித சட்டங்களுக்கான அளவீடு, வெளிப்படை செயற்பாடுகளை வைத்தே தீர்மானிக்கப்படும். இறை சட்டங்களுக்கு அடிபணிபவர்களுக்கான அளவீடுகள் எண்ணங்களை (இ.ஃலாஸை) வைத்தே தீர்மானிக்கப்படுகின்றன.
8. மனித சட்டங்களுக்கான பெறுமானங்கள் ஒப்பீட்டளவில் சிறியது. ஆனால், இறை சட்டங்களுக்கான பெறுமானம் அளவில்லாதது. இரட்டிப்புக் கூலிக்குரியது.
9. மனித சட்டங்களைப் பொறுத்தவரை, சமூகமே சட்டத்தை உருவாக்குகின்றது. ஆனால், ஷரீஆ சட்டங்கள் சமூகத்தின் உருவாக்கமோ, சமூக வளர்ச்சிப் பயணத்தின் விளைவோ அல்ல. மாறாக அது இறை ஆக்கமாகும்.

10.மனித சட்டங்கள் தனிமனித நலனுக்கே முன்னுரிமை கொடுக்கின்றது. தனி மனிதனைப் பாதுகாப்பதனை நோக்காகக் கொண்டே அனைத்து சட்டங்களும் அமைந்துள்ளன. ஆனால், ஷரீஆ சட்டங்கள் சமூகத்திற்கு முன்னுரிமை அளிக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா ஒப்பந்தத்தில் தனது பெயருடன் இருந்த அல்லாஹ்வின் தூதர் என்ற வார்த்தையை நீக்கிவிட தீர்மானித்தார். இது தன்னை விட சமூகத்தை நபியவர்கள் முதன்மைப்படுத்தினார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

அதேபோன்று, பார்வையற்ற ஒரு நபித்தோழருக்குக் கூட கூட்டுத் தொழுகையில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கான அனுமதியை நபியவர்கள் கொடுக்கவில்லை. அத்துடன், ஜமாஅத் என்று அழைக்கப்படும் கூட்டுத் தொழுகைக்கு வராதவர்களின் வீடுகளை தீ வைத்து கொளுத்திவிட நாடுகின்றேன் என்று நபி (ஸல்) அவர்கள் கோபங் கொண்டார். இந்த சம்பவங்கள் அனைத்தும் தனிமனித உள்ளங்களில் சமூக அக்கறை இருக்க வேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. நபியவர்களின் வழிகாட்டல்கள் சமூகத்தை முதன்மைப்படுத்தியதாக அமைந்திருந்தன என்பதை மேற்படி சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

11. மனித சட்டங்கள் தீமையைத் தடுக்கின்ற பணியையே செய்ய முயற்சிக்கின்றன. ஆனால், ஷரீஆ சட்டங்கள் தீமையை நிரந்தரமாக இல்லாமலாக்கி நன்மையை வாழ வைப்பதற்கு வழிகாட்டுகின்றது. தீமைகள் குறித்த எச்சரிக்கையும், நன்மைக்கான தூண்டுதலும் ஷரீஆ சட்டத்தில் பொதிந்துள்ள மற்றுமொரு அம்சமாகும்.

## இஸ்லாமிய ஷரீஆ உலகிற்கு வழங்கிய அருட்கொடைகள்

இஸ்லாமிய ஷரீஆ உலகில் பதின்மூன்று நூற்றாண்டுகள் செல்வாக்குடன் காணப்பட்டது. பல சமூகங்களையும், சமூக சூழ்நிலைகளையும் வெற்றி கொண்டு, ஷரீஆவினால் உலகில் நிலைத்து நிற்க முடிந்தது.

இஸ்லாமிய ஷரீஆவை முஸ்லிம்கள் பற்றிப் பிடித்துக் கொண்டபோது, உலகாளும் ஆட்சியாளர்களாக முஸ்லிம்கள் மாறினார்கள். இந்த ஷரீஆவின் நிழலில் முழு உலகமும் நிம்மதி, சந்தோசம், அமைதியைக் கண்டது. ஷரீஆவினால் முஸ்லிம் சமூகம் அடைந்து கொண்ட சிறப்புக்களை விளங்கிக் கொள்ளும் ஒருவர், அந்த ஷரீஆவின் அவசியத்தை உள்ளாற உணர ஆரம்பிப்பார்.

ஷரீஆவின் நிழலில் கடந்த 13 நூற்றாண்டுகள் உலகம் அடைந்து கொண்ட அருட்கொடைகளை இன்று உலகம் இழந்து நிற்கின்றது. அவற்றை மீண்டும் அடைந்து கொள்ளும் போதே, உலகம் இழந்த அமைதியையும், நிம்மதியையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இஸ்லாமிய ஷரீஆவின் யதார்த்தத்தை அறியவிடாமல், காழ்ப்புணர்வுடனும், குற்றம்சாட்ட வேண்டும் என்ற மனப்பாங்குடனும் இஸ்லாம் குறித்த விமர்சனங்களை கீழைத்தேய ஆய்வாளர்கள் கட்டவிழ்த்து விட்டு வருகின்றனர். உலகம் மீண்டும் ஷரீஆவின் பால் மீளக் கூடாதென்பதே இவர்களின் ஒரே நோக்கமாகும்.

ஷரீஆவின் நிழலில் வாழ்ந்த சமூகம் அடைந்து கொண்ட அருட்கொடைகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

01. ஜாதி, இன வேறுபாடற்ற சமத்துவம்

02. நீதியான சூழல்

03. கட்டுக்கோப்பான குடும்பம்

04. வட்டியில்லாத பொருளாதார முறைமை

05. முரண்படாது சகிப்புத் தன்மை பேணும் சமூகம்

06. கண்ணியமும் சுதந்திரமும் பெற்ற தனிமனிதர்கள்

07. நன்மையை வாழ வைக்க விரும்பும் ஆன்மீகவாத ஆட்சியாளர்கள்

08. மனித உரிமைகள் மதிக்கப்படும் சூழல்

09. ஆட்சியாளர்களை வழிப்படுத்தும் அறிஞர்கள்

10. சமூகப் பாதுகாப்பு

11. பெண்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதம்

12. சூழலை நேசிக்கும் தனிமனிதர்கள்

13. போதையிலிருந்து விடுபட்ட சமூகம்

14. பக்குவமுள்ள அறிவுச் சமூகம்

**தேர்ச்சி 09 : இஸ்லாமிய நாகரிகத்தைப் பாதுகாப்பதில் ஷரீஆவின் பங்கைவிரிவாக எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 9.2 : ஷரீஆவின் சிறப்புக்களையும், அதன் உள்ளடக்கத்தையும் விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**பாடவேளைகள் : 10**

**கற்றல் பேறுகள் :**

- ஷரீஆவின் உள்ளடக்கத்தை அடையாளப்படுத்திக் கூறுவார்.
- இஸ்லாமிய ஷரீஆவின் சிறப்பம்சங்களை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.
- ஷரீஆவின் சிறப்பம்சங்களை விளங்கி எடுத்துக் கூறுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**ஷரீஆவின் உள்ளடக்கம்**

தீன், ஷரீஅத், பிக்ஹ் போன்ற பதப் பிரயோகங்கள் இஸ்லாத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்ற பிரயோகங்களாகும். தீன் என்பது இஸ்லாமிய மார்க்கத்தையும், அல்லாஹ்வை நம்பிக்கை கொள்ளல், வணக்க வழிபாடுகள், இபாதத், முஆமலாத் போன்றவற்றுடன் தொடர்புடைய கோட்பாடுகள் சட்ட திட்டங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்குகின்றது.

தனிமனிதனும் சமூகமும் இஸ்லாமிய வழிமுறைகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான, கொள்கை, கோட்பாடுகளை ஷரீஅத் வரையறுத்துக் கொடுக்கின்றது. ஷரீஆ, பிகஹ் போன்ற பதங்கள் ஒத்த கருத்தில் பயன்படுத்தப்பட்ட போதிலும் அதற்கிடையே கருத்து ரீதியான சில வேறுபாடுகள் உள்ளன.
பிக்ஹ் என்பது சட்டங்களை மாத்திரம் குறிக்கும். ஷரீஆ என்பது சட்டங்களையும் சட்ட மூலாதாரங்களையும் வழிமுறைகளையும் விதிகளையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இவ்வகையில் ஷரீஆ என்ற பதம் பிக்ஹ் என்பதை விட பரந்த கருத்தைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.
நபிமார்கள் போதித்த தீனின் அடிப்படை காலத்துக்குக் காலம் மாறுபடவில்லை. மாறாத் தன்மையுள்ள அடிப்படை நம்பிக்கைகளைக் கொண்ட தீன், சகல இறைத் தூதர்களிடமும் ஒன்றாகவே காணப்பட்டது. ஆனால், ஒவ்வொரு இறைத்தூதருக்கும் வழங்கப்பட்ட ஷரீஆவில், சமூக, கால, சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றமான சட்டங்கள் வழங்கப்பட்டிருந்தன.
இவ்வகையில், நபிமார்கள் போதித்த தீன் ஒன்றாக இருக்க ஷரீஅத் மாறுபட்டு அமைந்தமை நோக்கத்தக்கது. இஸ்லாமிய ஷரீஆ பற்றி நோக்கும் போது, பொதுவாக மனித நடவடிக்கைகளை அது மூன்று பகுதிகளாக பிரித்து நோக்குகின்றது.

1. ம∴ரூபாத் - நற்செயல்கள் (ஏவப்பட்டவை)
2. முன்கராத் - துர்ச்செயல்கள் (தடுக்கப்பட்டவை)
3. முபாஹாத் - ஆகுமாக்கப்பட்டவை

அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் வருகின்ற பர்ளுகள், வாஜிப்கள் முதலிய ஏவல்களையும், நற்கருமங்கள் என தூண்டப்பட்ட முஸ்தஹப் ஆனவை என்பனவும் ம∴ரூபாத்தில்

அடங்கும். முன்கராத் என்பது ஹராம், மக்ரூஹ், இழிவு தருபவை, வெறுக்கப்பட்டவை என்பன இதில் அடங்கும்.

ம.்.ரூபாத், முன்கராத் என்பவை தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், இவை மனித வாழ்வின் மிகச் சிறிய பகுதியையே உள்ளடக்குகின்றது. எஞ்சிய பகுதிகள் யாவும் முபாஹ் எனப்படும் எல்லையில் அடங்கும். இங்கு மனிதனின் செயல்கள் ம.்.ரூபாத்தில் அடங்குவனவா? முன்கராத்தில் அடங்குவனவா? என்பதை பகுத்தறிவைப் பயன்படுத்தி ஆராய்ந்து பார்த்து தீர்ப்பு வழங்க வேண்டியுள்ளான். எனவே, நன்மை பயக்கும் செயல்கள் அங்கிகரிக்கப்பட்டவை என்றும், தீமை பயக்கத் தக்க செயல்கள் நிராகரிக்கப்பட்டவை என்றும் மதிக்கப்படுகின்றன.

குறித்ததொரு செயல் நன்மை தராவிடினும் அதனூடாக தீமை விளையாவிடினும் அது அங்கீகரிக்கப்படுகின்றது என கருதப்படுகிறது. அவ்வாறே தீமைகள் நன்மைகளை விட அதிகமாயின் அவை தடை செய்யப்படுகின்றது.

இவ்வகையில் மனிதன் பகுத்தறிவைப் பயன்படுத்தி தீர்மானத்துக்கு வரவேண்டிய முயற்சிகள் பல உள்ளன. இம்முயற்சியில் ஈடுபடுவதனை இஜ்திஹாத் என்பர். இங்கு மனித முயற்சிக்கு விசாலமான பரப்பு வழங்கப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம். இது இஸ்லாமிய ஷரீஆவில் உள்ள விசாலத் தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. இது அல்லாஹ் தனது அடியார்களுக்கு செய்த ஓர் அருளாகும்.

சமூக வளர்ச்சிக்கு ஏற்ப புதுப்புதுப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இவை ஷரீஆவின் அடிப்படையில் தீர்க்கப்படுவதனாலேயே சமூகத்தில் அமைதியும், கட்டுக்கோப்பும், சமூக நலனும் பேணப்பட முடியும். இவற்றுக்கு இஜ்திஹாத் வழிகாட்டுகிறது.

அதாவது, ஷரீஆவின் சட்டத்துக்கு பகுத்தறிவு வழிகொண்டு இறைவனின் சட்டத்தை மனிதன் விரிவுபடுத்தும் செயல் இஜ்திஹாத் மூலம் நடைபெறுகின்றது. இதன் மூலம் இஸ்லாமிய சட்டத்துறை உயிரோட்டம் மிக்கதாக வளர்ந்து செல்கின்றது.

இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களின் மூலாதாரங்களை **(மஸாதிருஷ்ஷரீஆ)** இருவகையாக வகுத்து நோக்குவர்.

1. முதற்தரமான அடிப்படை மூலாதாரங்களில் அல்குர்ஆன், ஹதீஸ் அடங்கும்.
2. இரண்டாம் தரமான துணை மூலாதாரங்களில் இஜ்திஹாத் அடிப்படையில் பெறப்படும், இஜ்மா, கியாஸ், மஸ்லஹா முர்ஸலா, இஸ்திஹ்ஸான், கவ்லுஸ்ஸஹாபா, உர்பு, இஸ்திஸ்ஹாப், ஸத்துஸ் ஸராஇஉ, அமலு அஹ்லில் மதீனா, ‘ராஇஉஸ் ஸாபிகா போன்ற வடிவங்களைப் பெறுகின்றன.

இவை தவிர ஷரீஆ சட்டங்கள் (அஹ்காமு ஷரீஆ) என மற்றொரு வகையும் காணப்படுகின்றன. இது இஸ்லாமிய ஷரீஆ சட்ட மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்ட சட்டங்களே இவையாகும். இது இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

அ) அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவின் தெளிவான ஆதாரங்களின் அடியாக எழும் சட்டங்கள். இவை தெளிவானவை. வரையறுக்கப்பட்டவை. மார்க்கத்தின் அடிப்படைகள் இதில் அடங்கும். ஓப்பீட்டளவில் இத்தகைய சட்டங்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவானவை. எனினும், இவை கூடிய முக்கியத்துவம் பெறத்தக்கவை.

ஆ) சட்டவசனமில்லாத போது துணை மூலாதாரங்களைப் பயன்படுத்தி பெறுகின்ற சட்டங்கள். இவை ஷரீஆ சட்டங்களில் அதிகமானவை. இஸ்லாமிய ஷரீஆவின் நடைமுறைச் சாத்தியத்தையும், காலத்தின் தேவையையும் ஈடுசெய்வதில் இவற்றுக்குக் கூடிய பங்குண்டு.

தனிமனிதனினதும், சமூகத்தினதும் தனித்துவத்தையும் கண்ணியத்தையும் வளர்த்து மேலோங்கச் செய்வதனை ஷரீஅத் இலட்சியமாக்க கொண்டுள்ளது. அதாவது, அல்லாஹ்வுக்கும் தனிமனிதனுக்கும், தனிமனிதனுக்கும் - சமூகத்துக்கும் இடையிலான உறவை அது சீர்படுத்துகின்றது. மனித சமூதாயத்தை ஒழுங்குபடுத்தி அனைவரையும் ஒரு தாயின் பிள்ளைகள் போல் வாழச் செய்வதனையும் அது தன் இலட்சியமாகக் கொண்டுள்ளது. இஸ்லாமிய சமூகம் இப்பண்புகளைப் பேணுவதையும், சரீஅத் தனது இலட்சியமாகக் கொள்கின்றது. இதனால், தான் சமூக அமைப்பு மற்றும் சமாதானமான சகவாழ்வு என்பவற்றுக்கு அது உத்தரவாதம் அளிக்கின்றது.

மனிதன் தனது இயல்பைப் புரிந்துகொள்வதனூடாகவே தனது கண்ணியத்தை வளர்க்க முடியும். இதனால்தான், மனிதனின் இயல்பு, பிரபஞ்சத்தில் அவனது நிலை, அந்தஸ்து என்பனவற்றைச் சுட்டிக் காட்டுவதோடு, மனிதன் இறைவனின் பிரதிநிதி என்ற வகையில் அவனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என ஷரீஅத் குறிக்கின்றது.

வணக்க வழிபாடுகளின் நடைமுறைகளும் கூட, சமூக நீதி நிலைநாட்டப்படக் கூடியதாவும், பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்துள்ளன. இறைவணக்க வழிபாடுகளின் பிரதான இலட்சியம், இறைவனுடனான உணர்வையும், பொறுப்புணர்ச்சியைம் ஏற்படுத்துவதாகும். அத்துடன், இறைவனுடனான உறவை வலுப்படுத்தும் அதேவேளை, சுயகட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதாகும்.

முஆமலாத் சார்ந்த சட்ட விதிகளும் கூட, இபாதத்தினூடாக கட்டியெழுப்பப்பட்டுள்ள சமூக அமைதியையும் கட்டுக்கோப்பையும் வளர்ப்பதோடு, சுயகட்டுப்பாட்டையும் வளர்க்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் இஸ்லாமியப் போதனைகள் முன்வைக்கும் இலட்சியங்கள் சிதைவுறாத வகையில் சட்டங்களை அமைத்துக் கொடுப்பதே ஷரீஆ தனது பணியாகவும் இலட்சியமாகவும் கொண்டுள்ளது.

**ஷரீஆ மற்றும் பிக்ஹு ஆகிய இரு பதங்களுக்கிடையிலான பிரதான வேறுபாடுகள்**

01.ஷரீஆ என்ற பதமானது பொதுவானதும் முழுமையானதுமாகும்.

ஷரீஆவானது சகலவிதமான சட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. உதாரணமாக, கொள்கை சார்ந்த சட்டங்கள், ஒழுக்கவியல் தொடர்பான சட்டங்கள், இபாதத்துக்களுடன் தொடர்பான சட்டங்கள்

ஆனால், பிக்ஹு என்ற பதமானது குறிப்பானதும், குறுகியதுமாகும்.

இந்த பதம் இபாதத்துக்களுடன் சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்களை மாத்திரமே தன்னகத்தே கொண்டுள்ளது.

02.ஷரீஆ சட்டங்கள் நேரடியாக அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவுடன் தொடர்பான சட்டங்களாக மாத்திரமே கருதப்படுகின்றது. ஏனெனில், இஸ்லாமிய ஷரீஆவானது வஹியினால் மாத்திரம் நிலைத்து நிற்கின்றது. இங்கு மனித கருத்துக்களுக்கு இடமில்லை.

ஆனால், பிக்ஹு என்ற பதமானது இரு வகையான சட்டங்களைக் கொண்டுள்ளது.

1. ஆய்வுகளுக்கு இடமேயில்லாத நேரடியான சட்டங்கள்.

உதாரணமாக, 'உங்களுக்கு (மணமுடிக்க) விலக்கப்பட்டவர்கள்: உங்கள் தாய்மார்களும், உங்கள் புதல்வியரும், உங்கள் சகோதரிகளும், உங்கள் தந்தையின் சகோதரிகளும், உங்கள் தாயின் சகோதரிகளும், உங்கள் சகோதரனின் புதல்வியரும், உங்கள் சகோதரியின் புதல்வியரும், உங்களுக்குப் பாலூட்டிய (செவிலித்) தாய்மார்களும், உங்கள் பால்குடி சகோதரிகளும், உங்கள் மனைவியரின் தாய்மார்களும் ஆவார்கள்.' (ஸூரா அன்னிஸாவு: 23)

இந்த அல்குர்ஆன் வசனமானது, பெண்களில் யார் ஹராமானவர்கள் என்பதற்கு தெளிவான ஆதாரமாகும். இங்கு இஜ்திஹாத் செய்வதற்கான எந்தவிதமான இடமும் இல்லை. ஆய்வு செய்வதற்கான தேவையும் கிடையாது.

2. அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவிலிருந்து ஆய்வு செய்து இஜ்திஹாத் மூலம் பெறப்படும் சட்டங்கள் இரண்டாவது அடங்கும்.

**இஸ்லாமிய ஷரீஆவின் சிறப்பம்சங்கள்**

வஹியின் அடிப்படையில் அமைந்த இஸ்லாமிய ஷரீஆ பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் அடிப்படையான சிறப்புக்கள் சிலவற்றை பின்வருமாறு நோக்கலாம்.

01. **தெய்வீகத் தன்மை வாய்ந்தது (ரப்பானிய்யா)**

நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வால் இறக்கியருளப்பட்ட வஹியின் மூலம் உருவானது என இதற்கு விளக்கம் அளிக்கப்படுகின்றது.

இந்த ஷரீஆ, குறைகள் அற்றதும், தவறுகள் இடம்பெறாததுமாகும். அதன் சட்டங்களுக்கிடையில் முரண்பாடுகள், குளறுபடிகள், பரஸ்பரம் எதிரான கருத்துக்கள் என்பன கிடையாது. ஏனெனில், இந்த ஷரீஆ அனைத்தும் அளவற்ற அருளாளனான படைத்த ரப்பினுடையது.

'அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா? (இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்' (அந்நிஸா: 82)

**02. பூரணத்துவம் மிக்கது (ஷுமூலிய்யா)**

இஸ்லாமிய ஷரீஆவின் மற்றுமொரு சிறப்பு இதுவாகும். இந்த ஷரீஆ சட்டங்கள் மனித வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது.

நம்பிக்கை சார்ந்த விடயங்களில், ஒருமைப்பாடு மற்றும் தூய்மை என்பவற்றை ஷ ரீஆ கொண்டுள்ளது. பிக்ஹுத் துறையைப் பொருத்த வரையில் முஸ்லிம்களின் வாழ்க்கையின் சகல பகுதிகளையும் உள்ளடக்கும் சட்டங்களையும் இந்த ஷரீஆ தன்னகப்படுத்தியுள்ளது.

அதேபோன்று, ஒழுக்க, பண்பாட்டு விடயங்கள் தொடர்பிலும் ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுடனும், ஒரு முஸ்லிம் வேறு ஒரு மதத்தவருடனும் நடந்து கொள்ளும் ஒழுங்குகளையும் ஷரீஆ விளக்கிக் கூறியுள்ளது.

**03. பொதுத்தன்மை (உமூமிய்யா)**

நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத் முழு உலகிற்கும் பொதுவானது என்பதனால் அவர் வஹியினால் அறிமுகம் செய்த இந்த ஷரீஆவும் சர்வதேசத் தன்மை கொண்டதாகும். இந்த ஷரீஆ அனைத்து நாடுகளுக்கும் பொதுவானது. இந்த ஷரீஆ எந்தவொரு சமூகத்தையும் இன்னொரு சமூகத்தை விட மேன்மைப்படுத்தவில்லை. அகிலத்திலுள்ள அனைத்து சமூகத்துக்கும் பொதுவானது என்றே இஸ்லாம் நோக்குகின்றது.

‘இன்னும், (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மாராயங் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமே யன்றி (வேறெவ்வாரும்) அனுப்பவில்லை. ஆனால், மனிதர்களில் பெரும் பாலோர்(இதை) அறிய மாட்டார்கள்.

(ஸப.ஃ : 28)

**04. யதார்த்தபூர்வமானது (அல்வாகிஇய்யா)**

மனித வாழ்க்கைக்கான சந்தோஷம், நிம்மதி என்பவற்றுக்கான முழுமையான திட்டத்தை இஸ்லாமிய ஷரீஆ உள்ளடக்கியுள்ளது. மனித வாழ்வுக்கான வழிகாட்டல்கள், நெறிமுறைகள் மற்றும் பண்பாடுகள் என்பவற்றுக்கான முன்மாதிரிகளை இந்த திட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்த ஷரீஆவின் கர்த்தா, மனிதனையும், பிரபஞ்சத்தையும் படைத்தவன் என்பதனால் இது சாத்தியமானது. மனிதனது ஆசைகள், இச்சைகள், பலவீனங்கள் என்பவற்றை நன்கு அறிந்தவனாக இந்த ஷரீஆவை வகுத்தவன் விளங்குகின்றான்.

இதனாலேயே ஷரீஆவானது மனிதனுக்கு முடியாத எந்தவொன்றையும் செய்யுமாறு ஏவுவதில்லை.

‘அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவுக்கும் அது தாங்கிக் கொள்ள முடியாத அளவு கஷ்டத்தைக் கொடுப்பதில்லை. அது சம்பாதித்ததின் நன்மை அதற்கே! அது சம்பாதித்த தீமையும் அதற்கே!’ (அல்பகரா: 286)

**05. நீதியானது (அல் அத்ல்)**

இஸ்லாமிய ஷரீஆ நன்மை செய்தவர்களுக்கும், தீமை செய்தவர்களுக்கும் கூலி கொடுப்பதற்கே அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனாலே இதன் சிறப்பம்சமாக நீதி காணப்படுகின்றது.

அல்லாஹ் எந்தவொரு ஆணினதோ, பெண்ணினதோ எந்தவொரு அமலையும் கணக்கில் எடுக்காமல் வீணாக்கி விடுவதில்லை. ஒருவர் ஒரு நன்மையைச் செய்தால், அதற்கு ஒன்று முதல் 10 மடங்கு வரையான நன்மையை அல்லாஹ் எழுதுகின்றான். அதேபோன்று, யார் ஒருவன் ஒரு தீமையை செய்கின்றானோ அவனுக்கு ஒரு தீமை மாத்திரமே பதியப்படுகின்றது.

'எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவன் கண்டுகொள்வான். அன்றியும், எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அத(ற்குரிய பல)னையும் அவன் கண்டுகொள்வான்.'(ஸூரா ஸில்ஸால்: 07)

06. **இலகுவானது**

**07. நடுநிலையானது**

**08. நெகிழும், நெகிழாத் தன்மை கொண்டது**

**09. கஷ்டங்களைப் போக்கக் கூடியது**

**10. மனித நலன்களைக் காப்பதே இலக்கு**

**11. சமூக நலன்களுக்கு மத்தியில் சமநிலை பேணுகின்றது**

**12. பண்பாடுகளை காக்கும் தன்மை**

**13. சர்வதேசத் தன்மை**

**தேர்ச்சி 09: இஸ்லாமிய நாகரிகத்தைப் பாதுகாப்பதில் ஷரீஆவின் பங்கை விரிவாக எடுத்துக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 9.3 : மகாஸிதுஷ் ஷரீஆ என்பதை அதன் உள்ளடக்கத்தோடு தெளிவாக விளக்குவார்.**

**பாடவேளைகள் : 10**

**கற்றல் பேறுகள் :**

- மகாஸிதுஷ் ஷரீஆ என்ற பதத்தை விளக்கி அதன் உள்ளடக்கத்தைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவார்.
- மகாஸிதுஷ் ஷரீஆவில் பிரதான மூன்று பகுதிகளையும் உதாரணங்களுடன் விபரித்துக் கூறுவார்.
- ஷரீஆவின் அடிப்படை விதிகளை(கவாஇத் பிக்ஹிய்யா) இனங்கண்டு அவற்றின் பிரயோகம் பற்றி அறிந்து விளக்குவார்.
- அடிப்படை விதிகளின் பிரயோகத்தை விளங்கித் தொழிற்படுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

- இஸ்லாமிய ஷரீஆவின் உன்னத நோக்கங்கள் மகாஸிதுஷ் ஷரீஆ என அழைக்கப்படுகின்றது.
- ''மகாஸித்'' என்பது ''மக்ஸத்'' என்பதன் பன்மையாகும். இலக்கு, நோக்கம், அடைவு, எதிர்பார்க்கும் விடயம் போன்ற கருத்துக்களை இப்பதம் குறித்து நிற்கின்றது. ''இஸ்லாமிய ஷரீஆவில் மகாஸித் என்பது இஸ்லாமிய சட்டங்களின் இலக்கு அல்லது நோக்கம் அல்லது அடைவு, அல்லது எதிர்பார்க்கும் விடயம் என்று பொருள் கொள்ளப்படும்'' அதாவது ஷரீஆ தனது போதனைகள் மூலம் அடைய விரும்புகின்ற இலக்குகளைக் குறிக்கின்றது. இக்கருத்தில் வேறு பல பிரயோகங்களையும் இமாம்கள் பயன்படுத்திவந்துள்ளனர். மஸாலிஹ்- நலன்கள்; அஸ்ரார்- இரகசியங்கள்; இலல் - காரணிகள்; நதாஇஜ் - விளைவுகள், மஆல் - அடைவுகள் போன்றவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.
- ''மகாஸிதுஷ் ஷரீஆ'' பற்றிய சிந்தனை வளர்ந்து வந்த வரலாற்றுப் பின்னணியை நோக்கினால் குர்ஆனும், ஸுன்னாவும் சிலபோது சட்டங்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் அந்தச் சட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டதற்கான காரணத்தையும் தொடர்புபடுத்தி நேரடியாகவோ. சூசகமாகவோ பேசியிருப்பதைக் காணலாம். இது, குறித்த சட்டம் தோற்றுவிக்கப்பட்டதன் இரகசியத்தை, நோக்கத்தை அல்லது காரணத்தை முன்வைப்பதாக உள்ளது. முஜ்தஹித்கள் இதனை விளக்க முற்பட்ட பின்னணியிலேயே இக்கலை தோன்றியதெனலாம். எனவே ஷரீஆவின் நோக்கம் வெறும் பகுத்தறிவு சரிகாணும் நலனன்று மாறாக படைப்பாளன் சரிகாணும் நலனாகும்.
- அல்குர்ஆனும் ஸுன்னாவும் முன்வைக்கும் போதனைகளுக்குப் பின்னாலுள்ள நோக்கங்களை சில இடங்களில் தெளிவாக வரையறுத்துக் கூறியும் இன்னும் சில இடங்களில் மனித இஜ்திஹாத் ஆய்வுக்கு விட்டும் வைத்துள்ளன.

''ஜின்களையும் மனிதர்களையும் (எனக்கு வழிப்பட்டு) என்னை வணங்குவதற்காகவேயன்றி (வேறெதற்காகவும்) நான் படைக்கவில்லை'' - (51:56)

- ஜும்ஆவுடைய நேரத்தில் வர்த்தகம் செய்வது தடுக்கப்பட்டதன் நோக்கம்: அது ஜும்ஆ தொழுகைக்குத் தடையாக அமைகிறது என்பதனாலாகும். ''விசுவாசிகளே! (வெள்ளிக்கிழமையாகிய) ஜும்ஆத் தினத்தன்று தொழுகைக்காக (பாங்கு சொல்லி நீங்கள்) அழைக்கப்பட்டால் வர்த்தகத்தை விட்டு விட்டு, அல்லாஹ்வை தியானிக்க நீங்கள் விரைந்து செல்லுங்கள் (63:9)
- காபிர்கள் அறியாத்தனமாக அல்லாஹ்வுக்கு ஏசுவதைக் தவிர்க்க வழி செய்ய வேண்டும் என்ற நோக்கில் அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குவோரது கடவுளை ஏச வேண்டாம் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.
- (விசுவாசிகளே!) அல்லாஹ் அல்லாத எவற்றை அவர்கள் (ஆண்டவர்களென) அழைக்கின்றார்களோ அவற்றை நீங்கள் திட்டாதீர்கள். அதனால் அவர்கள் அறியாமையின் காரணமாக, வரம்புமீறி அல்லாஹ்வைத் திட்டுவார்கள் (6:108)
- இவ்வாறே ஸுன்னாவிலும் நபி (ஸல்) அவர்கள் தனது போதனைகள் சட்டங்களுக்குப் பின்னால் உள்ள நோக்கங்களை சில இடங்களில் தெளிவாகக் கூறியும் வேறுசில இடங்களில் ஸஹாபாக்கள் வினாத்தொடுத்ததன் பின்னர் நோக்கத்தை தெளிவுபடுத்தி இருப்பதையும் காணலாம். உதாரணம் : பனூ குரைழா கோத்திரத்தை நோக்கி அனுப்பப்பட்ட ஸஹாபாக்களிடம் அங்கு சென்ற பின்னரே அஸர் தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்று பணித்து அனுப்பியதன் நோக்கம் விரைவாகச் செல்ல வேண்டும் என்பதாகும்.
- ஷரீஅத் சட்டங்கள் மனித சக்திக்கு உட்பட்டவைகளே. மனிதனால் சுமக்க முடியாதவைகளை அல்லாஹ்வும் ரஸுலும் சுமத்தவில்லை என்பதைத் தெளிவுபடுத்தும் நோக்கில் பின்வரும் நிகழ்வு அமைந்துள்ளது. ஒருவர் நோன்புடன் வெயிலில் நிற்க நேர்ச்சை வைத்தார். அது கேள்விப்பட்ட நபிகளார் தடுத்துவிட்டு ''எல்லை மீறி நடப்போர் நாசமாகட்டும்'' என்றார்.
- தொடர்ந்து நோன்பு நோற்று இரவில் நின்று வணங்கி மனைவியை ஒதுங்கி வாழ்வேன் என்று கூறிய ஸஹாபியைப் பார்த்து ''நான் நோன்பு நோற்கிறேன், நோற்காமலும் இருக்கிறேன். இரவில் எழுந்து நின்று வணங்குகிறேன், சிலபோது தூங்கவும் செய்கிறேன்.... என்று விளக்கமளித்ததன் மூலம் ஷரீஅத் மனிதர்களை சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் வீழ்த்த விரும்பவில்லை. இலகுவையே அது நோக்காகக் கொண்டிருந்தது என்பது உறுதியாகின்றது.
- தொழுகையை முன்னின்று நடாத்தும் இமாம் நீட்டித் தொழுவிக்காமலிருக்கக் காரணம், உங்களில் ஒருவர் மக்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்தினால் அதனை நீட்டாது சுருக்கிக் கொள்ளட்டும். ஏனெனில் அவர்களில் பலவீனர், நோயாளி, அவசரத் தேவையுடையோர் இருக்கலாம். உங்களில் ஒருவர் தனித்துத் தொழுதால் அவர் நாடியளவு நீட்டித் தொழுதுகொள்ளட்டும்.
- இஸ்லாம் தண்டனை வழங்குவதன் ஊடாக எதிர்பார்க்கும் நோக்கங்களில் ஒன்றான நீதியை நிலைநாட்டுதல் என்ற அம்சம் நிறைவேறமாட்டாது என்ற சூழ்நிலையில் கலீபா உமர் (ரழி) அவர்கள் மதீனாவில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது திருடர்களது கரங்களை வெட்டும் சட்டத்தை இடைநிறுத்தி வைத்திருந்தார்கள்.

- எனவே மகாஸிதுஷ் ஷரீஆ என்பது ஒரு வகையில் சட்டங்களுக்குப் பின்னால் உள்ள நியாயம் என்ன என்பதை விளக்குகின்றது. மற்றொரு வகையில் மகாஸிதுஷ் ஷரீஆ என்பது, ஷரீஆ சில விடயங்களை தடைசெய்வதன் ஊடாகவும் மற்றும் சில விடயங்களை அனுமதிப்பதன் ஊடாகவும் ஏற்படுத்த விரும்புகின்ற சில நன்நோக்கங்களைக் குறித்து நிற்கும். இன்னொரு வகையில் மகாஸிதுஷ் ஷரீஆ என்பது இஸ்லாமிய ஷரீஆ எழுந்து நிற்கின்ற பண்பாட்டு விழுமியங்களையும், தெய்வீக இலக்குகளையும் குறித்து நிற்கின்றது.
- ''மகாஸித்'' என்ற துறையைப் பல்வேறு அறிஞர்கள் பல கண்ணோட்டங்களில் விளக்கியுள்ளனர். ஹிஜ்ரி 3ஆம் நூற்றாண்டில் முஹம்மத் இப்னு அலி அத்திர்மிதி அல் ஹகீம் என்பவர் ''அஸ்ஸலாத் வ மகாஸிதுஹா'' என்ற நூலையும் பின்னர் ''இலலுஷ் ஷரீஆ'', ''இலலுல் உபூதிய்யா'', ''அல் புருல்'' போன்ற நூல்களையும் முன்வைத்தார். ஹி 4 ஆம் நூற்றாண்டில் இமாம் அபூ மன்ஸுர் அல் மாதுருதி ம∴ஹதுஷ் ஷராஈ என்ற ஆக்கத்தை முன்வைத்தார். ஹிஜ்ரி 5 ஆம் நூற்றாண்டில் இமாம் இப்னு அப்துல்லாஹ் அல் ஜுவைனி (ரஹ்) ''அல் புர்ஹான்'' என்ற நூலில் மகாஸித், மக்ஸுத், கஸ்த் என்ற சொற்பிரயோகங்களை மிக அதிகமாகவே கையாண்டுள்ளார், இவரே ழரூரிய்யாத், ஹாஜிய்யாத், தஹ்ஸீனிய்யாத் என்ற மகாஸிதுஷ் ஷரீஆவின் முப்பிரிவுகளையும் அறிமுகப்படுத்திய முன்னோடியாவார், தொடர்ந்து வந்த இமாம் அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களும், இமாம் ஜுவைனியின் கருத்தைப் பின்பற்றி ''மஸாலிஹ் முர்ஸலா'' எனப்படும் வரையறுக்கப்படாத நலன்களின் ஒரு வகையாக மகாஸிதைக் கருதினார். தொடர்ந்துவந்த பல நூற்றாண்டுகளிலும் பக்ருத்தீன் அர்ராஸி, ஸைபுத்தீன் அல் ஆமிதி, இமாம் அல் பைழாவி, இமாம் இப்னு தைமியா, இமாம் இஸ் இப்னு அப்துஸ்ஸலாம் போன்ற பல்வேறு அறிஞர்களும் நவீன காலத்தில் இமாம் ரஷீத் ரிழா, தாஹிர் இப்னு ஆஷுர், செய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி, கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி, கலாநிதி தாஹா ஜாபிர் அலவானி போன்றோர்களும் மகாஸிதுஷ் ஷரீஆ துறையின் வளர்ச்சிக்குப் பல்வேறு வகையில் பங்களிப்பு நல்கியுள்ளார்கள்.
- ஒவ்வொரு காலகட்டத்திலும் மகாஸிதுஷ் ஷரீஆ குறித்து அறிஞர்கள் முன்வைத்த வரைவிலக்கணங்களை நோக்குவோம். ஆரம்பகால அறிஞர்களைப் பொறுத்தமட்டில் அவர்களிடம் மிக நுணுக்கமான வரையறுக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் காணப்படாவிட்டாலும் அதன் செயல்வடிவம் காணப்பட்டுவந்துள்ளது. அதனைக் காரணம், நியாயம், நோக்கம், பயன், இரகசியம், எதிர்பார்ப்பு, அடைவு போன்ற சொற்களால் முன்வைத்ததோடு மகாஸிதுஷ் ஷரீஆவின் மூன்று முக்கிய பிரிவுகள், அடிப்படையான 5 அம்சங்கள் குறித்துப் பேசியுள்ளனர்.

  நபி(ஸல்) அவர்கள் காலத்தில் மகாஸிதுஷ் ஷரீஆவின் தேவை வீச்சு மிகவும் விசாலித்தமையால் அது ஒரு ஷரீஅத் துறைசார் அறிவின் கலையாக பரிணாமம் பெற்றது. அது குறித்துப் பல வரைவிலக்கணங்கள் தோன்றியது போலவே நூல்களும் உருவாயின.

1. அல் பாஸி அவர்கள் ''மகாஸிதுஷ் ஷரீஆ என்பதன் கருத்து, சட்டம் இயற்றியவன் ஒவ்வொரு சட்டத்திற்குப் பின்னாலும் வைத்துள்ள இரகசியங்கள் அல்லது நோக்கங்களையே குறிக்கின்றன'' என்று விளக்குகிறார்.

2. கலாநிதி அஹ்மத் அர் ரய்ஸுனி : மகாஸிதுஷ் ஷரீஆ என்பது ஷரீஆ சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது மக்களுக்கு ஏற்படும் நலன்களை இலக்காகக் கொள்வதனையே குறிக்கின்றது.
3. கலாநிதி முஹம்மத் இப்னு ஸஃத் ''பொதுவாகவும் குறிப்பாகவும் மனித நலன்களை நிலைநாட்டுவதற்காக சட்டங்களை உருவாக்கியவன் அதனை உருவாக்கும் போது கவனத்திற் கொண்ட காரணங்களையும் நோக்கங்களையுமே குறிக்கின்றது''
4. கலாநிதி முஸ்தபா இப்னு கராமா: மகாஸிதுஷ் ஷரீஆ என்பது சட்டத்தை உருவாக்கியவன் அதனூடாக நாடிய நலன்களையே குறிக்கின்றது.
5. நூருத்தீன் அல் காதிமி : ஷரீஆ சட்டங்களுக்குப் பின்னால் உள்ள காரணங்களையும் அதன் விளைவுகளையுமே குறிக்கின்றது; அது ஒரு குறித்த பகுதியிலும் சரி முழுமையிலும் சரி மனிதனது ஈருலக வாழ்வினதும் நலன்களைக் குறிக்கோளாகக் கொண்டு, ஒரே இலட்சியத்தின்பால் அமைந்துள்ளது.
6. இமாம் கராபி (றஹ்) ஷரீஅத்தில் ஒரு விடயம் மகாஸிதுகளில் ஒன்றாகக் கருதப்பட வேண்டுமெனில் அது தெளிவான ஒரு இலக்கை அடையக் கூடியதாகவும் ஒரு நலனை ஏற்படுத்தக் கூடியதாகவும் அல்லது ஒரு தீங்கை தடுக்கக் கூடியதாகவும் காணப்படல் வேண்டும்.

மகாஸிதினுடைய பரிமாணங்கள் :

- மகாஸிதுஷ் ஷரீஆவின் வகைப்படுத்தல்கள் பல்வேறு வடிவங்களில் அமைந்துள்ளன. பாரம்பரிய வகைப்படுத்தல்கள் மூன்று படிநிலைகளைக் கொண்டது. அவை

1. ழரூரிய்யாத் - அத்தியாவசிய நிலை (அத்தியசிய தேவைகள்)
2. ஹாஜிய்யாத் - தேவை நிலை (சாதாரணத் தேவைகள்)
3. தஹ்ஸீனிய்யாத் - ஆடம்பர நிலை (மேலதிக தேவைகள்)

**அத்தியவசிய நிலை : ழரூரிய்யாத்**

இதனை அத்தியவசியத் தேவையென்றும் குறிப்பிடலாம். மனித குலத்தின் வாழ்வு எதில் தங்கியுள்ளதோ அவ்வாறான நலன்களே ழரூரிய்யாத் என அழைக்கப்படுகின்றது. இந்த வகையான நலன்கள் புறக்கணிக்கப்பட்டால் மனித வாழ்வு சீர்குலைந்துவிடும், குழப்பங்கள் நிறைந்ததாகமாறும், பெரும் அழிவுக்கும் சீர்கேட்டுக்கும் இட்டுச் செல்லும்.

அத்தியாவசிய நிலைத் தேவைகளை இமாம்கள் ஆறு பகுதிகளாகப் பிரித்து நோக்கினர். அவை தீன், உயிர், புத்தி, பரம்பரை, மானம், செல்வம் என்பனவாகும்.

1. தீனைப் பாதுகாத்தல்

தீனை வளர்த்தல், பாதுகாத்தல் என்பதுவே இதன் நோக்கமாகும். நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல், தீனின் விடயத்தில் அத்துமீறுவோரைத் தடுத்து நிறுத்தல், தீனுக்கு முட்டுக் கட்டையான அம்சங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான வழியாக ஜிஹாதை கடைப்பிடித்தல், மதம் மாறுவோருக்குத் தண்டனை வழங்கல், அகீதாவிற்கு

எதிரான சந்தேகங்களைக் கிளப்புவோருக்கெதிராக நடவடிக்கையெடுத்தல் போன்ற செயற்பாடுகள் ஊடாக தீன் பாதுகாக்கப்படுகின்றது.

2. உயிரைப் பாதுகாத்தல்

உயிரைப் பாதுகாப்பதற்கும், போஷிப்பதற்குமாக உணவு, பானம், ஆடை என்பனவற்றின் மூலம் உத்தரவாதப்படுத்தப்படுகின்றது. உயிர் பாதுகாப்பு நடவடிக்கையின் ஓர் அம்சமாகவே தற்கொலை தடைசெய்யப்படுகிறது. மேலும் பழிக்குப்பழி, மற்றும் தியத் என்பன விதிக்கப்பட்டிருப்பதும் உயிரைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகும்.

மனித உயிர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் அல்லது சுற்றாடல் சுத்தம் பேணும் நடவடிக்கைகள் போன்றவற்றை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இன்றேல் மனித வாழ்வு சீரழிந்து விடும், சிக்கல்கள் நிறைந்ததாகவே மாறும்.

3. புத்தியைப் பாதுகாத்தல்

புத்தியைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே மதுபானம் அருந்துதல், ஏனைய போதைப் பொருட்களைப் பாவித்தல் என்பன தடுக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான தண்டனைகளையும் இஸ்லாம் விதித்துள்ளது.

மனிதனது அறிவு, புத்தி பாதிக்கப்படும் போது மனித வாழ்வே பாதிக்கப்படுகின்றது. இதனாலேயே அனைத்து போதைப் பொருட்களும் தடுக்கப்பட்டுள்ளன.

4. பரம்பரையைப் பாதுகாத்தல்

பரம்பரையைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவே திருமணம் ஊக்கப்படுத்தப்பட்டு விபசாரம் தடுக்கப்பட்டு, அதற்கு தண்டனையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் குழந்தை வளர்ப்பு, குடும்ப பராமரிப்பு போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் விதமாக இஸ்லாம் அதிக சட்டங்களை முன்வைத்திருப்பதன் இரகசியமும் இதுதான்.

5. மானத்தைப் பாதுகாத்தல்

தனது மானத்தையும் பிறரது மானத்தையும் பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். அதனைக் களங்கப்படுத்துவது பாவமாகும். இதனாலேயே படுதூறு, லிஆன் போன்றவற்றை இஸ்லாம் தடுத்துள்ளதோடு அவற்றைப் பாவமாகக் கருதி தண்டனைகளையும் நிர்ணயித்துள்ளது.

6. செல்வத்தைப் பாதுகாத்தல்

இஸ்லாம் ஹலாலான வழியில் உழைப்பதை வலியுறுத்தியுள்ளது. பிறரது சொத்துக்களை அபகரித்தல், திருடுதல், பதுக்கல், வட்டி, ஊழல், ஏமாற்று போன்ற பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கும் அனைத்தையும் இஸ்லாம் தடுத்துள்ளது. மேலும் புத்தி குறைந்தோர், பைத்தியகாரர்கள் கொடுக்கல் வாங்கள்களில் ஈடுபடுவதை சமூக நலன் கருதி தடுத்துள்ளது.

இந்த ஆறு அம்சங்களும் பாதுகாக்கப்படல், வளர்க்கப்படல் என்பன ஊக்கப்படுத்தப்படும் விதமாகவும் இவை பாதிக்கப்படும் அம்சங்கள் தடுக்கக்கூடியதாகவுமே சட்டங்கள் உருவாகியுள்ளன.

### 2. தேவை நிலை : ஹாஜிய்யாத்

- அடுத்து வருவது தேவை நிலையாகும். மனிதர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள், அசௌகரியங்களை நீக்குவதை வேண்டி நிற்பதே ஹாஜிய்யாத் நிலையாகும். இப்பிரிவைச் சார்ந்த நலன்கள் ழரூரிய்யத்தை விட படித்தரத்தில் குறைந்தவை. இவை இல்லாவிடின் வாழ்க்கை ஒழுங்கு சீர்குலையாது, சமூகத்தின் இழப்புக்கு அச்சுறுத்தலாகவும் அமையாது, எனினும் வாழ்வின் நெருக்கடிகளையும், கஷ்டங்களையும் எதிர்கொள்ள நேரிடும். இந்த நலன்கள் மனிதர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்குவதாகவே அமையும்.

- மனிதனுக்கு ஏற்படும் கஷ்டங்களையும், நெருக்கடிகளையும் நீக்கி, சௌகரியத்தையும், வசதிவாய்ப்பையும் ஏற்படுத்தும் விதமாக இஸ்லாம் சட்டங்களில் சலுகைகள் தந்திருப்பதை நோக்கலாம். உதாரணமாக நோயாளி, பிரயாணி ஆகியோர் ரமழான் நோன்பு நோற்பதிலிருந்து விதிவிலக்குப் பெற்று பிறிதொரு காலத்தில் நிறைவேற்றிக் கொள்ளச் சலுகை வழங்கப்பட்டுள்ளமை, பிரயாணி நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டாக நிறைவேற்றல், நீரில்லாத போது தயம்மம் செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

  ‘‘அல்லாஹ் உங்கள் மீது எந்தவொரு அசௌகரியத்தையும் ஏற்படுத்த விரும்பவில்லை’’ (5:6)

  ‘‘அல்லாஹ் உங்களுக்கு இலகுபவை நாடுகின்றான், மேலும் அவன் உங்களுக்கு சிரமத்தை நாடவில்லை (2:185)

  ‘‘நபியவர்களுக்கு முன் இரண்டு விடயங்கள் முன்வைக்கப்பட்டால், பாவம் இல்லாவிடில் அவற்றில் மிக இலகுவானதையே அவர் தேர்ந்தெடுப்பார்கள்’’

### ஆடம்பர நிலை : தஹ்ஸீனிய்யாத் அல்லது தக்மீலிய்யாத்

- உயர்ந்த ஒழுக்க விழுமியங்களுக்கும் சீரிய பண்பாடுகளுக்கும் இணங்க மனித வாழ்வு அமைவதற்குத் தேவையான நலன்களே தஹ்ஸீனிய்யாத் - தக்மீலிய்யாத் எனப்படும்.

- இந்த வகையான நலன்கள், ழரூரிய்யாத், ஹாஜிய்யாத் வகையான நலன்களை விடவும் தரத்தில் குறைந்தவை, இவை இல்லாவிடில் வாழ்வொழுங்கு சீர்குலையவோ சிக்கலானதாக அமையவோ அசௌகரியமும் நெருக்கடி நிலையும் ஏற்படவோ மாட்டாது. ஆயினும் அழகிய பண்பாடுகள், நல்லொழுக்கம், சீரான மனித இயல்புகள் என்பவற்றிக்கு முரணாக வாழ்வு அமைந்துவிடும்.

- வெள்ளிக்கிழமை தினங்களில் வெள்ளாடை அணிதல், பெருநாட்களில் புத்தாடையணிதல், வாசனைத் திரவியங்கள் பயன்படுத்தல், உண்ணல், குடித்தல் ஒழுங்குகள் போன்றவற்றை தஹ்ஸீனிய்யாத்துக்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

- இஸ்லாமிய சட்டத் துறையில் பல்வேறு அடிப்படை விதிகளைப் பயன்படுத்தியே சட்டங்கள் வகுக்கப்படுகின்றன. அவ்விதிகள் ‘‘அல் கவாஇத் அல் பிக்ஹிய்யா’’ என வழங்கப்படுகின்றன. நூற்றுக்கணக்கான கவாஇத்கள்- விதிகள் காணப்பட்டாலும் அவை அனைத்திற்கும் மிக பிரதான அடிப்படைகளாக 5 விதிகள் அமைந்து காணப்படுகின்றன. அவ் ஐந்து விதிகளும் அனைத்து அறிஞர்கள் மத்தியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும். அவ்விதிகள் பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

**01. அல் உமூரு பிமகாஸிதிஹா**

நோக்கங்களைப் பொறுத்தே செயற்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

ஆதாரம் ‘‘செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே’’

உதாரணம் : ஒருவர் மற்றொருவரை மனமுறண்டாக எந்த நியாயமுமின்றி கொலை செய்தால் அதற்குரிய தீர்வும், ஒருவர் மற்றொருவரை தவறுதலாக கொலை செய்தால் அதற்குரிய தீர்வும் வேறுபட்டே அமைகின்றது. இத்தீர்வுகள் மாறுபட்டு அமைவதற்கான அடிப்படை இருவரதும் வேறுபட்ட நிய்யத் ஆகும்.

**02. அல் யகீனு லா யஸூலு பிஷ் ஷக்**

உறுதியான நிலைப்பாட்டை இடையில் ஏற்படும் சந்தேகம் மாற்றாது

ஆதாரம் : ஒருவருக்கு காற்றுப் பறித்தால் அதன் சத்தம் அல்லது வாசத்தை உணரும் வரை திரும்ப வுழு செய்ய வேண்டியதில்லை.

உதாரணம் : ஒருவர் வுழு செய்தார் என்பது அவருக்கு உறுதியாக ஞாபகத்தில் இருக்கின்றது. இடையில் வுழு முறிந்ததா இல்லையா என சந்தேகம் தோன்றுகிறது. இப்போது வுழுவுடன் இருப்பதாகவே தீர்ப்பாகின்றது. இதற்குக் காரணம் வுழுவுடன் இருப்பது என்பது உறுதியான விடயமாகும்.

**03. அல் மஷக்கது தஜ்லிபுத் தய்ஸீர்**

சிரமம் சட்டங்களைத் தளர்த்தும்

ஆதாரம் : மார்க்கத்தில் அல்லாஹ் எந்தவொரு கஷ்டத்தையும் ஏற்படுத்தவில்லை (ஹஜ் : 78)

உதாரணம் : பிரயாணிகளுக்கு சேர்த்து தொழுவதற்கும் நான்கு ரக்அத் தொழுகைகளைச் சுருக்கித் தொழுவதற்கும் சலுகை வழங்கப்பட்டிருப்பது இதன் அடிப்படையிலாகும்.

**04. அல்லரரு யுஸாலு - தீமை நீக்கப்பட வேண்டும்**

ஆதாரம் : ‘‘தீங்கு செய்யவும் கூடாது தீங்கிற்கு உட்படவும் கூடாது’’

உதாரணம் : ஒருவரது வீட்டு ஜன்னல் அயல் வீட்டாருக்கு இடைஞ்சலாக அமையுமெனில் அதனை அகற்றிக் கொள்ள வேண்டும்.

**05. அல் ஆதது முஹக்கமா - வழக்காறு ஒரு சட்ட மூலாதாரமாகும்.**

ஆதாரம் : முஸ்லிம்கள் எதனை நல்லதெனக் கருதுகிறார்களோ அது அல்லாஹ்விடத்திலும் நல்லதாகவே கருதப்படும் ” (அஹ்மத்)

உதாரணம் : ஈஜாப் கபூல் வார்த்தைகளைப் பிரயோகிக்காமலே வியாபாரம் இடம்பெறுகின்றமை.

**தேர்ச்சி 10.0 : இஸ்லாமிய நாகரிகம் தேக்கமடைவதற்கான காரணங்களையும், அதனைப் புனரமைப்பதற்காக, தனி நபர், கூட்டு முயற்சிகளின் பங்கையும் விளக்கிக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 10.1: இஸ்லாமிய நாகரிகத்தின் தேக்க நிலைக்கான காரணங்கை , சமய, சமூக, அரசியல் காரணிகளுக்கூடாக எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 16 பாடவேளைகள்**

**கற்றல் பேறுகள்:**

- தேக்கம் என்றால் என்ன என்பதை விளக்கி இஸ்லாமிய நாகரிகத்தின் தேக்க கால கட்டத்தை அடையாளப்படுத்துவார்.
- இஸ்லாமிய நாகரிகத்தின் தேக்கத்துக்கு காரணமாகிய சமய, சமூக, அரசியல் காரணிகளை விரிவாக எடுத்துக் கூறுவார்.
- இஸ்லாமிய நாகரிகத்தின் தேக்கத்தினால் ஏற்பட்ட விளைவுகளை விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

- தேக்க காலம் என்றால் இஸ்லாமிய உலகில் ஸஹாபாக்கள் காலம் முதல் பேணப்பட்டு வந்த இஜ்திஹாத் மூலமான பிரச்சினைகளுக்கான தீர்வுகாணும் முறை கைவிடப்பட்டு புதிய பிரச்சனைகளுக்கு முன்னைய இமாம்களுள் அல்லது மத்ஹப்களின் கருத்துக்களுள் ஸ்தம்பிதம் ஆன நிலையைக் குறிக்கின்றது எனலாம். வரலாற்றாசிரியர்கள் இக்காலப்பகுதியை கி.பி.950 முதல் 1924 என வரையறுக்க முட்படுகின்றனர்.
- இவ்வாறு தேக்க நிலை ஏற்படுவதற்கு ஆய்வாளர்கள் பல்வேறு காரணங்களை முன்வைக்கின்றனர். ஷைய்க் மஹ்மூத் அல் ஷல்தூத் என்பவர் குறிப்பிடும் காரணங்கள் வருமாறு.

   1. முன்னைய பரம்பரையினரின் கருத்துக்களை புனிதமானவையாகக் கருதி அவை விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை என்று அவற்றை முழுமையாக ஏற்றுக் கொண்டமை
   2. கற்பனா உலகில் சஞ்சரித்து நிஜஉலகில் நடைபெற முடியாத பிரச்சனைகளில் மூழ்கியமை
   3. ஷரீஆ விதிகளின் பிடியில் இருந்து சட்டபூர்வமாக நழுவிச் செல்வதற்கு உதவும் உத்திகனைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டியமை
   4. மத்ஹப் மீதான அதீத பற்று
   5. நான்கு மத்ஹப்கள் தவிர்ந்த ஏனைய மத்ஹப்கள் தடைசெய்யப்பட்டவை என்ற நம்பிக்கை வலுவடைந்தமை

- இஸ்லாமிய வரலாற்றில் இவ்வாறான நிலை தோற்றம் பெறுவதற்கு ஏதுவாகியவை தொடர்பாக தாஹா ஜாபிர் அல்வானி என்ற அறிஞர் பின்வரும் காரணங்களை

முன்வைக்கிறார்.

1. சிந்தனைத் தேக்கமும் சிந்தனைக் குளறுபடிகளும்
2. அல்குர்ஆன் சுன்னாவுடனான நேரடித் தொடர்பு அற்றுப்போனமை
3. தெளிவானதும் தூரநோக்குடையதுமான பார்வை அற்றுப்போனமை
4. பகுத்தறிவின் பயன்பாட்டை அறியாது போனவை

இது தொடர்பாக பிக்ஹ் துறைசார் வேறு அறிஞர்களும் வேறு சில காரணிகளை குறிப்பிடுகின்றனர்.

1. முஸ்லிம் உலகின் பல்வேறு கோணங்களிலும் வாழ்ந்த அறிஞர்களுக்கிடையே நெருக்கமான உறவும் தொடர்பும் அற்றுப் போனமை
2. ஆரம்ப கால அறிஞர்களின் பங்களிப்பைப் பற்றிய அறியாமை
3. பாடநூல்களை எழுதும் போது சுருக்கமாகக் கூற முயற்சித்ததால் விளக்கமுடியாத புதிர் போல் ஆகிவிட்டமை.
4. பிழையானதும் காலங்கடந்ததுமான கற்பித்தல் முறைகள் கையாளப்பட்டமை

- தேக்க நிலை தொடர்பாக மேலும் நோக்குகையில் நான்கு கலீபாக்களுடைய காலத்தில் ஆட்சியாளர்கள் பிக்ஹ்கலை அறிஞர்களாகவும் இருந்தனர். இதனால் வருகின்ற புதிய பிரச்சினைகள் ஒவ்வொன்றிற்கும் அவர்களே தீர்வுகண்டு அவற்றை எதிர் கொள்ளக்கூடியவர்களாக இருந்தார்கள். அத்துடன் மாற்றுக் கருத்துடையோரையும் அணுகி மிகச் சரியான கருத்தைப் பெற்று நடைமுறைப்படுத்துவதில் அவதானமாக இருந்தனர். ஆனால், ஸஹாபாக்கள் காலம் முடிந்ததைத் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களில் அதிகமானோர் (அப்துல் மலிக் பின் மர்வான், உமர்பின் அப்துல் அஸீஸ் போன்றவர்களைத் தவிர) பிக்ஹ் கலை அறிஞர்களாகவோ முஜ்தஹித்களாகவோ இருக்காவிட்டாலும் முஜ்தஹித்களை அரவணைத்து புதிய பிரச்சினைகளுக்கு அவர்களை அணுகி தீர்வைப் பெறுவதில் கவனம் செலுத்தினர். எனவே, இக்காலத்திலும் தேக்க நிலை உருவாகவில்லை.
- தேக்க நிலை அப்பாஸியக் காலத்தின் வீழ்ச்சிக் கட்டத்திலேயே உருவாக ஆரம்பித்தது. இதற்கு பல காரணங்கள் உள்ளன.

1. ஆட்சியாளர்கள் பிக்ஹ்துறை அறிஞர்களை நாடுகின்ற நிலைமை மாறி அறிஞர்கள் ஆட்சியாளர்களை நாடும் நிலைமை உருவானமை
2. மு∴தஸிலா, ஷீயா போன்ற சிந்தனைகளின் வளர்ச்சி
3. கிலாபத்துக்குள் ஏற்பட்ட பிளவுகள்
4. அறபு மொழிக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் குறைந்தமை

5. அந்நியப் படையெடுப்புக்கள்

- இவ்வாறான காரணிகளால் பிகஹ்த் துறை சீரழிந்தமையினால் மக்களைப் பாதுகாக்க வேண்டிய ஒரு தேவை நடுநிலை இஸ்லாமிய அறிஞர்களுக்கு ஏற்பட்டது. எனவே, அவர்கள் ஆரம்ப கால இமாம்களின் இஜ்திஹாத்தையே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர். அக்காலத்தில் காணப்பட்ட சமய, சமூக சூழலில் அது சிறந்த ஒரு கருத்தாகவே கொள்ளப்பட்டது. என்றாலும் பிற்காலத்தில் பிக்ஹ் துறையில் ஒரு தேக்க நிலை உருவாக அடிப்படையாக தக்லீத் எனப்படும் கண்மூடித்தனமாக பின்பற்றுதலை ஸ்திரமடையச் செய்தது.

- உஸ்மானியக் கிலாபத்தைப் பொறுத்தவரையில் அப்பாஸியக் கிலாபத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அது உருவானமையினால் அல்குர்ஆன் சுன்னாவை அடிப்படையாகக் கொண்ட இஜ்திஹாத்தை அல்லாமல் ஹனபி மத்ஹபை அடிப்படையாகக் கொண்டதொரு பிக்ஹையே அவர்கள் உருவாக்கினார்கள். எனவே, உஸ்மானிய கிலாபத் காலப்பகுதியையும் தேக்க காலத்திற்குள் உள்ளடக்க வேண்டிய நிலை உருவாகின்றது. 1924 ஆகின்ற போது உஸ்மானிய கிலாபத் வீழ்ச்சியடைகின்றது. மேற்கத்தேய காலணியத்துக்கு சார்பாக இருந்த முஸ்லிம் பெயர் தாங்கிய ஆட்சியாளர்கள் இஸ்லாமிய ஷரீஅத்தை வாழ்க்கையில் இருந்து ஒதுக்கி மேற்கத்தேய சட்டதிட்டங்களை உட்புகுத்துகின்ற நிலையை உருவாக்கினர். அதனைத் தொடர்ந்து மீண்டும் பழைய மறுமலர்ச்சிக் காலத்தை நோக்கிய இஜ்திஹாத் தஜ்தீத் பணிகள் அவசியப்பட்ட காலப்பகுதியாக இக்காலம் உருவானது. எனவே இக்காலம் தஜ்தீத் துறையின் நவீன காலம் எனப்படுகின்றது.

- இஸ்லாமிய நாகரிகத்தின் தேக்க நிலைமையினால் பல்வேறு எதிர்மறையான விளைவுகள் உருவாகின. முதலாவதாக, முன்னோக்கிய வந்த புதிய சவால்களை எதிர்கொள்ள முடியாத நிலைக்கு இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் தள்ளப்பட்டனர். மக்கள் தமக்குரிய வழிகாட்டலை ஷரீஆவின் நிழலில் பெற முடியாத நிலைக்கு ஆளாகினர். இஸ்லாம் நடைமுறைக்குப் பொருத்தமற்ற மார்க்கமாக நோக்கப்பட்டது. மேற்கத்தேய கலாசார மோகம் முஸ்லிம்கள் மத்தியில் தோற்றம் பெற்றது. அத்தோடு இஸ்லாம் வெறும் சமய அனுஷ்டானங்களுடன் மாத்திரம் சுருக்கப்பட்டது. உலகம் முழுவதற்கும் கிடைக்க வேண்டிய வஹியை அடிப்படையாகக் கொண்ட வழிகாட்டல் இத்தேக்க நிலை காரணமாக பெறமுடியாது போனது. இதன் காரணமாக பழைய கிரேக்க, ரோம், பாரசீக நாகரிகங்களின் செல்வாக்கு மேலாதிக்கம் பெற்றது.

**தேர்ச்சி 10.0 : இஸ்லாமிய நாகரிகம் தேக்கமடைவதற்கான காரணங்களையும், அதனைப் புனரமைப்பதற்காக, தனி நபர், கூட்டு முயற்சிகளின் பங்கையும் விளக்கிக் கூறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 10.2: தஜ்தீத் என்ற பதத்தை விளக்கி, அதன் தேவையை உணர்வதோடு தனி நபர்களும், அமைப்புக்களும் தஜ்தீத் பணியில் ஈடுபட்ட முறையினை வரலாற்று ரீதியாக எடுத்துக் காட்டுவார்.**

**பாடவேளை : 16 பாடவேளைகள்**

**கற்றல் பேறுகள் :**

- தஜ்தீத் என்ற பதத்தின் கருத்தை விளக்குவார்.
- தஜ்தீத் பணியின் தேவையையும், அதன் முக்கியத்துவத்தையும் விரிவாக விளக்குவார்.
- வரலாற்றில் தஜ்தீத் பணியில் ஈடுபட்ட முக்கிய ஆளுமைகளின் பங்களிப்பை சுருக்கமாக எடுத்துரைப்பார்.
- தஜ்தீத் பணி தனியாகவும் கூட்டாகவும் இடம்பெற முடியும் என்பதை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**தஜ்தீத்**

- தஜ்தீத் எனப்படுவது, கூட்டு வாழ்வின் கூறுகளான, சமய, சமூக, கல்வி கலாசார, பொருளாதார, அரசியல் அம்சங்களை தனியாகவோ கூட்டாகவோ புனரமைக்கப்படுவதைக்குறிக்கின்றது.

  தஜ்தீத் என்ற சொல் புதுப்பித்தல், புனரமைத்தல் என்ற கருத்தைத் தருகின்றது. அல்குர்ஆனில், தஜ்தீத் என்ற சொல் காணப்படாவிட்டாலும், ஜதீத் என்ற சொல் (17:49) பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஹதீஸில் ஜத்திதூ ஈமானகும் (உங்கள் ஈமானைப் புதுப்படுத்திக் கொள்ளுங்கள்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- தஜ்தீத் என்பது, ஒன்றை அகற்றி மற்றொன்றை உருவாக்குவது என்ற கருத்திலன்றி, சீர்குலைந்துள்ள ஒன்றைப் புனரமைத்தல் என்ற கருத்திலேயே முன்வைக்கப்படுகின்றது. அது சன்மார்க்கத்தை மாற்றுவது அல்ல அடிப்படைக்கு மீளுதல் (அப்துல் காதிர் ஜீலானி) தீனுல் உம்மத்திலிருந்து தீனுல்லாஹ்வின் பக்கம் மீளுதல். ஒன்று தோற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட போது எந்த நிலையிலிருந்ததோ அந்த நிலைக்கு, இடையில் நுழைந்த கறைகளைக் களைந்து அதனைச் சீர்திருத்தி ஸ்திரப்படுத்துவதற்கு முயற்சி செய்தல், பித்அத்திலிருந்து சன்மார்க்கத்தை தூய்மைப்படுத்தல், அறிவைப் பெருக்குதல் அல்லது அறிவைப் பெருக்கும் சமூகத்துக்கு உதவுதல் அல்லது அறிவும் செயலும் இணைந்த புனரமைப்பு (இமாம் முனாவி) என பலரும் பல்வேறு விளக்கங்களை முன்வைக்கின்றனர்.

- தஜ்தீத் செய்யப்படுவது, ஏற்கனவே காணப்பட்டதாகவும், பின்னர் புழக்கத்திலிருந்து விடுபட்டதாகவும் அதனை உருவாக்குவதற்கு முன்பிருந்த நிலைக்கு

மீட்டெடுக்கப்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.
தஜ்தீத் பணியை மேற்கொள்வோர், முஜத்தித் எனப்படுவார். ஒவ்வொரு நூற்றாண்டிலும் அல்லாஹ் புனரமைப்பாளர்களை அனுப்பி வைப்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். (அபூ தாவூத்). இஸ்லாம் அறிமுகமாகி வளர்ந்து வரும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித்கள் தோன்றியிருக்கின்றார்கள். இவர்கள் நூற்றாண்டின் ஆரம்பத்திலோ, இறுதியிலோ கட்டாயப்படுத்திய சூழ்நிலையில் தோன்றலாம். அது முழுமையாகவும் இடம்பெறலாம். பகுதி பகுதியாகவும் இடம்பெறலாம். இதனை இஸ்லாமிய வரலாற்றில் தெளிவாக கண்டுகொள்ள முடிகிறது.

### முஜத்தித்

- இஸ்லாம், அறிமுகமற்ற நிலையில் ஆரம்பமானது. மீண்டும் அவ்வாறு அறிமுகமற்ற நிலை தோன்றும். அவ்வேளை 'குரபா'க்களுக்கு ஆசிர்வாதம் உண்டாவதாக. என்று நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தித்தார்கள். '**குரபாஉ**' எனப்பட்டவர்கள், சன்மார்க்கத்தில் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட தீமைகளைக் களைய முயற்சிப்பவர்கள் அல்லது முஜத்தித்கள் எனப்படுபவர்கள் ஆவார்கள்.

- அல்லாஹ்வின் கட்டளையில் நிலைத்திருக்கும் ஒரு குழு இருந்தே தீரும். அவர்களுக்கு எத்தகைய கொடுமை செய்யப்பட்டாலும் அவர்கள் அதனைப் பொருட்படுத்தவே மாட்டார்கள், இது முஜத்தித்களின் நிலை பற்றிய ஒரு முன்னறிவிப்பாகும்.

- நபிமார்களும், றஸுல்மார்களும் தம்மை நபி எனவும் ரஸுல் எனவும் பிரகடனப்படுத்துவார்கள். ஆனால், முஜத்தித்கள் தம்மை முஜத்தித் எனப் பிரகடனப்படுத்தமாட்டார்கள். இதனால் திட்டமாக அவர்களை இனம் காண்பது சிரமமானது. எனினும் அவர்களின் வபாத்துக்குப் பின்னர் மக்கள் அவரை இனம் காண்பதற்கும் பாராட்டுவதற்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

- தெளிந்த உள்ளம், ஊடுருவிச் செல்லும் கூரிய போக்கு, பக்க சார்பற்ற சிந்தனை, தீவிர போக்குகளிலிருந்து விடுபட்டு நேர்வழியைக் கண்டு சமநிலையைப் பேணக்கூடிய ஆற்றல், பண்டைய- நவீன சமூகங்களின் தப்பெண்ணங்கள் படிவதற்கு இடமளிக்காது சுதந்திரமாக சிந்திக்கும் ஆற்றல், சமகால (குறிப்பிட்ட முஜத்தித் வாழும் காலம்) தீமைகளை எதிர்த்துப் போராடும் வல்லமை கொண்ட அஞ்சா நெஞ்சம், தலைமை தாங்கவும், வழிகாட்டவும் இயல்பாகவே அமைந்த பண்புகள், இஜ்திஹாதையும், தஜ்தீதையும் மேற்கொள்வதற்குரிய அசாதாரண தகுதி, இஸ்லாம் பற்றிய தெளிவான அறிவும், இஸ்லாத்தினதும் அதுவல்லாதவற்றினதும் வேறுபாட்டை ஆய்ந்தறியும் திறன், நீண்ட கால பொய்ம்மையிலிருந்து மெய்ம்மையை பிரித்தெடுக்கும் ஆற்றல் முதலியன அவர்களிடம் காணப்பட வேண்டும். (என மௌலானா மவ்தூதி குறிப்பிடுகிறார்)

முதல் முஜத்தித் :

- இஸ்லாமிய வரலாற்றில் முதலாவது முஜத்திதாகவும், முஜத்தித் காமிலாகவும் (முழுமையான முஜத்தித்) கருதப்படுபவர் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) ஆவார். அவர் அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் போன்ற எல்லாத் துறைகளிலும் புனரமைப்புப் பணியை மேற்கொண்டார்கள். அவரது

பணி ஹி-99 இல் ஆரம்பித்து 101 இல் முடிவடைந்தது. எனவே அவரது பணி நூற்றாண்டின் ஆரம்பத்திலோ, முடிவிலோ நிகழ்ந்தது எனலாம். எனினும் அவரது பணியை முழுமையாக நிறைவேற்றுவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்போரும் உளர். கலீபா என்ற தரத்தில் நின்று அவரது பணி நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஹி 60 முதல் 99 வரையிலான சுமாராக நான்கு தசாப்தகால இஸ்லாமிய வரலாற்றைப் படிக்கும் போது முஜத்தித் காமில் ஒருவரின் தேவையை சமூகம் எதிர்பார்த்திருந்தது என்பதை ஊகிக்கலாம். இப்பணியை நிறைவேற்றுவதற்கு அல்லாஹ் உமர் இப்னு அப்துல் அஸீஸை கலீபாவாக அமர்த்தினான். திமிஷ்கிலோ (மூதாதையர் வாழும் இடம்) எகிப்திலோ(அவரது தந்தை கவர்னராக பணியாற்றிய இடம்) வாழ வேண்டிய அவரை, மதீனாவில் பிறக்கவும், கல்வி கற்கவும், பக்குவமடையவும், பணியாற்றவும் வைத்தான். அவரது மூதாதையரின் வழிமுறையிலிருந்து விலகி, குலபாஉர் ராஷிதூன்களின் வழிமுறையில் பதவியை செம்மைப்படுத்தினார். ஈராண்டு காலம் கலீபா ஸாலிஹாக செயற்படவும் வைத்தான். இது அல்லாஹ்வின் ஓர் அருள் என்றே குறிப்பிட வேண்டும். கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் தஜ்தீத் பணியை கீழ்வருமாறு நோக்கலாம்.

- அவர், ஆண்டு தோறும் பரம்பரைச் சொத்திலிருந்து 1000 அஷ்ரபிகள் வருமானம் பெறக் கூடியவராக இருந்தார். முதல் தர முஹத்திஸாகவும் பகீஹாகவும் திகழ்ந்தார். முடியாட்சி உருவாக்கிய மாற்றங்களை அறிவு ரீதியாக உணர்ந்திருந்தார். அவை மூதாதையரால் கொண்டு வரப்பட்டவைகளாக இருந்தமையால் பல தடைகளையும் எதிர்கொண்டார். எதிர்பாராத நிலையில் கலீபாவானமையால் முழுமையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டேயிருந்தார்.

- நான் ஒரு சமூக நோய்க்கு பரிகாரம் காண முயற்சிக்கின்றேன். அல்லாஹ் மட்டுமே அதற்கு உதவ முடியும். அச்சமூகத்தில் முதியோன் பலவீனமுற்று வாழ்ந்து மடிகிறான். இளையோனோ அச்சமூக நிலைக்கு உள்வாங்கப்பட்டு முதுமையடைகிறான். பேச்சுத் திறனற்றவன் கூட பேசி பேசி நாவன்மை பெறுகிறான். நாடோடி அறபி அந்த சமூக நிலையை ஒட்டியே நாடோடி வாழ்வை துறக்கிறான். எல்லோரும் அந்த சமூகநிலையையே மார்க்கமாக காண்கிறார்கள். சத்தியத்தை வேறொன்றிலுமே அவர்களால் பார்க்க முடியவில்லை என்று இவர் முறையிட்டதாக இப்னு அப்துல் ஹகம், ஸீறா உமர் இப்னு அப்துல் அஸீஸ் எனும் நூலில் கூறுகிறார்.

- குலாபாஉர் ராஷிதூன்கள், நேரிய வழிமுறையில் கலீபாக்களாக தெரிவானார்கள். ஆனால் அடுத்து வந்த உமையாக்கள் பரம்பரையாட்சிக்கு வழிவகுத்தார்கள். உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்கள் அந்தப் பரம்பரையில் வந்தவராயினும், அவர் பரம்பரை மரபை ஆதரிக்கவில்லை. உமையா கலீபாக்களின் வழிமுறைக்கமைய கலீபா சுலைமான் தனக்குப் பின் உமரின் பெயரை சிபாரிசு செய்தார். அவரது மரணத்துக்குப் பின் உமரை பதவியேற்குமாறு கோரிய போது தன்னிடம் கேளாமலும் மக்களிடம் கருத்துப் பரிமாறாமலும் பதவி வழங்கப்படுவதை அவர் ஆட்சேபித்தார். பின்னர் அனைவரதும் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க பதவியை ஏற்றுக் கொண்டார்.

- பதவியேற்ற அடுத்த கணமே உமையா மரபுகளை துண்டிக்கலானார்கள். மெய்ப்பாதுகாவலர், அரச மாளிகை, பணியாளர்கள், அரச வாகனம் போன்ற அனைத்தையும் ஏற்க மறுத்தார். மற்றவர்கள் போல தானும் சாதாரண முஸ்லிம் எனக் கூறி சமநிலையைப் பேணினார். 'முஸ்லிம் பெருங்குடி மக்களே, யார் அல்லாஹ்விற்கு வழிப்பட்டு நடக்கின்றாரோ அவருக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் கடமையாகும். எவன் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று நடப்பதில்லையோ அவனுக்குக் கீழ்ப்படிவது உங்களது கடமையல்ல. நான் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடந்தால் எனது கட்டளைப்படி நடந்துகொள்ளுங்கள். இதற்கு மாறாக நடந்தால் என்னைப் புறக்கணித்து விடுங்கள் என்பதே அவர்களது முதல் வேண்டுகோளாக இருந்தது.

- 'கிலாபத் ஆட்சியை நபி (ஸல்) அவர்களின் காலத்தைப் போன்றும் நான்கு கலீபாக்களின் ஆட்சியைப் போன்றும் கொண்டுவர முயற்சிக்கின்றேன்' 'நான் அல்லாஹ்வின் வேதத்தை எல்லாவற்றையும் விட மேலாகக் கருதுகின்றேன். எனவே அதிலுள்ள படி ஒவ்வொரு மனிதரையும், பொருளையும் , எனது கிலாபத்துக்குட்பட்ட விடயங்களையும் நடத்துவதற்கு முயற்சிக்கிறேன்.' 'நீங்கள் ஆட்சேபித்தால் கிலாபத் ஆட்சியை மக்களிடம் ஒப்படைத்து விடுவேன். கலீபாவாக தகுதியுள்ள ஒருவரான காஸிம் பின் முஹம்மத் என்பவரை நான் இப்போதே தெரிந்து வைத்திருக்கிறேன்.' 'நான் உமர்(ரழி) அவர்களைப் போன்ற ஒராட்சியை நடாத்த விரும்புகிறேன். அவர்கால சுற்றறிக்கைகள், ஆவணங்கள் காணப்பட்டால் அனுப்பிவையுங்கள். (ஸாலிம் அப்துல்லாஹ்வுக்கு எழுதியது) என்பன போன்ற அவரது கூற்றுக்கள் ஆட்சியைப் புனரமைப்பதற்கு அவர் கொண்டிருந்த ஆர்வத்தை எடுத்துக்காட்டுகின்றன.

- இந்த நன்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவர் மக்களை மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அல்குர்ஆனின் தெளிவான சட்டங்களை மட்டும் பின்பற்றுமாறு மக்களை கேட்டுக் கொண்டார். மக்கள் மத்தியில் அல்குர்ஆன், ஹதீஸ் போதனைகளை முன்வைப்பதற்காக அறிஞர்களை அமர்த்தினார். அறிஞர்களை பயிற்றுவிக்கும் பொறுப்பை இப்னு உமர் (ரழி) அவர்களின் சீடன் நாபிஃ (ரஹ்) அவர்களிடம் ஒப்படைத்தார். ஹதீஸ்களைத் திரட்டுமாறு ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரி (ரஹ்) அவர்களைப் பணித்தார். அவரால் திரட்டப்பட்டவற்றை கிலாபத் பிரதேசங்களுக்கு அனுப்பி வைத்தார்.

- மஸ்ஜித்களில் அல்குர்ஆன் ஹதீஸ் வகுப்புக்களையும், உபந்நியாசங்களையும் இடம்பெறச் செய்தார். கல்விப் பணியில் முழுமையாக ஈடுபட்டோருக்கும் மாணவர்களுக்கும் உபகார நிதியை வழங்கினார். ஸஹாபாக்களின் வரலாற்றைத் தொகுக்குமாறு ஆஸிம் என்பவரை வேண்டிக் கொண்டார். டமஸ்கஸ் ஜாமிஆ மஸ்ஜிதில் ஸஹாபாக்கள் வரலாறு போதிக்கப்பட்டது. மைமூன் மிஹ்ரான், ரஜா ஹயாத், ரபாஹ் பின் உபைதா முதலானோர் சுதந்திரமாக சொற்பொழிவாற்றி வந்தார்கள்.

- உமையாப் பரம்பரை ஆளுனர்களை பதவி நீக்கி இறையச்சமுடைய

தகுதியானவர்களை ஆளுனர்களாக நியமித்தார்கள். பொதுமக்களிடம் பறிக்கப்பட்ட சொத்துக்களை திருப்பிக் கொடுத்தார். முறைகேடான வரிகளை இல்லாமலாக்கினார். ஸகாத்தை உரிய முறையில் பயன்படச் செய்தார். உமையாக்களுக்கென வழங்கப்பட்ட தனிச் சலுகைகள் அனைத்தையும் இல்லாமல் செய்தார். திம்மிகளுக்கும், சிறைக்கைதிகளுக்கும் சலுகைகளை வழங்கினார். வருமானத்துக்கென தனித்தனி ஏடுகளைப் பயன்படுத்தினார். பைத்துல் மாலை அரச சொத்தாகவன்றி பொதுமக்கள் சொத்தாக நெறிப்படுத்தினார். வீண் விரயங்களை இல்லாதொழித்தார். தேவையற்ற படையெடுப்புக்களை நிறுத்தி நட்புறவை வளர்த்தார்.

- முழுச் சமூகமும் எல்லாத் துறைகளிலும் நலிவுற்றிருக்கும் காலகட்டத்தில் முஜத்தித் காமில் தேவைப்படுகிறார். (ஏனைய காலங்களில் நலிவுற்ற துறைகளில் தஜ்தீத் பணி இடம்பெறுகிறது. உதாரணமாக பிக்ஹுத் துறை நலிவுற்ற காலத்தில் பிரபலமான நான்கு இமாம்களும் அவர்களின் மாணவர்களும் அத்துறையை புனரமைத்தார்கள். இமாம் ஹஸனுல் பஸரி(110) அவர்களும் மத்ரஸா பிக்ரியா மாணவர்களும் இணைந்து ஆன்மீகத் துறையை புனரமைப்பு செய்தார்கள். அடுத்த கட்டத்தில் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் (487-505) புனரமைப்புப் பணியை மேற்கொண்டார்கள்.

- தவிர பிரதேச ரீதியாகவும் இப்பணி இடம்பெற்றுள்ளது. இதற்கு அறபு நாட்டில் முஹம்மதிப்னு அப்துல் வஹ்ஹாப் (1701-1792), வட ஆபிரிக்காவில் செய்யித் முஹம்மத் அஸ்ஸனூஸி (1787-1859) போன்றவர்களை உதாரணமாக குறிப்பிடலாம்.

  தஜ்தீத் வரலாற்றை நோக்கும் போது முதல் நூற்றாண்டில் அரச மட்டத்தில் முழுமையான தஜ்தீத் பணி கலீபாவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அடுத்த கட்டத்தில் கலீபா எனும் ஆட்சியாளர்கள் காணப்பட்டாலும் அவர்கள் வலுவுடையவர்களாகவோ, முழு முஸ்லிம் உம்மத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாகவோ இருக்கவில்லை. கலீபா இரண்டாவது உமரைப் போன்ற ஆளுமையோ அறிவோ அவர்களிடம் காணப்படவில்லை. எனவே தான், வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு துறைகளில் வெவ்வேறு நபர்கள் தஜ்தீத் பணியை மேற்கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

- கிலாபத் வீழ்ச்சியடையும் காலகட்டம் அண்மித்த போது, சில தனிநபர்கள் கிலாபத்தையும் முஸ்லிம் சமூகத்தையும் பாதுகாப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். உதாரணமாக ஜமாலுத்தீன் ஆப்கானி (1879) முஹம்மத் அப்துஹு (1905) ரஷீத் றிழா (1935) பதீஉஸ்ஸமான் நூர்ஸி (1877-1960) போன்றோரைக் குறிப்பிடலாம். கிலாபத் வீழ்ச்சி, உலகமகா யுத்தம், காலனித்துவ ஆதிக்கம், கலாசார வீழ்ச்சி, சமயக் கல்வி புறக்கணிக்கப்படல், ஆத்மீகம் மட்டுமே இஸ்லாம் என்ற கண்ணோக்கு போன்ற காரணங்களால், தஜ்தீத் பணி தனி நபர் முயற்சியால் சாத்தியப்பட முடியாது எனக் கண்டனர். கூட்டு முயற்சியில் கவனம் செலுத்தினர். எனவே இயக்க ரீதியாகவோ, பல்கலைக் கழகங்கள் மூலமாகவோ, நிறுவன ரீதியாகவோ செயற்பட வேண்டிய தேவைக்கு தஜ்தீத் உட்பட்டது. இப்பணி உரை வடிவிலும், எழுத்து வடிவிலும், போராட்ட வடிவிலும் செயற்பட ஆரம்பித்தது.

**முஜத்தித் ஜுஸ்ஈ**

- ஹி. 5ஆம் நூற்றாண்டு கல்வித்துறையிலும் இலக்கிய முயற்சியிலும் முன்னேற்றமடைந்த ஒரு காலகட்டமாகும். அல்ஷீராஸி(476) அல் கஸ்ஸாலி (555) அபுல்வபா (513) ஜுர்ஜானி (471) அபூ ஸகரிய்யா(602) அல்ஹரீரி (510) அஸ்ஸமக்ஷரி (538) காழி இயாழ் (544) அப்துல் காதிர் ஜீலானி (470-561) முதலானோர் வாழ்ந்தனர்.

- பாடசாலைகளும், நூலகங்களும் நிறைந்திருந்தன. எனினும் தஜ்தீத் பணிக்கான தேவை ஏற்பட்டிருந்தது. கலீபாக்கள் பெயரளவில் இருந்தார்கள். அனேகமானோர் உலக இன்பங்களில் மூழ்கியிருந்தனர். செல்வம், சுகபோகம், பட்டம், பதவி தவிர வேறெந்தக் கவலையுமின்றி மக்கள் வாழ்ந்தனர். வேடிக்கைகளிலும் கேளிக்கைகளிலும் மூழ்கியிருந்தனர்.

- அந்நிய கலாசாரம் இஸ்லாத்தை சீரழித்தது. அந்நிய பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் போக்கு ஊடுருவியிருந்தது. பகட்டுக்காக செலவழிக்கப்பட்டது. அரச மாளிகையில் உல்லாச சமூகமொன்று வாழ்ந்து கொண்டிருந்தது. வசதியுள்ளவர்களிடம், ஏழைக்கிரங்கல், பொதுநலம் பேணல், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல் போன்றன அற்றுப் போயிருந்தன. ஏழைகளிடமோ, பொறுமை, போதுமென்ற மனம், நேசபாசம், மனக்கட்டுப்பாடு போன்ற பண்புகள் அருகிப் போயிருந்தன. வாழ்க்கை அமைதி இழந்தும் சமநிலையற்றும் இயங்கிக் கொண்டிருந்தது.

- இந்நிலையில் வரம்பு மீறிய ஆசைகளைக் கட்டுப்படுத்தவும் உள்ளங்களில் ஈமானிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அல்லாஹ்வின் மஹப்பத்தை ஏற்படுத்தவும் அவனை வணங்கி வழிபட வைக்கவும் ஒருவர் தேவைப்பட்டுக் கொண்டிருந்தார். மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு கல்வித் தேர்ச்சியும் மக்கள் செல்வாக்கும் தூய உள்ளமும் மனநிறைவும் நாவன்மையும் உலகப் பற்றோ, தற்பெருமையோ இல்லாத ஒருவரின் தேவை ஏற்பட்டிருந்தது.

- இவ்வேளையில்தான், அல்லாஹ்வின் பால் மக்களை அழைப்பதற்காக அப்துல் காதிர் ஜீலானி முன்வருகிறார். 18வது வயதில் ஜீலானிலிருந்து பக்தாதுக்கு வந்த அவர், நிழாமியாவில் தேர்ந்த அறிஞர்களிடம் உயர்கல்வி பெற்றார். காழி அபூ ஸஈத் மக்ரிபியின் ஆசிர்வாதம் பெற்ற அவர், அவர் நடத்திய கல்லூரியை பொறுப்பேற்றார். ஹி.528ல் அக்கல்லூரியின் அதிபராக பதவியேற்ற போது மக்கள் செல்வாக்குக்கு உட்பட்டவராக மாறினார். ''ஜீலானி செய்த அற்புதங்கள் பல. எனினும் செத்துப் போன உள்ளங்களை உயிர்ப்பித்த பணி அவற்றுள் தலையாயது'' என செய்யித் அபுல் ஹஸன் அலி (நத்வி) குறிப்பிடுகின்றார்.

  அவர்களின் பேருரைகளில் மன்னர்களின் பாய்ச்சலும், தாஇயின் மென்மையும், பெற்றோரின் கண்டிப்பும், மருத்துவர்களின் கனிவும் காணப்பட்டன. 'முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த தீனின் சுவர்கள் வீழ்ந்து கொண்டிருக்கின்றன.

அதன் அத்திவாரம் தகர்கிறது. புவி வாழ் மக்களே வாருங்கள். இழந்து போன பகுதியை உயர்த்திக் கட்டுவோம். வீழ்ந்து பகுதியை தூக்கி நிறுத்துவோம். இது தனி முயற்சியால் நிறைவுபெறும் செயற்பாடல்ல. சூரிய சந்திரனே, பகலே அனைவரும் வாருங்கள்' (பத்ஹுர்ரப்பானி - 40) என அவர் அழைப்பு விடுத்தார். அவரது காலத்தில் தஸவ்வுப், ஷரிஅத்திலிருந்து பிரிந்திருந்தது. தரீக்கத்தை ஷரீஅத்துக்கு கட்டுப்படும் நிலைக்கு மாற்ற வேண்டிய தேவை இருந்தது. ''அவர்களின் தரீகத் எல்லா நிலைகளிலும் ஏகத்துவமாக இருந்தது. அவர்களின் மெய்நிலை அகத்திலும் புறத்திலும் ஷரீஅத்தாகவே இருந்தது'' என இமாம் ஷ.்ரானி குறிப்பிடுகிறார். ''ஷரீஅத் சான்று பகராத மெய் நிலை அனைத்தும் வீணானவை. குர்ஆன் ஹதீஸ் என்ற இறக்கைகள் மூலம் அல்லாஹ்வின் பக்கம் பறந்து செல். நபியின் கரத்தோடு உன்னுடைய கரத்தை இணைத்துக் கொள். அவரை ஆசானாக ஏற்றுக் கொள்.'' (பத்ஹுர் ரப்பானி) என அவர் அறிவுரை பகர்ந்தார்.

- செல்வம், ஆற்றல், அதிகாரம், தத்துவம், வாழ்க்கைச் சாதனைகள் போன்றவற்றை கடவுளாகக் கொள்வதேன்?. உனது ஆற்றல், உனது தங்க வெள்ளி நாணயங்கள், உனது வியாபாரம், ஏனைய படைப்புக்கள், நாட்டின் அரசன் ஆகியோர் மீதே சார்ந்திருக்கின்றன. அவர்கள் உனது கடவுளாகி விடுகிறார்கள். யாருக்கு அஞ்சுகிறாயோ யாரிடம் அனைத்தையும் ஆதரவு வைக்கிறாயோ அவர்கள் உன் கடவுளாகி விடுகின்றனர். (புதுஹுல் கைப்- 13)

- அல்லாஹ் ரோஷம் மிக்கவன். தனக்கு மட்டுமே அடிமைப்பட்டு வாழ வேண்டும் என விரும்புகிறான். இவ்வாறே அடியான் தன்னுடன் அன்பு செலுத்துவது போல வேறு யாருடனும் அன்பு செலுத்தக் கூடாது என விரும்புகிறான். நல்ல நோக்கத்தில் பணத்தை சேமிப்பது கூடும். ஆனால் பணம் உள்ளத்தில் இடம் பிடிக்கக் கூடாது. அது வாசல்வரை நிற்கலாமே தவிர வீட்டுக்குள் நுழையக் கூடாது. நுழைந்தால் உனக்கு கண்ணியம் இருக்காது. (பத்ஹுர் ரப்பானி)

- இவை மனித உள்ளத்தை சீர்படுத்தவும், முறைகேடான உலகாயதத்தை ஒதுக்கிவிடவும், ஆன்மாக்களை உயிரூட்டவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும்.

  சமகாலத்தில் மற்றொரு தஜ்தீத் பணியை இமாம் கஸ்ஸாலி அவர்கள் மேற்கொண்டார்கள். ஷரீஅத் துறந்த தரீக்கத்தை ஜீலானி சீரமைத்தார். கஸ்ஸாலியோ கிரேக்க சிந்தனைக்குட்பட்ட அறிவியலை திசைதிருப்பினார்.

**இமாம் கஸ்ஸாலி**

- உமர் இப்னு அப்துல் அஸீஸுக்குப் பின்னர் உமையா ஆட்சியாளர்களும், அப்பாஸிய ஆட்சியாளர்களும் ஒரே பாணியில் செயல்பட்டனர். இதனால் ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டில் மற்றொரு தஜ்தீத் பணி தேவைப்பட்டது.

- கலீபா மாமூனின் (ஹிஜ்ரி 198-218 ) காலத்தில் பிறமொழிகளிலான ஆக்கங்கள் மொழிபெயர்க்கப்பட்டதால் கிரேக்க சிந்தனை முஸ்லிம் சமூகத்தில் பரவ ஆரம்பித்தது. தாருல் முனாழரா மூலம் வாதப்பிரதிவாதங்கள் தொடரப்பட்டன. இதனால் வஹியை விட பகுத்தறிவுக்கு முன்னுரிமை வழங்கப்படும் நிலை ஆரம்பமானது. மு.்.தஸிலாக்கள் தோன்றி வஹியின் கருத்துக்களை பகுத்தறிவு ரீதியாக விளக்க ஆரம்பித்தனர்.

- கிரேக்க, உரோம முஸ்லிம் அல்லாத - இறை நம்பிக்கை அற்ற தத்துவ முறைமைகள் கேள்வி பார்வையின்றி ஏற்கப்பட்டன. தக்வா இல்லாதோர் பாவங்களிலும் தீமைகளிலும் ஈடுபட ஆரம்பித்தனர். கலை, விஞ்ஞான அறிவுத் தேர்ச்சியில்லாத கலீபாக்கள் அவைபற்றி அவதானிக்கவில்லை. தகுதியானோரை அணுகி ஆலோசனை பெறவுமில்லை. உலமாக்களோ சமய விவாதங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கிரேக்க தத்துவஞானப் பிரசாரம் சமய நம்பிக்கைகளை குழப்பிக்கொண்டிருந்தது. வாதவிவாதங்களில் பயிற்சியற்ற முஹத்திஸீன்கள் சபிப்பதிலும், கண்டனம் தெரிவிப்பதிலும் மாத்திரம் நின்றுகொண்டனர். சமயத்துறையில் நுண்ணறிவற்றவர்களாகவும், கிரேக்க தத்துவத்தை விமர்சிக்கும் திறமையற்றவர்களாகவும் அவர்கள் காணப்பட்டனர்.

- இந்நிலையில் அபுல் ஹஸன் அல் அஷ்அரி(ரஹ்) போன்ற சிலர் முயற்சித்தாலும் அவை பயனளிக்கவில்லை. இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டுள்ளது என்ற சிந்தனை வளர்ந்திருந்தது. சமயப் பிரிவுகள் ஒன்றுடனொன்று மோதிக் கொண்டிருந்தன. சமூகத்தில் ஒழுக்க சீர்கேடுகள் மலிந்திருந்தன. ஆட்சியாளர் சுகபோக வாழ்வில் கவனம் செலுத்தினார்களன்றி மக்களின் சமய நிலையை அவதானிக்கவில்லை. அநியாய வரிகள், தீர்வைகள் மூலம் செல்வம் பெருக்குவதே அவர்களின் நோக்காக இருந்தது.

- இந்தப் பின்னணியில் தான் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) தோன்றுகிறார்கள்.

  கிரேக்க தத்துவத்தை மூலமொழியிலேயே கற்க ஆரம்பிக்கிறார். அதன் குணம் குற்றங்களை ஆராய்கிறார். வஹி- பகுத்தறிவு வாதங்களை விடுவிக்க முயல்கிறார். கிரேக்க தத்துவத்தின் பிழைகளை முன்வைத்தார். தஹாபதுல் பலாஸிபா என்ற நூலுக்கூடாக கிரேக்க தத்துவத்தின் குறைபாடுகளை எடுத்துக் காட்டினார். அதிலிருந்து விடுபடவேண்டுமென்பதை முன்கித் மினல்ழலால் எனும் நூலின் மூலம் விளக்கம் கொடுத்தார். அடிப்படை நம்பிக்கைகளுக்கு பகுத்தறிவு சார்ந்து விளக்கம் கொடுத்தார். சமயப் பிரிவுகளின் வேறுபாட்டை ஆராய்ந்து இஸ்லாத்தையும் இஸ்லாம் அல்லாதவற்றையும் வேறுபடுத்திக் காட்டினார். கண்மூடித்தனமான நம்பிக்கைகளைக் கண்டித்து குர்ஆன், ஸுன்னாவின் பக்கம் மக்களைத் திருப்பினார். இஸ்லாம் அல்லாதவற்றைத் தவிர்த்து கல்வித்திட்டமொன்றை வகுத்துக் கொடுத்தார். இஹ்யா உலூமுத்தீன் என்ற பாரிய நூலின் மூலம் மக்களின் சீரான வாழ்க்கைக்கு வழிகாட்டினார். தவறான ஆட்சி முறையைக் கண்டித்தார். நல்லரசொன்றுக்காக அவாக்கொண்டார். சுருக்கமாகச் சொல்வதாயின் கிரேக்க தத்துவ செல்வாக்கின் பிடியிலிருந்தும் மு.ஃ.தஸிலா சிந்தனைப் பிடியிலிருந்தும் படித்த சமூகத்தை விடுவித்தார்.

**ஷெய்கு அஹ்மத் ஸிர்ஹிந்தி (ஹி 975-1034)**

- ஹிஜ்ரி 7ஆம் நூற்றாண்டில் தாத்தாரியரின் படையெடுப்பால் முஸ்லிம் உலகம் பேரழிவுக்குட்பட்டது. எனினும் தூரத்திலிருந்த இந்தியா அதிலிருந்து பாதுகாக்கப்பட்டது. இந்தியாவில் முஸ்லிம் (மொகலாயர்) ஆட்சி இருந்த போதும் அது சீர்கேட்டின் அடையாளமாகவே தெரிந்தது. மன்னர்களின் எல்லையற்ற

அதிகாரங்களும் பிரதானிகளின் சொகுசான வாழ்வும், சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளும் அநியாயமான செலவினங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. இந்தப் பின்னணியில் பதவியேற்ற ஜலாலுத்தீன் அக்பர், இந்து-முஸ்லிம் இணக்கத்தை ஏற்படுத்த, ஒத்துப்போகாத ஒரு புதிய வழிமுறையை கையாண்டார். இந்து, இஸ்லாமிய கருத்துக்களையும், நடைமுறைகளையும் ஒன்றிணைத்து **'தீனே இலாஹி'** என்ற புதிய மார்க்கத்தை உண்டாக்கினார். மக்கள் அதனை ஏற்க வேண்டுமென வற்புறுத்தினார். தீனே இலாஹி ஒரு மார்க்கம் அல்ல; அக்பர் கையாண்ட ஓர் அரசியல் தந்திரம் எனக் குறிப்பிடப்படுவதும் உண்டு.

- இஸ்லாம், அறியாமையில் உழன்ற அரேபியாவுக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் இந்தியா போன்ற நாகரிகமடைந்த நாட்டுக்குப் பொருத்தமற்றது என வாய் கூசாமல் கூறினார். இஸ்லாம் காலம் கடந்தது. அது தோன்றி ஆயிரம் ஆண்டுகள் கடந்து விட்டன. ஆதலால் மாற்றீடாக புதிய மதமொன்று தேவைப்படுகிறது என பறைசாற்றப்பட்டது. அக்பர் பூமியில் இறைவனின் பிரதிநிதி என்றும் இறைவனின் அவதாரம் எனவும் காட்டப்பட்டார். 'லா இலாஹ இல்லல்லாஹ் அக்பர் கலீபதுல்லாஹ்' என கோஷம் எழுப்பப்பட்டது. அஸ்ஸலாமு அலைக்கும் என்பதற்குப் பதிலாக அல்லாஹு அக்பர் எனவும் அதனைக் கேட்பவர், ஜல்ல ஜலாலுஹு என்று பதிலளிக்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது. எல்லோரும் மன்னனுக்கு ஸஜ்தா செய்ய ண்டுமென கூறப்பட்டதோடு அதற்கு ஸஜ்தா தஹிய்யா எனப் பெயரும் இடப்பட்டது. இந்துக்களின் மறுபிறப்புக் கொள்கை ஏற்கப்பட்டது. வட்டி, சூது, மது போன்றன சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டன. பலதாரமணம் தடை செய்யப்பட்டது. மையத்துக்களை (அடக்கம் செய்வதற்குப் பதிலாக) தகனம் செய்யுமாறு கேட்கப்பட்டது. அரசவைப் பிரதானியாக இருந்த அபுல் பஸ்ல், தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற வணக்கங்களை அவமதித்தான். கவிஞர்களும் அவற்றை கிண்டல் செய்து கவி பாடினர்.

- அறபு மொழியும், ஹதீஸ், பிக்ஹு கலைகளும் புறக்கணிக்கப்பட்டன. அஹ்மத், முஹம்மத் போன்ற பெயர்களுக்கு தடை விதிக்கப்பட்டன. சிலை வணக்கமும், வர்க்க பேதமும், மூட நம்பிக்கைகளும் ஷரீஅத்துக்கு முரணான சூபித்துவமும் விரிவடைந்தன.

- இந்தச் சூழ்நிலையில் தான், ஷெய்கு அஹ்மத் ஸிர்ஹிந்தி தோன்றினார். அறிவும், பேராற்றலும் நிரம்பிய அவர் எதிர்கால கலங்கரை விளக்கமாகவே கொள்ளப்பட்டார். அக்பர் பாதுஷாவின் முரண்பட்ட கொள்கையை எதிர்த்துப் போராடினார். சன்மார்க்கத்துக்கெதிரான பழக்க வழக்கங்கள் அனைத்துக்கெதிராகவும் தீவிரமாகச் செயற்பட்டார். அரசு அவரை சிறையிட்டது. இவ்வேளை, அக்பரின் வாரிசான ஜஹாங்கீர் செய்கின் சீடரானார். தீனே இலாஹியைக் கண்டித்தார். இஸ்லாத்தின் பாதுகாவலராக மாறினார். செய்கு மரணித்து நான்காண்டுகளில் பதவியேற்ற மன்னர் அவ்ரங்கஷீப் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியை உருவாக்கினார். இது ஸிர்ஹிந்தி அவர்களின் போராட்டத்தின் விளைவாகவே அமைந்தது. எனவே அவர் முஜத்தித் அல்பஸானி என அழைக்கப்பட்டார்.

**முஹம்மதிப்னு அப்துல் வஹ்ஹாப் (ஹி: 1115-1206)**

- முஹம்மதிப்னு அப்துல் வஹ்ஹாப் பிறந்த பூமியில் மார்க்கம் இருள் சூழ்ந்திருந்தது. தவ்ஹீத், மௌட்டீக கருத்துக்களாலும் சூபிகளின் ஆழமற்ற கதைகளாலும் மாறியிருந்தது. உண்மையான முஸ்லிம்கள் இன்றி மஸ்ஜிதுகள் வெறிச்சோடிக் கிடந்தன. அறிஞர்கள் எனும்பெயரில் போலிகள் நடமாடினர். குர்ஆனின் சிறப்புக்கள் மனித உள்ளங்களிலிருந்து மறைந்திருந்தன. மதுவும், அபினும், இழிகுணங்களும் பரவியிருந்தன. மானக்கேடான பாவச் செயல்கள் பகிரங்கமாகவே நடந்துகொண்டிருந்தன. ஹஜ் பரிகாசத்துக்குரிய ஒன்றாக இடம் பெற்று வந்தது. கொலை, கொள்ளை, விபசாரம் என்பன பரவலாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. இவற்றுக்கெதிராக செயற்படும் அறிஞர்கள் கொலை செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

- இந்த சூழ்நிலையில் ஹிஜ்ரி 1115இல் அறிஞர்கள் அடங்கிய குடும்பத்தில் உயைனா எனுமிடத்தில் முஹம்மதிப்னு அப்துல் வஹ்ஹாப் பிறந்தார். 20 வயதிலேயே இஸ்லாமிய கலைகளில் தேர்ச்சி பெற்றார். சூழலை மாற்றியமைக்கும் பணியில் ஈடுபட்டார். தமது கொள்கை மூளையில் மட்டுமன்றி பூமியிலும் நிறுத்தப்பட வேண்டுமென விருப்பம் கொண்டார். களத்தில் இறங்கிச் செயற்பட்டார். அறிஞர்களுடன் கருத்துப் பரிமாறினார்.

- மகனின் அறிவுத் தேர்ச்சியையும், வாதத் திறமையையும், பணி செய்யும் பண்பையும் விளங்கிய தந்தை, தமது முழு ஆதரவையும் வழங்கினார். எனினும் அவரது கொள்கையை ஏற்றுக் கொள்ளாத அறிஞர்களும் பிறரும் அவரை அச்சுறுத்தினர். சகிக்க முடியாத தந்தை ஊரைவிட்டு ஹுரைமலாவுக்கு குடிபெயர்ந்தார். மகன் ஷெய்கு முறைப்படி மக்கா சென்று ஹஜ்ஜை முடித்துவிட்டு மதீனாவின் அறிஞர்களோடு இணைந்தார். அவர்களுடன் சேர்ந்து கற்றுக் கொண்டதோடு தமது கொள்கை பற்றியும் கருத்துப் பரிமாறினார். அவர்கள் ஷெய்கின் கருத்தை அங்கீகரித்தனர். பின்னர் பஸரா சென்று அங்கிருந்த அறிஞர்களுடன் கலந்துரையாடினார். அங்கு காணப்பட்ட ஜாஹிலிய்யத்தை கண்டித்த போது ஷெய்கின் உடமைகளைப் பறிமுதல் செய்ய, உடுத்த உடையோடு வெளியேற்றினர். அங்கிருந்து ஷாமுக்குச் செல்ல விரும்பினாலும் வசதியின்மையால் நஜ்துக்கு வந்தார்.

- தந்தை இறந்த பின் எதிர்ப்பு அதிகரித்தது. எனினும் தயங்காது செயற்பட்டார். ஆதரவாளர்களைப் பெருக்கிக் கொண்டார். ஹுரைமலாவில் ஷெய்க்கைக் கொல்லும் முயற்சி இடம்பெற்றதால் உயைனாவுக்குச் சென்றார். அங்கு, உஸ்மான் இப்னு முஅம்மர் ஆதரவளித்தார். நஜ்தை ஒரே குடையின் கீழ் ஆள வேண்டும் என அவரை ஊக்குவித்தார். லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கொள்கைக்கு உதவினால் அல்லாஹ் வெற்றியைத் தருவான் என ஆசிர்வதித்தார். உஸ்மானின் ஒத்துழைப்புடன் ஹுரைமலா, ரியாத், தரஇய்யா ஆதரவாளர்கள் ஒன்றிணைந்தனர். அங்கு இஸ்லாமிய சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நீண்ட காலமாகப் பூசிக்கப்பட்ட மரமும், புனிதமாகக் கருதப்பட்டு வந்த அடக்கஸ்தலங்களும் ஒழிக்கப்பட்டன. விபசாரப் பெண்ணுக்கு வழங்கப்பட்ட தண்டனை, எதிர்ப்பை உருவாக்கியது. பனூ காலித் கோத்திர சுலைமான் இப்னு முஹம்மத் அல் குமைதி என்ற அஹ்வாஸின் சிற்றரசன்

ஷைகைக் கொலை செய்யாவிட்டால் வரி செலுத்தமாட்டேன் என எதிர்ப்புத் தெரிவித்தான். ஷைக்கை நாடு கடத்துமாறு எச்சரித்தான். சுலைமான் ஆயுதங்களோடு நுழைய, ஷைக் திரஇய்யாவுக்குச் சென்றார். அங்கு முஹம்மத் இப்னு ஸுஊத் அவரை வரவேற்றார். வசதியோடு தங்க இடமளித்தார். ஷைக் மாணவரொருவரின் வீட்டில் தங்கினார்.

- தரஇய்யா 1000 பேரைக் கொண்ட ஒரு கிராமாகும். அங்கு 70 குடும்பங்கள் வாழ்ந்தன. ஸுஊத் குடும்பம் அதனை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. ஷைகை மன்னரின் மனைவியும் சகோதரரும் இப்னு ஸுஊதுக்கு அறிமுகம் செய்து வைக்க, அவர் ஷைகை நேரில் சந்தித்தார். அவரது பணிக்கு தாம் ஒத்துழைப்பதாக வாக்களித்தார்.

- இதனால் நஜ்தில் பரவிய ஜாஹிலிய்யத் களையப்பட்டது. ஏனைய சிற்றரசுகளுக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பின்னர் கொள்கையை சர்வதேசமயமாக்குவதற்காக உலகத்தலைவர்கள், நீதிபதிகள், அறிஞர்கள் முதலானோருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஸன்ஆவின் தலைவரும், அஹ்ஸாப், கதீப், பஸரா ஆட்சியாளர்களும் இணைந்து கொண்டனர். ஷைக், ஆட்சியில் எந்தப் பதவியும் வகிக்காமல் ஆசிரியராக - வழிகாட்டியாக அமர்ந்து பணியாற்றினார்.

  மன்னர் ஸுஊத் போதைப்பாவனையை ஒழித்தார். ஹிஜாபின்றி பெண்கள் நடமாடுவதைத் தடுத்தார். நியாயமற்ற வரிகளை நீக்கினார். ஷைகின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தினார். இதனால் வியாபாரம் செழித்தது. பாதைகள் இணைக்கப்பட்டன. வீடுகளும் பள்ளிவாசல்களும் மத்ரஸாக்களாக மாறின. ஒரு ஜும்ஆத் தொழுகையின் பின்னர் ஸுஊத் கொல்லப்பட மஷார் இப்னு ஸுஊத் ஆட்சியாளரானார். ஷைகின் மாணவர்கள் மூலம் ஹிஜாஸின் ஏனைய பிரதேசங்களுக்கும், குவைத், யமன் நாடுகளுக்கும் கொள்கை பரவியது. 50 ஆண்டுகால உழைப்பின் பின் ஹி 1206 இல் ஷைக் வபாத்தானார்.

- இதே காலத்தில் அப்துல் அஸீஸ் இப்னு ஸுஊத் ரியாதைக் கைப்பற்றினார். இதற்கிடையில் ஷைகைப் பின்தொடர்ந்து வஹாபிகளுக்கும் ஷீஆக்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. வஹாபிகளை ஷீஆக்கள் தாக்கியதையடுத்து இப்னு மஸ்ஊத் கர்பலாவை தாக்கினார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் மன்னர் அப்துல் அஸீஸ் தொழுது கொண்டிருக்கும் போது கத்தியால் குத்தி கொல்லப்பட்டார். மக்கா மதீனா நகரங்களைக் கைப்பற்றுவதில் வஹாபிகளுக்கும் உஸ்மானிய கிலாபத்துக்குமிடையில் மோதல்கள் நிகழ்ந்தன. முதலில் வஹாபிகள் ஹஜ் செய்வதற்கு இடமளிக்கப்படவில்லை. சமரசப் பேச்சின் பின்னர் அனுமதி வழங்கப்பட்டது. வஹ்ஹாபிகள் இப்னு ஸுஊத் குடும்பத்தின் ஆதரவுடன் ஹிஜாஸ் உட்பட அறபு நாட்டின பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததோடு அது வஹாபிகளின் மையமாகவும் அமைந்தது.

**அண்மைய நூற்றாண்டில்**

- ''முஸ்லிம் அல்லாதோரை முஸ்லிம் ஆக்குவதை விட, பெயரளவிலான முஸ்லிம்களை பயனுடைய முஸ்லிம்களாக ஆக்குவதும், இனரீதியான முஸ்லிம்களை 'தீன்' சார் முஸ்லிம்களாக ஆக்குவதும் தான் இன்றைய முக்கிய பணி'' என

செய்யித் சுலைமான் நத்வி (ரஹ்) அவர்கள் கூறினார்கள். இது தஜ்தீத் பணியைத் துல்லியமாக எடுத்துக்காட்டும் ஒரு மேற்கோளாகும்.

- தஜ்தீத் பணி தனிநபர் முயற்சியாக செயற்பட்டதையும், நவீன உலகில் அது கூட்டு முயற்சியாக விரிவடைய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதையும் குறிப்பிட்டோம். அந்தவகையில், கி.பி. இருபதாம் நூற்றாண்டில் மௌலானா இல்யாஸ் (ரஹ்) (1885-1944) மௌலானா அபுல் அ∴லா மௌதூதி (ரஹ்) (1963-1979) ஷெய்கு ஹஸனுல் பன்னா(ரஹ்) (1906-1949) ஆகியோரின் தஜ்தீத் பணிகள் முக்கிய இடத்தைப் பெற்றன. இவர்களின் பணிகளை பரம்பரை அலகு, கல்வி, சூழல் அல்லது சமூக நிலை என்பன தீர்மானித்தன எனலாம்.

- இந்தியாவில் டில்லிக்கு அண்மையிலுள்ள காந்தலா எனும் கிராமத்தில் பிறந்த மௌலானா இல்யாஸ் அவர்களை, தந்தை மௌலானா இஸ்மாயில், தாய் ஹாபிழா பீஸபிய்யா, சகோதரன் மௌலானா யூஸுப் ஆகியோரின் திட்டமிட்ட கண்காணிப்பும், பயிற்சியும் ஆன்மீக முதிர்ச்சியும் புடம்போட்டன. தொடர்ந்து மௌலானா மஹ்மூத் ஹஸன், ரஷீத் அஹ்மத், ஷா அப்துர் றஹ்மான், அஷ்ரப் அலி தானவி முதலானோரிடம் கல்வி பெற்றார்.

  இளமையிலேயே சமூக புனரமைப்புக்கான ஆர்வம் அவரிடம் காணப்பட்டது. மக்தபில் படித்துக் கொண்டிருந்தபோதே, ஒரு தடியை எடுத்து வந்து, தொழாதவர்களுடன் போர் தொடுக்க வருமாறு தமக்கு அழைப்பு விடுத்ததாக, அவரது சகபாடி மியான் ரியாழுல் இஸ்லாம் குறிப்பிடுகிறார்.

- அவரது சமூகப் புனரமைப்புக்கு தூண்டுதல் வழங்கிய மையம் மேவாத் என்ற கிராமமாகும். தந்தையின் காலத்திலிருந்தே அவருக்கும் மேவாத்துக்குமிடையில் தொடர்பிருந்தது. மேவாத் மக்கள் விவசாயிகளாக இருந்ததாலும் இஸ்லாத்திலிருந்து தூரமாகவே நின்றார்கள். தமக்கு அண்மையில் வாழ்ந்த ஹிந்து மக்களின் சடங்குகளில் பங்கு கொண்டார்கள். இந்து, இஸ்லாம் இரண்டும் கலந்த பெயர்களைப் பிள்ளைகளுக்குச் சூட்டினார்கள். போதைப்பொருள் பாவனையும், சகுனம் பார்ப்பதும் சாதாரண விடயாக காணப்பட்டன. பெண்கள் இந்துக்கள் போல உடையணிந்தார்கள். (இவை அக்பர் பாதுஷாவின் தீனே இலாஹியின் தாக்கமாகவும் இருக்கலாம்)

  எனவே தான், ஸஹாரன்பூர் மழாஹிருல் உலூம் மத்ரஸாவில் முதர்ரிஸாக பணியாற்றிய மௌலானா, சமூகப் புனரமைப்புக்காக பாமரமக்களுக்குப் பொருத்தமான செயற்திட்டமொன்றை வடிவமைத்தார். ஆரம்பத்தில் மத்ரஸாக்களை அமைத்து சமூகப் புனரமைப்பை மேற்கொள்ள முயற்சித்தாலும், வளர்ந்தவர்களை நெறிப்படுத்த மத்ரஸாக் கல்வியமைப்பு பொருத்தமல்ல என்பதைக் கண்டறிந்தார். எனவே, 1930 இல் தஹ்ரீக்கே ஈமான் எனும் அமைப்பை உருவாக்கினார். பின்னர் 1939 இல் ஜமாஅத் தப்லீக் எனும் பெயரில் நடமாடும் பாடசாலையாக அது பணியாற்றத் தொடங்கியது.

- அவர்கள் மஸ்ஜிதை மையமாகக் கொண்டார்கள். பேச்சு வழக்கில் உரையாற்றினார்கள். கால் நடையில் ஊர்ஊராகச் சென்றார்கள். எளிமையாக உண்டும் உடுத்தும் பழகினார்கள். செயல்முறைக்கு அழுத்தம் கொடுத்தார்கள். அமீருக்குக் கட்டுப்படும் ஊழியர்களை உருவாக்கினார்கள். எல்லாச் செயற்பாடுகளுக்கும் ஆன்மீகப் பெறுமானத்தை வழங்கினார்கள். ஷூறா முறையைக்

கடைப்பிடித்தார்கள். கலிமா, தொழுகை, இல்மு-திக்ர் (கல்வியும் தியானமும்) இக்லாஸ் (உளத்தூய்மை) இக்ராமுல் முஸ்லிமீன் (முஸ்லிம்களை கண்ணியப்படுத்தல்) தப்ரீகுல் அவ்காத் (காலத்தை ஒதுக்கி செயற்படல்) என்ற ஆறு அம்சத்திட்டத்தின் கீழ் உரையாற்றினர். சிறப்புக்களைக் கூறி மக்களை அமல்களின் பால் தூண்டினர். முதலில் வீழ்வது கிலாபத். இறுதியில் வீழ்வது தொழுகை என்ற ஹதீஸுக்கேற்ப தொழுகைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இதனால் இவர்கள் தொழுகைக்கு அழைக்கும் ஜமாத்தாகவே கருதப்பட்டார்கள். அவ்வேளை இது தொழுகைக்கு அழைக்கும் இயக்கமல்ல. சமூகத்தை தட்டியெழுப்பும் இயக்கம். மௌட்டீகத்துக்கு எதிரான இயக்கம். இது எமது செயற்பாட்டின் ஆரம்ப நிலை மட்டுமே (மல்பூழாத்) என விளக்கம் கொடுத்தார்.

- மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்கள் பிறந்து இரண்டு தசாப்தங்களின் பின்னர், இந்தியாவின் ஔரங்கபாத்தில் பிறந்த மௌலானா அபுல் அ.்லா மௌதூதி (ரஹ்) அவர்கள், சமகால சமூக நிலையை மற்றொரு கண்ணோட்டத்தில் அணுகினார். அவரது காலத்தில் இந்தியாவில் காலனித்துவ ஆட்சியே நடந்து கொண்டிருந்தது. மேற்கத்தேய உடை நடை பாவனைகள் முஸ்லிம்களை ஆக்கிரமித்திருந்தன. முஸ்லிம் கிலாபத் வீழ்த்தப்பட்ட அதிர்வும், தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

- மௌலானாவின் தந்தை ஓர் அலிகார் பட்டதாரி என்றாலும், அவர் தனது மகனை கல்லூரிக்குச் சென்று கற்பதற்கு அனுமதிக்கவில்லை. வீட்டிலிருந்து கற்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்தார். அறபு, ஆங்கிலம், உருது முதலான பன்மொழிப் புலமை அவருக்குக் கிடைத்தது. இளமையிலேயே வாசிப்புக்கு ஆர்வமூட்டப்பட்டதால் சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் தகைமை பெற்றார்.

- ‘‘எனது தந்தையார் எனக்கு சிறப்பான முறையில் கல்விப் பயிற்சியளித்தார். டில்லியில் வாழ்ந்த கண்ணியமிக்கோரின் மொழியையே அவர் புழங்கினார். தொடக்க காலத்திலிருந்தே எனது மொழி வளம், பேச்சு, உரைநடை எந்தவகையிலும் மோசமடைந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார். நான், வீட்டிலேயே இருந்து கற்பதற்கான வழிகளை செய்து தந்தார். வீட்டுக் கல்வி பல்வேறு ஆசிரியர்களை எதிர்கொள்ளும் வாய்ப்பை என்னில் உருவாக்கியது’’

  சில ஆசிரியர்கள், எனக்கு சிறப்பான கல்வியறிவைத் தந்தார்கள். ஒட்டு மொத்தமாக சொல்லப்போனால் வீட்டுக் கல்வி, மத்ரஸா சென்று கற்றுக் கொள்வதை விட சிறந்த பயனைத் தந்தது. ஏனையோர் எட்டு ஆண்டுகளில் கற்றுக் கொள்வதை நான் ஐந்து, ஆறு ஆண்டுகளில் கற்றுக் கொண்டேன். பதினோராவது வயதில் எட்டாம் வகுப்பில் சேர்ந்த போது ஏனைய மாணவர்களைவிட பாடங்கள் பற்றிய எனது அறிவு கூடுதலாக இருந்தது’ என அவரே கூறுகிறார்.

- இதனால் பதினேழாவது வயதிலேயே பத்திரிகைத் துறையில் அடியெடுத்து வைத்தார். மதீனா, தாஜ், முஸ்லிம் முதலிய பத்திரிகைகளை நடத்தினார். அவரது தர்ஜுமானுல் குர்ஆன் என்ற சஞ்சிகை கொள்கை விளக்கப் பத்திரிகையாகவே பயணித்தது. அக்லாக்கிய்யே இஜ்திமாஇய்யா, அல்ஜிஹாத் பில் இஸ்லாம் என்று ஆரம்பித்த நூலாக்கப் பணி தப்ஹீமுல் குர்ஆன் என்ற அல்குர்ஆன் விரிவுரையுட்பட நூற்றுக் கணக்கான நூல்களின் ஆசிரியராக அவரை வளர்த்தது.

- ஏற்கனவே, கிலாபத் இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்ட மௌலானா, சமூகப் புனரமைப்புக்கான முயற்சியாக ஜமாஅத்தே இஸ்லாமியை உருவாக்கினார். காலனித்துவ ஆட்சியாளரால் உருவாக்கப்பட்ட கல்விமுறை, அதன் பிரதியீடாக அமைந்த நாத்திகவாதம் போன்றவற்றால் அள்ளுண்டு செல்லப்பட்ட படித்த சமூகம், அவர்களின் சிந்தனைகளிலும் செயற்பாடுகளிலும் காணப்பட்ட மாற்றங்கள் போன்றவற்றை தனது உரைகளாலும், எழுத்துக்களாலும் தடுத்து நிறுத்த முயற்சித்தார்.

  முஸ்லிம்கள் தமக்குச் சொந்தமான நாட்டில் இஸ்லாமிய ஒழுங்கில் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கையிலேயே தமது உடமைகளை அர்ப்பணித்து பாக்கிஸ்தானுக்கு வந்தனர். எனினும் பாக்கிஸ்தானின் பிரித்தானிய ஆட்சிமுறையே தொடர்ந்ததைக் கண்டு விரக்தியடைந்தார்.

  மேட்டுக் குடியினர், குர்ஆனின் கோட்பாடுகளையோ, இஸ்லாமிய சட்டங்களையோ விளங்கிக் கொள்ளவில்லை. தனிப்பட்ட மத நம்பிக்கைக்கு குர்ஆன் நல்லது; ஆனால் அரச விவகாரங்களிலும் நிருவாகத்திலும் குர்ஆனுக்கு இடமில்லை. பாகிஸ்தான் மக்களின் சமயம் இஸ்லாம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது பொது இடங்களில் தலைகாட்டக்கூடாது. பொதுவாழ்வு மேனாட்டுச் சட்டங்களினதும், நிறுவனங்களினதும் அடிப்படையில் தான் நடத்தப்படவேண்டும் என்று அவர்கள் நம்பி நடந்தனர்.

- இத்தகைவர்களுக்கு மௌலானா, ஒரு தொல்லையாக மட்டுமன்றி, பாகிஸ்தானை இயக்கிய நிருவாக அமைப்புக்கு அச்சுறுத்தலாகவும் அமைந்தார். அங்கு முஸ்லிம்களிடையே நாத்திகவாத, உலோகாயதவாத பிரசார இயக்கங்கள் பரவலாகக் காணப்பட்டன. இஸ்லாத்தை வெளிப்படையாக மறுப்பதிலும் அதன் மீது தாக்குதல் நடத்துவதிலும் மக்கள் ஈடுபட்டனர். கல்விக் கூடங்களில் கம்யூனிஸ பிரசாரம் தொடங்கியதோடு, நாத்திக பிரசாரத்துக்காகவும் ஒழுக்க மாண்புகளை சிதைப்பதற்காகவும் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தொடங்கப்பட்டிருந்தன. கல்வி கற்றோர் கடவுள் நம்பிக்கை உடையோராகவும், தொழுகையை நிலைநாட்டுபவராகவும் நோன்பு நோற்பவராகவும் இருப்பது வியப்புடன் நோக்கப்பட்டது என மௌலானா சுட்டிக்காட்டுகிறார்.

- ‘இந்த நிலை பாகிஸ்தானில் மட்டுமல்ல, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த எல்லா நாடுகளிலும் காணப்பட்டது. கிலாபத் ஆட்சிக்கு, தடை விதிக்கப்பட்டது. வக்பு சொத்துக்களை புதிய ஆட்சி கையேற்றது. மார்க்கக் கல்விக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஷரீஅத் நீதிமன்றங்கள் மூடப்பட்டன. அதன் அலைகள் கிழக்கிலும் மேற்கிலும் சூழ்ந்து கொண்டன. இஸ்லாமிய ஆட்சியின் எஞ்சியிருந்த சின்னமாகவும் தொடக்க கால அடையாளமாகவும் அமைந்த கிலாபத்தின் வீழ்ச்சியால் நாம் மன உளைச்சலுக்கு உட்பட்டுவிட்டோம், முஸ்லிம் சமூகமே ஒரு குழப்ப நிலைக்கு உள்ளாகியது’ என மௌலானா கலீல் அஹ்மத் ஹாமிதி குறிப்பிட்டார்.

- எனவேதான் பொதுப் பிரசுரங்கள், பத்திரிகைகள், நூல்கள் வாயிலாக உண்மை நிலையை விளக்கியதோடு சமூகப் புனரமைப்புக்கான கூட்டு முயற்சியாக 1941இல் ஜமாஅதே இஸ்லாமி என்ற அமைப்பை உருவாக்கிச் செயற்பட்டார்.

அவரின் பிரசாரத்தை ஒடுக்கும் வகையில், அரசு போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பலமுறை சிறைக்குள் தள்ளியது. 1958இல் அவர் மீது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. சர்வதேச முஸ்லிம் உலகின் வேண்டுகோளை தட்டிக்கழிக்க முடியாத நிலையில் அரசு அவரை விடுதலை செய்தது. 1962 இல் அவருக்கெதிராக படுகொலை முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்ட போது அவர் காப்பாற்றப்பட்டார்.

- இந்தியாவில் ஏறத்தாழ சமகாலத்தில் சமூகப் புனரமைப்புப் பணியிலீடுபட்ட மௌலானா இல்யாஸ் அவர்களும் மௌலானா மவ்தூதி அவர்களும் வெவ்வேறு கண்ணோட்டங்களில் அப்பணியை அணுகியுள்ளனர். மௌலானா இல்யாஸ் பாமர மக்களை இலக்காகக் கொள்ள, மௌலானா மவ்தூதி படித்த மக்களை இலக்காகக் கொண்டார். முதலாமவர் இந்துக்கலாசாரத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களை முதலில் அணுகினார்கள். இரண்டாமவர் மேற்கத்திய கலாசாரத்தால் பாதிக்கப்பட்ட நகர் சார் மக்களை அணுகினார். ஒருவர் ஆன்மீகத்துக்கு முன்னுரிமை வழங்கினார். உலமாக்கள், பொதுமக்களின் வீடுகளைத்தட்டி அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் எனஅழைப்பு விடுத்தார். அவரது முழுமையான ஈடுபாடும் நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கைக் கட்டத்தை முன்னுதாரணமாகக் கொண்டது. முஸ்லிம்களின், தீனுடைய அடிப்படை ஆட்டங்கண்டிருக்கின்றது. அதனை உறுதிப்படுத்துவதுதான் அசல் வேலை என அவர் வலியுறுத்தினார். முஸ்லிம்களின் ஈமான், யகீன் வீழ்ச்சி கண்டுள்ளது. தீனுடைய மதிப்பும் கண்ணியமும் உள்ளங்களிலிருந்து விலகிச் சென்றுள்ளன. தீனுடைய வேர் ஆழப்பதிந்ததன் பின், நிறைவுபடுத்தப்படவேண்டிய ஏனைய துறைகளில் ஈடுபட முடியும். அதற்கு காலம் கனியவில்லை எனக் கருதினார்.

- ஆனால் மௌலானா மவ்தூதி, காலத்தின் மொழியில் இஸ்லாத்தை முன்வைக்க முயன்றார். தனது த.்வாவில் இயக்கவியல் தன்மையை வெளிப்படுத்தினார். நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்வை முன்னுதாரணமாகக் கொண்டார்.

- மௌலானா இல்யாஸ் அவர்களின் குடும்பப்பாரம்பரியம் மத்ரஸாக்கல்வி முறையில் ஊறியிருந்தது. எனவே, அவரது பணியும் அது சார்ந்ததாகவே இருந்தது. ஆனால் மௌலானா மவ்தூதி அவர்களின் தந்தை அலிகார் பட்டதாரியாக அமைந்தமை, மகனை படித்த மக்களுடன் தொடர்பு கொள்ள வைத்தமை, பன்மொழித் தேர்ச்சியை ஏற்படுத்தியமை போன்றன, அவரது கண்ணோட்டத்தை காலத்தின் மொழியில் முன்வைக்கத் தூண்டின. இஸ்லாத்துக்கெதிராக பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் வெளியாகி, படித்த மக்களை திசை திருப்ப முனைந்த காலகட்டத்தில், தாமும் அதே பாணியில் இஸ்லாத்தை எழுத்துக்கூடாக முன்வைத்தார். எனவேதான், பத்திரிகை, சஞ்சிகைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 138 நூல்களை வெளியாக்கினார். ஆயிரத்துக்கு மேற்பட்ட அவரது உரைகளும் நூல்களாக வெளிவந்தன.

- மௌலானா இல்யாஸ் தம்மைச் சார்ந்தவர்களை அரசியலில் ஈடுபடக்கூடாதென தடுத்து வந்தார். இந்தியாவை முஸ்லிம்கள் டெல்லி சுல்தானியம், மொகலாயப் பேரரசு என பல நூற்றாண்டுகள் ஆண்டாலும் கூட அவ்ரங்கஸீப் தவிர எல்லா ஆட்சியாளர்களும் நிலத்தையும் செல்வத்தையும் நோக்கினார்களே தவிர தீனை நோக்கவில்லை. எனவே அரசியலுக்கு முன்னுரிமை வழங்குவதை மௌலானா இல்யாஸ் தவிர்ந்து கொண்டார் எனலாம். அதற்கு காலம் கனியவில்லை என்றார். ஆனால் மௌலானா மவ்தூதி காலத்தைத் தாமே கனியச் செய்ய வேண்டும் என்ற

நோக்கில் செயற்பட்டதாகத் தெரிகிறது. ஒரு சதுரமைல் பரப்பில் இஸ்லாமிய ஆட்சி இருப்பின் முழு இந்தியாவை விட அதன் ஒரு மண்மணி மேலானது என்றார்.

- ஷைகு ஹஸனுல் பன்னா பிறந்த எகிப்து காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்தது. இதனால் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் மேற்கத்திய சிந்தனையும் செயற்பாடுகளும், நாத்திகவாதமும் மேலெழுந்து நின்றன. எகிப்திய மக்களின் ஒழுக்க, மார்க்க மரபுகள் அடியோடு சீர்குலைந்த நிலையில் பொழுதுபோக்கு மையங்களும் உலக வாழ்வை உல்லாசமாக கழிக்கவென 'கிளப்பு'களும் நாடெங்கும் காணப்பட்டன.

- வெட்கமும் பண்பாடும் நார்நாராக கிழிந்து போயின. கட்டுப்பாடின்றி சுதந்திரமாக வாழவேண்டுமன்ற எண்ணமும், ஆடைக் குறைப்புக் கலாசாரமும் ஆண்களிலும் பெண்களிலும் வெகுவாகப் பரவியிருந்தன. ஏகாதிபத்தியவாதிகளால் விலைக்கு வாங்கப்பட்ட உலமாக்கள், உடைகளில் மாத்திரம் இஸ்லாத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இஸ்லாமிய பண்பாட்டை அடியோடு சிதைக்கின்ற பணிகள் அரங்கேறிக் கொண்டிருந்தன.

- இவ்வாறான சூழலில் குர்ஆனிய ஞானமும், மார்க்க பக்தியும் கொண்ட செய்கு அப்துர்ரஹ்மான் அவர்களுக்கு மஹ்மூதியா கிராமத்தில் ஷெய்கு ஹஸனுல் பன்னா கி.பி 1906இல் மகனகாகப் பிறந்தார். ஓர் ஆலிமாகவும், ஹாபிழாகவும் இருந்த தந்தை அப்துர் றஹ்மான் மஹ்மூதியா பள்ளிவாசல் இமாமாகப் பணியாற்றினார். எனினும் கடிகாரம் திருத்துவதை தொழிலாகக் கொண்டார். நூலாசிரியரான அவர் தனக்கென நூலகமொன்றையும் வைத்திருந்தார்.

- ஹஸனுல் பன்னா, வித்தியாசமான ஒரு சிறுவனாகவே வளர்ந்தார். நுண்மதிமிக்க அவர், தந்தையிடம் அடிக்கடி கேள்வி கேட்பவராக இருந்தார். பருவவயதை அடையுமுன்பே றமழானில் மட்டுமன்றி ரஜபு, ஷ∴பான் மாதங்களிலும் நோன்பு நோற்று வந்தார். அல்குர்ஆனை மனனம் செய்தார். தந்தையார் நடத்தும் வகுப்புகளில் கலந்து கொண்டார். தரீக்காவின் செயல்பாடுகளிலும் ஈடுபட்டார். தந்தையின் வழிகாட்டலுக்கேற்ப தமன்ஹூர் தாருல் உலூமில் படித்து, இஸ்மாயீலிய்யாவில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

- கற்கும் காலத்தில் மாணவர்களுக்கு மத்தியில் மட்டுமன்றி வெளியேயும் 'மன்இல் முஹர்ரமாத்' என்ற அமைப்பை ஏற்படுத்தி தீமைகளைக் களையும் முயற்சியில் ஈடுபட்டார். இஸ்மாயீலிய்யாவில் ஆசிரியராகப் பணிபுரிந்த போதே அவரது தஜ்தீத் போக்கு விரிவடைந்தது. டாக்டர் தாஹா ஹுஸைன் அவர்களின் இஸ்லாத்துக்கு முந்திய கவிதைகள் என்ற நூலும் செய்கு அல் அப்துர் ராஸிக் என்பாரின் இஸ்லாமும் அரசாங்க கொள்கைகளும் என்ற நூலும் பன்னாவின் செயற்பாடுகளைத் தீவிரப் படுத்தின. முதலாவது நூல் குர்ஆன், ஸுன்னாவை சந்தேகத்துடன் நோக்கியும், இரண்டாவது நூல் மதச்சார்பின்மையை ஏற்கத் தூண்டியும் எழுதப்பட்டிருந்தன.

- இந்தச் சூழ்நிலையில் தம்மோடு இணைந்த ஆறு சகோதரர்களுடன் சேர்ந்து இக்வானுல் முஸ்லிமீன் என்ற தஜ்தீத் அமைப்பை 1928இல் உருவாக்கினார். தமது பகிரங்க உரைகள் மூலமும் அல் இக்வானுல் முஸ்லிமீன் (1935) நதீர் (1938) ஷிஹாப் (1947) முதலிய அச்சு ஊடகங்களுக்கூடாகவும் கொள்கைப் பிரசாரம் செய்தார். அவரது த∴வா, தனிமனித, குடும்ப, சமூக, தேசிய புனரமைப்பை மையப்படுத்திய ஒரு விரிவான திட்டத்தை வகுத்தது. தீமை நிகழும் இடங்களுக்கு

நேரில் சென்று அதில் ஈடுபடுவோருக்கு அறிவுரை பகர்ந்தது. அவர் தமது சகாக்கள் உடற்பலமும், அறிவுப் பலமும், ஆன்மீகப் பலமும் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென விரும்பினார். அதற்காக உடற்பயிற்சிகளும், கல்விப் போதனைகளும், ஆன்மீக செயற்பாடுகளும் வகுக்கப்பட்டன.

- எனினும் ஆட்சியாளரின் கடும் போக்கினால் அவரது இயக்கம் 1948இல் தடை செய்யப்பட்டது. 1949 இல் ஷைகு ஹஸனுல் பன்னா நடைபாதையில் சுட்டுக் கொல்லப்பட்டார். எனினும் அவரது சிந்தனை தூர்ந்து போகவில்லை.

- முன்னர் அவதானித்த இருவரும் இந்திய துணைக்கண்டத்தைச் சேர்ந்தவர்கள். அறபு மொழியை தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள். எனினும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழாத நாட்டில் தமது தஜ்தீத் பணியை ஆரம்பித்து வைத்தார்கள். உருது மொழியே அவர்களது ஊடக மொழியாக அமைந்தது. ஆனால் ஷைகு பன்னா(றஹ்) அவர்கள் அறபு மொழியை தாய்மொழியாகக் கொண்ட, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த எகிப்து நாட்டில் தமது பணியைத் தொடங்கினார்.

- இந்திய துணைக்கண்டம் பல நூற்றாண்டுகள் முஸ்லிம்களால் ஆளப்பட்டது. ஆனால் கிலாபத்தின் ஓர் அங்கமாக இயங்கவில்லை. (உமையாக் காலத்தில் வட இந்தியாவின் சில பிரதேசங்கள் குறுகிய காலம் கிலாபத்தின் அங்கமாக இருந்தன.) ஆனால் எகிப்து உமர்(ரழி) அவர்களின் காலம் முதல் கிலாபத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இது உஸ்மானிய கிலாபத்தின் வீழ்ச்சிவரை தொடர்ந்தது. எனவே, இந்தியாவில் கிலாபத் இயக்கம் உருவாகி கிலாபத் மீது ஆர்வம் காட்டினாலும் எகிப்து போன்று கிலாபத்தை நுகர்ந்த பிரதேசமாக இருக்கவில்லை. ஆதலால் கிலாபத் உணர்வு இந்தியாவை விட எகிப்தில் ஆழமாக பதிந்தது.

- மௌலானா இல்யாஸ்(ரஹ்) ஆன்மீக நோக்கில் செயற்பட்டதால் அரச தலையீடுகளுக்கு உட்படவில்லை ஆனால் மௌலானா மௌதூதி (ரஹ்) அரசை இலக்காகக் கொண்டு செயற்பட்டதால் ஆட்சியாளரின் எதிர்ப்புக்கு உள்ளானார். இது போன்றே ஷெய்க் பன்னா(ரஹ்) அவர்களும் சமூக, அரசியல் எழுச்சியோடு தொடர்புபட்டதால் ஆட்சியாளரின் எதிர்ப்புக்கு உள்ளானார். எனினும் இம்மூவரின் சிந்தனைகளும் அவர்களது வபாத்துக்குப் பின்னரும் கிழக்கிலும், மேற்கிலும் பரவ ஆரம்பித்தன.

- இவர்களுக்கு முன்னர், கி.பி பதினெட்டாம் நூற்றாண்டில் தஜ்தீத் பணியை மேற்கொண்ட இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) சமய விவகாரங்களில் குறிப்பாக அகீதா தொடர்பான விடயங்களில் அதிக கவனம் செலுத்தினார். பின்னர் இப்னு ஸுஊத் என்ற ஆட்சியாளருடன் உடன்படிக்கை செய்து தமது பணியை வலுப்படுத்திக் கொண்டார். இதனால் அவரது சிந்தனை சஊதி அரேபிய ஆட்சியாளரின் கண்காணிப்பில் வளரும் வாய்ப்பைப் பெற்றது.

- முஜத்தித்கள், நபிமார்கள் போல மஃஸூம்களாக கணிக்கப்படுவதில்லை. ஷெய்கு பன்னா குறிப்பிடுவது போல பிழைகளிலிருந்து பாதுகாக்கப்பட்ட நபியவர்களது வார்த்தைகள் தவிர, ஏனைய அனைத்து மனிதர்களதும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியும், மறுக்கப்படவும் முடியும். இதே கருத்தை மௌலானா மௌதூதி அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆதலால் முஜத்தித்களை பிரிவு மனப்பான்மையுடன் நோக்குதல் கூடாது. அவர்கள் தாம் பெற்ற அறிவு, வாழ்ந்த சூழல், மக்களின்

அவசரத் தேவை, தமது சிந்தனை போன்றவற்றைக் கருத்திற் கொண்டே செயற்பட்டுள்ளார்கள். ஆதலால் அவர்களை குறைகாண முடியாது. அவர்களது நல்ல கருத்துக்களையும், செயற்பாடுகளையும் ஏற்று நல்லபிப்பிராயங்களை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

- உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் முழுமையான தஜ்தீத் பணிகளை தொடர்ந்து வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு நபர்களால் தஜ்தீத் பணி பகுதிபகுதியாக (தஜ்தீத் ஜுஸ்இ) தொடர்ந்திருக்கிறது. கிரேக்க, பாரசீக தத்துவ தாக்கம் போலி சூபித்துவம், போலி மார்க்கம், ஷிர்க் பித்அத், காலனித்துவம் போன்றவகைளுக்கெதிராக சமூகத்தை நெறிப்படுத்தி புனரமைக்க முயற்சிக்கப்பட்டிருக்கிறது. எனினும் மேற்கின் பூகோளமயமாக்கல் போன்ற திட்டமிட்ட செயற்பாடுகள் வலுவான சாதனங்களுடன் தஜ்தீத் பணிக்கு சவாலாக அமைகின்றமை கவலைக்குரியதாகும்.

**மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் :**


1. குலாம் ரஸூல், தப்லீக் தோன்றிய வரலாறு,(1978) தாஜ்மஹால் பதிப்பகம், திருச்சி
2. ஹஸன் அஹ்மத், இமாம் முஹம்மத் பின் அல்துல்வஹாப் (1979) திரீயெம் பிரின்டர்ஸ்
3. அபுல் அ.்லா மௌதூதி, இஸ்லாமிய மறுமலர்ச்சி- ஒரு வரலாற்று நோக்கி ( 2001) இலங்கை ஜமாஅதே இஸ்லாமி வெளியீடு
4. இப்றாஹிம் ஏ.எல்.எம். குர்ஆனிய மனிதர் ஹஸனுல் பன்னா (2002) ஆய்வு வெளியீட்டு மையம், கொழும்பு
5. எம்.ஏ.எம். அமீன், இஸ்லாமிய சட்டக் கலை (1996), இஸ்லாமிய புத்தக நிலையம், கொழும்பு